
# செம்புலம்

வலி. கிழக்குப் பிரதேசப்
பண்பாட்டு விழாச் சிறப்பு மலர்

2008



பொது நூலகம்
கோப்பாய்
வலி. கிழக்கு பிரதேச சபை
500/-
18(P)
வரவுப் பதிவெண் 18(P)
பகுப்பெண் ..............

# செந்தூரம்

## 2008

கிடைக்கப்பெற்றது
வலி. கிழக்கு பிரதேச சபை
07 AUG 2008
தலைமை அலுவலகம், புத்தூர்.

வெளியீடு:
வலி. கிழக்குப் பிரதேசப் பண்பாட்டுப் பேரவை
பிரதேசச் செயலகம்
கோப்பாய்.

# நூல் வெளியீட்டுத் தரவுகள்

| | |
|---|---|
| நூல் : | செம்புலம் |
| விடயம் : | வலி.கிழக்குப் பிரதேசப் பண்பாடு |
| பதிப்பு : | 20 ஜூலை 2008 |
| தாள் : | கென்யா பாங் |
| அளவு: | 176 mm x 250 mm |
| பக்கங்கள் : | VI + 176 |
| பதிப்புரிமை : | வலி. கிழக்குப் பிரதேசப் பண்பாட்டுப் பேரவை |
| வெளியீடு: | வலி. கிழக்குப் பிரதேசப் பண்பாட்டுப் பேரவை, பிரதேசச் செயலகம், கோப்பாய் |
| அட்டைப்படம் : | ரமணி |
| அச்சமைப்பு : | ஷாம்பவி பதிப்பகம், (நீர்வேலி) 276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| பிரதிகள் : | 550 |


## 'செம்புலம் - 2008' மலர்க்குழு

உறுப்பினர்கள் :

அ.க.த. கிருஷ்ணராசா (ச.நீ.)

இ.குணநாதன் (அதிபர், யா/அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி)

நா.சுவாமிநாதன் (முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்)

மா.ஞானலிங்கம் (ஆசிரியர், யா/அச்சுவேலி மத்திய கல்லூரி)

"நீர்வைமணி" கு. தியாகராசக் குருக்கள்

பிரேமினி சபாரத்தினம் (தாட்சாயணி) (உதவிப் பிரதேசச் செயலர்)

எஸ்.ரி.வரதராஜன் (கிராம உத்தியோகத்தர்)

கலாநிதி தி.வேல்நம்பி
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக் கழகம்)

உதவிப் பதிப்பாசிரியர்கள் : க.தர்மலிங்கம், (ச.நீ.)

சிவை. குகனேசன்
(விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி)

பதிப்பாசிரியர் : ச.லலீசன் (அதிபர், யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை)

# தமிழ்த் தெய்வ வணக்கம்

நீராரும் கடல்உடுத்த நிலமடந்தைக்கு எழில்ஒழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே

பல்லுயிலும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத்து உதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கு அழிந்துஒழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே

- மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை



# பிரதேசக் கீதம்

வளம்பல கொண்ட வலிகாமம் கிழக்கது
வளமுடன் வாழியவே
வலியவர் எளியவர் சமநிலை பெற்று
வாழ்வாங்கு வாழியவே – வளம் பல பெற்று

சங்கிலி மன்னர் அரகசே சரியும்
ஆண்ட நம் பூமியிது
பொன்நிகர் மண்ணாம் செம்மண் பூமி
செழிப்புடன் வாழியவே – வளம் பல

பல்கலைப் புலவர் தொழில்துறை வல்லுனர்
தடகள வீரருடன்
கல்வியில் கேள்வியில் மேன்மை பெற்றென்றும்
புகழுடன் வாழியவே – வளம் பல


பழவகை மரக்கறி பருப்புடன் பாலது
பெருகிடும் நம் நாட்டில்
களம் நிறை நெல்லது கொண்டிடும் உழவரின்
உழைப்பது வாழியவே – வளம் பல

தொண்டமனாற்றின் ஒரு கிளை சுற்றி
ஓடுவதெம் நாட்டில்
பொக்கணை செம்மணி பெருநீர் நிலாவரை
பேர்புகழ் கொண்டது எம்நாடு – வளம் பல

திண்தோள் வீரர் நீள்விழிமாதர்
திகட்டிடும் விருந்தோம்பல்
கொண்டதே கொள்கை என்றுமே ஓதும்
திருத்தாய் வாழியவே – வளம் பல

(ஆக்கம்:- வடகோவை வரதராஜன்)

## நமது பிரதேசச் செயலர்




திரு. கிறிஸ்தோப்பர் அன்ரன் மோகன்றாஸ் அவர்கள்

பொது நூல
ைளப்பாண

## செம்புலத்தின் உள்ளே...

01. ஆசிச் செய்தி சிவஸ்ரீ வை.மு. பரமசாமிக் குருக்கள் - i
02. ஆசிச் செய்தி அருட்பணி ம.போல்நட்சத்திரம் (அ.ம.தி.) அடிகள் - ii
03. வாழ்த்துச் செய்தி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் - iii
04. வாழ்த்துச் செய்தி வலி.கிழக்குப் பிரதேசச் செயலர் - iv
05. பதிப்புரை - v

### கட்டுரைகள்

01. மணியகாரர், தலைமைக்காரர் வரிசையில்... - 01
- அ.க.த. கிருஷ்ணராசா (ச.நீ.)
02. தமிழ் வளர்த்த தாமோதரனார் - 10
- சைவப்புலவர் இ.செல்லத்துரை
03. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும் - 14
- எஸ். கே. யோகநாதன்
04. வலி. கிழக்குப் பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்த தமிழ்ச் சான்றோர்கள் - 20
- ஓர் அறிமுகம் : நீர்வைமணி கு.தியாகராசக் குருக்கள்
05. வலி. கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிறு கைத்தொழில் முயற்சிகள் - ஓர் ஆய்வு : கலாநிதி தி. வேல்நம்பி - 31
06. கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஓர் அறிமுகம் - 46
- பண்டிதர்,கலாநிதி. செ.திருநாவுக்கரசு
07. வலி. கிழக்குப் பிரதேசத்தின் விவசாய அபிவிருத்தியை நிலைபேறானதாக்கல் - சில முன்மொழிவுகள் : - 48
- பொ.சற்குணநாதன்
08. வலி. கிழக்கில் கூட்டுறவு ஒரு நோக்கு - 58
- மா.ஞானலிங்கம்
09. அச்சுவேலி சுவாமி ஞானப்பிரகாசரின் வாழ்வும் வரலாற்றுப் பணியும் - 75
- சசிதா குமாரதேவன்
10. ஈழத்தில் வில்லிசைக் கலை - 82
- வில்லிசைப் புலவர் க.நா.கணபதிப்பிள்ளை
11. வலி. கிழக்குப் பிரதேச சபையின் செயற்பாடுகள் - ஒரு குறிப்புரை - 86
- த.நடராசா
12. வலி. கிழக்குப் பிரதேச இந்து ஆலய தரிசனம் - 88
- கௌரி சுரேசன்
13. வலி. கிழக்கு நுழைவாயில் - 95
- இ. கோகுலன்

14. நீர்வேலி வசந்தன் கூத்து ஒரு சிறு குறிப்பு - 98
- க.திலகநாதன்
15. வலி.கிழக்கில் வளம் பெற்ற ஆட்டக் காவடி - 103
- சி.கிருஷ்ணபிள்ளை (ச.நீ.)
16. வலி. கிழக்கில் சிறுவர், முதியோர் நலம் பேணும் அமைப்புக்கள் - 106
- க.தர்மலிங்கம் (ச.நீ.)
17. வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில இடங்களின் இடப்பெயராய்வு - 116
- ரேணுகா சின்னராசா
18. வலிகாமம் கிழக்குப் பிரதேசச் செயலக எல்லைக்குள் காணப்படும் தொல்லியல் சின்னங்களும் அவற்றின் வரலாற்றுப் பெறுமதியும் - 125
- பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்
19. வலி. கிழக்கின் வற்றாத நீர் வளம், நிலாவரை, பொக்கணைக் கிணறுகள் - 142
- ந.குமரசிறி
20. கோப்பாய் கல்விக் கோட்டச் செயற்பாடுகள் - ஒரு குறிப்புரை - 144
- சின்னத்தம்பி சித்திரவடிவேல்
21. வலி. கிழக்கில் தொழிலாளர் வர்க்கத்தினரின் முன்பள்ளிகள் - ஓர் ஆய்வு
- அ.பஞ்சலிங்கம்
22. சாஹித்ய ரத்னா கவிஞர் கலாநிதி. இ.முருகையன் - 151
- ச.லலீசன்
23. கோப்பாய்ப் பிரதேசத்தின் இன்றைய கல்வி நிலை சில குறிப்புகள் - 161
- கலாநிதி த. கலாமணி

## சிறுகதைகள்

01. பூக்களும் நிறம் மாறும் - தாட்சாயணி - 16
02. தேவதை கே. வி. குணசேகரம் - 54
03. பொய்ம்மையும் வாய்மையிடத்த... - கோப்பாய் சிவம் - 112

## கவிதைகள்

01. வாழிய செம்புலம் - கவிஞர் சோ.பத்மநாதன் - 09
02. உச்சுவிற் குளம் - ஸ்ரீ. பிரசாந்தன் - 81
03. என்னவளே எஸ்.கே. கிருபாகரன் - 97
04. செம்புல நங்கையை என்றுமே வாழ்த்துவம் - வே.இளையகுட்டி - 101

ௐ
சிவமயம்

PIRATHISDAKIRIJAKALAPAMANI,
DOCTOR
**SIVASRI**
**V.M.PARAMASAMYKKURUKKAL**
KURUKKAL LANE, KOPAY NORTH,
KOPAY.
T.P No 021 222 7240

பிரதிஷ்டா கிரியாகலாபமணி, கலாநிதி
**சிவஸ்ரீ.வை.மு.பரமசாமிக்குருக்கள்**
*குருக்கள் லேன், கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.*
*பிரதம குரு.*
*நயினை நாகபூசணி அம்பாள் கோவில்*

## எமது பிரதேசத்தின் மூத்த சிவாச்சாரியார் சிவஸ்ரீ. வை. மு. பரமசாமிக் குருக்கள் அவர்கள் வழங்கிய ஆசியுரை



வலி. கிழக்குப் பிரதேசச் செயலகப் பண்பாட்டுப் பேரவை பெருமையுடன் படைக்கும் "செம்புலம்" என்னும் மலரானது என்றும் வாடா மலராக எமது தேசத்தின் நறுமணமாக பல பண்பாட்டு விழுமியங்களை தன்னகத்தே கொண்டு எமது தாயகத்தின் கலை, கலாசாரம், மற்றும் வரலாற்று ரீதியான கலைச்சுவடுகளை வெளிப்படுத்துவதுடன் எமது பிரதேசம் நன்றாக செப்பனிடப்பட்டு ஆலயங்கள், கல்விக்கூடங்கள், வாசிகசாலைகள், விளையாட்டு மன்றங்கள் போன்றவைகள் "செம்புலம்" மலர்ச் செடிக்கு உரமூட்டுவனவாகவும் நாவலர், சபாபதி நாவலர் போன்ற கல்விமான்கள், புத்திஜீவிகள் எல்லோருடைய வழிகாட்டலுடன் இலங்கை திருநாட்டின் ஆணிவேராக நின்று காலத்தால் அழியாத கற்ப விக்கிரகம் போல நன்மைகள் எல்லாம் கொடுத்து ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி நிலைத்துநிற்க எல்லாம் வல்ல நயினை நாகபூசணி அம்பாளதும், வடகோவை கேணியடி வைரவப் பெருமானதும் திருவருள் கிடைக்க

"ஸர்வே ஜனஹ் சுகினோ பவந்து
ஸமஸ்த சன் மங்களானி பவந்து"

என்றும் "வரப்புயர" என்ற ஔவை மூதாட்டியின் நல்வாக்கை மொழிந்தும் ஆசிகூறுவதுடன், நமது மக்கள் யாவரும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் உழைப் பாளிகளாகவும் நற்பிரஜைகளாகவும் வாழ்வாங்கு வாழவேண்டும் எனப் பிரார்த்தித்தும் அமைகிறேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

## நமது பிரதேசத்தவரும், அமல மரித் தியாகிகளின் வடமாகண முதல்வருமாகிய அருட்பணி ம. போல் நட்சத்திரம் (O M I ) அடிகளார் வழங்கிய



# ஆசிச் செய்தி

வலிகிழக்கு பிரதேச பண்பாட்டுப் பேரவை முன்னெடுக்கும் பண்பாட்டு விழா 2008 மலர் "செம்புலம்" சிறப்புற இதயபூர்வ வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் உளப்பூரிப்பும் இச்செய்தியை வழங்குவதில் நிறைவும் காண்கின்றேன். பண்பாடு என்பது மனித ஆளுமை விருத்தியின் ஆணிவேர். மனித நடத்தை, சமூக உறவு, வாழ்வியல் நோக்கு நேரிய சிந்தனை போன்ற கருவூலங்களின் இடுகுறியும் பண்பாடே, கல்வியென்னும் செல்வத்தை வாழ்வாக்குவதும், வாழ்வைத் தத்துவமாக்குவதும், அத்தத்துவத்தை மனிதன் தான் வாழும் சூழலில் தக்கவைப்பதும் பண்பாட்டின் அடையாளங்களில்த்தான். கலாச்சார பண்பாட்டு விழுமியங்களின் ஒருங்கிசைவு மனித சமுதாயத்தின் ஒருமைப்பாடாகவும் பலமாகவும் பரிணமிக்கின்றது. மனிதனின் ஆரோக்கியமான இருப்பையும் அவனது சுயத்தையும், மதிப்பையும் வெளிக்கொணரும் ஊற்றுக்களும் பண்பாட்டுக் கருவூலங்களே.

ஒரு சமூகம் தனது கட்டமைப்பை இழக்கும் போது பல விபரீதங்கள், பிறழ்வு நிலைகள், வன்செயல்கள், எதிர்மறையான சிந்தனைகள், அழிவுச் செயல்கள் போன்றன பிரசவமாகின்றன. மனித நேயப் பண்புகளோ, மனித மாண்பை மதிக்கின்ற குணவியல்புகளோ, அடுத்தவரை மதித்து வாழும் நிலைகளோ அடுத்தவர் உடைமைகளைக் காப்பாற்றும் மனநிலைகளோ, அடுத்தவர்களுடன் தங்கள் வாழ்வின் இன்ப துன்பங்களை பகிர்ந்து வாழுகின்ற மேலான நோக்குகளோ அற்றுப் போகின்றது. இப்பின்புலத்தில் நமது சமகால வாழ்வை நோக்கும்போது, பெறுமதிமிக்க, ஒரு காலத்தில் பன்னாட்டு ரீதியாகப் பேணி மதிக்கப்பட்ட கலாச்சார முறைகள் பண்பாட்டு அடையாளங்கள் வெகுவாகச் சிதைந்துள்ளதைப் பார்க்கின்றோம். நமது பாரம்பரியங்கள், இறுக்கமான வாழ்வியல் முறைகள் தொலைந்துவிட்டனவோ என்ற ஆதங்கத்தையும் ஏற்படுத்துகின்றன.

பண்பாட்டுக் கோலங்கள் மனிதவாழ்வின் யதார்த்தங்கள் சமூக நிகழ்வுகளைக் கொண்டு அச்சமூகத்தின் பண்பு நிலைகளை, அங்கு வாழுகின்றவர்களுடைய ஒழுக்கவியலை, அவர்கள் தங்களைப்பற்றியும், மற்றவர்கள் பற்றியும் கொண்டிருக்கின்ற சிந்தனைகளை துல்லியமாகக் கணித்துவிடலாம். பண்பாடு என்பது வெறுமனே இலக்கியம்சார் மரபுகளைத் தக்கவைப்பதல்ல, அதற்கப்பால் வாழ்வை உருவாக்குகின்ற முழு மனித ஆளுமையை வளர்க்கின்ற, சமய, சமூக, கலை கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்களின் ஒருமித்த கூட்டமைப்பான மனிதனை உருவாக்குகின்ற ஓர் தத்துவமாக நமது மண்ணில் மீண்டும் தளிர்விட வேண்டும். ஏற்கனவே நாம் தொலைத்துவிட்ட வாழ்வின் நல்ல பக்கங்களையும், அவை உருவாக்கிய வெறுமையால் நாம் அனுபவிக்கும் ஆன்மீக வறுமையும் அகத்திலும் புறத்திலும் நாம் கொண்டுள்ள அல்லது வேலியாகக் கொண்டுள்ள போலியான நிலைப்பாடுகளையும், நமது நடிப்புக்களையும் நாம் நிதர்சனமாகப் பார்க்க வேண்டும். சீர்மியம் செய்யப்பட்டு இக்குறைகள் குணம் பெறவேண்டும்.

துன்பம்தான் வாழ்வாகிவிட்ட நம்மவர்க்கு, மேலும் மேலும் துன்பத்தையும் உளநெருக்கீடுகளையும் இனிமேலும் கொண்டுவராத புதிய பண்பாடு மீண்டுமொருமுறை வீச்சுடன் நம்மண்ணில் முகிழ்க்க வேண்டும். இம்முயற்சியில் காத்திரமான தடம்பதித்து தொடர்ந்து பயணிக்கும் வலிகிழக்கு பிரதேச பண்பாட்டுப் பேரவையின் ஒவ்வொரு முயற்சியையும் பாராட்டுவதுடன் சவால்கள் எதிர்கொண்டாலும், தடைகள் தடுத்தாலும் தூரநோக்குடன் சமூக நலனில் கருத்தொருமித்து புதிய பண்பாட்டின் ஊற்றுக்களை நம் மண்ணுக்கும் மக்களுக்கும் திறந்துவிட ஆசிக்கின்றேன். வானத்தைப்பார்த்து அங்கலாய்ப்பதை விட, நிஜத்தைப்பார்த்துவிட "உன்னையே நீ அறிவாய்" என்ற கருத்தூக்கம் பெற்று புதிய பண்பாட்டுத் தேடலில் அகலச்சிறகடித்து நமது மண்ணில் நாம் அனைவரும் பறப்போமாக. பண்பாட்டின் தோற்றப்பாடே மனிதன், மனிதனின் இருப்பும் பண்பாடே. வாழ்த்துக்கள்.

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary
දුරකථනය / தொலைபேசி / Telephone: 021-222 2235
ෆැක්ස් / பக்ஸ் / Fax: 021-222 2355
E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone: 021-222 2233, 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය / எனது எண் / My No.: GA/JF /02
ඔබේ අංකය / உமது எண் / Your No.:
දිනය / திகதி / Date: 03.07.2008

## யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்
## திரு. க. கணேஷ் அவர்கள் வழங்கிய
## வாழ்த்துச் செய்தி



இன்று மனிதன் எதிர்நோக்கும் எல்லாப் பிரச்சினைகளும் பேசும் வார்த்தைகளின் ஊடாகத் தீர்க்ப்படக் கூடியன எனலாம் பேசும் வார்த்தைகள் இதயத்திலிருந்து வரவேண்டும் இதயத்தை பண்படுத்த வல்லது பண்பாடு எனலாம். கலை இலக்கிய செயற்பாடுகள் இதனை மெருகூட்டவல்லன என்றாலும் கூட இன்று வாழ்வையே ஒரு கலையாக கற்றுத்தேற வேண்டிய கடப்பாடு எமக்கு எழுந்துள்ளது எனலாம்.

நிகழ்காலம் தவிர்க்க முடியாதது என்பதை உணர்ந்து அவரவரை அவரவராக ஏற்றுக்கொள்ளவும் சூழ்நிலைகளை புறவயமாக நின்று அவதானித்து அதனைக் கையாளும் திறனை வளர்க்கவும் கலை கலாசார நடவடிக்கைகள் துணைபுரிய வேண்டும்.

பங்களிப்பு முகாமைத்துவத்தில் மக்கள் பொதுச் சேவையில் பங்கேற்கவும் குடும்ப சமூகப்பிரச்சினைகளை குறைக்கவும் பரந்துபட்ட சிந்தனையை வளர்க்கவும் மெஞ்ஞானத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் பாலமாக கலை இலக்கிய செயற்பாடுகளை முன்னேடுக்க வேண்டியது காலத்தின் தேவை.

ஒவ்வொருவரும் வாழ்வாங்கு வாழ வேண்டிய ஆத்ம பலத்தை அதிகரிக்க வேண்டிய தேவையும் எம்முன் உள்ளது. இவ்வகையில் சிறப்புறச் செயற்படும் வலி. கிழக்கு கலாச்சார பேரவை சிறப்புற செயலாற்ற உளமார வாழ்த்துவதோடு எனது அன்பான பணிவான வேண்டுகோளும் ஒன்று உள்ளது. அது என்னவெனில், சனத்தொகை அடர்த்தி மிகுந்து இந்துக்கள் பெருமளவு வாழும் வலி கிழக்கில் பக்திநெறி பெருகிப்பரவுவதனால், ஆலயங்கள் தமது சச்சரவுகளை அறவே இல்லாது ஒற்றுமையுடன் ஒழிக்க வேண்டும்.

இன்பத்திலும், துன்பத்திலும் இணைபிரியாது இருப்போம் என பார்வதி பரமசிவனாக பாவனை பண்ணி இணையும் தம்பதியினர் இணைபிரியாது தொடர்ந்து வாழும் நிலை மேம்பட வேண்டும்.

குழந்தைகள் தெய்வங்களாக போற்றப்பட வேண்டும் அன்பே சிவம் அயலவனே யேசு என உளமார உணர்ந்து உண்மையாக வாழும் வாழ்வு வலி கிழக்கிற்கு கிட்ட பாடுபட்டு உழைக்கும் கலாசாரபேரவைக்கு இறையருளும் என் இனிய நல்லாசிகளும் உரித்தாகட்டும்.

දුරකථන අංකය
தொலைபேசி இல.
Telephone
021-2225711

ෆැක්ස් අංකය
பெக்ஸ் இல.
Fax No.
021-2225711

E.mail :dskopay@yahoo.com

මගේ අංකය
எனது இல.
My No

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
07.07.2008

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය, කෝප්පාය.

பிரதேச செயலகம், கோப்பாய்

Divisional Secretariat, Kopay.


## வலி. கிழக்குப் பிரதேசச் செயலரும் பண்பாட்டுப் பேரவை தலைவரும் ஆகிய திரு. சி. ஏ. மோகன்றாஸ் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி



வலி கிழக்குப் பிரதேசப் பண்பாட்டுப் பேரவை வெளியிடும் “செம்புலம்“ என்னும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் இப்பிரதேசத்தின் பிரதேச செயலாளர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

எந்தவொரு நாட்டிற்கும் பிரதேசத்திற்கும் அவற்றின் நாகரிகங்கள், வாழ்வியல் முறைமைகள் மறைந்தோ அன்றி நலிவடைந்தோ போனாலும் அம்மக்களின் வாழ்வியல் பதிவுகளான கலை, பண்பாட்டு வளங்கள் எக்காலத்திலும் மறைவதும் இல்லை மறைக்கவும் முடியாது. ஆனாலும் காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப அவை புதுப்புதுத் தோற்றமடைகின் றனவேயொழிய புதிதாக உருவாவதில்லை.

வலிகாமம் பிரதேசத்தின் இன்னோர் இடமான வட கோடியின் குடிமகன் என்ற வகையிலும், தற்போது எனது கடமையின் நிமித்தம் இப்பிரதேசத்தை பார்வையிட்டதன் மூலமாகவும், இப்பிரதேசம் பல தொன்மையான தொல்லியல் சான்றுகளையும் பல வகையான வளங்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளமையையும் கண்டு உணரக்கூடியதாக உள்ளது. அத்துடன் தமிழையும் சமயங்களையும் வளர்ப்பதற்கு பாடுபட்ட பல சீரிய அறிஞர்கள் இம்மண்ணுக்குரியவர்களாக இருப்பதும் இப்பிரதேசத்தின் சிறப்பை மேலும் பிரதிபலிக்கிறது.

அவ்வகையில் இம் மண்ணையும், மணத்தையும் இதன் பண்பாட்டம்சங்களையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ள புலமையாளர்களின் கட்டுரைகளும், கவிதைகளும் இம் மலரில் உள்ளடங்குவது வரவேற்கத்தக்கதே. இம் முயற்சியில் ஈடுபட்டுள்ள பண்பாட்டுப் பேரவையினரை மனதாரப் பாராட்டுவதோடு இந் நூலின் சிறப்புத்தன்மை, நேர்த்தி என்பவை ஒட்டு மொத்தமாக பதிப்பாசிரியரினையும், மலர்க்குழுவினரினையுமே சார்ந்திருப்பதனால் அவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துவோடு, வளலாய், இடைக்காடு தொடங்கி அச்சுவேலி வாதரவத்தை, புத்தூர், உரும்பிராய், நீர்வேலி, கோப்பாய், இருபாலையின் நாயன்மார்க்கட்டு வரை பரந்துபட்டிருக்கும் இப் பிரதேச மக்களின் பண்பாட்டுச் சிறப்புகளையும், வளங்களையும் விபரித்து நிற்கும் இம் மலர் எதிர்கால சந்ததியினருக்கு இப்பிரதேசச் சிறப்பைச் சான்று பகரும் ஒரு ஆவணமாக திகழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

எனவே “செம்புலம்” ஆண்டு தோறும் மலர்ந்து மணம் வீசுவதற்கு எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

# பதிப்புரை



எங்கள் அன்னை மண்ணின் அழகு நலங்களைச் செப்புவதாகச் "செம்புலம்" மலர்கிறது. வலி. கிழக்குப் பண்பாட்டுப் பேரவையினரின் நீண்ட நாள் கனவு இன்று நனவாகிறது.

வலி.கிழக்குப் பிரதேசம், பரந்து விரிந்துள்ள பண்பாட்டுப் பெட்டகம். 102.07 சதுரக் கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட புனிதப் பூமி. இன்று இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் 70,757 மக்களின் தாயிவள். யாழ் குடாவில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட பிரதேச நங்கையாகவும் எங்கள் செம்புலத்தாயே சிறப்புப் பெறுகிறாள்.

செம்மை என்பதற்கு அழகு, சிவப்பு, செப்பம், தலைமை, நடுவுநிலைமை, நேர்மை, பெருமை எனப் பல பொருள்களை உரைப்பர். புலம் என்பதும் அறிவு, இடம், கூர்மதி, வயல், நிலம் எனப் பல பொருள்களைக் குறித்து நிற்கிறது. எப்படிப் பொருத்திப் பார்த்தாலும் அத்தகைய பொருள் உரைப்புக்கு எங்கள் செம்புலத்தாய் இலக்கியமாவாள்.

சங்கச் செய்யுள் ஒன்றின் உவமைநலம் பற்றி, அதனைப் பாடிய புலவரை "செம்புலப்பெயனீரார்" எனக் குறித்தனர். குறுந்தொகை என்ற சங்கத் தமிழ் நூலில் இடம்பெறும் அழகிய பாடலொன்றில் இவ்வற்புதமான உவமை கையாளப்படுகிறது.

*"செம்புலப் பெயனீர் போல*
*அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"*

செம்புல நங்கையின் அழகுக் கோலங்களை, பெருமைகளை வார்த்தைகளில் பதிவு செய்து ஆவணமாக்கும் முயற்சி எம் அன்னை மண்ணுக்கு நாம் ஆற்றும் அரிய திருப்பணி. இத்தெய்வீகத் திருப்பணிக்கான புனிதப் பயணத்திற்கு எங்கள் பிரதேசச் செயலரும் பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான திரு. சீ.ஏ.மோகன்றாஸ் அவர்களது ஆற்றுப்படுத்தல்கள் எம்மைச் செம்மைப்படுத்தின. "மக்கள் மயப்பட்ட விழாவாகப் பண்பாட்டுப் பெருவிழா அமைய வேண்டும்" என்ற வாய்ச்சொற்களுக்குச் செயலுருவம் கொடுத்த வீரனிவர். பிரதேசச் செயலக உத்தியோகத்தர்கள், கிராமசேவை அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனத் தொடர்புடைய யாவரும் "செம்புலத்தின்" அழகு நலத்திற்காக அருந்தொண்டாற்றினர்.

செம்புலத்தாயின் மணமணங் கமழச் "செம்புலம்" மலர வேண்டும் என்பதே எங்கள் பூட்கை. துறைசார்ந்த அறிஞர் பெருமக்கள், எங்கள் வேட்கையை உணர்ந்து தங்கள் ஆக்கங்களை நல்கினர். நன்றியுடன் கரம்பற்றிக் கொள்கின்றோம். எங்கள் பிரதேசத்தில் வாழும் ஓவியர் ரமணி அட்டைப்படத்தை அழகுற அமைத்து உதவியிருக்கிறார். அன்னவர்க்கும் எம் நன்றி.

யாழ். ஷாம்பவி பதிப்பக உரிமையாளர் திரு. சீ.புவீந்திரன், செம்புலத்தின் அழகு நலத்திற்காக அயராது உழைத்த பண்பாளர். இன்னும், எங்கள் மலர்க் குழுவினர் வயதால் அறிவால் இளையவனாகிய என்னை சீரிய பாதையில் பயணிக்க வைத்தனர். யாவர்க்கும் நன்றி.

செம்புலத்தாயின் பெருமைகளைச் சாற்றும் "செம்புலத்தின்" வரவு தொடர்ந்து நிகழ வேண்டும். இம்மலரில் இடம்பெறத் தவறிய செய்திகள், தொடர்ந்து வரும் மலர்களில் இடம்பெற்று, ஆவணமாக்கப்பட வேண்டும்.

பலப்பல புலமையாளர்களைப் பெற்றெடுத்த எங்கள் செம்புல நங்கையின் பெருமை மேலோங்கவும் வாழ்வு வளம் பெறவும் பிரார்த்திப்போம்.

அன்புடன்
ச.லலீசன்
(பதிப்பாசிரியர்)


# நமது பிரதேசச் செயலகம்



# யாழ் குடாநாட்டில் வலி. கிழக்கின் அமைவிடம்




# கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்





# மணியகாரர் , தலைமைக்காரர் வரிசையில்...



அ.க.த கிருஷ்ணராசா ச.நீ.

வலி - கிழக்கு பிரதேச பண்பாட்டுப் பேரவை எடுக்கும் பெருவிழாவின் போது "செம்புலம்" மலர் வெளிவருகிறது. இம்மலர் எமது பிரதேசம் சம்பந்தமான அருமையான ஆக்கங்களை துறைசார்ந்த அறிஞர்கள் மூலம் கொண்டு வந்திருக்கிறது. இவ்வகையில் இப்பிரதேச நிருவாக கட்டமைப்புக்கும், வளர்ச்சிக்கும் உரித்தாக இருந்து அர்ப்பணத்துடன் அரிய சேவையாற்றிய பெருமைக்குரிய மணியகாரர், காரியாதிகாரிகள், உதவி அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலர்கள், கிராமத்தலைமைக்காரர், கிராமசேவையாளர்கள்-தலைமைக்காரர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோரை மனநிறைவுடன் நினைவு கூராவிட்டால் செய்நன்றி மறந்த மாக்களாகி விடுவோம். உய்வில்லாதவர்களாகி விடுவோம். அரசுக்கு விசுவாசமானவர்களாக இருக்கவேண்டிய அதே நேரத்தில் மக்கள் சேவையே மகேசன் சேவையென அதிகாரத்துடன் அருந்தொண்டாற்றி மக்கள் மனதில் நீக்கமற நிறைந்தவர்கள். இவ்விருதிறத்தாரும் கீழ்ப்படிவுள்ள ஊழியர்களாகவும், வழிகாட்டும் தலைவர்களாகவும் திகழ்ந்திருக்கிறார்கள். கிராமங்களின் வளர்ச்சியில் தான் நாட்டின் ஒட்டுமொத்த உயர்வு தங்கியிருக்கிறது என்பது எல்லோரும் ஏற்றுக்கொண்ட முடிவு.

**நிருவாகக்கட்டமைப்பு**

இத்தகைய தலைமைத்துவ பண்புகளை வரித்துக் கொண்டவர்களை அசைபோடும் பொழுது எமது பிரதேசத்தைப் பற்றிய நிருவாகக் கட்டமைப்பைப் பற்றி மேலெழுந்தவாரியாகவேனும் தெரிந்து கொள்வது நல்லது தானே?

ஆங்கிலேயர் ஆட்சியில் இலங்கை அரச இயந்திரமானது தன்னாட்சி அதிகாரங்களை செலுத்துவதற்கு வசதியாக மாகாணங்களாகவும், மாகாணங்கள் மாவட்டங்களாகவும், மாவட்டங்கள் பல பிரதேசங்களாகவும், பிரதேசங்கள் பல கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டது. நல்லதோர் ஆட்சியை நடாத்தவதற்கு பல்வேறு வளங்கள் தேவை. இவற்றில் முக்கியமானது நிதிவளமாகும். தேவையான நிதியைத் திரட்டவும், நல்ல நிருவாகத்தை செயற்படுத்தவும் பிரதேசங்கள் தோறும் மணியகாரர்களையும், கிராமங்கள் தோறும் கிராம தலைமைக்காரர்களையும் நியமனம் செய்தார்கள். மணியகாரர் அரச விசுவாசிகளாகவும் கிராமத்தலைமைக்காரர் கிராமத்தில் செல்வாக்கு மிக்கவராகவும் இருப்பதை கவனத்தில் எடுத்துக் கொண்டனர்.

இலங்கை சுதந்திரமடைந்த 1948க்குப்பின் அதன் நிருவாக முறைமை பிரிட்டிஷ் ஆட்சி முறைப்பாங்கில் அமைக்கப்பட்டதேயாகும். 1955 இல் இயற்றப்பட்ட நிருவாகச் சட்டமூலம் மாவட்ட நிருவாக முறையை அடிப்படையாக கொண்டிருக்கிறது. தேசிய, மாவட்ட, பிரதேச நிருவாக அலகுகளோடு கிராமமட்ட நிருவாக அலகும் சேர்ந்தே பன்முக மட்ட நிருவாக முறைமை தோற்றம் பெற்றுள்ளது.

மாவட்ட உபபிரிவுகளாக காரியாதிகாரி பிரிவுகளும், கிராம மட்டத்தில் தலைமைக்காரர் பிரிவுகளும் 1972/73 இல் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் 1990 இல் பிரதேச செயலகப்பிரிவுகளும் உருவாக்கம் பெற்றன. இவைகள் மாவட்ட அரச அதிபரைப் பிரதிநிதித்துவப் படுத்துபவைகளாக அமைந்துள்ளன. இன்று இலங்கையில் 235 பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ளன.

## யாழ்ப்பாண மாவட்டம்

இலங்கை 09 மாகாணங்களாகவும், 25 மாவட்டங்களாகவும் நிருவாக ரீதியாக அமைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டம் இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள குடாநாடாகும். இம்மாவட்டமானது வடக்கு, மேற்கு, கிழக்கு ஆகிய 3 திசைகளிலும் கடலையும், தெற்கில் கிளிநொச்சி மாவட்டத்தினையும் எல்லையாகக் கொண்டமைந்துள்ளது. இம்மாவட்டத்தின் உள்நாட்டு நீர்நிலைகளின் பரப்பளவு 41.6 சதுர கிலோமீற்றர்களாகவும் அமைந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம் நிருவாக ரீதியாக நெடுந்தீவு, தீவுப்பகுதி தெற்கு, தீவுப்பகுதி வடக்கு, யாழ்ப்பாணம், நல்லூர், வலிகாமம் தெற்கு மேற்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, தென்மராட்சி, வடமராட்சி தெற்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய 14 பிரதேச செயலர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவுகள் 435 கிராம அலுவலர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இருந்தது.

யாழ்ப்பாண மாவட்டமானது ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, மானிப்பாய், கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய 11 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி தற்போது தனிமாவட்டமாக பிரிக்கப்பட்டுள்ளது. ஏனைய 10 தேர்தல் தொகுதிகளும் இம்மாவட்டத்தினுள் அடங்குகின்றன. தற்போது இம்மாவட்டத்தின் பரப்பளவு 1036 சதுரகிலோமீற்றர்களாக குறைவடைந்துள்ளது. தற்போதைய யாழ்ப்பாணம் குடாநாட்டினை முழுமையாகக் கொண்டிராதது குறிப்பிடத்தக்கது.

"இலங்கையின் வடபகுதியிலுள்ள தீபகற்பத்திற்கு யாழ்ப்பாணம் எனும் பொதுப்பெயர் வழங்கி வருகிறது. யாழ்ப்பாணம் என்னும் ஒரு நகரமும் இருக்கின்றது. இத்தீபகற்பத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணத்தார் என்று பெயர்" என தமிழக அறிஞர் சோம.லெ.இலக்குமணச்செட்டியர் நயம்பட எடுத்துரைப்பார்.

## வலிகாமம் கிழக்கு

வலிகாமம் கிழக்கு மணியகாரர் பிரிவு, கிழக்கே தென்மராட்சி மணியகாரர் பிரிவையும், தெற்கே யாழ்ப்பாணம் மணியகாரர் பிரிவையும், மேற்கே வலிகாமம் வடக்கு மணியகாரர் பிரிவையும் எல்லைகளாகக் கொண்ட பிரதேசமாகும். வலிகழக்கு 104.36 சதுரகிலோமீற்றர் பரப்பையும், குடித்தொகை 73.143.யும் 1981 கணக்கெடுப்பில் கண்டிருந்தது. இந்த பிரதேச பிரிவு கிணற்று நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்ட

உபஉணவுப் பயிர்ச்செய்கையும் மீன்பிடியுமேயாகும். இராணுவ நடவடிக்கையால் மீன்பிடி முற்றாக செயலிழந்துள்ளது. அண்மைக்காலங்களில் வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணமும், பொருட்களும் பொருளாதாரச் செயற்பாட்டில் முக்கிய இடம்பெற்றுள்ளது.

### மணியகாரர் காரியாதிகாரிகள்

வலிகாமம் கிழக்கின் முதலாவது மணியகாரராக வேலுப்பிள்ளை என்பவரும் தொடர்ந்து தம்பிப்பிள்ளை என்பவரும் கடமையாற்றினார்கள்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரும் மணியகாரர் என்ற பெயரை பிரிவுக்காரியாதிகாரி (D.R.O) என மாத்திரம் மாற்றி நிருவாகம் தொடர்ந்தும் நடைபெற்று வந்தது.

### உதவி அரச அதிபர்கள் பிரதேச செயலர்கள்

1970களில் பிரிவுக்காரியாதிகாரிகள் உதவி அரசாங்க அதிபர்களாகப் பதவி உயர்த்தப்பட்டனர். காரியாதிகாரி பிரிவுகளும், உதவி அரசாங்க பிரிவுகளாக மாற்றம் பெற்றன.

இப்பிரிவின் முதலாவது காரியதியாரியாக திரு ரி.தெயவேந்திரம் பிள்ளை கடமையாற்றினார். திரு.வ.கந்தப்பிள்ளை இப்பிரிவின் முதலாவது உதவி அரசாங்க அதிபராகவும், திரு க. கேதீஸ்வரன் முதலாவது பிரதேச செயலராகவும் பதவியேற்றிருந்தனர். 2003 இல் உதவி பிரதேச செயலர் நியமனமும் மேற்கொள்ளப்பட்டு இருந்தது.

வலி கிழக்கு பிரதேசத்தின் மணியகாரர், பிரிவுக்காரியாதிகாரி, உதவி அரசாங்க அதிபர், பிரதேசச் செயலர், உதவி பிரதேசச் செயலர் விபரம் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.வேலுப்பிள்ளை | மணியகாரன் | |
| 2. | திரு.தம்பிப்பிள்ளை | மணியகாரன் | |
| 3. | திரு.தெய்வேந்திரம்பிள்ளை | காரியாதிகாரி | 01.01.1939-31.12.1942 |
| 4. | திரு.டி.என்.செல்வரத்தினம் | காரியாதிகாரி | 01.01.1943-31.12.1946 |
| 5. | திரு.கே.சுப்பிரமணியம் | காரியாதிகாரி | 01.01.1947-31.12.1950 |
| 6. | திரு.தி.முருகேசம்பிள்ளை | காரியாதிகாரி | 01.01.1951-31.12.1954 |
| 7. | திரு.ச.ஸ்ரீனிவாசன் | காரியாதிகாரி | 01.01.1955-31.12.1958 |
| 8. | திரு.யோ.து.சபாபதிப்பிள்ளை | காரியாதிகாரி | 01.01.1958-31.12.1962 |
| 9. | திரு.ந.வேதாரணியசேயோன் | காரியாதிகாரி | 01.01.1963-30.06.1967 |
| 10. | திரு.வ.கந்தப்பிள்ளை | காரியாதிகாரி(உ.அ.அ) | 01.07.1967-11.07.1976 |
| 11. | திரு.கா.மாணிக்கவாசகர் | உ.அ.அ | 12.07.1976-31.12.1977 |
| 12.- | திரு.வ.சொக்கலிங்கம் | உ.அ.அ | 01.01.1978-30.061979 |
| 13. | திரு.சி.அம்பலவானர் | உ.அ.அ | 01.07.1979-03.01.1981 |
| 14. | திரு.க.கிட்டிணர் | உ.அ.அ | 04.01.1981-25.12.1985 |

| | | | |
|---|---|---|---|
| 15. | திரு.க.சபாபதிப்பிள்ளை | உ.அ.அ | 26.12.1985-30.09.1986 |
| 16. | திரு.க.குலேந்திரா | உ.அ.அ | 01.10.1986-28.06.1989 |
| 17. | திரு.சி.முருகேசபிள்ளை | உ.அ.அ | 19.09.1989-14.06.1992 |
| 18. | திரு.க.கனகரத்தினம் | உ.அ.அ | 15.06.1992-15.08.1993 |
| 19. | திரு.இ.இளங்கோ | உ.அ.அ | 16.08.1993-17.10.1993 |
| 20. | திரு.க.கேதீஸ்வரன் | உ.அ.அ/பிர. செயலர் | 18.10.1993-19.11.2003 |
| 21. | திரு.க.இராசதுரை | உதவி பிர. செயலர் | 24.09.2003-24.09.2004 |
| 22. | திரு பி.செந்தில்நந்தன் | பதில் பிர. செயலர் | 08.05.2005-31.07.2005 |
| 23. | திருமதி.சா.அஞ்சலிதேவி | உதவி பிரதேசசெயலர் | 01.11.2003-06.06.2006 |
| 24. | திருமதி.சி.நிமலினி | உதவி பிரதேசசெயலர் | 15.05.2006-20.11.2006 |
| 25. | திரு.C.A.மோகன்றாஸ் | பிரதேசசெயலர் | 07.06.2006- __ |
| 26. | செல்வி.ச.பிரேமினி | உதவி பிரதேசசெயலர் | 01.01.2007- __ |

தற்போது திரு.கிறிஸ்தோபர் அன்ரன் மோகன்றாஸ் வலி-கிழக்கு பிரதேச செயலராகவும், செல்வி ச.பிரேமினி உதவி பிரதேச செயலராகவும் கடமையாற்றி வருகின்றனர்.

இப்பிரதேசம் சம்பந்தமான ஆக்கபூர்வமான எந்த நிகழ்வுக்கும் அத்துறை சார்ந்த பொதுமக்கள் பிரதேசம் தழுவிய ரீதியில் அழைக்கப்படுவதும், தீர்மானங்கள் அவர்கள் மூலமே நிறைவேற்றப்படுவதும், அதிகாரப்பகிர்வு மக்கள் காலடிக்கே கொணர்ந்து சேர்ப்பதும் இப்பிரதேசம் அண்மைக் காலமாக ஏனைய பிரிவுகளுக்கு எடுகோளாகத் திகழ்வது மக்கள்மயப்பட்ட நிருவாகத்திற்கு வலுச்சேர்ப்பதாக இருப்பதை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இத்தகைய கலந்துரையாடல்களில் திசைகாட்டியாக அமர்ந்து தற்போதைய பிரதேச செயலர் தம் தலைமைத்துவத்திற்கு பெருமை சேர்ப்பது தனிச்சிறப்பாகும்.

**கிராமசேவையாளர்கள்**

1963 இல் கிராமத்தலைமைக்காரர் முறை ஒழிக்கப்பட்டு கிராமசேவையாளர் முறை கொண்டுவரப்பட்டது. இந்நியமனக்கடிதங்கள் அத்தனையிலும் கிராமசேவையாளர் என்பதோடு சேர்த்து கிராமத் தலைமைக்காரர் என்ற சொற்பதமும் வழங்கப்பட்டது. குற்றவியல் மற்றும் சம்பந்தப்பட்ட சட்டவாக்கங்கள் திருத்தம் செய்யப்படாமல் இருந்தமை இதற்கோர் காரணமாக அமைந்திருக்கலாம். இந்நியமனக் கடிதத்துடன் மாவட்ட அரசாங்க அதிபருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கமைய சகல கிராமசேவையாளர்களும் சமாதான உத்தியோகத்தர் (Peace officer) என்ற நியமனமும் வழங்கப்பட்டது. இந்நியமனமே குற்றவியல் சட்ட நடவடிக்கைகளில் கிராமசேவையாளர்களும், காவல்துறையினரும் பாதுகாப்புடன் கடமையைச் செய்யவும் வழிசமைத்திருந்தது. இந்நியமனம் சிலகாலத்திற்கு முன்னரே நிறுத்தப்பட்டு விட்டது.

கிராமசேவையாளர்கள் நியமனம் நடைமுறைக்கு வந்தபோது வலிகாமம் கிழக்கு கிராமத்தலைமைக்காரர்களாக பின்வரும் பதின்மர் கடமையாற்றினர்.

| | | | |
|---|---|---|---|
| 1. பத்தமேனி - இடைக்காடு | - | - | க. துரைரத்தினம் |
| 2. அச்சுவேலி | - | - | வே. இராமசாமி |
| 3. புத்தூர் மேற்கு | - | - | சி. சங்கரப்பிள்ளை |
| 4. புத்தூர் கிழக்கு | - | - | மு. சண்முகசுந்தரம் |
| 5. சிறுப்பிட்டி | - | - | எஸ். வேலாயுதர் |
| 6. நீர்வேலி | - | - | எஸ்.இராமலிங்கம் |
| 7. ஊரெழு | - | - | மு.சிவஞானம் |
| 8. உரும்பிராய் | - | - | கா.தருமலிங்கம் |
| 9. கோப்பாய் வடக்கு | - | - | எஸ்.ஆறுமுகம் |
| 10. கோப்பாய் தெற்கு | - | - | சு.யோகலிங்கம் |

மேற்போந்தவர்கள் இளைப்பாற்றப்பட்டு பின்வருவோர் கிராமசேவையாளர் தலைமைக்காராக நியமனம் செய்யப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| 01. பத்தமேனி - இடைக்காடு | - | அ.க.த.கிருஷ்ணராசா |
| 02. அச்சுவேலி | - | ச.சோமசுந்தரம் |
| 03. புத்தூர் மேற்கு | - | ரி.இராமநாதன் |
| 04. புத்தூர் கிழக்கு | - | எஸ்.வேலாயுதபிள்ளை |
| 05. சிறுப்பிட்டி | - | க.துரைசிங்கம் |
| 06. நீர்வேலி | - | செ.சீவரத்தினம் |
| 07. ஊரெழு | - | வே.சின்னத்துரை |
| 08. உரும்பிராய் | - | க.அமிர்தலிங்கம் |
| 09. கோப்பாய் வடக்கு | - | சு.யோகலிங்கம் |
| 10. கோப்பாய் தெற்கு | - | எஸ்.ஆறுமுகம் |

1993 இல் விசேட சேவை உத்தியோகத்தர்களும், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களும் உள்வாங்கப்பட்டு கிராமசேவை அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கையும் 31 ஆக அதிகரிக்கப்பட்டது. திரு.க.கேதீஸ்வரன் முதலாவது பிரதேச செயலராக பொறுப்பேற்றுக் கொண்டார். அதிகாரங்கள் யாவும் பரவலாக்கப்பட்டன. இதனால் மக்கள் கச்சேரிக்குச் சென்று ஆற்றவேண்டிய கடமைகள் யாவும் பிரதேச மட்டத்திலேயே பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நிருவாகக் கட்டமைப்பு பிரதேச செயலர், கிராமசேவையாளர்களுடன் நிறைவு செய்வதில்லை. குடியடர்த்தி, அதிகரித்துச்செல்லும் சேவைகள், கடமைகள் காரணமாக ஒரு பிரதேச செயலகத்தில் இலங்கையிலுள்ள அத்தனை திணைக்களங்களின் பணிகள் தொடர்பாக தனித்தனி கிளைகள் உருவாக்கப்பட்டு அவை அப்பிரிவு தலைவர்களின் கீழ் இயங்குவது பன்முகப்படுத்தப்பட்ட நிருவாகக்கட்டமைப்பு அடிமட்ட மக்களை

நோக்கி நகர்த்தப்படுவதைப்பார்க்கலாம். சமூக சேவை , சமுர்த்தி, காணி, நிருவாகம், கணக்கு, புள்ளிவிபரம், விளையாட்டு, கலாச்சாரம், விவசாய சேவைகள், வாகனப்போக்குவரத்து, குடியகல்வு, குடிவரவு, ஆள்பதிவு, பதிவுகாரர், பணிமனை சேவையாளர்கள் போன்ற இன்னோரன்ன துறைசார் பகுதிகள் தற்போது இயங்குகின்றன. இவைகள் யாவும் ஒன்றினைந்த செயற்பாடுகளின் மையமாகவே பிரதேச செயலகம் இயங்கி வருகின்றது. இவைகள் அத்தனையைப்பற்றிய தனி ஆக்கங்கள் வெளிவரலாம். இவ்வாக்கம் மணியகாரர், காரியாதிகாரி , உதவி அரசாங்க அதிபர், பிரதேசச் செயலர், கிராமத்தலைமைக்காரர். கிராம அலுவலர் ஆகியோரை மையமாக வைத்து புனையப்பட்டதாகும். இதனால் ஏனையவர்கள் புறக்கணிக்கப்பட்டதாக கருதவேண்டியதில்லை.

இப்பிரதேசத்தில்கடமையாற்றிய, ஆற்றிக்கொண்டிருக்கும் கிராம சேவையாளர்கள் விபரங்களை பெயர்வாரியாகவேனும் பதிவு செய்து வரலாற்று ஆவணமாக கொண்டுவரவேண்டியது அவசியமாகும்.

திரு.இ.கணேசலிங்கம் 1974ல் கிராமசேவவையாளராக நியமனம் பெற்று 1978ல் இப்பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார். திருவாளர்கள் ரி.கமலநாதன் என்.பற்குணராசா, எஸ்.தவரத்தினம், எஸ்.ஜே.செல்லத்துரை, ரி.தனபாலசிங்கம், ஆ.கணேசு, வ.ஜெகதாஸ், எஸ்.தனராசா, ரி.பாலசிங்கம், பி.என்.செல்லத்துரை, பி.கனகசிங்கம், என்.மதனசேகர், யோ.இரத்தினராசா, ஆ.மகாலிங்கம், த.தங்கராசா, க.கிருஷ்ணன், க.இராசதுரை, க.சிவகுலதிலகசிங்கம், சோதி சுந்தரலிங்கம், திருமதி.பி.ஸ்ரீரங்கநாதன் ஆகியோர் இப்பிரிவில் கிராமசேவையாளர்களாக கடமையாற்றியிருக்கிறார்கள்.

இப்பிரதேசத்தில் தற்போது பணியாற்றிக்கொண்டிருக்கும் கிராம அலுவலர் பட்டியல் பிரிவு ரீதியாக மேலே காணலாம்

| | பிரிவு இல | கிராம அலுவலர் பிரிவு | பெயர் |
|---|---|---|---|
| 01 | J/257 | இருபாலை தெற்கு | திரு. கோபால் ஜெயந்திரன் |
| 02 | J/258 | இருபாலை கிழக்கு | திரு. சுப்பிரமணியம் முத்துக்குமாரசாமி (பதில்) |
| 03 | J/259 | கல்வியங்காடு | திரு. சுப்பிரமணியம் முத்துக்குமாரசாமி |
| 04 | J/260 | கோப்பாய் தெற்கு | திரு. சின்னத்துரை தயாபரன் |
| 05 | J/261 | கோப்பாய் மத்தி | திரு. சுவகீன் அல்பிரட் (பதில்) |
| 06 | J/262 | கோப்பாய் வடக்கு | திரு.சுப்பிரமணியம் சண்முகவடிவேல் (பதில்) |
| 07 | J/263 | உரும்பிராய் மேற்கு | திரு. செல்வநாயகம் வசந்தகுமார் |
| 08 | J/264 | உரும்பிராய் வடக்கு | திரு. செல்வநாயகம் வசந்தகுமார் (பதில்) |
| 09 | J/265 | உரும்பிராய் தெற்கு | திரு. செல்லத்துரை செல்வச்சந்திரன் |

| | பிரிவு இல | கிராம அலுவலர் பிரிவு | பெயர் |
|---|---|---|---|
| 10 | J/266 | உரும்பிராய் கிழக்கு | திரு. செல்லத்துரை விக்கினேஸ்வரன் |
| 11 | J/267 | ஊரெழு | திரு. செல்லப்பா தியாகராசா வரதராஜன் |
| 12 | J/268 | நீர்வேலி தெற்கு | திரு. சுப்பிரமணியம் சண்முகவடிவேல் |
| 13 | J/269 | நீர்வேலி வடக்கு | திரு. சுவகீன் அல்பிரட் |
| 14 | J/270 | நீர்வேலி மேற்கு | திரு. பொன்னர் மகேந்திரன் |
| 15 | J/271 | சிறுப்பிட்டி கிழக்கு | திரு. கந்தையா ஸ்ரீஸ்கந்தராஜா |
| 16 | J/272 | சிறுப்பிட்டி மேற்கு | திரு. சிவப்பிரகாசம் உதயகுமார் |
| 17 | J/273 | புத்தூர் மேற்கு | திரு. சிவசம்பு எழிலரசன் (பதில்) |
| 18 | J/274 | புத்தூர் வடக்கு | திரு. கந்தையா வைத்தியநாதன் (பதில்) |
| 19 | J/275 | நவற்கிரி | திரு. சிவசம்பு எழிலரசன் (பதில்) |
| 20 | J/276 | ஆவரங்கால் கிழக்கு | திரு. ஆறுமுகம் குலேந்திரநாயகம் |
| 21 | J/277 | ஆவரங்கால் மேற்கு | திரு. இராசா கணேசலிங்கம் |
| 22 | J/278 | புத்தூர் கிழக்கு | திரு. கந்தையா வைத்தியநாதன் |
| 23 | J/279 | அச்செழு | திரு. கந்தர் நாகேந்திரன் |
| 24 | J/280 | வாதரவத்தை | திரு. ஐயாத்துரை சிவானந்தன் |
| 25 | J/281 | பத்தமேனி | திரு. கந்தையா துரைராசா |
| 26 | J/282 | தம்பாலை, கதரிப்பாய் | திரு. சிவரத்தினம் முருகவேல் (பதில்) |
| 27 | J/283 | இடைக்காடு | திரு. சிவரத்தினம் முருகவேல் |
| 28 | J/284 | வளலாய் | திரு. குமாரசாமி கதிரமலைநாதன் |
| 29 | J/285 | அச்சுவேலி வடக்கு | திரு. புதியான் சாந்தரூபன் (பதில்) |
| 30 | J/286 | அச்சுவேலி தெற்கு | திரு. புதியான் சாந்தரூபன் |
| 31 | J/287 | அச்சுவேலி மேற்கு | திரு. இராசா கணேசலிங்கம் (பதில்) |
| 32 | | அதி சிறப்புகிராமஅலுவலர் | திரு. கா.சோ. சிவராசன் |

அதி சிறப்புக்கிராம அலுவலராக இவருக்கு முன்பு திரு.வே. சின்னத்துரை பணியாற்றியிருந்தார்

**போகமனைச்சுவர் இருந்த ஓவியம்.**

வலி-கிழக்கு பிரதேச செயலகம் அமைந்துள்ள காணி பொதுமக்கள் வழங்கிய நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டது. இக்காணியில் மிகப்பாரம்பரியமான பழமைவாய்ந்த கட்டடம் ஒன்று இருந்தது. இது தனியாருக்குச் சொந்தமான வீடமைந்த நிலமாகும். ஆரம்பம் தொடக்கம் மணியகாரர் முதல் பிரதேச செயலர் வரை வதிவிடம் எதுவும் இடம்பெயராமல் இக்கட்டமே பிரிவு அலுவலகமாக இயங்கிவந்த வரலாற்றுப்பெருமை இதற்கு உண்டு. பிரசித்த நொத்தாரிசு அமரர் கெங்காதரஜயர் தமது பணிமனையாக இவ்வீட்டினையே உபயோகித்து வந்தார். இதன்பின் மணியகாரர் முறை ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் இதுவே வலி-கிழக்கு மணியகாரர், காரியாதிகாரி, உதவி அரசாங்க அதிபர், பிரதேச செயலர் செயலகமாக வாடகைக் கட்டடமாக இருந்துவந்தது. இப்போது பழையவீடு இடிக்கப்பட்டு புதிய இரண்டுமாடிகட்டடம் பரந்த பரப்பளவினையுடைய காணியில் ஓங்கியுயர்ந்து நிற்கிறது.

பண்டிதர் க.சச்சிதானாந்தனின் 'யாழ்ப்பாணக்காவியம்' மாளிகைகாண் படலத்தில்,

"தோகைக்கொம் பசைந்தசைந்து சுந்தரமாம் பஞ்சிப்பாதம்
நோகவடியெடுத்த யலே காட்டுகின்ற நுண்வண்ணத்துப்
போகமனைச் சுவரிருந்த ஓவியத்தைப் புரிந்தான் போல
மோகமுற முன்னடக்கும் ஓவியத்தை முழுதுங் கண்டான்

என்ற கவியதையடிகள் எமது கட்டடத்தை நோக்க நோக்க ஞாபகத்திற்கு வருகின்றது. 2000ம் ஆண்டு தைத்திங்கள் 19ம் நாள் இக்கட்டடம் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் பிரதேச செயலராக திரு. க.கேதீஸ்வரன் பணியாற்றியிருந்தார்.

இத்தகைய பாரிய செயற்பாடுகள் அத்தனைக்கும் பிரிவுச்செயலர் உட்பட கிராமசேவையாளர்களின் பங்கு வியக்கத்தக்கது, பாராட்டுக்குரியது. பன்முக வளங்களை ஒன்று திரட்டி நிர்மாணப்பணிகள், செயற்றிட்டங்கள், பாரிய விழாக்கள் இடர்பாடெதுவுமின்றி நடந்தேற வளமும், வனப்பும் சேர்ப்பவர்கள் இவர்கள் சமர்த்தர்களாக இருப்பதைப் பார்த்துப் பார்த்து இரசிக்கலாம்.

**சமூக அசைவியக்க வரலாறு**

"யாழ்ப்பாணம் பற்றிய வரலாற்று ஆய்வுகளை நோக்கும் பொழுது குறிப்பாக நவீனகாலத்தை நாம் சில பெருமனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளாகவே கண்டுவந்துள்ளோம் என்பது தெரியவருகிறது. இதனால் 18, 19, 20 நூற்றாண்டுகளின் சமூக அசைவியக்கம் பற்றிய வரலாற்றுத் தரவுகளை நாங்கள் முதன்மைப்படுத்தவில்லை". என பேராசிரியர் கா.சிவத்தம்பி தமது ஆதங்கத்தை ஒரு நூலில் வெளிப்படுத்தியுள்ளார்.

முனித அவலவேளைகளில் ஏற்படும் விழுமியச்சிதைவு, காலத்துக்குக்காலம் யாழ்ப்பாண வரலாற்று ஆவணமுயற்சியில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியமையையும் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

மலரும் நினைவுகள் முழுமையான தரவுகளைக் கொண்டதல்ல. அண்மைக்கால தரவுகளைக் கொண்ட ஆவணங்கள் சரிவரப்பேணப்படாமை ஒருபெருங்குறைபாடாகும். சமூக அசைவியக்கம் பற்றிய வரலாற்றுத் தரவுகளை நாம் முதன்மைப்படுத்த வேண்டியது அவசியம்.

"என்றுமே ஒருவர் செய்த நன்றியை மறக்காதே, இந்நாட்டின் பண்பாட்டைத் துறக்காதே" எனும் பாரதிதாசன் கவிதை வரிகளை நெஞ்சினில் நிறுத்துங்கள். இதுவே சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் மலரும் நினைவுகள்.

**துணைநூல்கள் :**


1. கொள்கை ஆய்வு, தகவல்பிரிவு ஜனாதிபதி செயலகம்- ஐந்துவருட சமூக பொருளாதார முன்னேற்றம், யாழ்ப்பாண மாவட்டம் 1994 - 1999.
2. இலக்குமணச்செட்டியார் சோம.லெ., நமது தலைநகரம், இன்ப நிலையம், சென்னை. 1952.
3. சச்சிதானந்தன்.க. யாழ்ப்பாணக்காவியம்., நவயோக அச்சகம் 1998.
4. பிரதேச செயலகம், கோப்பாய், வலிகிழக்கு பிரதேச செயலக புதிய கட்டட திறப்பு விழா சிறப்பு மலர். 2000.
5. சண்முகதாஸ் .அ., இரத்தினம் .க., பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பவள விழா மலர். 2002.

# வலி–கிழக்குப் பிரதேச செயலகம்

## வலி– கிழக்கு பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்கள்



# வலி. கிழக்குப் பிரதேசச் செயலகக் கிராம உத்தியோகத்தர்கள்

**இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)**

1. திரு. கே. வைத்தியநாதன்
2. திரு. ஆர். கணேசலிங்கம்
3. திரு. எஸ். முத்துக்குமாரசாமி
4. திரு. எஸ். சிவராசன் (அதிசிறப்பு கிராம அலுவலர்)
5. செல்வி. எஸ். பிறேமினி ( உதவிப் பிரதேச செயலர்)
6. திரு. சி. ஏ. மோகன்றாஸ் (பிரதேச செயலர்)
7. திரு. கே. துரைராசா
8. திரு. ஆர். யோகராஜா
9. திரு. கே. நாகேந்திரன்
10. திரு.பி.மகேந்திரம்

**நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)**

1. திரு. கே. கதிரமலைநாதன்
2. திரு. கே. ஸ்ரீஸ்கந்தராசா
3. திரு. எஸ். எழிலரசன்
4. திரு. ஏ. குலேந்திரநாயகம்
5. திரு. பி. சாந்தரூபன்
6. திரு. ஐ. சிவானந்தன்
7. திரு. எஸ். உதயகுமார்
8. திரு. எஸ். செல்வச்சந்திரன்
9. திரு. ஜி. ஜெயந்திரன்
10. திரு. எஸ். ரி. வரதராஜன்
11. திரு. எஸ். வசந்தகுமார்
12. திரு. எஸ். சண்முகவடிவேல்
13. திரு. எஸ். அல்பிரட்
14. திரு. எஸ். முருகவேள்

# வாழிய செம்புலம்.!



கவிஞர் சோ. பத்மநாதன்.

தெள்ளிய தண்ணீர்; செம்புலம்; வீசும்
தென்றல்; பொன் மாலையம் பொழுது
அள்ளியே கொணரும் மல்லிகை வாசம்;
ஆலய மணிகளின் ஓசை;
பள்ளிமா ணவியர் அணிநடை; மற்றும்
பார்க்கிற இடமெல்லாம் பசுமை;
கொள்ளைகொண் டிடும்பே ரழகெலாம் ஒருங்கு
கொலுவிருக் கிறவலி கிழக்கு!

பண்ணைகள் தோறும் நீரிறைப் பவர்கள்.
பாடிடும் ஓசை; சங்கோசை;
விண்ணினை முட்டும் நாதஸ்வர ஓசை;
வீணைமத் தளம்பயில் ஓசை;
பண்ணிசை வாணர் குரலிசை; பரதம்
பயில்பவர் சலங்கையின் ஓசை;
எண்ணில்பல் ஓசைச் சங்கமத் தோடு
இப்பிர தேசம்கண் விழிக்கும்!

மாங்கனி வாழைக் கனியொடு பலாவின்
கனியையும் நினைக்கவாய் ஊறும்!
ஓங்கிய பனை, கள், வெல்லமும் அளிக்கும்
ஓலை கொண்டாயிரம் தொழில்கள்
யாங்கணும் வளரும்! புகையிலை, வெங்காயம்,
காய்கறி யாவைதாம் விளையா?
தூங்குதல் சோம்பல் அறிந்திடா மக்கள்;
சுறுசுறுப் புடையவர்க் கிடமாம்!.

கல்வியும் பண்பாடு ஒழுக்கமும் அழகுக்
கலைகளும் என்றும் வற் றாத
செல்வமும் படைத்துத் தொழில்களை வளர்த்து
திசை தொறும் தம்புகழ் நிறுவும்
வல்லவர் வாழும் வளம்பல கொண்ட
வலிகிழக்கு எங்கள்; மண் என்று
சொல்லுவம், பாடி ஆடுவம்! இந்தச்
செம்புலம் வாழிய நீடு!.

# தமிழ் வளர்த்த தாமோதரனார்




- சைவப்புலவர் இ. செல்லத்துரை
(சிறுவை கிழார் )


"ஏடு எடுக்கும் போது ஓரஞ் சொரிகிறது கட்டு அவிழ்க்கும் போது இதழ் முரிகிறது, ஒற்றை புரட்டும ' போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது, இனி எழுத்துக்களோ வென்றால் வாலுந்தலையுமின்றி நாலும் புறமும் பாறைக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது... எத்தனையோ திவ்ய மதுர கிரந்தங்கள் காலாந்திரத்தில் ஒன்றன் பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலான் அழியக் காண்கிலும் மனம் தளம்புகின்றதே! தமிழ்மாது நம் தாயல்லவா? இவள் அழிய எமக்கென்ன என்று வாளா இருக்கின்றிர்களா? தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானமென்று இவை இல்லாதார் பெருமையும் பெருமையாமா? இதனைத் தயவு கூர்ந்து சிந்திப்பீர்களா"

இந்தக் குரலுக்குச் சொந்தக்காரன் நம்மவரான சி. வை. தாமோதரம்பிள்ளை ஆவார். கலித்தொகையின் பதிப்புரையிலே (1887) காலத்தின் வயப்பட்ட ஏடுகளுக்காகக் கண்ணீர் விட்டெழுதிய வரிகள் இவை.

சி. வை. தா. என தமிழுலகால் நன்கு அறியப்பட்ட தாமோதரம்பிள்ளை சிறுப்பிட்டியில் வைரவநாதபிள்ளை பெருந்தேவி மண இணையருக்கு மூத்த மகனாக 1882ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் 12ஆம் நாள் பிறந்தார்.

தமது தந்தையாரிடமே உரிய பருவத்தில் தமிழ்க் கல்வி பயிலத் தொடங்கி வாக்குண்டாம், நன்னெறி, மூதுரை, திவாகரம், உரிச்சொல் நிகண்டுகள் முதலிய நூல்களை ஐயந்திரிபறக் கற்றார். சுன்னாகம் முத்துக்குமாரக் கவியாரிடமும் நைடதம், பாரதம், கந்தபுராணம், இலக்கணம் முதலியவற்றைக் கற்றும் பாண்டித்தியம் பெற்றார்.



சி. வை. தா.

சி.வை. தா. வின் பிறப்புச் சமயம் கிறிஸ்தவம். சார்ள்ஸ் வின்ஸ்லோ தாமோதரம்பிள்ளை என்பதே அவரது இளமைத் திருநாமம்.

உயர்கல்வியைச் சிறப்பாகப் பெறவிரும்பிய சி. வை. தா. வட்டுக்கோட்டை அமெரிக்கன் மிசனரியாரால் நடத்தப்பட்ட செமினரியில் 1844 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ஆம் நாளில் சேர்ந்து கொண்டார். கரோல் விஸ்வநாதபிள்ளை, வித்துவான் கதிரவேற்பிள்ளை, நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை சி.ரி. மில்ஸ் முதலான பேரறிஞர்கள், சி. வை. தா. விற்கு ஆசிரியர்களாக வாய்த்தனர்.

எட்டு வருடங்கள் பயின்று செமினரிப் பட்டதாரியாக வெளியேறிய சி. வை. தா. 1852ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23ஆம் நாளுக்குப் பின், தமது இருபதாம் வயதிலே கோப்பாய் போதானா சத்தி வித்தியாசாலையில் (இன்றைய கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். இக்கலாசாலையில் கற்பித்து வரும் காலத்தில் குமரகுருபர சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டதும் சிறந்த நூலாய் அமைந்ததுமான "நீதி நெறி விளக்கத்தை" தமது உரையுடன் முதன்முதலாக அச்சிட்டு வெளியிட்டார்.

பிள்ளையவர்கள் தமது தனிப்பட்ட வாழ்வில் மும்முறை திருமணஞ் செய்ய வேண்டிய சூழலுக்கு உட்பட்டார் . வள்ளியம்மை இவரது முதல் மனைவி, தெல்லிப்பளை காலிங்கராய முதலியார் மரபினர். இவர் இரண்டு குழந்தையைப் பெற்று இறந்துவிடவே, இவரது சகோதரியான நாகம்மாளைப் பிள்ளையவர்கள் மணம் புரிந்தார். இம்மனைவியாரும் ஆறு பிள்ளைகளை பெற்று இறந்தார். சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஸ்ரீ சீதாலட்சுமியையும் பிள்ளையவர்கள் திருமணம் செய்தார். இவர் இரண்டு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்.

சென்னை சர்வகலாசாலை முதன் முதல் நடத்திய பிரவேச பரீட்சையில் (1857) சித்தி பெற்ற சி. வை. தா. அதனை அடுத்து நான்கு மாதத்துள் நிகழ்ந்த B. A. தேர்விலும் சித்தி பெற்றார். இததேர்வில் சி. வை.தா. வும் இவரது ஆசிரியரான கரோல் வின்வநாதபிள்ளையும் ஒன்றாகத் தோற்றிச் சித்தி பெற்றனர் என்பது வரலாற்றில் சுவாரசியமான செய்தி ஆகும்.

நல்லூர் ஆறுமுகநாவலரின் தொடர்பினால் ஏறத்தாழ தமது இருபத்தைந்தாவது அகவையில் சி. வை. தா. சைவசமயத்தில் சேர்ந்து கொண்டார். சமயத்திற்காகவும், சமூகத்திற்காகவும், தாய்மொழிக்காகவும் கடுமையாக உழைத்தார்.

தமது மனைவியரின் இறப்பும், தொடர்ந்து பிள்ளைகளது இறப்பும், சி. வை. தா. வின் வாழ்வில் துயர சாகரத்தைத் தோற்றுவித்தன. மகன் சி. தா. அழகுசுந்தரம் இந்தியாவில் 1893இல் கிறிஸ்தவராக மதம் மாறியமையும், சி. வை. தாவுக்கு வேதனையைக் கொடுத்தது. தனிப்பட்ட வாழ்வியலில் சோகங்களையும் சோதனைகளையும் சி. வை. தா. சந்தித்தார்.

கோப்பாய் போதனா வித்தியாசாலையில் பணியாற்றியமையைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் பீற்றர் பேர்சிவல் பாதிரியாருக்குப் பின் தினவர்த்தமானி என்னும் பத்திரிகையின் ஆசிரியர் ஆனார். சென்னை இராசதானிக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகவும் பணியாற்றினார். பின் புதுக்கோட்டைச் சமஸ்தான நிதிபதிகளுள் ஒருவராகவும் கடமையாற்றினார். இவருக்கு கௌரவமளிக்கும் வகையில் 1895இல் "இராவ் பதூர்" என்ற கௌரவப் பட்டத்தை சென்னை அரசினர் சூட்டினர்.

சி. வை. தா. என்றதும் தமிழ்கூறும் நல்லுலகாரால் முதலில் கொள்ளப்படுவது அவரது பதிப்புப் பணியேயாகும். பதிப்புப்பணியில் அவர் எதிர் நோக்கிய சிக்கல்கள் குறித்துக் கலித் தொகைப் பதிப்பு முகவுரையிலே எழுதியிருக்கிறார்.

## சி. வை. தா. பதிப்பித்த நூல்கள்

அ. இலக்கணம்

தொல்காப்பியம் , சொல்லதிகாரம் - சேனாவரையம் 1888
வீரசோழியம் - பெருந்தேவனாருரை 1881
இறையனாரகப் பொருள் - நக்கீரருரை
தொல்காப்பியர் , பொருளதிகாரம் - நச்சினார்க்கினியம் 1885
இலக்கண விளக்கம் 1889
தொல்காப்பியம் எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியம் 1891
தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியம் 1892

ஆ. இலக்கியம்

| | |
|---|---|
| நீதி நெறி விளக்கம் - சி. வை. தா. உரையுடன் | 1853 |
| தணிகைப் புராணம் | 1883 |
| கலித்தொகை - நச்சினார்க்கினியர் உரை | 1887 |
| அகநானூறு (முற்றுப் பெறாதது) | 1897 |
| சூளாமணி | 1889 |

இ. இயற்றிய நூல்கள்

| | |
|---|---|
| சைவ மகத்துவம் | |
| விவிலிய விரோதம் ஒரே பதிப்பு | 1867 |
| வசன சூளாமணி (அ) திவிட்ட குமரன் கதை | 1898 |
| நட்சத்திர மாலை | |
| ஆதியாகம கீர்த்தனம் | |
| கட்டளைக் கலித்துறை (இலக்கணம்) | |
| ஆறாம் வாசக புத்தகம் | |
| ஏழாம் வாசக புத்தகம் | |
| காந்தமலர் (அ) கற்பின் மாட்சி (நாவல்) | |

சி. வை. தா. விடம் அற்புத கவியாற்றலும் இருந்தது. ஓய்வில்லாது பதிப்புத்துறையில் ஈடுபட்டமையால் தமது கவியாற்றலை வெளிப்படுத்தச் சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லைப் போலும் ஆயினும் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைச் சிறப்பாகவே கையாண்டுள்ளார்.

ஆறுமுகநாவர் காலமானபோது சி. வை.தா. பாடிய செய்யுள்களுள் ஒன்றை எடுத்துக் காட்டாக நோக்கலாம்.

**நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற்**
**சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்**
**ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே**
**ஆத்தனறி வெங்கே யறை**

நாவலரைப் பின்பற்றிப் பாடசாலை ஒன்றை நிறுவிக் கல்வித் தொண்டாற்றினார். சிறுப்பிட்டியில் சைவப்பிரகாச வித்தியாசாலை ஒன்றதைத் தாபிக்க விரும்பினாரெனிலும் ஏதோ காரணங்களால் அதைத் தாபிக்ககாது விட்டார். தமது தாயாரின் ஊராகிய ஏழாலையில் அவ்வித்தியாசாலையை 1876இல் நிறுவினார். அங்கே சுன்னாகம் குமாரசாமிக் புலவர் முதலான அறிஞர்கள் படிப்பித்தும் புன்னாலைக்கட்டுவன் கணேசையர் முதலானோர் இளமையில் கல்வி கற்றும் அமையுமாறும் தொண்டாற்றினார்.

வரவுப் பதிவெண் ......
புகுப்பெண்......

பத்தொன்பாதம் நூற்றாண்டின் மிகச்சிறந்த ஈழத்தமிழ் அறிஞர் வரிசையில் ஆறுமுக நாவலருக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணப்படத்தக்கவர் சி. வை. தா. அவர்களே. சிறந்த தமிழறிஞராகவும் பதிப்புத் துறையில் உச்சத்துக்குச் சென்றவராகவும் கவித்துவ ஆற்றல் மிக்கவராகவும் கல்விப் பணியிலும் சமய வளர்ச்சியிலும் ஈடுபாடு கொண்டவராகவும் தமிழ் ஆய்வின் வளர்ச்சிக்கு உதவியவராகவும் சி. வை. தா. விளங்கினார்.

இத்தகைய பெருமைகளைப் பெற்ற சி. வை. தா. 01. 01. 1901 செவ்வாய்க்கிழமை காலை ஒன்பதரை மணியளவில் வைகுந்த ஏகாதசி என்னும் புண்ணிய காலத்தில் சுற்றமித்திரர் புடைசூழ இருமருங்கினும் தமது சகோதரர், குமாரர், பத்தினி, முதலியோர் நின்று பரிதவிக்க தேவார திருவாசகம் இடையறாது ஒலிக்க, இகவாழ்வை ஒருவிப்பரவாழ்வை மருவினார். சென்னையில் இறுதி நிகழ்வுகள் இடம் பெற்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகப் பெரும் தமிழறிஞர் ஒருவர் எம்மூவராய் இருப்பது எமது பிரதேசத்திற்கே பெருமையைத் தரும் விடயமாகும். சி.வை.தா.வின் பெருமைகளைப் பறை சாற்றக் கூடிய வகையில் நினைவுச் சின்னங்கள் இப்பிரதேசத்தில் அமைக்கப்பட வேண்டும். சி. வை. தா. முதன் முதலாக ஆசிரியப் பணியாற்றிய கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் 2002 இல் அன்னாருக்கு நினைவுச் சிலை ஒன்று அமைக்கப்பட்டது என்பது இக்கல்லூரியின் தமிழ்ச் சங்கத்தார் இதே ஆண்டில் "இராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை ஒரு நோக்கு" என்ற நூலையும் வெளியிட்டனர். என்பதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

## துணை நூல்கள்


இராசரத்தினம் ஏ. ஸ்ரீமான் றாவ்பகதூர், சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் வாழ்க்கைச் சரித்திரம் (1902)

இராசரத்தினம் ஏ. றாவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் வாழ்க்கைச் சரித்திரம், குரும்பசிட்டி மாமனிதர் கலாலயம், 2002.

சிறுவைக் கிழார், செந்தமிழ் வளர்ந்த சி. வை. தாமோதரம்பிள்ளை. 1961

இராவ்பகதூர், சி. வை. தாமோதரம்பிள்ளை ஒரு நோக்கு, தமிழ்ச் சங்கம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, 2002.

மனோன்மணி சண்முகதாஸ், சி. வை. தாமோதரம்பிள்ளை, குமரன் புத்தக நிலையம் கொழும்பு - சென்னை, 2007

துரை மனோகரன் , இலங்கையில் தமிழ்இலக்கிய வளர்ச்சி, கலை வாணி புத்தக நிலையம், கண்டி 1997.

கைலாசபதி க., தமிழ் நாவல் இலக்கியம், குமரன் பப்ளிஷர்ஸ் 1999.

"தாமோதரம்" ( சி. வை. தாமோந்திரம்பிள்ளை B. A. , B. L. எழுதிய பதிப்புரைகளின் தொகுப்பு) " யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற் பதிப்பு விற்பனைக் கழகம்" 411/1 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1971.

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும்



- எஸ்.கே. யோகநாதன்
பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

இலங்கையின் கல்வி வரலாற்றில் யாழ்ப்பாண மக்கள் ஆழமாக தடம்பதித்தவர்கள். ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்னரே குருகுலப்பள்ளிகள், நிலாப்பள்ளிகள், மரநிழல் பள்ளிகள், திண்ணைப்பள்ளிகள், கோயிற்பள்ளிகள், முதலான கல்வி நிறுவன ஒழுங்கமைப்புக்கள் காணப்பட்டன. இவற்றை விட "சங்கமம்" என்ற உயர் கல்வி ஒழுங்கமைப்பும் யாழ்ப்பாணத்து அரசன் காலத்தில் இயங்கி வந்ததற்கான சான்றுகளும் உண்டு. ஐரோப்பியர் வருகையுடன் யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியம் பலவித முரண்பாடுகளுடன் இன்று வரை வளர்ச்சி கண்டு வருகின்றது. அதிலும் கோப்பாய்ப் பிரதேசம் மாணவரின் கல்வி வளர்ச்சிக்கும், ஆசிரியர்களின் பயிற்சிக்கும் பேர் போன இடமாக மிளிர்கின்றது. மிக நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட கோப்பாய் ஆசிரிய கலாசாலையும், கல்வித்துறையில் சாதனை படைத்துவரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியும் இப்பிரதேசத்திலேயே சிறப்பாக இயங்குகின்றன.

இலங்கையின் ஆசிரிய கல்வி வரலாற்றில் 1986ஆம் ஆண்டு 30ஆம் இலக்க கல்விச்சட்டம் மூலம் தேசிய கல்வியியற் கல்லூரிகள் தோற்றம் பெற்றன. உலகளாவிய நவீன ஆசிரியர் கல்விச் செயல் நெறியில் முன் சேவைப்பயிற்சியை முழுமையாக நிறைவு செய்தவர்களே ஆசிரியர்களாகப் பாடசாலைகளில் கற்பிக்க முடியும் என்பதற்கமைய தேசிய கல்வியியற் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. இதில் தமிழ் மொழிமூல தேசிய கல்வியியற் கல்லூரிகளில் மலையகத்தில் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி 1990 ஆம் ஆண்டிலும், வவுனியாவில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி 1993 ஆம் ஆண்டிலும், மட்டக்களப்பில் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி 1995ஆம் ஆண்டிலும் உருவாக்கப்பட்டன. ஆனாலும் மிகப்பிந்திய 16ஆவது தேசிய கல்வியியற் கல்லூரியாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 2000 ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் உருவாகி பின் இராச வீதி பாதைக்கருகில் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் அவர்களின் குடும்பத்தவர்கள் அன்பளிப்பாகத் தந்த 14 ஏக்கர் காணியில் 480 மில்லியன் உலக வங்கி நிதியில் இக்கல்லூரி 2004 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. இக்கல்லூரியின் முதலாவது பீடாதிபதியாகக் கலாநிதி தி. கமலநாதன் நியமிக்கப்பட்டார். கல்விசார், கல்வி சாரா ஊழியர்கள் இக்கல்லூரியில் தமது கடமைகளை சிறப்பாக நிறைவேற்றி வருகின்றனர்.



கல்லூரியின் முகப்புத் தோற்றம்

நவீன ஆசிரியர் கல்விச் செயலாற்றுகைகளுக்கு வழியமைக்கும் வளமான கட்டடங்கள், பௌதீக வசதிகள், கணனிக் கூடங்கள், விஞ்ஞான ஆய்வு கூடங்கள், நூலகம், இணையத்தள (இன்ரநெற்) வசதிகளைக் கொண்டு தரமான ஆசிரியர் கல்வியை இக்கல்லூரி வழங்கி வருகின்றது. ஆரம்பக் கல்வி, விசேடகல்வி, சித்திரம் நடனம், சங்கீதம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகள் தமிழ்மொழி மூலமும், ஆங்கிலம், நூலகமும்

தகவல் தொழில் நுட்பமும், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகள் ஆங்கில மொழிமூலமும் கற்பிக்கப்படுகின்றன. இது வரை 2500 இற்கு மேற்பட்ட முகிழ் நிலை ஆசிரியர்கள் பயிற்சியை முடித்து வெளியேறியுள்ளார்கள்.

இக்கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன் 2006ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுச் செல்ல வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதியாக நீண்ட காலம் சேவையாற்றிய திரு. எஸ். கே. யோகநாதன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியானார். தொடர்ந்து கல்லூரி பல்வேறு கட்ட வளர்ச்சியைக் கண்டது. தேசிய கல்விக் கல்லூரிகளில் வதிவிடத்துடன் கூடிய சேவை முன்பயிற்சி நடைபெறுவதால் இங்குள்ள ஆசிரிய மாணவர்கள் இணைப்பாட விதான செயற்பாடுகளில் அதிகமான தேர்ச்சியும், ஈடுபாடும் உடையவர்களாக இருக்க, ஏனைய ஆசிரிய கல்வி சேவை முன் பயிற்சி வழங்கும் நிறுவனங்களில் இத்தகைய நிலை இல்லை. விளையாட்டுகள், ஆக்கங்கள், நடனங்கள், இசை, பட்டிமன்றம் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகள் இங்கு முக்கிய இடம் பெறுகின்றன. நவீன கல்விச் செயற்பாடுகளான இவை பாடசாலைகளில் முக்கிய இடம் பெறுகின்றன.

யாழ் தேசிய கல்விக்கல்லூரியின் சிந்தனை - சொல் - செயல் என்ற மகுட வாசகத்திற்கு ஏற்ப இங்கு பயிற்சி பெறும் ஆசிரியர்கள் புதுமைகளையும், புத்தாக்கங்களையும் கண்டறிந்து சிறந்த நல்லாசிரியராக உருவாக்கப்படுகின்றனர்.

### கல்லூரியின் நோக்கு :-

பிள்ளைகளின் உள்ளார்ந்த திறன்களை உயர்ந்த பட்சம் விருத்தி செய்து, அவர்களை நற்பிரசைகளாக்கக்கூடிய தேர்ச்சியும், அர்ப்பணிப்பும் கொண்ட ஆசிரியர் குழாத்தை அமுல்படுத்தப்படும் கலைத்திட்டத்தினூடாக உருவாக்கி நாட்டிற்கு வழங்குதல்.

### கல்லூரியின் பணிக்கூற்று :-

வினைத்திறனுடன் கூடிய தொழில்வாண்மை உடையோர்களாகவும் தேசத்தின் கட்டுமானத்தில் உண்மையான பங்காளராகவும் காலத்தின் தேவைக்கேற்ப கல்வியின் தேசிய இலக்குகளை உணர்ந்தோர்களாகவும் உலக சமூக முன்னேற்றத்திற்கு பொறுப்பு வாய்ந்தவர்களாகவும் உள்ள பொருத்தமான தேர்ச்சி உடைய ஆசிரியர்களை பாடசாலை முறைமைக்கு வழங்குதல்.

இவற்றுக்கமைய இலட்சிய பூர்வமான ஆசிரியர்களை உருவாக்கும் நோக்கில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி செயலாற்றி வருகின்றது. இங்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இலங்கை முழுவதும் சிறப்பாக ஆசிரியப் பணி செய்து கல்லூரியின் புகழை நிலை நாட்டி வருகின்றனர். இக்கல்லூரியில் பயிலும் முகிழ் நிலை ஆசிரியர்கள் பின்வரும் தேர்ச்சிகளைப்பெற்று நல்லாசிரியர்களாக கடமையாற்றும் ஆற்றலைப் பெறுவர்.

எமது பிரதேசம் பல இடர்களை எதிர்நோக்கியுள்ளது. எமது பிள்ளைகள் வளர்ந்து தலைநிமிர வேண்டிய மண் இதுவாகும். அவர்களுக்கு வாழ வழிகாட்டி வாழ்க்கைப் பாதையிலிருக்கும் தடைகளை அகற்றி ஏற்படுத்தும் அழகிய பாதையினூடாக எம் மாணவர்களை அழைத்துச் செல்ல வேண்டி இருக்கின்றது. ஆசிரியர்கள் இப்பணியை ஆற்றியே தீர வேண்டும். ஏனெனில் எம்மைவிட மற்றொரு தலைமுறையினர் இந்த மண்ணைக்கட்டி எழுப்புவார்கள் என மனக்கோட்டை கட்டலாகாது. சமூகத்தை வளப்படுத்த உயிர்த்துடிப்பான ஆசிரிய செயற்பாடுகள் அவசியம். இதற்குப்புதிய ஆசிரிய பரம்பரையினரை அர்ப்பணிப்போடும் தியாக மனப்பான்மையோடும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உருவாக்கி வருகின்றது.

# பூக்களும் நிறம் மாறும்



- தாட்சாயணி

வெண்ணிறப்பூக்கள் சிறகு விரித்துப் பறப்பது போலிருந்த பருத்தி விதைகளை "ஊ"வென்று ஊதினான் கண்ணன். காற்றுத் தள்ளிக் கொண்டு போன ஒவ்வொரு விதைகளும் வெளிர் நிற இழைகளை விரித்து தேவதையெனத் தோற்றம் காட்டின. என்ன அழகு என வியந்து போன அவன் பிரமிப்பு மகிழாவைக் கண்டதும் குறும்பாய் மாறிற்று ஏழு வயதேயான அவளுக்கு பஞ்சைக் கண்டால் பயம். அதுவும் காற்றில் பறந்து பறந்து அழகு காட்டும் இந்தப் பருத்திப் பஞ்சைக் கண்டால் கேட்கவே வேண்டாம் காற்றில் பறப்பவை தன்னைத்தான் துரத்துவதாக எண்ணி மிரண்டு போவாள்.

அந்தச் சிறிய முற்றத்தில் எவ்வாறு பருத்தி விதைகள் மிதந்து வருகின்றன என்பது அவனுக்குத் தெரியாது. பக்கத்திலே மரங்கள் அடர்ந்த ஒரு வளவு இருக்கிறது. அங்கே பருத்திச்செடி இருக்கக்கூடும். அந்த வளவுக்குரியவர்கள் இப்போது ஜேர்மனியில் இருக்கிறார்களாம். அந்த வளவின் வருமானங்களைத் திரட்டவென்று யாரோ இடைக்கிடை வந்து போகின்றார்கள். அதைத் தவிர அந்த வளவின் விபரங்கள் பற்றி அவனுக்கென்ன தெரியும்? இவர்கள் இருப்பதே இரவல் காணி. மாவிட்டபுரத்திலிருந்து இடம்பெயர்ந்து யாருடைய தயவிலோ நீர்வேலிக்கு குடிவந்தாகி விட்டது. இதுவும் ஒரு வெளிநாட்டுக்காரரின் வீடு தான். இவர்களது நிலைக்கு இரங்கி காணியைப் பார்த்துக் கொள்பவர் அக்காணிக்குள் ஒரு குடிசையை அமைக்க அனுமதி கொடுத்ததன் பேரில் அவர்கள் இங்கு வசிக்கின்றார்கள். அப்பா இல்லாமல் அம்மா படுகிற கஷ்ரம் அவனுக்குத் தெரியும் ஐந்து பிள்ளைகளையும் தனியே வளர்ப்பதென்றால் சும்மாவா? அண்ணன்கள் இரண்டு பேரும் கப்பலில் சாமான் இறக்குகிற வேலைக்குப் போகிறார்கள். நாரி முறிய வேலை செய்து குடும்பத்தை முன்னேற்றி விட வேண்டுமென்று தான் அவர்களும் பாடுபடுகிறார்கள். ஆனால் ஈஸ்வரி செய்த வேலை.....?

ஈஸ்வரியும், மகேஸ்வரியும் கண்ணனுக்கு மூத்த சகோதரிகள். மகேஸ்வரி இப்போது தான் எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கிறாள். ஈஸ்வரி பத்தாம் வகுப்போடு படிப்பை நிறுத்திவிட்டாள். அப்படிப் படிப்பை நிறுத்தியது தான் அவள் செய்த தவறா.....? படிப்பில் முற்றாக மூழ்கியிருந்தால் அவளால் தன் வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்திருக்குமா? முடிந்தவற்றை எப்படி மாற்ற முடியும்...? ஈஸ்வரியின் வாழ்க்கையின் முதல்பாகம் அப்படித்தான் முடிந்து போயிற்று...

கண்ணன் பதினொரு வயதில் கால் பதித்துக் கொண்டிருந்தான் குடும்பப் பொறுப்பு அவனுக்கிருந்தது. ஆனாலும் அந்தப் பொறுப்பான மனதிலும் வயதிற்கேயுரிய குறும்பு சில வேளைகளில் எட்டிப்பார்க்கும். அப்படித்தான் அந்தக் கணத்தில் தோன்றிய குறும்போடு, அவன் பஞ்சை ஊதி மகிழா பக்கம் தள்ளி விட்டான். முற்றத்தில் அமர்ந்து சிரட்டையால் மணலை அடித்துப் பொங்கலிட்டுக் கொண்டிருந்த மகிழாவை நோக்கிப் பஞ்சுகள் நிதானமாய் வந்திறங்கின.

ஒரு கணம் தான்... ஏதோ ஒரு அருட்டலில் நிமிர்ந்த மகிழா கண்கள் மிரளப் பின் வாங்கினாள். உதடுகள் விம்ம சற்றுத்தூரம் பின்னோக்கி நகர்ந்து எழும்பி ஓடினாள். திரும்பி பார்த்தபடி ஓடினாள். ஓடிப்போய் குடிசையின் பக்கத்திலிருந்த மாமரத்தின் பின் ஒடுங்கிய படி வீறிட்டாள்.

கண்ணன் பஞ்சை மறுபடியும் ஊதியபடி இவள்பக்கம் தள்ளினான். அவள் பயத்தோடு குடிசையை நோக்கி ஓடினாள். "அம்மா... அம்மா எனக் கதறியபடி உள்ளோடினாள் கண்ணன் சிரித்தபடி " அது போட்டுது வா வெளிலை....." என்றான்.

உள்ளிருந்து அன்னம்மா வெளியே வந்தாள்.

"என்னடா செய்தனி ......."எனக் கண்ணனை அதட்டினாள்.

"ஒண்டுமில்லை பஞ்சைப் பார்த்துப் பயப்பிடுகிறாள்...." கண்ணன் விளக்கம் கொடுத்தான்.

"அவள் குழந்தைப் பிள்ளையைப் பிடிச்சு ஏன் வெருட்டுகிறாய். அவளுக்குப் பஞ்செண்டாப் பயமெண்டு தெரியும் தானே உனக்கு.."

"அதுதானம்மா" பயத்தைப் போக்காட்டத்தான் பஞ்சை ஊதி விட்டன் அவள் கிட்டவே அண்ட விடுறாளில்லை...."

அந்தப் பயம் நல்லதில்லைத்தான் ஆனால் அதை மெதுவாய்த் தான் போக வைக்க முடியும் என்பதை உணராமல் கண்ணன் அதிரடியாய்ப் புரிய வைக்க முயல அது தோல்வியிலேயே முடிந்து விட்டது.

"அம்மம்மா... அம்மம்மா..." என அன்னம்மாவின் சேலைக்குப் பின்னால் ஒடுங்கினாள் மகிழா.

படலையருகில் ஈஸ்வரி வருவது தெரிந்தது. அவளது கையிலிருந்த பையில் நிவாரணச் சாமான்கள் நிரம்பியிருந்தன. அவளைக் கண்டவுடன் அன்னம்மா விடமிருந்து விடுபட்டு "அம்மா.." என்றபடி தாயிடம் ஓடினாள் மகிழா

"அது வருதம்மா, அது என்னைப் பிடிக்கப் போகுது." பஞ்சைக் காட்டி ஈஸ்வரியிடம் முறையிட்டாள்.

ஈஸ்வரிக்கு இப்போது தான் இருபத்து மூன்று. வயது இளமையாக இருந்தாள். ஒரு குழந்தைக்குத் தாய் என்று சொல்ல முடியாது. மகிழா ஓடி வந்து அணைத்துக் கொண்டதும் அவளுக்கு எரிச்சல் பீறிட்டுக் கொண்டு வந்தது. தேவையில்லாமல் மகிழா தன் தகப்பனை நினைவூட்டினாள். அது அவளுக்கு ஆத்திரத்தை ஊட்டியது.

பக்கத்து வளவிற்கு வேலை செய்யவென்று அடிக்கடி வந்து போனவள் தான் நாதன். அந்த வளவினிருந்த புல்பூண்டுகளை வெட்டிச் சிதைத்தவன், அவள் மனதில் புல் பூண்டுகளைப் பெருக விட்டு விட்டான். அந்த வயது அறிவுரைகளை ஏற்கவில்லை அந்த வயது சிருஷ்டித்த மாய உலகினுள் அவள் விழுந்து விட்டாள். எழுந்து பார்த்த போது அவள் உலகம் இருட்டாயிருந்தது. இருட்டைத் தடவித்தடவிப் பார்த்த போது அந்த இருட்டுக்குள் இன்னோர் உயிரும் ஜனித்திருந்தது.

"சீ... போடி சனியனே... என்னை நிம்மதியாய் இருக்கவிட மாட்டனெண்டு வந்து நிக்குது எப்பவும்.."

அவள் மகிழாவைத் தள்ளி விட்டாள். எற்றுப்பட்ட மகிழா தன்னை நிலைப்படுத்தச் சிறிது நேரமாயிற்று. நின்று நிதானிப்பதற்குள் பறந்து சென்ற பஞ்சு அவள் ஆடையில் ஒட்டிக் கொண்டது. அவள் மீண்டும் வீறிட்டுக் கத்தினாள் அது தாயின் புறக்கணிப்பினால் வந்த அழுகையா..? அல்லது பஞ்சைக் கண்ட பயத்தினால் வந்த அழுகையா..? என இனங்காண்பது மிகவும் சிரமமாயிருந்தது.

கண்ணன் அவளை நோக்கி ஓடிப்போனான் பஞ்சுப்படலத்தை மெல்ல விலக்கி "ஒண்டுமில்லை.. அது போட்டுது..." என்றான்.

மகிழாவின் அழுகை நிற்க வில்லை.

"ஓடு.. கிட்ட நிக்காதை, எங்கட மகிழாக்குட்டியைத் தொடப்படாது...."

" கண்ணன் பஞ்சின் பக்கம் கையை ஓங்கி விரட்டினான். அவள் அழுகை நின்றாலும் கன்னமெங்கும் கண்ணீர் திரையிட் டிருந்தது.

வெறுப்போடு உள்ளே நுழையப் போன ஈஸ்வரியை அன்னம்மா அதட்டினாள்

"நீ செய்த பிழைக்கு, பிள்ளையிலை ஏன் காயிறாய்.."

ஈஸ்வரி நெருப்பாய் ஒரு பார்வை உமிழ்ந்து விட்டுக் கத்தினாள்.

"அப்படியே தேப்பன்ரை அச்சு... அப்பவே அழிச்சிருக்கோணும். விட்டது என்ரை பிழைதான்...."

கண்ணன் பரிவாய் மகிழாவை நோக்கினான். அவள் குழந்தை அவளுக் கென்ன தெரியும். தாய் தன்னைத் திட்டுவது எதற்காக என்று கூடப் புரியாதவளாய் மிரண்டபடி நின்றாள்.

"இனி பஞ்சு வராது என்ன..?" கண்ணனின் சமாதானம் காதில் விழாதது போல் விறைத்துப்போய் உட்கார்ந்திருந்தாள் மகிழா

மகிழாவுக்கு மயிர்க்கொட்டி, பஞ்சு போன்றவற்றைக் கண்டால் பயம் ஏற்படுவது இயல்பானதாயிருந்தது. மயிர்க்கொட்டியாவது பரவாயில்லை பட்டால் சுணைக்கும். ஆனால் பஞ்சு அப்படியில்லையே. எந்தத் தீங்கும் தராத பஞ்சைப் பார்த்து ஏன் பயப்பட வேண்டும். அதுவும் இவ்வாறு காற்றில் பறக்கும் பஞ்சுகளைக் கண்டால் கேட்கவே வேண்டாம். தன்னைப் பிடிக்கத் தான் பஞ்சு பறந்து வருகின்றது என்கிறாற் போல் அலறுவாள் சாம்பல் படிவுகளாய் முருங்கையின் அடியில் குவிந்திருக்கும் மயிர்க்கொட்டிகளும் காற்றில் பறந்து வந்து வேலியோரத்தே பதுங்கியிருக்கும் பருத்திப் பஞ்சுகளும் அவளை இனம் புரியாத அச்சத்தினுள் ஆழ்த்தின. அப்போதெல்லாம் அவளது மனது தாயைத் தேடி ஓடும். ஆனால் ஈஸ்வரியோ தன் வாழ்வைத் தொலைத்த கோபத்தில் அவளைப் புறக்கணித்தே பழகியிருந்தாள்.

"சொல்லச் சொல்லக் கேக்காமல் நீ அந்த அறுவான்ரை சொல்லை நம்பிப் போனாய். இப்ப அவன் உன்னை விட்டிட்டுப் போனாப்பிறகு எங்களிலை ஏன் எரிஞ்சு விழுறாய்..."

அன்னம்மா ஈஸ்வரியின் போக்குப் பிடிக்காமல் புலம்பியிருக்கிறாள். உலகத்தில் தன்னைத் தவிர எல்லாரும் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணப்போக்குடனிருந்த ஈஸ்வரி தனது நிலைக்குத் தான் தான் காரணம் என்பதைக் கூட மறந்து உலகத்தின் மீது தன் வெறுப்பைக் காட்டினாள். அதனால் தன் குழந்தைக்குக் கூட உலக வாழ்வில் விரக்தி ஏற்படும் என்ற எண்ணம் கூட இல்லாமல். தனது உலகம் சந்தோஷமாய் இருந்த வரை சிரித்துக்கொண்டு தனக்கு உலகம் இருண்ட போது, உலகம் இருட்டாக வேண்டும் என்று சபித்தபடி இருந்தவளுக்குத் தன் குழந்தையைப் பார்க்கக்கூட எரிச்சலாய் இருந்தது.

மகிழாவுக்கு அவள் வயதில் மற்றக் குழந்தைகளுக்கு ஏற்படும் இயல்பான ஆசைகள் கூட இல்லை. அம்மாவிடம் தன் அன்பை, ஆசையைப் பகிர்ந்து கொள்ள முடியவில்லையே என்ற ஆதங்கமே இருந்தது.

"மா...மா" அவளது குரல் கேட்டு கண்ணன் அவளை நெருங்கி ஆதரவாக அவளைத் தடவிக் கொடுத்தான்.

"என்ன குஞ்சு..."

"அம்மா என்னை விட்டிட்டுப் போடுவாவோ ... மாமா.."

"இல்லை ... ஆர் சொன்னது அப்பிடி..."

"பக்கத்து வீட்டுப் பாமினி சொன்னது.."

கண்ணனும் அரசல்புரசலாக அதைக் கேள்விப்பட்டிருந்தான். சங்கக் கடையில் சாமான் நிறுக்கும் மாணிக் கத்தோடு ஈஸ்வரியை இணைத்துக் கதை உலவிற்று. யாரும் கட்டிய கதையோ? அல்லது உண்மையில் அப்பிடித்தானோ..? ஏற்கனவே பட்டது காணாதென்று இன்னும் படப்போகிறாளோ என்று அவனது சின்ன மனம் அக்காவுக்காகப் பரிதாபமுற்றது. சில வேளை அதற்கு இடைஞ்சலாக இருக்கிறாள் எனும் எண்ணத்தால் தான் மகிழா மீது அவள் எரிந்து விழுகிறாளோ..? அப்படி ஏதேனும் நிகழ்ந்தால் பிறகு மகிழாவின் கதி...? அதை அவளால் தாங்க முடியுமா..?

நாட்கள் நகர்ந்தன. மகிழாவுக்கும் இப்போது அடிக்கடி கோபம் வந்தது. தாயின் புறக்கணிப்புத் தந்த வேகத்தில் அவளது ஆத்திரம் எல்லை மீறிக்கொண்டு போனது. சின்ன விடயத்துக்கும் ஆங்காரப்படுவது அவளது வழக்கமாயிற்று. பள்ளிக்கூடத்தில் கூட மற்றப்பிள்ளைகளிடத்தில் அவள் முரட்டுத்தனமாக நடந்து கொள்வதாக முறைப்பாடு வந்தது. தாயைத் தேடுவதை இப்போது அவள் பெரும்மளவு குறைத்து விட்டாள்.

ஈஸ்வரியின் தோற்றமும் நாளுக்கு நாள் மாறிக்கொண்டிருந்தது. அலங்காரம் பண்ணிக் கொள்வதில் அவளது அக்கறை அதிகரித்தது. குழந்தைக்குப் பவுடர் வாங்கிப் போட்டிருப்பாளோ என்னவோ அவளருகில் போனால் சோப்பும், பவுடரும் போட்டி போட்டுக் கொண்டு கமகமத்தன. அந்த வாசத்தை நாடிக் கவரப்படும் மகிழா கூட அந்த வாசம் வரும் திக்கில் தாய் நிற்கிறாள் என உணர்ந்தாலே எதிர்த்திசைக்குத் திரும்பி வந்து விடுவாள்.

அன்று என்று மில்லாத விதமாய் ஈஸ்வரி மகளை அழைத்தாள். தயங்கித் தயங்கிப் போன மகிழாவிடம் இனிப்புகள் நிறைந்த பையை நீட்டினாள்.

"சாப்பிடு. மாமாக்கும் குடு... அம்மம்மா சொல்லுறபடி கேட்டு நடக் கோணும் என்ன, நான் இனிமேல் வரமாட்டன்..."

மகிழா தாயையே வெறித்துப் பார்த்தாள். இனிப்புப்பையை அவள் வாங்கவில்லை.

"என்ன யோசிக்கிறாய், இந்தா பிடி.." அவளின் கைக்குள் இனிப்புகளைத் திணித்தபடி இனியும் நின்றால் மகிழா மறித்து விடுவாளோ எனத்தோன்றிய கணநேர அருட்டுதலில் விருட்டென்று எழும்பினாள் ஈஸ்வரி.

"எங்கை அக்கா போறாய்...?"

கண்ணன் ஆச்சரியமாகக் கேட்டான்.

"எனக்கும் மாணிக்கத்துக்கும் கோயிலிலை கலியாணம் முடிஞ்சு போச்சு. நான் அவரோடை இருக்கப் போறன்...."

"அப்ப மகிழா..."

"நீங்கள் பாத்துக் கொள்ளுங்கோ..."

கண்ணன் கலங்கிப் போய் அவள் போகும் திசையைப் பார்த்தான் "அவளுக்கு இரண்டாம் முறையும் புத்தி பேதலிச்சுப் போச்சு ..." அன்னம்மா வாய்க்குள் முணுமுணுத்தபடி வாசலுக்கு வந்தாள்.

"மகிழாதான் பாவம்.."

அவன் மகிழாவின் பக்கம் திரும்பினான் அவள் இறுகின முகத்தோடு சிரட்டைக்குள் மண் நிரப்பி அடித்துக்கொண்டிருந்தாள். அவளருகே ஒரு மயிர்க்கொட்டி மெதுவாக ஊர்ந்து வந்தது.

மகிழா வீறிடப் போவதை எதிர் பார்த்து கண்ணன் அவளருகே ஓடினான். அதற்குள் மகிழா சிரட்டையை எடுத்து மயிர்க்கொட்டியின் மேல் இறுக்கி அடித்தாள். மயிர்க்கொட்டி நசுங்கிய பிறகும் திரும்பத் திரும்ப அடித்துக்கொண்டிருந்தாள்.

அவளது கண்களிலிருந்த வெறுமையும், விரக்தியும் இவனை என்னமோ செய்தன.

காற்றில் பறக்கும் பஞ்சைப் பார்த்துப் பயந்து கதறும் மகிழா.. மயிர்க்கொட்டிகளைத் தூரப் பார்த்தே அலறும் மகிழா...

வெறி வந்தவள் போல் நசுங்கிய பிறகும் அந்த மயிர்கொட்டியை அடித்துக் கொண்டிருந்தாள். அவளருகில் ஈஸ்வரி கொடுத்துவிட்டுப் போன இனிப்புக்கள் கேட்பாரின்றிச் சிதறிக் கிடந்தன.

# வலி – கிழக்குப் பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்த தமிழ்ச் சான்றோர்கள் – ஓர் அறிமுகம்



*'நீர்வை மணி'* கு. தியாகராசக் குருக்கள்

"தமிழுக்கு அமுதென்று பேர்" என்கிறார் பாரதிதாசன் "இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்" என்கிறது பிங்கல நிகண்டு. இத்தகு இனிய தமிழை வளர்ப்பதில் இலங்கைத் தமிழர்களுடைய பங்கும் தமிழகத்துக்கு அடுத்தபடியான சிறப்பிடம் பெறுகிறது. இவ்வாறு சிறப்புற்று விளங்கும் இலங்கைத் தமிழ் இலக்கியமானது வளர்ச்சி பெற்ற இடமாக, இன்றும் வளர்ந்து கொண்டிருக்கும் இடமாக முன்னணியில் யாழ்ப்பாணம் திகழ்கிறது. இவ்வாறு உயர் நிலை இலக்கியங்கள் உருவாகிய யாழ்ப்பாணத் தமிழ் மண்ணிலே நீர்வளமும், நிலவளமும், கலைவளமும், இலக்கியவளமும் பொருந்தப்பெற்ற வலிகிழக்குப் பிரதேசமும் இலக்கியங்கள் பல எழுந்த பூமியாக, பற்பல தமிழிலக்கிய ஆசிரியர்களை உருவாக்கிய, உருவாக்கி வரும் பூமியாக சிறப்புற்று மிளிர்கின்றது.

வலி. கிழக்குப் பிரதேசத்தில் உள்ள நீர்வேலியூரில் தமிழில் "இரகுவம்சம்" எனும் பெரும் பாரகாவியம் எழுதியவனும் 16ம் நூற்றாண்டைச் சேர்ந்த, ஆரிய சக்கரவர்த்திகளின் காலத்தவனும் தமிழரசன் பரராச சேகரனின் மருமகனுமான அரசகேசரி என்பான் உருவாக்கிய "அரசகேசரிப் பிள்ளையார் பேராலயம்" இன்றும் அழியா சிறப்புடன் விளங்குகிறது. இந்த புகழ் பெற்ற இரகுவம்ச காவியத்தை செய்த அரகேசரிக்கும் இப்பிரதேசத்திற்குமுள்ள தொடர்பு இப்பிரதேசத்தின் இலக்கிய வளம் பழமை மிக்கது என எண்ண வைக்கின்றது. எனினும் தெளிவான வரலாற்று ஆதாரங்கள் இன்மையால் விடயத்தை விபரிக்க முடியாமல் உள்ளது. எனவே 18ம் நூற்றாண்டினரான "இருபாலை நெல்லைநாத முதலியார்" என்ற புலவர் தொட்டே இப்பிரதேச தமிழ்ச்சான்றோர் பற்றிய செய்திகளை தெளிவாக விபரிக்கலாம்.

இந்த வகையில் எமக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்த தொகுப்பில் ஈடுபட்டுள்ளோம். நாட்டின் அசாதாரண சூழலும், பலரது இடப்பெயர்வும், நூல்கள், பெரியோரின் விபரங்களின் அழிவும் இத்தொகுப்பில் முழுமையுண்டாக தடையாயின. எனவே சில தமிழ் இலக்கிய அறிஞர்களின் விபரங்கள் இத் தொகுப்பில் இடம்பெறாதிருக்கலாம். இதனை கவனிக்குமாறும் எனவே எதிர்காலத்தில் இத்தகைய ஆய்வில் ஈடுபட விரும்பும் தமிழ் இலக்கிய ஆர்வலர்கட்கு இது ஓர் அடிப்படையாய் அமைய வேண்டுமென்ற நோக்குடன் இவ் ஆக்கத்தை அமைத்துள்ளோம்.

இத்துடன் இங்கு கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள், பெரியோர்கள் பற்றிய அறிமுகம் மட்டுமே. எனவே ஆர்வலர்கள் இதை துணைக் கொண்டு அவர்கள் பற்றிய முழுமையான தகவல்களை அறிவார்களாக... எனவே,

"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்" என்ற வள்ளுவர் வாக்கை ஏற்று சிந்திக்க வேண்டுகிறோம்.

– கட்டுரையாளர்

## இருபாலை
## நெல்லை நாத முதலியார் (18ம் நூற்றாண்டினர்)

இருபாலையூரில் பிறந்த நெல்லைநாத முதலியார் இலக்கண, இலக்கிய நூல்களைத் துறைபோகக் கற்றவர். ஒழுக்கசீலர், இணையற்ற ஞாபக சக்தி வாய்ந்தவர், கூழங்கைத் தம்பிரானிடம்

கல்வி கற்றவர், வண்ணை வைத்திலிங்கச் செட்டியாரின் அன்பும் ஆதரவும் பெற்றவர். பல நூல்கள் இயற்றினார். எனவும் அறிய முடிகின்றது. எனினும் இன்று பலவும் கிடைத்தலரிதாய் மறைந்து விட்டது. இவர் காலத்தில் இருபாலையில் ஒரு "வித்தியாபீடம்" இருந்தது என்றும் வித்துவான் சி. கணேசையர் குறிப்பிடுகின்றார்.

## இருபாலை சேனாதிராய முதலியார் (1780 - 1840)

மேற்கூறிய நெல்லைநாத முதலியாரின் அருந்தவப் புதல்வர் "சமரச ஞானியாக" அக்காலத்தில் மிளிர்ந்த தவமுதல்வர் கூழங்கைத் தம்பிரானிடம் சேனாதிராய முதலியார் நாற்பது நாளில் "நன்னூல்" முழுதும் கற்றுணர்ந்தார். மாதகல் சிற்றம்பலப் புலவரிடமும் தந்தையாரிடமும் மேலும் நன்கு தமிழ் பயின்றார். வடமொழி, ஆங்கிலம், போர்த்துக்கீசம் ஆகிய மொழிப் பயிற்சியும் உடையவர். நியாயஸ்தலத்தில் நியாய துரந்தரராயும் சிலகாலம் கோப்பாய் கோவிற்பற்றுக்கு "மணியக்கார தாசில்தாரராயும்" இருந்தவர். யாழ்ப்பாணத்தில் தமிழையும் சைவத்தையும் அழியாமல் காத்த ஆறுமுகநாவலரின் ஆசிரியரும் முதலியாரே ஆவார். நல்லை முருகக் கடவுள் மீது மாறாப்பக்தி கொண்டு நல்லைவெண்பா, நல்லைஅந்தாதி, நல்லைக்குறவஞ்சி என்பன பாடியுள்ளார்.

"கொடி வளரு மணிமாடக் கோபுரம் சூழ் நல்லூரிற் குமரமூர்த்தி
அடியருளத்திருள் அகல, அமரர்முகம் மலர, அரவணிமானின்ற,
கொடியினொடும் பிடியினொடும் குலவுமிடம் பிடியினொடும் கோதண்டமேந்தி
மிடியகல, மயிலேறி, விடிய வந்த தினரன் போல் மேவினானே"

என்ற இவரது பாடல் கவித்திறத்திற்கு ஒருதாரணமாகும்.

### கோப்பாய்

## வடகோவை - சபாபதி நாவலர் (1843-1930)

வடகோவையூரில் சுயம்புநாதப் பிள்ளைக்கு மகளாய் பிறந்தவர். ஓர் அந்தணரிடத்தும் நீர்வை- சங்கர பண்டிதரிடத்தும் கல்வி பயின்று பன்மொழிப் புலமையும் சைவ சித்தாந்த அறிவும் உடையவராய் சிதம்பரஞ் சைவப்பிரகாச வித்தியாசாலையில் அதிபராய் பணிபுரிந்தார். சபாபதியவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தில் சொற்பொழிவாற்றிய சமயம் இவரது உரையால் மகிழ்ந்த குரு மகா சந்திதானம் "நாவலர்" என விருது வழங்கினார்.

★ சிதம்பர சபாநாத புராணம், ★ யேசுமத நிராகரணம், ★ பாரத - ராமாயண தாத்பரிய சங்கிரகம், ★ சிவகர்ணாமிர்தம், ★ மாவையந்தாதி, ★ திராவிடப் பிரகாசிகை, ★ சிற்றம்பல - யமகவந்தாதி

என்பன பாடியுள்ளார். இவர்களது பாடல்களுள் ஒன்றைச் சுவைப்போம்.

"ஆரியத்துயர் அப்பகீரதன் முன்னம் அறைந்த
பாரதத்தின்றால் பரிய சங்கிரகத்தைப் பாடி
சீரிய தமிழால் உரை செய்ய அருள் செய்ய
வீர மும்மதக் குஞ்சரப் பிரானடி விளைவாம்"

(பாரத தாத்பரிய சங்கிரகம்)

## தென்கோவை ச. கந்தையாப்பிள்ளை (1879 - 1958)

கோப்பாயில் பிறந்தவர் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரின் மாணவர். "வித்தகம்" பத்திரிகாசிரியராய் இருந்தவர். புதுமை மணக்குள விநாயகர் மீது "ஒரு பாவெபஃது" பாடியுள்ளார் பொழுப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை விரிவுஜரயாளராயும் இருந்தார். என அறிய முடிகின்றது.

### அம்பலவாண பண்டிதர்

கோப்பாயூரில் பிறந்த இவர் சேனாதிராய முதலியாரின் மாணவர். பல்வகைக் காப்பியப் பயிற்சியுடையவர். தாமோதரம்பிள்ளையால் போற்றிப் பாடப்பட்ட சிறப்புடையவர். சிறந்த பதிப்பாசிரியர். சீரிய சைவ ஒழுக்கம் பேணியவர். பல கவிதைகள் பாடியுள்ளார்.

### வி. வேலுப்பிள்ளை (1860 -1945)

வடகோவையில் விநாயகத் தம்பிக்கு மகனாய் 1860ல் பிறந்தவர். திருத்தில்லை நீரோட்டயமக அந்தாதி, பரானந்த தற்பரமாலை, முற்பாற் சுருக்கம் போன்றன பாடியுள்ளார்.

பொல்லாவரை நோன்பில்லாதவரை மெய்ப்பூ மயக்கால்
சொல்லாதவரை சீர்கல்லாதவரைத் தொழுமுன் அன்பர்
அல்லாதவரை அணையேன் அறியாமை அல்லலகற்றும்
பல்லாதவரை வெல் சோதிப் பரானந்த தற்பரனே.

(பரானந்த தற்பரமாலை)

### வடகோவை சோ. சுப்பிரமணிய குருக்கள் (1911 - 2006)

காஞ்சி மெய்கண்டார் ஆதீனத்தால் "சிந்தாந்தபானு" என விருது பெற்றவர். தமிழும் சமஸ்கிருதமும் நன்கு கற்றவர். பல தமிழ்க் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவரை கி.வா. ஜகந்நாதன் புலவர் சி. வினாசித்தம்பி போன்றோர் போற்றியுள்ளனர். பலமத ஞானமும் அடக்கமும் தமிழறிவும் மிக்க இவர் குருத்துவத்திலும் சிறப்பிடம் பெற்றிருந்தார்.

### 'மறுமலர்ச்சி' எழுத்தாளர் ச. பஞ்சாட்சர சர்மா (1916 - 2003)

வடகோவையில் பிறந்த ச. ப. சர்மாவின் இளமைக்கல்வி முகாந்திரம் சதாசிவஐயரால் நெறிப்படுத்தப்பட்டது. பன்மொழிபுலமையும் நுண்அறிவும் பரந்த தமிழார்வமும் கொண்டவர். பல கட்டுரைகள் எழுதியவர். முதுபெரும் எழுத்தாளர் வரதர் இவரைப் பற்றிக் குறிப்பிடும் போது "அவர் அறிவுக் கடல், ஆனால் குடத்துள் விளக்கு" என்று நெகிழ்ந்து குறிப்பிடுகிறார். இலக்கணம், இலக்கியம், சமயம், பிறமொழி, வடமொழி, சிறுவர் இலக்கியம் , சிறுகதை, மொழிபெயர்ப்பு, விமர்சனம். கவிதை, கட்டுரை, விரிவுரை, பதிப்பு, தொகுப்பு, ஆலோசனை என பல திறப்பட்டதமிழ்பணி செய்வர் பஞ்சாட்சர சர்மா. "மறுமலர்ச்சி" என்ற ஈழத்தின் புகழ் பெற்ற அரிய தமிழ்ச் சஞ்சிகையின் ஆரம்ப கால ஆசிரியர் குழுவில் ச. ப. சர்மாவும் அங்கத்துவம் வகித்தார்.

### கோவை மகேசன் (1938 -1992)

தமிழர் தம் வாழ்வுக்காகத் தன் பேனாமுனையை ஆயுதமாக்கியவர் "இ. மகேஸ்வர சர்மா" எனும் கோவை மகேசன். அன்னார். புகழ் மிக்க "சுதந்திரன்" பத்திரிகையின் ஆசிரியர். கோப்பாயில் இரத்தின சபாபதிக் குருக்களுக்கு மூத்த மகனாய்ப் பிறந்தவர். இன்றைய தமிழக முதல்வர் மு. கருணாநிதி அவர்கள் அன்னாரைப் பற்றி குறிப்பிடும் போது

"இதயத்தில் உணர்வேற்றி, நரம்புகளில் முறுக்கேற்றி தமிழினத்தின் தன்மான சீயமாக நடமாட விரும்புகிற, விடுகிற ஆற்றல் கோவை மகேசன் அவர்களின் எழுத்துக்கு உண்டு. "
என்றும்

"தமிழர்களின் உணர்வுகளோடு ஒன்றிப் போயிருக்கிற எனக்கு, கோவை மகேசனின் எழுத்துக்களைப் படிப்பதில் தனி இன்பம்" என்றும் வியந்து எழுதியிருக்கிறார்.

பல தமிழ் நூல்களை எழுதிய நல்லெழுத்தாளானக, சீரிய பேச்சாளனாய் திகழ்ந்த "சுதந்திரன் சுடர்" பத்திரிகையின் ஆசிரியர் கோவை மகேசன் பற்றி, "ஓர் அரசியல் எழுத்தாளனுக்கு இருக்க வேண்டிய எல்லாப் பண்புகளும் இவரிடம் நிறைவாக உள்ளன" என்று பேரறிஞர் முனைவர் சாலை இளந்திரையன் எழுதியுள்ளார். இத்தகு மகேசன் 1992ல் சுகயீனம் காரணமாக இந்தியாவில் மரணித்தார்

## நீர்வேலி

### நீர்வேலி பீதாம்பரப்புலவர் (1819)

நீர்வேலியிற் பிறந்த சைவானுஸ்டான சீலரும் தமிழ்ப்புலமைத்துவமுடையவருமான இவர் இருபாலை சேனாதிராச முதலியாரின் நன் மணாக்கர் ஆவார். அரச உத்தியோகத்தராக இருந்த இவர் நல்ல கவியாற்றல்மிக்கவர். நீர்வைவென்பா. மறைசைக்கலம்பகம், மறைசைத்திருப்புகழ், வல்லிபுரநாதர்பதிகம் போன்ற நூல்களை எழுதியுள்ளார். 1819ல் சிவபதமடைந்தார் என அறிய முடிகின்றது.

மேவுமலைமானை விழைவோடு இடம் வைத்து
தாவுமலைமானை முழவைத்தவா – காலகம் மேல்
வந்து வழங்கும் மறைசைவானவா வபழ்த்தெனக்கு
வந்து வழங்கு உன்தாள் மலர்.

(மறைசைக் கலம்பகத்தில் புலவர்)

### சிதம்பரநாதப்புலவர் (19ம் நூற்றாண்டு)

நீர்வேலி மத்தியில் 19ம் நூற்றாண்டு வாழ்ந்த சிறந்த ஒரு தமிழ்ப்புலவராக விளங்கியவர் சிதம்பரநாதப்புலவராவார். சைவத்தமிழ்ப் பணிகளாலும், ஆலயங்கள் மீதுபாடிய பத்திப்பாடல்களாலும், இவரது தமிழ்ப்புலமை போற்றப்பட்டது. உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் மீது கொண்ட பக்தியினால் மிக அழகான

கருணாகரப்பண்ணவன் அருணாசலத்தில் விநாயகள் பாதத்தை அஞ்சலிக்க
பொருள் நாவுக்கேற்றிட வந்தேயுறைந்திடும் பொற்புலியூர்
வருமானைக் கன்றை பண்ணியம்பவம் கெடும் வாழ் உரும்பைக்
கருணாகரப் பிள்ளையார்பாதம் போற்றக்கலிகெடுமே.

என வரும் பாடல் மூலம் தம்புலமையைப் பக்தி ததும்ப வெளிப்படுத்தியுள்ளார்.

### சிவசங்கர பண்டிதர் (1821 -1891)

நீர்வேலியூரில் 1821ல் சிவகுருவுக்கு மைந்தனாய் சங்கரபண்டிதர் பிறந்தார். வேதாரண்ய சுவாமிநாத தேசிகரின் மாணவர். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் தன்னிகரற்ற புலமையாளர். வேதாகமங்களைக் கசடறக் கற்றவர். ஆறுமுக நாவலரின் உற்ற தோழர். பலருக்கு குருவாய் இருந்தவர்.

சைவ பிரகாசனம், சிவதூஷண கண்டனம், கிறிஸ்து மதகண்டனம், அனுஷ்டானவிதி, சத்தசங்கிரகம் போன்ற நூல்கள் பல எழுதியவர். கவிசெய்யும் ஆற்றலுடையவர். சைவம் வளரச் செய்வதில் வாழ்நாளை செலவிட்ட வீரசைவர். இவரது மைந்தனே சிவப்பிரகாச பண்டிதர். சங்கரபண்டிதர் அமைத்த திண்ணைப் பள்ளிக்கூடமே இன்றைய நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி. இவரை முருகேசு பண்டிதர் பின்வருமாறு போற்றுவது சுவைத்தற்குரியது.

"சைவத்தை நாட்டிப் பரமத ஓட்டம் தடுக்குமொரு
தெய்வத்தைப் போல் வரும் சங்கர பண்டித தேசிகர் தாம்
மெய்வைத்த கண்டிகை வெண்ணீற்றோடு விளங்கிடச்செய்
சைவப்பிரகாச தெள்ளமுதில் இனிச் சார்குவமே"

## சங்கர - சிவப்பிரகாச பண்டிதர் (1864 - 1916)

நீர்வை சங்கர பண்டிதரின் சிரேஷ்ட புதல்வர் அவரிடமே கற்றுத் தேர்ந்தவர். தமிழ் வல்லுநராக மிளிர்ந்தவர். தமது இல்லத்தில் "சிவப்பிரகாச வித்தியாசாலையை" நிறுவி தமிழையும் சைவத்தையும் வளர்த்தவர். பாலாமிர்தம், பாலபாடம், திருச்செந்தூர் புராண உரை, சிவானந்த லஹரி தமிழுரை போன்ற பல நூல்கள் செய்தவர். திருக்கரைசைப் புராணம், கிருஷ்ணன் தூதுச் சுருக்கம் முதலிய நூல்களும் எழுதியவர்.

"இச் செயலால் ஈது வருமென்றா ராயாமலே
எச்செயலும் மேலோர் இயற்றார் - இச்சையொடு
வல்லை இயற்றுவரேல் வந்திடுமே மாறாத
அல்லல் அவர்க்கு என்றே அறி"

(பாலாமிர்தம்)

## பிரம்மஸ்ரீ முத்துக்குமார ஆச்சாரிய சுவாமிகள் (1814 - 1887)

நீர்வைக் கிராமத்திற் பிறந்து, தமிழ், ஆங்கிலம், வடமொழிப் பாண்டித்தியம் பெற்று சிவஞானதத்துவதீபம், தியானயோக சரவணபவமாலை, மணிவாசகர் சரிதம், கதிர்காமமுருகன் ஆறாதார சடாட்சர அந்தாதி போன்ற பல நூல்களை வெளியிட்டு தமிழ்வித்துவரத்தினம், சைவசித்தாந்தப் போதகாசிரியர் போன்ற சிறப்புப் பட்டங்களைப் பெற்றுச் சிறந்த கல்விப்பெருமகனாக விளங்கிய இப்பெரியார் இந்தியாவில் பொள்ளாச்சி வேட்டைக்காரன் புத்தூரில் 05.04.1887ல் சமாதியடைந்தார்.

இயம்புநூல் நீதிகள் எவை படித்துணர்ந்தும்
மயங்குமென் பிணிக்கொரு மருந்து தந்தருள்வாய்
சரவணபவ ஓம் சரவணபவஓம் சரவணபவ

(சுவாமிகள் - சரவணபவமாலை)

## பேரறிஞர் சிற்சபேசன் (1887 - 1959)

சைவத்தமிழ் அபிமானியாகவும், பண்டிதர் வே. திருஞான சம்மந்தர், சிவப்பிரகாசபண்டிதர் ஆகியோரிடம் தமிழ், வடமொழி நன்கு கற்றுச் சிறந்த சகலகலா பண்டிதராகவும் திகழ்ந்தவர். .நட்டுவச் சுப்பையனாரால் எழுதப்பட்ட கனகிபுராணத்தைப் பொழிப்புரையுடன் வெளியிட்டவர், இந்து சாதனம்

பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும் கடமையாற்றியவர், நீர்வைவளம் பற்றிய சுவைமிகு பாடல்களையும், ஆலய ஊஞ்சற்பாக்களையும் எழுதியும் வெளியிட்டும் தமிழ்த்தொண்டாற்றியவர் தவத்திரு குன்றக்குடி அடிகளாராலும் பாராட்டப்பெற்றவர். இப்பெரியாரின் சிலேடைப்பாக்கள் படிப்பதற்கும், கேட்பதற்கும் இரசனை மிக்கனவாகும். நீர்வைவளம் பற்றிய பாடல் அவர் புலமைத் திறனை எடுத்துக்காட்டுவதாயுள்ளது

"புன்னை மாதுளை, பூங்கொதிமாபுளி
தென்னை கவிளந்தேனுகர் வண்டினம்
துன்னு பூசுவனந்தொறும் வாழையோடு
அன்னதாளை படர்ந்தது சோலையே"

## பண்டிதர் சை. துரைசிங்கம் (1921 - 1929)

நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட பண்டிதர் செ. துரைசிங்கம் அவர்கள் தமிழ், வடமொழி பாண்டித்தியம் மிக்கவராகவும் சிறந்த தமிழ் ஆசானாகவும், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்க செயற்குழுப் பொறுப்பாளராகவும் விளங்கித் தமிழ்ப் பண்டித பரீட்சைகளை நடாத்தி பல தமிழ்த்துறைப் பாண்டித்தியம் மிக்கவர்களை உருவாக்கியவர். காந்தீய சேவா சங்கச் செயற் பாட்டாளராகவும் விளங்கியதுடன் சமய, சமூக, இலக்கியப் பாதைகளயினும், மேடைப் பேச்சுக்களாயினும் அவற்றில் சிறந்து விளங்கியவர். இவரது வாழ்க்கைத் துணைவியாரும் சிறந்த தமிழ்ப் பண்டிதையாவார்.

## பண்டிதை திருமதி. சத்தியதேவி துரைசிங்கம் (1922 - 1986)

நீர்வேலி பண்டிதர் செ. துரைசிங்கம் அவர்களின் துணைவியாராகச் சிறந்த தமிழ்ப்பாண்டித்தியமும், புலமைத்துவமும் மிக்கவராகவும், ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்கத்தை வழிநடாத்தி தமிழ்ப் பண்டிதர் வித்துவான்களை உருவாக்கியவர். மேடைப்பேச்சுக்களிலும், தமிழ் இலக்கியப்பணிகளிலும் ஈடுபாடுடையவராக விளங்கியதுடன் தமிழகத்தில் நடந்த பல சமய,தமிழ் சார்ந்த மா நாடுகளிலும் பங்கு கொண்டு சிறப்பித்தவர்

நீர்வேலியிற் பண்டிதர் கோட்டம் என வழங்கப்படும் சிவசங்கரபண்டிதர், சிவப்பிரகாசபண்டிதர் வாழ்ந்த மனைகளுடனேயே இவர்களுடைய இல்லங்களும் அமைந்து பண்டிதர் கோட்டம் எனப் பெருமை சாற்றுவதாக இன்றும் விளங்குகின்றன.

## தவத்திரு. செல்லத்துரை சுவாமிகள் (1914 - 2006)

நீர்வேலியூரில் 1914ல் அருணாசலத்திற்கு மகனாய் பிறந்தவர். கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியில் கற்றவர். பலசமய, பல்மொழி, பல்துறை ஆற்றலுடையவர் ஆசிரிய தொழிலில் ஈடுபட்ட போது ரமண முனிவரின் தொடர்பாலும், யோகசுவாமியின் ஆற்றுப்படுத்தலாலும் துறவறநெறி பேணலானார். யாவும் துறந்தார். பொய்ம்மைத் துறவு பேணி போலி வாழ்வு வாழும் இன்றைய பல துறவியருள் மெய்த்துறவியாக சுவாமிகள் மிளிர்ந்தார். "சிவ தொண்டன் நிலையத்தை" வழிப்படுத்திய அவர் "சிவ தொண்டன்" என்ற சஞ்சிகையை நடத்தி வந்துள்ளார். அச்சஞ்சிகை இன்றும் மாத சஞ்சிகையாக வெளி வருகிறது. அந்த இதழில் சுவாமிகள் "சிவசிந்தனை" என்ற பெயரில் ஏராளமான கவிதைகள் எழுதியுள்ளார். சுவாமிகள் புகழுரையை விரும்புவதுமில்லை, புகழ எவரையும் விடுவதுமில்லை. அன்னார் 2006ல் சிவசோதியில் கலந்தார். அவரது இறுதி நிகழ்வில் இந்து துறவியர், சைவமக்கள் முதல் யாழ் பேராயர் வரை கலந்து சுவாமிகளுக்கு அஞ்சலி செய்தனர்.

"வீடுனக்கினி எப்போதும் சொந்தமென்ற,
வீணர்கள் கூட்டமென்றும் பந்தமென்றே,
மாடுமனை மக்களெல்லாம் மயக்கமென்றே,
தேடுசிவயோகனடி சிந்தித்துக்கொண்டே"
(செல்லத்துரை சுவாமிகள் - சிவசிந்தனை)

## சிறுப்பிட்டி

### சி. வை. தாமோதரம்பிள்ளை (1832 - 1901)

சிறுப்பிட்டி வைரவநாதபிள்ளை பெருந்தேவியரின் சிரேஷ்ட புதல்வனாவார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியமான இடம் வகிப்பவர். சி. வை. தாமோதரம்பிள்ளை ஆவார். தமிழ் நாட்டில் பார்சிவல் பாதிரியாருக்குப்பின் தினவர்த்தமாணி பத்திரிகையின் ஆசிரியராகவும், புதுக்கோட்டை சமஸ்தான நீதிபதியாகவும் விளங்கியவர். சென்னை அரசாட்சியாளரால் "ராவ்பகதூர்" சிறப்புப்பட்டம் பெற்றதுடன், சென்னைப்பல்கலைக்கழகப் பரீட்சகராகவும் கடமையாற்றியவர். அரியபல தமிழ் நூல்களை எல்லாம் தேடிக் கற்றதுடன் ஏட்டுப்பிரதிகளை அச்சிட்டும் புதிதாக நூல்கள் இயற்றியும், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், பொருளதிகார உரை, இறையனாரகப் பொருளுரை, இலக்கணவிளக்கவுரை, வீரசோழியவுரை முதலிய இலக்கண நூல்கள் சூளாமணி, தணிகைப் புராணம் முதலிய இலக்கியநூல்கள், முதலியன இவரால் பதிக்கப்பட்டனவாகும்.

இவருடைய தமிழ் பணியைச் சுன்னாகம் குமாரசுவாமி புலவர்

பொன்னின் பொலிந்திடும் பூணாக்கு மாக்களைப் போன்ற சொல்லிற்
பன்னரைப் பாரிற் பரலுவர் கான்வன் பரனுலர்தைச்
சொன்னமதாக்கிய தாமோதரன் றொல்புகழை
யென்னென் பவோவிதற்கோர் ரசவாதமு மீடல்லவே

என மிக அழகாக வியந்து கூறியுள்ளார்.

### சி.வை.சின்னப்பபிள்ளை

சி.வை. தாமோதரம்பிள்ளையின் சகோதரர். சிறப்பிட்டியைச் சேர்ந்தவர். வட்டுக்கோட்டைச் செமினறிப் பட்டதாரி. ஈழத்து நாவல் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவராகத் திகழ்கின்றார். 1905இல் வீரசிங்கன் கதை அல்லது சன்மார்க்க ஜெயம் என்ற நாவலை எழுதினார். இதுவே இலங்கையைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட முதல் நாவலாகும். இவர் வேறு சில நாவல்களையும் எழுதியுள்ளார். என அறிய முடிகிறது.

## ஆவரங்கால்

### ஆவரங்கால் நமசிவாயப் புலவர் (1849 - 1912)

நீர்வேலி சிவசங்கரபண்டிதர், உடுப்பிட்டி சிவசம்புப்புலவர், மட்டுவில் ம. கதிரவேற்பிள்ளை ஆகியோரிடம் தமிழ் இலக்கண, இலக்கியங்களையும் சைவசித்தாந்தசாஸ்திரங்களையும் கற்றுத்தேர்ந்தவர். இயல்பாகவே கவித்துவ ஆற்றல் உடையவர். ஆதலால் இவரைப்பெரும் புலவர் நமசிவாயம் எனக் குறிப்பிடுவார்கள்.

பொது நூல் நிலையம்

இவர் இலக்கண, இலக்கியங்களுடன் சங்கீத சாஸ்திரத்தையும் நன்கு கற்றுத்தேர்ந்தவராக விளங்கினார் இவரின் தமிழ்ப்புலமைத்துவத்தை பழம்பெரும் புலவர் ஒருவர்

மெச்சுகவின் காளமேகமோ வீணருள
மச்சுமுறச் செய்யும் மரியேறோ மெச்சொன்னா
ராயப் பெருவலி காலாவரங்கால் வாழ் நமச்சி
வாயப் புலனிந்த மணி

எனப் புகழ்ந்து கூறியுள்ளார்.

## பண்டிதர் சுப்பிரமணியம் (1924 - 2005)

மறுமலர்ச்சி எழுத்தாளரும், பன்மொழிப் பாண்டித்தியம் பெற்றவருமான பண்டிதர் பஞ்சாட்சரசர்மாவுடன் இணைந்து பல தமிழ், சமய இலக்கிய, வடமொழி நூல்களை வெளியிட்டும், ஆசிரியப்பணி மூலம் நல்ல தமிழ் பணியாற்றியும் சிறப்புப்பெற்றவர் பண்டிதர் சுப்பிரமணியம் ஆவார்.

தமிழ்புலமைத்துவமும், வடமொழி பாண்டித்தியமும் பெற்ற இவர் வடமொழி "சௌந்தர்ய லஹறி"க்கு சிறந்த மொழிபெயர்பை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கலாநிதி க. சொக்கலிங்கம் (சொக்கன்) (1930 - 2004)

ஆவரங்காலில் 1930ம் ஆண்டு பிறந்தவர் சொக்கன். ஒரு வயதிலேயே தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் நீராவியடியில் வளர்ந்தவர். இளமைக் கால சொக்கனின் வாசிப்புப் பழக்கம் இவரைச் சிறுகதை எழுத்தாளனாக்கியது. சொக்கனின் முதற் சிறு கதை 1944ல் வீரகேசரியில் வெளியானது. ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியப்பயிற்சி பெற்றசொக்கன் 1953ல் தமிழ் வித்துவான். (Diploma) பட்டம் பெற்றார். நீர்வேலி அத்தியார் இந்து முதலிய பாடசாலைகளில் அதிபராயும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பகுதி நேர விரிவுரையாளராயும் பணி செய்தார்.

1968ல் கலைமாணிப் (B. A) பட்டம் 1977ல் முது கலைமாணிப் (M.A.) பட்டம் பெற்றார். 1991ல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் பகுதிநேர விரிவுரையாளராகப் பணி புரிந்தார். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், முத்தமிழ் நூற் கழகம் என்பவற்றின் வளர்ச்சியில் பங்கேற்றார். நாடகநூல்கள், கவிதை நூல்கள், இலக்கிய நூல்கள் பல இயற்றியுள்ளார். சாஹித்திய ரத்னா விருதும் கௌரவ கலாநிதிப் பட்டமும் சொக்கனை நாடி வந்தன. 2004ல் இவ்வுலக வாழ்வை சொக்கன் நீத்தார்.

பாரங்கொள் வாயென்னும் பரிவாலே
பாசங்கள் நாசஞ் செய் அருளாலே
ஆரங் கொள் மார்பதன் அருளாலே
அடியர் தம் நெஞ்சுள் நிறைவாயே
ஈரங்கொள் வார்கள் தம் விழியாலே
இனிதுனை வழிபட வருவாயே
சீர்தங்கு நல்லையின் பெருவாழ்வே
ஜெயக்கொடி யாய்கந்தப் பெருமாளே

(நல்லைத் திருப்புகழ் – சொக்கன்)

## அச்சுவேலி வைத்தியநாதச் செட்டியார் (1753 - 1844)

அச்சுவேலி ஹரிஹர புத்திரச் செட்டியாரின் புதல்வரான இவர் பல தனிப்பாடல்களையும், பிள்ளைக்கனி என்ற ஓர் பிரபந்தமும் பாடியுள்ளார். "சைவ தமிழ் பற்றும் அறிவுமுடையவராய் பணி செய்தவர்" என்று வித்துவான் சி. கணேசையர் இவரைக் கூறுகிறார்.

## தம்பிமுத்துப்பிள்ளை (1857 - 1937)

அச்சுவேலி தந்த பேரறிஞர் ஆகிய தம்பிமுத்துப்பிள்ளை யாழ்ப்பாண கத்தோலிக்க திருச்சபையின் தூணாய் மிளிர்ந்தவர். அச்சியந்திரம் அபூர்வமாயிருந்த 1900 களில் இவர் அச்சிட்ட நூல்களின் தொகை எவரையும் ஆச்சரியப்பட வைக்கும். பல நாடகங்களும் நூல்களும் எழுதியுள்ளார். அச்சுவேலியில் "சன்மார்க்க விருத்தி சங்கம் " ஒன்றை ஸ்தாபித்து நற்செய்திப் போதகராய் இருந்தவர். "சன்மார்க்க போதினி" என்ற பத்திரிகையையும் 50 ஆண்டுகளாகத் தவறாமல் நடாத்திய பிள்ளையவர்கள் சுவாமி ஞானப் பிரகாசரின் சிறிய தந்தையார். சுவாமிகள் அறிவிலும், ஆற்றலிலும், ஆன்மீகத்திலும் மேலோங்க இவரே வித்திட்டவர். இவற்றுக்கு அப்பால் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலய மூப்பராய் இறைபணியும் செய்து. போப்பாண்டவரின் பாராட்டுக்கு உரியவராக விளங்கி 1934ல் இறை பதமெய்தினார்.

## வேன் மயில்வாகனப் புலவர் (1788 - )

உடுப்பிட்டி சிவசம்புப் புலவரின் மாணவரான இவர் புலமைத்துவம் மிக்கவர். புலோலி சைவ வித்தியாலய தலைமை ஆசிரியர். பலருக்கு ஆசிரியராய் இருந்தவர். இந்தியாவில் தமிழக ஆசிரியர் பலருக்கு ஆசிரியராய் இருந்தவர். இந்தியாவில் தமிழக "தேவகோடை" ஊரில் 07 வருடம் கல்விப் பணி புரிந்தவர். 47ஆவது அகவையில் பிறந்தவூரான அச்சுவேலியிலேயே சிவகதியடைந்தார். மேலும் இவர் சிறந்த ஆசாரசீலர் என்றும் தினமும் ஆத்மார்த்த சிவபூஜையை ஒழுங்காக செய்தவர் என்றும் சுத்த ஏகபத்தினி விரதர் என்றும் "ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்" தெரிவிக்கின்றது.

## அருட்திரு சா. ஞானப்பிரகாச சுவாமிகள் (1875 -1947)

மானிப்பாயில் பிறந்தவரெனினும் தாயாரின் ஊரான அச்சுவேலியில் வளர்ந்தவர். அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயச் சூழலில் இறைபற்றும் தமிழறிவும் பெற்றவர். இறைவன் இயேசுவின் அருளாணைப் படி "எல்லாம் விட்டு இயேசு கிறிஸ்து வழியில்" துறவறம் பூண்டு 1910ல் குருப்பட்டம் பெற்று கத்தோலிக்க நெறி வளர்ச்சிக்காக ஊரூராய்ப் பணிசெய்தவர். பல தேவாலயங்களையும், வித்தியாலயங்களையும் ஸ்தாபித்தவர். அனேக நூல்களை எழுதி வெளியிட்டவர். "சொற்கலைப்புலவர், பன்மொழியறிஞர்" என்ற பட்டங்களுக்கு உரியவர்.

ஞானப்பிரகாச சுவாமிகள் நீர்வேலி, அச்செழுவில் தன்பணிகட்கு உறுதுணை புரிந்த யூலன் ஆயரின் நினைவாக "யூலனூர்" என்ற குடியேற்றத் திட்டத்தை உருவாக்கியதுடன் அங்கு ஹென்றியரசர் என்ற புனிதர் பேரிலும் உரும்பிராயில் புனித மிக்கேல் பேரிலும் நீர்வேலியில் பரலோகமாதா பேரிலும் தேவாலயங்களை ஸ்தாபித்துள்ளார். சுவாமிகளின் கவித்துவ திறனை.

"ஓதரிய நாதனிடம் உன்குறைகள் கூறியே
ஆதரவாய் வாங்கி ஔடதங்கள் - மாதா
கொடுப்பார் பறக்கும் குறைகள் மனமே
மடுப்பதிக்கு ஏகுவோம் வா"

என்ற வெண்பா மூலம் அறியலாம்

## மறைத்திரு ச. குமாரசுவாமிக் குருக்கள் (1886 - 1971)

அச்சுவேலியில் பிறந்த குமாரசுவாமிக் குருக்கள் தமிழ், வடமொழி நூல்களைக் கசடறக் கற்றவர். நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச பண்டிதரின் மாணவர். இறைபணியில் இணைய விரும்பி வேதாகம கல்வி கற்று 1910ல் குருப்பட்டம் பெற்று சைவசமய மறுமலர்ச்சிக்காகவும் தமிழ் வளர்ச்சிக்காகவும் பணி செய்தவர். சிறந்த சைவப் பிரசாரகர் அனேக தமிழ் நூல்களை எழுதி வெளியிட்டவர். தமிழகத்தும் ஈழத்தும் பல பிரதேசங்கட்கும் சென்று இறைபணி புரிந்த செம்மல் "கலைமகள்" கி. வா ஜகந்நாதனால் சாற்றுகவி பாடிப் போற்றப்பட்டவர். சித்தாந்த சாஸ்திர விற்பன்னர் பல சபைகளை நிறுவியவர். அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையை ஸ்தாபித்து வளர்த்துப் புகழ் பெற்றவர். குருக்களின் சமயத் தமிழ் பணிகள் காலத்தால் அழியாதன.

## பேராசிரியர் நந்தி

நந்தி - மருத்துவர், எழுத்தாளர், நாடக சினிமா நடிகன் எனப் பல தளங்களில் அறியப்பட்டவர்.

பேராசிரியர் செல்லத்துரை சிவஞானம் என்ற இயற்பெயர் கொண்ட நந்தி 1928 இல் பிறந்தவர் அச்சுவேலியை வேட்டகமாகக் கொண்டவர். நந்தி என்பது பேரறிஞர் ராஜாஜி சூட்டிய பெயரென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

02.03.1947இல் வீரகேசரி இதழில் பிரசுரமான சஞ்சலமும் சந்தோஷமும் என்ற சிறுகதையூடாக எழுத்துலகில் பிவேசித்த நந்தி நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளைப் படைதுள்ளார்
.

நாவலாசிரியராகவும் ஈழத்தில் தன் முத்திரையை பதித்தார். மலைக்கொழுந்து (1964), தங்கச்சியம்மா(1977) என்பன அவரது பிரபல நாவல்கள் ஆகும்.

ஈழத்தில் தயாரான பொன்மணி என்ற திரைப்படத்தில் வயது சென்ற குடும்பச்சுமை நிறைந்த தந்தையாக நந்தி நடித்துள்ளார்.

### ஊரெழு

## சு. சரவணமுத்துப்பிள்ளை (1848 - 1916)

சரவணமுத்துப்பிள்ளை பிற்காலத்தில் புன்னாலைக்கட்டுவன் கதிர்காமய்யரிடமும், முருகேச பண்டிதரிடமும் நன்னூல், யாப்பருங்கலக்காரிகை, மற்றும் இலக்கிய சித்தாந்தசாஸ்திர நூல்களையும் கற்றவரான இவர் தெளிவான கட்டுரை, கவிதையாக்கல், பிரசங்கம் செய்தல் என வல்லமை மிக்கவராக விளங்கினார்.

1898ல் யாழ்ப்பாணத்திற் தாபிக்கப்பட்ட தமிழ்ச்சங்கப் புலமையாளர் குழுவில் உறுப்பினராக இருந்தார். தனிப்பாடல்கள் பலவும் கட்டுரைகள் பலவும் எழுதியுள்ளார். கொழும்பு சைவபரிபாலன சபையிற் சைவபிரசாரகராயிருந்தார். நாவலருக்குப்பீன் சைவ உதயபானு பத்திரிகையை நடாத்தி வந்தார். விரைவிற் பாடும் சாமர்த்தியம் உடையவராகவும் யாழ்ப்பாணத்தமிழ்ச் சங்கப் புலவர்களுள் ஒருவராகவும் விளங்கினார். இவர் பாடிய தேர்க்கவி, சித்திரக்கவி என்பன இவரது புலமையை நன்கு எடுத்துக் காட்டுவனவாயுள்ளன.

## இடைக்காடு

### இடைக்காடர்

ஆரம்பகால ஈழத்து நாவல் இலக்கியத்துக்கு பங்காற்றியவர். இடைக்காட்டைச் சேர்ந்த இவர். 1925இல் நீலகண்டன் அல்லது ஓர் சாதி வேளாளன் என்ற நாவலை எழுதினார். பேராசிரியர் க. கைலாசபதி இவரது புத்திரியின் மகன் என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

## உரும்பிராய்

### ஆசிரியமணி பஞ்சாட்சரம் (1927 - 2007)

ஈழத்தின் புகழ் பூத்த தமிழறிஞர் பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் முதன் மாணக்கராகவும், பண்டிதமணியின் பலதரப்பட்ட தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிட்டும், ஆசிரியப்பணியால் தமிழை வளர்த்தும் தொண்டு செய்தவர். சைவமும் தமிழும் சிறப்புற வேண்டி அரும்பணியாற்றியதுடன் சமூகசேவைப்பணிகளிலும் ஈடுபாடுடையவராக தமது கிராமத்திற்கு ஓர் நல்வழிகாட்டியாக ஆசிரியமணி விளங்கினார்.

### உதவியன:


குமாரசுவாமிப்புலவர் . வ., தமிழ்ப்புலவர் சரித்திரம், புலவரகம், சுன்னாகம், 1916.

குலரத்தினம் , க. சி., செந்தமிழ் வளர்த்த செம்மல்கள், சுடரொளி வெளியீட்டகம், லண்டன், 2005.

சதாசிவம்பிள்ளை. அ ,, பாவலர் சரித்திர தீபகம், கொழும்பு தமிழச் சங்கம், 2001.

சதாசிவம். ஆ. ஈழத்துத் தமிழக் கவிதைக் களஞ்சியம், சாஹித்தியமண்டலம், 1966.

கணேசையர். சி,, ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம், இந்துசமய கலாசார அலுவல்கள் - திணைக்களம், 2006.

அப்புத்துரை. சி., இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழப் புலவர் வரலாறு, - தெல்லிப்பளை கலை இலக்கியக்களம் , 2007.

பரராசசிங்கம். த. , புகழ் பூத்த நீர்வேலி, காமாட்சியம்பாள் இந்து பரிபாலன சபை, 2000.

நீர்வைமணி, சைவத்தமிழ் சான்றோர் வரிசையில், நீர்வேலி கதிர்காமம், 2004

அடைக்கலமுத்து. ச., நெஞ்சே நீ நினை (சுவாமி ஞானப்பிரகாசர் வரலாறு) , - யாழ் மறைமாவட்ட இலக்கிய கழகம், 1975.

மனோகரன். துரை., இலங்கையில் தமிழிலக்கிய வளர்ச்சி , கலைவாணி புத்தக நிலையம், 1997

அம்பிகைபாகன். ச., குமாரசுவாமிக்குருக்கள் - பாராட்டு விழா மலர், கலைவாணி அச்சகம், யாழ்,1960.

இராசரத்தினம், அ, சி. வை. தாமோதரம்பிள்ளையின் வாழ்கை சரிதம், - சென்னை யூபிலி பதிப்பகம்,1902.

சிவானந்தசர்மா. ப., பஞ்சாக்ஷரதீபம், சர்வானந்தமயபீடம், 2004.

## வலி கிழக்குப் பண்பாட்டுப் பேரவை

### நிர்வாகக் குழு - 2008



## வலி. கிழக்குப் பண்பாட்டுப் பேரவை நிர்வாகக் குழு

### இருப்பவர்கள் [இடமிருந்து வலம்]

1. திரு. க. தர்மலிங்கம் (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
2. திரு. அ. க. த. கிருஸ்ணராஜா (பண்பாட்டு பேரவை உப செயலாளர்
3. திரு. மா. ஞானலிங்கம் (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
4. செல்வி. எஸ். பிரேமினி (பண்பாட்டு பேரவை உப தலைவர்)
5. திரு. சி. ஏ. மோகன்ராஸ் (பண்பாட்டு பேரவை தலைவர்)
6. திரு. நா. கணபதிப்பிள்ளை (பண்பாட்டு பேரவை உப தலைவர்)
7. திரு. ச. லலீசன் (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
8. சிவஸ்ரீ. கு. தியாகராஜக் குருக்கள் (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
9. திருமதி. கி. மாலினி (பண்பாட்டு பேரவை செயலாளர்)

### நிற்பவர்கள் [இடமிருந்து வலம்]

1. திரு. ச. சத்தியரூபன் (பண்பாட்டு பேரவை பொருளாளர்)
2. திரு. து. மாணிக்கவாசகர் (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
3. திரு. ஆர். கணேசலிங்கம் (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
4. திரு. க. கிருபாகரன் (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
5. திரு. சீ. தங்கராசா (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
6. திரு. செ. ரஞ்சித்குமார் (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
7. திரு. இ. கோகுலன் (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
8. திரு. பீ. சேவற்கொடியோன் (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
9. திரு. நா. சுவாமிநாதன் (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
10. திரு. சி. கேதீஸ்வரன் (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
11. திரு. ந. கனகலிங்கம் (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
12. செல்வி. த. மதுராம்பிகை (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
13. திருமதி. சிவை. குகனேசன் (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)
14. திரு. எஸ். ரி. வரதராஜன் (பண்பாட்டு பேரவை உறுப்பினர்)

# வலி.கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிறு கைத்தொழில் முயற்சிகள் - ஓர் ஆய்வு



*கலாநிதி தி.வேல்நம்பி,*
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**முகாமைத்துவ வணிகபீடம், வணிகத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

**அறிமுகம்**

இன்று சனத்தொகை வேகமாக அதிகரித்துச் செல்கின்ற காரணத்தினாலும் மக்களுடைய தேவைகள் அதிகரித்துச் செல்வதனாலும் பல்வேறுபட்ட தொழில் முயற்சிகள் அதிகளவில் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்க முடிகிறது. நடைமுறையில் பல்வேறு தொழில் முயற்சிகள் காணப்பட்டாலும் அவற்றின் பிரதான நோக்கம் இலாபமே. அதாவது, தம்மால் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட தொழில் முயற்சியில் ஈடுபடுத்தப்பட்ட முதலீட்டிற்குப் பிரதிபலனாகப் பெருமளவு இலாபத்தைப் பெற்றுக் கொள்வதனையே தொழில் முயற்சியாளர்கள் எதிர்பார்க்கின்றனர். இருப்பினும் தனியே இலாபத்தைப் பெற்றுக் கொள்வது மட்டும்தான் அவர்களுடைய நோக்கம் என்று நாம் கருத முடியாது. வேறு சில துணைக் காரணங்களும் இருப்பதை நாம் அவதானிக்கலாம். அவையாவன,

அ) செய்தொழில் நிறைவேற்றம்: -

ஒவ்வொரு முயற்சியாளனும் தான் எடுத்துக்கொண்ட தொழிலை வெற்றிகரமாக நிறைவேற்றுவதன் மூலம் மனத்திருப்தி அடைகின்றான்.

ஆ) சமூக அந்தஸ்தை அடையும் வேதனை: -

முதலீடு செய்வோன் அத்தொழில் முயற்சியின் மூலம் வணிகத்துறையில் முன்னேறி சமூகத்தில் சிறந்ததோர் அந்தஸ்தை அடைவதற்கு எதிர்பார்க்கலாம்.

இ) சமூகப் பங்களிப்பு: -

சமூகத்தின் தேவைகளை நியாயமான முறையில் நிறைவு செய்வதன் மூலம் சமூகப் பங்களிப்பை வழங்கும் ஒருவனாக இருப்பதில் மனத்திருப்தி அடைந்து கொள்ளலாம்.

இவ்வகையில் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிறுதொழில் முயற்சிகளும் அவற்றின் போக்கும் இக்கட்டுரையில் நோக்கப்படுகின்றது.

**தொழில் முயற்சியும் தொழில் முயற்சியாளனும்**
**(Entrepreneurship and Entrepreneur)**

தொழில் முயற்சியாளர் என்ற சொற்பதமானது பிரெஞ்சு மொழியிலிருந்து (Entre - prendre) வந்ததாகும். குறிப்பாக 16ஆம், 17ஆம் நூற்றாண்டு காலப்பகுதிகளில் இச்சொற்பதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. முயற்சியாளர் எனப்படுபவர் உற்பத்திக் காரணிகளை ஒரு குறித்த விலையில் வாங்கும் ஒருவர் ஆவர். இதன்படி அவர் காப்புறுதி செய்ய முடியாத ஆபத்துக்களைக் கொண்டிருக்கும் ஒருவராகக் கருதப்படுகின்றார். (Richard canlillon) இங்கு ஒரு பிரதான முயற்சியாளராக விவசாயியே (Farmer) கருதப்பட்டிருக்கின்றார். (Hubert and Link - 1982).

முயற்சியாளர் என்பது பற்றி ஒரு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணமோ மாதிரியோ (Model) இல்லை. ஆனால் பொருளியல், முகாமைத்துவம், மற்றும் சமூகவியல் அம்சங்களில் இவ்விடயம் பெரிதும் வளமான ஒன்றாகக் கருதப்பட்டு வருகின்றது. (Pauline et.al, 1982, Perryman, 1982, churchll and lewis, 1986). (Karunanayake. G.P and Senatheere G.D.V.R., 2006). பொருளியல் நோக்கிலிருந்து பார்க்கும்போது முயற்சியாண்மை என்பது நிறுவனத்துக்கும் பின்னால் இருக்கும் ஒரு உந்து சக்தியே (Driving force) என இலகுவாக நம்பப்படுகின்றது. இன்று முயற்சியாண்மை என்பது நிலம், உழைப்பு, மூலதனம் என்னும் மூன்று காரணிகளையும் ஒருங்கிணைக்கும் நான்காவது உற்பத்திக் காரணியே எனப்பல பொருளியலாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். பொருளியல் மற்றும் முகாமையியல் போக்கில், மனித தேவைகளைத் திருப்தி செய்வதற்குப் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்கென வளங்கள், ஊழியர், மூலதனம் மற்றும் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதில் பிரதான பங்கு வகிக்கும் (Pivotal role) ஒருவரே முயற்சியாளர் எனப்படுகின்றார். உளவியல் நோக்கில் முயற்சியாளர் ஒருவரில் அவதானிக்கப்பட்டிருக்கும் குறித்த சக்திகளால் தூண்டப்படும் ஒரு குறித்த நடத்தை மாதிரியே எனக் கருதப்படுகின்றது. மாறாக முயற்சியாண்மை என்பது ஒரு சமூகச் செய்முறை (Social process) எனச் சமூகவியல் நோக்கில் கருதப்படுகின்றது. இத்தகைய முயற்சியாண்மையானது ஒரு சமூக வலைப்பின்னலில் தனிநபரொருவரின் நிலையினால் தொடர்புபடுத்தப்பட்டதும் வசதியளிக்கப்பட்டதுமான சமூக உள்ளடக்கமொன்றில் இணைக்கப்படுகின்றது. இதன்படி முயற்சியாண்மையானது சமூக நடத்தையின் மீது கூடிய கவனம் செலுத்த வேண்டிய ஒன்றாகக் காணப்படுகின்றது. (Aldrich, 1986) எவ்வாறாயினும் பொருளாதார மேம்பாட்டுச் செய்முறையை புத்தாக்கும் ஒரு புத்தாக்கதரெராகத் தொழில் முயற்சியாளர் விபரிக்கப்படுகின்றார். இவர்கள் உள்ளார்ந்த இலாபகர வாய்ப்புக்களை அடையாளங் காண்பவர்களாகவும் அத்தகைய சந்தர்ப்பங்களை ஆராய்ந்தறிபவர்களாகவும் இவ்வண்ணம் நிறுவனமொன்றின் பயனுறுதித்தன்மையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்து பவர்களாகவும் காணப்படுகின்றனர். (Jeseph schumpeber, 1 934).

மேற்படி விளக்கங்களிலிருந்து "தொழில் முயற்சியாளன்" என்ற பதத்தைப் பின்வருமாறு விளக்கமான முறையில் குறிப்பிடலாம். "வாய்ப்புக்களை அடையாளங்காணும் ஒரு கண்டுபிடிப்பாளராக அல்லது விருத்தி செய்பவராகவும், இத்தகைய வாய்ப்புக்களைச் செயற்படுத்தும் அல்லது சந்தைப்படுத்தக்கூடிய இலக்குகளாக மாற்றும் ஒருவராகவும், காலம், முயற்சி, பணம், திறன் என்பவற்றினூடாகப் பெறுமதி சேர்க்கும் ஒருவராகவும், இத்தகைய இலக்குகளை நடைப்படுத்துவதற்குப் போட்டி நிறைந்த சந்தைப்பரப்பின் ஆபத்துக்களை உத்தேசிப்பவராகவும் விளங்கும் ஒருவரே முயற்சியாளர்" எனப்படுவார்.

தனது பணத்தையும், செல்வத்தையும் முதலீடு செய்வதன் மூலம் மூலவளங்களை ஒழுங்கமைத்து மக்கள் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் உருவாக்கப்படும் அமைப்பு தொழில் முயற்சி எனப்படும். இத்தொழில் முயற்சியின் உரிமையாளன் தொழில் முயற்சியாளன் என அழைக்கப்படுவான். உதாரணமாக Liver brothers limited போன்ற நிறுவனங்கள். சிகையலங்கரிப்பு நிலையங்கள் (saloon) மற்றும் மரக்கறி, நெற்செய்கை உற்பத்தியில் ஈடுபடும் கமக்காரன் போன்றவர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் சுய வேலைவாய்ப்பில் ஈடுபட்டு தமது வாழ்க்கைக்கு உழைப்பவராகவும், வியாபாரத்தை விருத்தி செய்து சமூகத்தில் ஒரு அந்தஸ்தைப் பேணுபவர்களாகவும் இருப்பர். குறிப்பாக இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் இத்தகைய நிலையிலேயே முயற்சியாளர்கள் காணப்படுகின்றனர். (Farook, 1992) தொழிற்றுறை உரிமையாளர் இல்லையெனில் ஒரு தேசத்தின் பெறுமதிமிக்க மூலவளங்கள் அறவே பயன்படுத்தப்படாதிருக்கும். இவ்வகையில் உருவாக்கப்படக்கூடிய தொழில் முயற்சிகளைப்

பின்வருமாறு மூன்று வகைப்படுத்தலாம்.

i) சிற்றளவான வணிக முயற்சி

ii) நடுத்தர வணிக முயற்சி

iii) பேரளவான முயற்சி

இவ்வாறு மூன்று வகையான தொழில் முயற்சிகள் காணப்பட்டாலும் சிறிய அளவிலான தொழில் முயற்சிகளே பெரிதும் காணப்படுகின்றன. இச்சிறிய நிறுவனங்கள் காலப்போக்கில் பேரளவு நிறுவனமாக மாறிச் செல்லலாம்.

ஒரு தொழில் முயற்சியை அதன் முதலீட்டின் அளவு, வேலையாட்களின் எண்ணிக்கை, உற்பத்தியின் அளவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சிற்றளவு, நடுத்தர அளவு, பேரளவு என வகைப்படுத்தலாம். இவ்வாறான வகைப்படுத்தல் பற்றிப் பல்வேறு நாடுகளில் பல்வேறு கருத்து நிலவுகின்றது. இலங்கையில் ஒரு கோடி ரூபாவுக்குக் குறைவாக முதலீடு செய்யப்பட்ட வாணிகம் சிறிய அளவான வாணிகம் எனக் கொள்ளப்படுகின்றது.

### சிறிய தொழில் முயற்சியின் இயல்புகள்
### Nature of Smallb usiness

i) வாணிகத்தின் சொந்தக்காரனே அந்நிறுவனத்தின் மகாமையாளனாகவும் இருப்பான்.

ii) நிறுவனத்தை ஆரம்பிப்பதற்குத் தேவைப்படும் மூலதனத்தைச் சொந்தக்காரனும், அவனது நண்பர்களும், உறவினர்களுமே அளிப்பதுண்டு. சிலவேளைகளில் மூலதனத்தில் ஒரு பகுதி ஒரு வங்கியிலிருந்து அல்லது கடன் கொடுக்கும் தபானத்திலிருந்து கடனாகப் பெறப்படும்.

iii) உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள் மட்டுமே பகிர்ந்தளிக்கப்படும். (உதாரணம்) பாண் உற்பத்தி பெரிய நிறுவனம் பிறிமா பாண் உற்பத்தியாளர்.

iv) கைத்தொழிலில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே கைப்பற்றக் கூடியதாக இருக்கும். (உதாரணம்) பற்றிக்துணி உற்பத்தி.

ஒரு சிறிய பற்றிக்துணி உற்பத்தியாளன் மொத்தத் தேவையில் ஒரு சிறிய பகுதியை மட்டும் பூர்த்தி செய்கின்றான். மாறாகப் பெரிய நிறுவனம் பாரியளவு பகுதியைப் பூரத்தி செய்கின்றன.

உதாரணம்:- Ceylon tabaco company.

v) பெருமளவு தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட மாட்டாது. ஊழியச் செறிவான உற்பத்தி முறையே பெரிதும் காணப்படும்.

உதாரணம்: – கைத்தறி நெசவு தொழில்.

மாறாக பூகொட நெசவாலை, துல்கிரிய நெசவாலை போன்ற பேரளவுக் கைத்தொழில் உற்பத்தித்துறையில் தொழில்நுட்பவியல் திறன்மிக்க மின்பொறிகள் பயன்படுத்தப்படுகின்றன.

### சிறிய வர்த்தக நிறுவனங்கின் தோற்றத்துக்கு ஏதுவான காரணிகள்
### Reasons for the Small business revival

i) வேலையின்மை - (Unemployment)

ii) சேவைத்துறையதிகரிப்பு - Growth Service Sector

உதாரணம்:– விளம்பரம், வல்லுனர் ஆலோசனைச்சேவை.

iii) துணை ஒப்பந்த வேலைகள் - Sub controcting and construction.

பாரிய நிறுவனங்கள் தமது தேவைக்கேற்ப நிறுவன அமைப்பை மாற்றத் தீர்மானித்தன.

iv) அரச நிறுவனங்களின் நடைமுறையில் சிறிய தொழில் நிறுவனங்களுக்குச் சாதகமான கருத்துக்களின் மாற்றம்.

v) தொழில் பண்பாடு - Enterprise Culture

அரசின் ஒத்துழைப்பு, சுயவேலைவாய்ப்பு, இளைஞர்களை ஈடுபட வைத்தல்.

**தொழல் முயற்சியொன்றை ஆரம்பிக்கும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்**

i) வியாபாரத்தின் வகையும் தன்மையும்

ii) வியாபாரம் அமைக்கப்படும் இடம்

iii) மூலதனமும் அதனைத் திரட்டும் வழிகளும்

iv) சட்ட அமைவுடமை

v) தேவைப்படும் மூலவளங்களும் அதனைப் பெறும் வழிகளும்

vi) நுகர்வோர் விருப்பு வெறுப்புக்களும், அவர்களது வருமான நிலையும்.

vii) ஊழியர்கள்

viii) தொழில்நுட்பம்

ix) ஏனைய நிறுவனங்களின் போட்டி

x) சந்தைவாய்ப்பு

xi) நெடுங்காலம் நிலைத்திருக்கும் தன்மை

xii) சிறந்த முகாமைத்துவம் (பாதீடு, உண்மை)

xiii) சூழல். Enviorenment

**முயற்சியாளரின் பண்புகள் Characteristics of entrepreneur**

தொழில் முயற்சியாளன் எனப்படுபவன் வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்தச் செல்வதற்கான சில தகமைகளைக் கொண்டிருக்க வேண்டிய ஒரு நபராவான். இத்தகைய தகமைகள் / பண்புகள் அவரை பொது மக்களிலிருந்தும், தொழில் தகைமைகள் முகாமையாளர்களிடமிருந்தும் வேறுபடுத்துகின்றது. சில ஆய்வாளர்கள் பல பண்புகளை அடையாளம் கண்டிருக்கிறார்கள். பின்வரும் பண்புகள் John kao என்பவரால் அடையாளம் காணப்பட்ட பொதுப்பண்புகளாகும்.

i) ***அர்ப்பணிப்பு, நிர்ணயித்தல் மற்றும் விடாமுயற்சி***

**Commitment, Determination and Perseverance**

ஒரு தொழில் முயற்சியாளராக அவர் மேற்கொள்ளும் வெற்றிக்கான அர்ப்பணிப்பு. அத்தொழில் முயற்சியில் ஏற்படக்கூடிய தடைகளையும், பின்னடைவுகளையும் தீர்த்துக்கொள்ள உதவும். தெளிவான தீர்மானம் மற்றும் தடுமாற்றமற்ற அர்ப்பணிப்பு என்பன எப்பொழுதும் வெற்றியைத் தருவதாக இருக்கும். இத்தகைய பண்பு தனிப்பட்ட தடைகளிற்கான எதிரீடுகளாக அமையும். உயர்ந்த உள்ளார்ந்த முயற்சியினையும் திட்டத்தையும் கொண்ட முயற்சியாளர்கள் தமது அர்ப்பணிப்பினை பல வழிகளில் அளவீடு செய்வதற்கு முதலீட்டாளர்களை எதிர்பார்க்கலாம்.

## ii) அடைவிற்கும், வளர்ச்சிக்கும் தூண்டுதல்

**Drive to achieve and grow**

முயற்சியாளர்கள், போட்டியிடுவதற்கும் தம்மீது சுயமாகச் சுமத்தப்படும் நியமங்களிற்கு எதிராக செயற்படுவதற்கும், முயற்சி கொள்வதற்கும் சவால் நிறைந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கும், உறுதியான விருப்பத்தின் மூலம் உள்ளக ரீதியாகத் தூண்டப்படும் வகையில் மற்றையோரிற்குத் தென்படும் ஒரு சுய ஆரம்பிப்பாளர்களாகக் காணப்படுகின்றனர். உயர் அடைவுதாரர்கள் சராசரி ஆபத்தினை ஏற்றுக்கொள்ளும் போக்குடையவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் வெற்றிக்கான அடைவினை எவ்வாறு அதிகரிப்பது என்பதனைத் தீர்மானிப்பதற்கும் அதை நோக்கித் தளப்படுவதற்கான நிலமைகளைப் பரீட்சிக்கின்றனர். இதன் விளைவாக சராசரி வியாபார நபரிற்கான உயர்ந்த ஆபத்துடைய தீர்மானங்கள் நன்கு தயார் செய்யப்பட்ட உயர் அடைவதாார்களிற்கு சராசரி ஆபத்தாகவே காணப்படுகின்றது.

புதிய நிறுவனங்களை ஆரம்பிப்பதில் பிரதானமான தவறுகளில் ஒன்றாகக் கருதப்படுவது யாதெனில் பிரதான நபர் வியாபாரத்தில் போதியளவு முகாமைத்துவ அனுபவத்தினைக் கொண்டிருப்பதில்லை என்பதாகும். குறிப்பாக முன்னணி எழுத்தாளர்களும் புதிய முயற்சியாளர்கள் பற்றிய ஆய்வாளர்களும் இத்தகைய அனுபவம் மிகவும் முக்கியமானது எனக் குறிப்பிடுகின்றனர். (Buchele.R,1967).

இத்தகைய அனுபவமானது பின்வருமாறு மூன்று வகையினராக நோக்கப்படலாம்.

- ❖ முகாமைத்துவ அனுபவம் (Managerial Experience)
- ❖ தொழிற்பாட்டுப்பகுதி அனுபவம் (Functional area experience)
- ❖ வியாபாரத்தில் அனுபவம் (Experience in the line of business)

மேற்படி 3 வகையான அனுபவங்களும் புதிய நிறவனமொன்றை ஆரம்பிக்கும். தொழில் முயற்சியாளர் ஒருவரிற்கு மிகவும் அவசியமானதொன்றாகக் கருதப்படுகின்றது. முயற்சியாளர்களின் அறிவும் முகாமைத்துவத்திறனும் மற்றும் வியாபாரமொன்றின் முகாமையாளராக / உரிமையாளராக இருப்பதற்கான வாய்ப்பும் மேற்படி அனுபவங்களைப் பெற்றுத்தரும் என்பது குறிப்பிடத்தக்கது.

## iii) வாய்ப்பும் இலக்கு நோக்கிய செயற்பாடும்

**Opportunity and Goal orientation**

வெற்றிகரமான மற்றும் வளர்ச்சி மனப்பாங்குடைய முயற்சியாளர்களிடையிலான ஒரு தெளிவான போக்கு அவர்களுடைய வாய்ப்பின் மீதான நோக்காக இருக்கும். இது வளங்கள், கட்டமைப்பு / தந்திரோபாயம் என்பவற்றின் மீதான நோக்கினையும் விட மிகவும் பிரதானமானதாகும். அவர்கள் வாய்ப்புடன் தொடங்கி மற்றும் முக்கியமான அம்சங்களைக் கருத்திற்கொண்டு தமது தெரிவினை மேற்கொள்கின்றனர். தமக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களில் தமது இலக்கினை மையப்படுத்தி தெரிவினை மேற்கொள்கின்றனர். இத்தகைய வாய்ப்புக்கள் இலக்கினை அடைந்து கொள்ளக் கூடியதாகவும், தமது சக்தியினைப் பயன்படுத்தி தெரிவு செய்யக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

iv) **முன்னெடுத்துச் செல்வதலும் பொறுப்புக்களும்**

Initiative and Responsibility

முயற்சியாளர்கள் ஒரு சுதந்திரமான மற்றும் உயர் கண்டுபிடிப்பாளராக நோக்கப்படுகின்றனர். பயனுறுதிமிக்க முயற்சியாளர்கள் கருமங்களை முன்னெடுத்துச் செல்லும் துடிப்பான செயற்பாட்டாளர்களாக இருக்கின்றனர் எனப் பல ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

(Keys,1 988,S alazat,1 997)

வியாபாரச் செயற்பாட்டிற்கான வெற்றி / தோல்விக்கான பொறுப்பினை முயற்சியாளாகளே ஏற்றுக் கொள்கின்றனர். எனவே அவர்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் தமது கருத்துக்களைப் பிரயோகிப்பவர்களாகவும் பொருத்தமான தலைமைத்துவம் இல்லாத பொழுது அந்த இடத்தை நிரப்புவோர்களாகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய முன்னெடுத்துச் செல்லும் திறனற்றவர்களும் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் பக்குவமற்றவர்களும் சிறந்த முயற்சியாளர்களாக வரமுடியாது.

v) ***பிரச்சனைகளைத் தீர்ப்பதில் உறுதியாக இருத்தல்***

**Persistent problem solving**

ஒரு முயற்சியாளர் பல்வேறுபட்ட சூழ்நிலைகள் ஏற்பட்ட போதிலும் இலக்கினை அடைந்து கொள்வதில் உறுதியானவராகவும் பிரச்சனைகள் ஏற்படும் பொழுது அவற்றைக் கண்டு அஞ்சாது உறுதியான கனப்பாங்குடன் அவற்றைத் தீர்த்து இலக்கினை நோக்கி நகரக் கூடியவராக இருத்தல் வேண்டும். இதற்கு தன்நம்பிக்கை (Self-Confidence) இருத்தல் அவசியம். முயற்சியாளர்கள் மிகவும் உறுதியானவர்களாக இருந்த போதிலும் அவர்கள் எதைச் செய்யலாம் எதனைச் செய்ய முடியாது என்பவற்றை அடையாளம் காண்பதுடன் கடினமான பிரச்சனைகளைத் தீர்ப்பதில் அவர்கள் எங்கே உதவியினைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதுபற்றி முடிவு செய்தலும் வேண்டும்.

vi) ***தேடலும் பின்னூட்டியைப் பயன்படுத்தலும்***

**Seeking and using feed back**

பயனுறுதிமிக்க முயற்சியாளர்கள் பெரும்பாலும் விரைவாகக் கற்பவர்களாக விபரிக்கப்படுகின்றார்கள். அவர்கள் எவ்வாறு தாம் சிறப்பாகச் செய்கின்றார்கள், எவ்வாறு தமது செயற்திறனை மேலும் உயர்த்த முடியும் என்பவற்றைத் தெரிந்து கொள்வதற்கு விருப்புடையவர்களாக இருக்கின்றனர். இத்தகைய தீர்மானங்களை மேற்கொள்வதை முயல்வதில் அவர்கள் சுறுசுறுப்பாகத் தேடுவதுடன் பின்னூட்டியையும் பயன்படுத்துகின்றனர். பின்னூட்டியானது அவர்களது தவறுகள் மற்றும் பின்னடைவுகளிலிருந்து அவர்களது கற்றலிற்கான ஒரு மையமாகக் காணப்படுகின்றது.

vii) ***உள்ளகக் கட்டுப்பாட்டு வழி***

**Internal locus of control**

வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்கள் தம்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் தமது முயற்சியின் வெற்றி/ தோல்வியானது விதி வசமாகவோ / அதிஸ்டவசமாகவோ /

இதேபோன்ற காரணிகளாலோ ஆளப்படும் என்பதில் நம்பிக்கையற்றவர்களாகவே காணப்படுகின்றனர். மாறாக தமது அடைவுகளும் பின்னடைவுகளும் தமது சுய கட்டுப்பாட்டினுள்ளேயே இருப்பதாக நம்புகின்றனர். தமது செயற்பாடுகளின் வெளியீடுகளைத் தாமே தீர்மானித்துக் கொள்ளலாம் என்பது அவர்களின் எண்ணமாக இருக்கும். இதே அம்சம் தனிப்பட்ட பொறுப்பினை ஏற்றுக் கொள்ளும் விருப்புடனும் தன்நம்பிக்கையுடனும் பொறுமையுடையதாகக் காணப்படுகின்றது.

### viii) ஆபத்தினை ஏற்றுக் கொள்ளுதல் Risk taking

ஆபத்தினை ஏற்றுக் கொள்ளல் ஓர் முயற்சியாளரின் பண்புகளில் ஒன்றாகும். எந்தவொரு புது முயற்சியும் முயற்சியாளர்களிற்கு ஆபத்தினைக் கொண்டதாகத் தென்படலாம். எவ்வாறாயினும் முயற்சியாளர்கள் அத்தகைய ஆபத்துக்களை விலக்கிக் கொள்ளக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். உயர் ஆபத்துக்களைத் தாங்கிக் கொள்ளும் மனப்பாங்குடைய முயற்சியாளர்கள் அம்முயற்சியிலிருந்து திருப்தியினையும் வெற்றியையும் பெற்றுக் கொள்வதுடன் உயர்ந்தளவு இலாபத்தினையும் பெற்றுக்கொள்ள முடியும். ஸ்திரமற்ற சூழ்நிலைகள் காணப்படும் பொழுது இத்தகைய ஆபத்துக்களின் அளவும் உயர்வானதாகக் காணப்படலாம். இதனாலேயே தற்கால முகாமைச் சீர்திருத்தங்கள் அதிகரித்த ஆபத்தினை ஏற்றுக்கொள்ளும் தன்மையினை வேண்டி நிற்கின்றன. (Berman and Jonathan, 1998) இத்தகைய ஆபத்தானது நிதி ஆபத்தாகவோ (Financial risk), தொழில் ஆபத்தாகவோ, குடும்ப மற்றும் சமூக ஆபத்தாகவோ அன்றேல் மனோதத்துவ ஆபத்தாகவோ (Psychic risk) இருக்கலாம்.

### ix) நேர்மையும் நம்பகத் தன்மையும் Integrity and Reliability

நேர்மையும் நம்பகத்தன்மையும் வெற்றிகரமான முயற்சிக்கும் வியாபாரத் தொடர்புகளிற்கும் மற்றும் சகித்துக் கொள்ளும் தன்மைக்கும் வித்திடும் ஒரு உறுதியான அம்சமாகக் காணப்படுகின்றது. இந்நேர்மையும் நம்பகத்தன்மையும் தன்நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்கும் உண்மையில் நிலைத்திருப்பதற்கும் உதவுவதாக இருக்கும்.

### x) தன்நம்பிக்கையும் உத்தமமாக்கலும் Self - confidence and optimism

முயற்சியாளர்கள் தமது நம்பிக்கையினைப் பேணக் கூடியவர்களாகவும் அதன்மூலம் வெளியீட்டை உயர்வுபடுத்தக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

### ஆய்வின் நோக்கம் - Purpose & the Study

இவ் ஆய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

1) கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிறு தொழில் முயற்சிகளை அடையாளம் காணல்.
2) அவற்றின் போக்கினை மதிப்பிடுவதுடன் அத்தகைய தொழில் முயற்சிகள் எதிர்ப்படும் பிரச்சனைகளை அடையாளம் காணல்.
3) மேற்படி சிறு தொழில் மயற்சிகளை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கல்.

### தகவல் சேகரிப்பும் ஆய்வு முறையும்
### Data collection and Research methode

இவ் ஆய்விற்குத் தேவையான தகவல்கள் 2ஆம் தரத் தகவல் மூலங்களிலிருந்து (Secondary sources) பெற்றுக் கொள்ளப்பட்டன. இவ்வகையில் பருவகால இதழ்கள் (Periodic Journals), புத்தகங்கள்,

மற்றும் கோப்பாய் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்ட Resource Profile இல் இருந்தும் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. ஆய்வு முறையைப் பொறுத்தவரை இது ஒரு விபரணரீதியான (Descriptive)/ விளக்கரீதியான (Exploratory) ஆய்வாகவே மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிறு கைத்தொழில் முயற்சிகளை அவதானித்ததன் அடிப்படையிலும், சில தொழில் முயற்சியாளர்களை நேரடியாகக் கண்டு அவர்களுடன் உரையாடிதன் அடிப்படையிலும் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு இவ்வாய்வானது விளக்கரீதியாக சமர்ப்பிக்கப்படுகின்றது.

## பெறுபேறுகளும், விதந்துரைகளும் Results and discussions

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலி கிழக்குப் பிரதேசம் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவாகக் காணப்படுகின்றது. கல்வியங்காட்டுப் பிரதேசத்திலிருந்து அச்சுவேலி வளவாய் வரை மொத்தம் 102.07 சதுரகிலோ மீற்றர் பரப்பைக் கொண்டது கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியாகும். இங்கு கோப்பாய், நீர்வேலி, புத்தூர், மற்றும் அச்சுவேலி என்னும் நான்கு பிரதேசசபைப் பகுதிகள் உள்ளன. இன்று தனியான தேர்தல் தொகுதியாக விளங்கும் கோப்பாய் பிரதேசமானது 31 கிராமசேவகர் பிரிவுகளையும், மொத்தம் 111 கிராமங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. மொத்தம் 78414 அங்கத்தவர்களைக் கொண்டிருக்கின்றது. இவர்களுள் பெரும்பாலானவர்கள் விவசாயத்தையே தமது ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டுள்ளனர். (D.S. Office, Kopay, 2007) இருப்பினும் சிறுகைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோரும் கணிசமான அளவில் உள்ளனர்.

இப்பிரதேசத்தில் காணப்படும் கைத்தொழில் முயற்சிகளைப் பின்வருமாறு இருவகைப்படுத்தலாம்.

1. அரசதுறை - Government sector
2. தனியார்துறை - Private sector

### அரசதுறைக் கைத்தொழில்கள்
### Government sector Industries

அரசினால் நடாத்தப்படும் சிறிய கைத்தொழில் முயற்சிகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. கைத்தறி நெசவுத்தொழில் மையம் - சிறுப்பிட்டி
2. கைத்தறி நெசவுத்தொழில் மையம் - நவக்கிரி
3. கைத்தறி நெசவுத்தொழில் மையம் - பத்தைமேனி

மேற்படி கைத்தொழில் முயற்சிகள் ஒரு காலத்தில் கிராம ரீதியில் செயற்பட்டாலும் தற்போது அவற்றின் செயற்பாடுகள் எதுவும் இல்லை. இப்பிரதேச மக்கள் இன்று இவ்வகைக் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட எத்தனிப்பதுமில்லை. காரணம் இவ்வகைத் தொழில்களிலிருந்து கிடைக்கும் வருமானம் அவர்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைக்குப் போதுமானதாக இருப்பதுமில்லை. இன்று இத்தகைய உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதிலும், அவற்றுக்குத் தேவையான மூலப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதிலும் சிக்கல்கள் காணப்படுகின்றன. இவற்றுக்கு மேல் பல குடும்ப அங்கத்தவர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைப்பெற்று அங்கிருந்து நிறைவான பணத்தை இங்கு அனுப்புவதனால் இத்தகைய குறைந்தளவு வருமானம் தரும் முயற்சிகளை எம்மவர்கள் நாடுவதும் குறைவு என்றுதான் கூறவெண்டும். இருப்பினும் உரிய மூலப்பொருளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு முன்வருமாக இருந்தால்

பொது நூல் நிலையம்
கோப்பாய்

இவற்றை ஓரளவு சிறந்த முறையில் வளர்த்துச் செல்ல முடியும். அரசதுறை மட்டுமன்றி தனியாரும் இத்தொழில் முயற்சிகளில் ஈடுபடலாம். ஊதாரணமாக நவீன ஆடைக்கைத்தொழில் வசதிகள் பெருமளவு வளர்ச்சியடைந்திருக்கும் இந்தியாவின் காஞ்சிபுரம் போன்ற இடங்களில் இன்றும் கைத்தறியில் ஆடைகள் உற்பத்தி செய்யப்படும் (விசேடமாகச் சேலைகள்) முறையையும், அதன்மூலம் அவர்கள் கணிசமானளவு வருமானம் பெறுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

### தனியார்துறைக் கைத்தொழில்கள்
### Private Sector Industries

வலிகிழக்குப் பிரதேசத்துக்குட்பட்ட தனியார்துறைக் கைத்தொழில்களாகப் பொதுவாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. அஸ்பெஸ்ரஸ் சீற் உற்பத்தித் தொழிற்சாலை – நவக்கிரி
2. இரும்புத் தொழிற்சாலை – நீர்வேலி
3. கண்ணாடித் தொழிற்சாலை – நீர்வேலி
4. பனம்பொருள் உற்பத்தி நிறுவனம் – அச்சுவேலி
5. நெசவுக் கைத்தொழில் – புத்தூர்
6. குடிசைக் கைத்தொழில்கள்

வலிகிழக்குப் பிரதேசத்தில் பெயர் குறிப்பிடக்கூடியளவுக்குத் தொழிற்பட்ட சிறுகைத்தொழில் முயற்சிகளாக நவக்கிரிப் பகுதியில் செயற்பட்ட சீற் உற்பத்திக் கைத்தொழில் (Roof tiles industry), நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை (Glass factory), மற்றும் புத்தூர் நெசவுத் தொழிற்சாலை (Power loom) போன்றவை குறிப்பிடத்தக்கவை. 1995இன் யாழ்ப்பாண இடப்பெயர்வுக்கு முன் இத்தொழில் முயற்சிகள் சிறந்த முறையில் தொழிற்பட்டுப் பல ஆயிரக்கணக்கானோருக்குத் தொழில் வாய்ப்பையும் வழங்கியிருந்தன. குறிப்பாகப் பெருமளவு பெண்கள் கண்ணாடித் தொழிற்சாலை, மற்றும் புத்தூர் நெசவுத் தொழிற்சாலையில் பணி புரிந்து தமது குடும்ப வருமானத்தை ஈட்டிக் கொண்டனர். துரதிஷ்டவசமாக 1995ஆம் ஆண்டின் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடம்பெயர்வுக்குப் பின்னர் இத்தொழில் முயற்சிகள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இவை அமைந்திருந்த கட்டடப்பகுதிகள், மற்றும் இயந்திர உபகரணங்கள் அனைத்துமே அழிக்கப்பட்டிருப்பதால் இவற்றை மீண்டும் செயற்பட வைப்பது கடினமானதொன்றாகவே கருதப்படுகின்றது. இது எமது பிரதேச வளர்ச்சிக்கும், பொருளாதாரத்துக்கும் விழுந்த ஒரு பேரடி என்றுதான் சொல்ல வேண்டும்.

அடுத்து நீர்வேலி காமாட்சியம்பாள் தொழிற்கூடம் இரும்புவகைத் தொழில்களுக்குப் பெயர்போன ஒன்றாக இயங்கி வருவது யாவரும் அறிந்ததே. கத்தி, கோடரி, அலவாங்கு முதலானவற்றுடன், பூட்டு வகைகள், கடைச்சல் தொழில், கேற், கிறில் முதலான பொருட்கள், சைக்கிள் கரியர், மருந்தடிக்கும் பம் போன்ற பல்வேறு வகையான பொருட்களின் உற்பத்திக்குப் பெயர் போன இச்சங்கமானது இப்பிரதேச மக்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்கியது உண்மையே. இதன் செயற்பாடு தற்போதும் இடம்பெறுகின்றதெனினும், 1995இற்கு முற்பட்ட காலப்பகுதியைப் போல் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. நிர்வாகத்தினரும் தொடர்புடைய அரச அலுவலர்களும் தீவிர கவனம் செலுத்துவார்களாயின் இதனை மேலும் நன்கு திறம்படச் செயற்பட வைக்க முடியும்.

இவ்வாறே அச்சுவேலி பனம்பொருள் உற்பத்தி நிறுவனம், மற்றும் அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை போன்றவையும் குறிப்பிடத்தக்கன. இவற்றின் செயற்பாடுகளும் குறிப்பிடத்தக்க அளவில் இல்லாவிடினும், அச்சுவேலியில் ''லாலா சோப்'' நிறுவனத்தரின் உற்பத்திச் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கன. தொடங்கிய வேகத்தில் அதிகளவு விளம்பரத்துடன் செயற்பட்ட இந்நிறுவனம் இன்று வேகம் தணிந்த நிலையில். கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. தற்காலத்தில் யாழ் மக்களின் பாவனையில் காணப்படும் ஏனைய சவர்க்கார வகையுடன் ஒப்பிடும் பொழுது இத்தகைய உள்ளூர் உற்பத்திகளுக்கு மக்கள் மத்தியிலான குறைந்தளவு வரவேற்பும் இம்முயற்சிகளின் பின்னடைவுக்குக் காரணம் எனலாம். இதற்கிடையில் இன்று கைவிடப்பட்டிருக்கும் நீர்வேலி றொபிக்கம்பனியின் செயற்பாடும் நினைவுகூர வேண்டியதே. ஆயினும் இவ்விடயங்களில் ஐஸ்கிறீம் உற்பத்தி முயற்சிகள் இடம்பெறுகின்றன என்பது குறிப்பிடப்பட வேண்டியதே.

இவற்றைவிடப் பல குடிசைக் கைத்தொழில் முயற்சிகள் இப்பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் செயற்படுகின்றமை அவதானிக்கத்தக்கது. குடிசைக் கைத்தொழில் என்பது குறைந்தளவு மூலதனத்துடன் தனிப்பட்ட ஒரு நபர் அல்லது குடும்ப அங்கத்தவர்களால் தமது வீடுகளில் அல்லது தனியான ஒரு இடத்தில் நடாத்தப்படும் தொழில் முயற்சிகளையே குறிக்கும். இவ்வகையில் செயற்படும் கைத்தொழில் முயற்சிகளைப் பின்வரும் அட்டவணை காட்டும்.

அட்டவணை 01:

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிறு (குடிசை) கைத்தொழில்களும், அவற்றின் எண்ணிக்கையும்.

| கைத்தொழில் | எண்ணிக்கை |
|---|---|
| தையல் | 32 |
| தச்சுத் தொழில் | 41 |
| துவிச்சக்கரவண்டி திருத்துநர் | 37 |
| வெதுப்பகம் | 11 |
| சலூன் | 38 |
| இரும்பு வேலை | 42 |
| சட்டி பானைத் தொழில் | 03 |
| கிறைண்டிங் | 11 |
| பற்பொடி | 01 |
| நெசவுத் தொழில் | 03 |
| சலவைத் தொழில் | 06 |
| சுருட்டு உற்பத்தி | 08 |
| ஏனையவை | 31 |
| மொத்தம் | 264 |

மூலம்:- Resource profiie Divisional secretariat, Kopay.

அட்டவணை 01இன்படி இரும்புத்தொழில், மற்றும் தச்சுத் தொழில் முயற்சிகளின் எண்ணிக்கையே (16%, 15.5%) அதிகளவில் காணப்படுகின்றது. பற்பொடி, நெசவுத்தொழில், சட்டி பானை வனைதல் மிகவும் குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வகைக் கைத்தொழில் முயற்சிகளுக்குப் போதியளவு வசதிவாய்ப்புக்கள் இன்மையால் அவற்றைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியாது முயற்சியாளர்கள் திண்டாடுகின்றார்கள் என்பது அவதானிக்கத்தக்கது. ஒப்பீட்டளவில் இப்பிரதேசத்தில் காணப்படும் சிறுகைத்தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதுடன், செயற்படும் முயற்சிகளும் பல பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையிலேயே காணப்படுகின்றன. இவ்வகையில் இச்சிறிய தொழில் முயற்சிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் நோக்கப்பட வேண்டியது அவசியமானது.

## சிறுகைத்தொழில் முயற்சிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிறுகைத்தொழில் முயற்சிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் வருமாறு.

1) போதுமான மூலதனத்தைப் பெறமுடியாமை

சிறிய தொழில் முயற்சிகளாயினும் அவற்றை ஆரம்பித்து நடத்துவதற்குக் குறிப்பிட்டளவு மூலதனம் தேவைப்படுகின்றது. ஆனால் முயற்சியாளர்கள் போதிய மூலதனமின்றி மிகவும் குறைந்தளவு மூலதனத்துடனேயே இவற்றை ஆரம்பித்து நடத்துகின்றனர். தனிப்பட்டவர்களோ, அல்லது நிதி நிறுவனங்களோ இத்தகைய சிறு முயற்சிகளுக்குப் பணம் வழங்கத் தயங்குகின்றனர்.

கடன் கொடுக்கும் நிறுவனங்களோ அல்லது தனிநபர்களோ வணிக நிறுவனத்தின் ஆதனத்தை ஈடாகக் கொடுக்குமாறொளு அல்லது அரச தொழில் வருமானத்தைப் பெறுபவாகளின் சாட்சி அத்தாட்சிப்படுத்தலையோ வேண்டுகின்றன. சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு இத்தகைய வாய்ப்புக்கள் இல்லாமையால் அவை குறைந்தளவு கடனையே பெறமுடிகின்றது. சில தொழிற் முயற்சிகள் கடன்பெற முடியாமலேயே கஷ்டப்படுகின்றன.

கிராமப்புற ரீதியில் செயற்படும் இத்தகையதொரு சிறிய நிறுவனமானது நகரப்புறங்களில் செயற்படும் பல சிறிய நிறுவனங்களுடன் போட்டியிட வேண்டியுள்ளது. இதனால் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு இக்கிராமப்புறச் சிறுதொழில் நிறுவனங்கள் முக்கியமானவையாகத் தென்படுவதில்லை.

2) இக்கால தொழினுட்பவியலைப் பயன்படுத்த இயலாமை

இன்று நவீன தொழினுட்ப சாதனங்களும் இயந்திர சாதனப்பயன்பாடும் அதிகரித்தள்ள போதிலும் சிறு தொழில் முயற்சியாளர்களால் அவற்றைப் பயன்படுத்த முடியாதநிலை காணப்படுகின்றது. காரணம் அவை மிகவும் பெறமதி வாய்ந்தவையாக உள்ளன. அதேநேரம் கையால் செய்யப்படும் உற்பத்திப் பொருட்களை விட, பொறி மூலம் செய்யப்பட்டவை வலிமையானவையாகவும், அழகான தொற்றமுடையவையாகவும் காணப்படுவதால் நுகர்வோர் அவற்றையே பெரிதும் விரும்புகின்றனர். இதனால் சிறு முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை விற்பனை செய்வதிலும் சிரமப்படுகின்றனர்.

3) தேவையான மூலப் பொருட்களைப் பெற முடியாமை

பல தொழில் முயற்சிகளுக்கான மூலப் பொருட்களைப் பல்வேறு பிரதேசங்களிலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக பாய் உற்பத்திக்கான புற்கள் வன்னிப் பிரதேசத்திலிருந்தே தருவிக்கப்பட்டன. இன்று A9

பாதை பூட்டப்பட்ட பின்னர் இவற்றைப் பெற முடியாத நிலை காணப்படுகின்றது. இவ்வாறே அச்சுத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர் அவ்வப்போது தேவைப்படும் காகிதாதிகளையும் (Paper), மற்றும் கணினி உதிரிப்பாகங்களையும் கொழும்பிலிருந்து பெற முடியாது கஷ்டப்படுகின்றனர்.

4) உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பின்மை

இன்றைய சூழ்நிலையில் இம்முயற்சிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள்ளேயே விற்பனை செய்ய வேண்டியுள்ளது. அவற்றை நாட்டின் பிற பாகங்களுக்கு அனுப்ப முடியாமையால் சந்தைவாய்ப்பும் அதன் மூலம் வருமான இழப்பும் ஏற்படுகின்றது.

5) வினைத்திறன் படைத்த ஆளணியை வேலைக்கமர்த்த முடியாமை

குறிப்பிட்ட சில பகுதிகளில் வினைத்திறனோடு இயங்குவதன் மூலமே பெரும்பாலும் பல வணிக நிறுவனங்கள் வெற்றியடைகின்றன. உதாரணமாக, தச்சுத் தொழிலகமொன்று ஒரு வினைத்திறன்மிக்க தச்சனின் சேவையைப் பெறாமல் முன்னேற்றமடையமாட்டாது. இவ்வாறே ஊக்கம்மிக்க ஒளிப்படக்காரரின்றி ஓர் ஒளிப்படத் தொழிலகம் முன்னேறமாட்டாது. மணிக்கல் தீட்டுவாரோ, பொற்கொல்லரோ இன்றி ஒரு நகைக்கடை ஒருபோதும் முன்னேறமாட்டாது.

இவ்வண்ணம் ஒருவர் குறிப்பிட்ட ஒரு தொழிலில் வினைத்திறன் பெற்றால் அவர் சேவையைப் பலரும் நாடுவதுண்டு. எனவே இத்தகைய வினைத்திறன் படைத்தவர்கள் கூடுதலான வேதனத்தை வேண்டுகின்றனர்.

6) நாட்டின் உறுதியற்ற சூழ்நிலை

தொடர்ச்சியாக நிகழும் போர் காரணமாக ஓர் உறுதியற்ற சூழ்நிலையிலேயே மக்கள் வாழ்கின்றனர். இந்நிலையில் நாளை என்ன நடக்கும் என்பது ஐயத்துக்குரியதாக இருக்கும் பொழுது முயற்சியாளர்கள் சிறு தொழில் முயற்சிகளில் முதலீடு செய்ய விரும்புவதில்லை என்பதே உண்மை. ஆபத்தை ஏற்றுக்கொள்ளும் மனப்போக்குடைய முயற்சியாளர்கள் கூட தொழில் முயற்சிகளில் முதலீடு செய்யப் பின்னடிக்கின்றனர். குறிப்பாக A9 பாதை மூடப்பட்ட பின்னர் இவ்வகைத் தொழில் முயற்சிகளில் ஒரு வீழ்ச்சிப் போக்கை அவதானிக்க முடிகின்றது. இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய விடயம் யாதெனில், சமாதான சூழ்நிலையில் அதாவது A9 பாதை திறக்கப்பட்டிருந்த பொழுது, நலவிய சீரான போக்கையும், அத்தகைய நிலையில் இடம்பெற்ற வியாபாரத்தையும் அடிப்படையாகக் கொண்டு பெருமளவு கடனை வங்கிகளிலிருந்து பெற்ற சிறுதொழில் முயற்சியாளர்கள் இன்று குறிப்பாக A9 பாதை மூடப்பட்ட பின்னர் முன்னரைப் போன்று வியாபாரமின்றி அக்கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது மிகவும் கஷ்டப்படுவதைப் பல முயற்சியாளாகளுடனான உரையாடலிலிருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது.

இத்தகைய ஸ்திரமற்ற சூழ்நிலை காரணமாகப் பெருமளவு மக்கள் கொழும்புக்கும், பிற நாடுகளுக்கும் செல்வதில் குறியாக இருக்கும் பொழுது சிறுதொழில் முயற்சிகளின் உருவாக்கமும், வளர்ச்சியும் கேள்விக்குறியாகியுள்ளது எனலாம். 2007ஆம் ஆண்டின் புள்ளிவிபரப்படி கோப்பாய்ப் பிரதேசத்தில் மொத்தம் 2421 பேர் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். ஆனால் இத்தொகை தற்போது பன்மடங்காகியிருக்கும் என்பதுடன், வெளிநாட்டுக்குப் போகவென்று கொழும்பு செல்பவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் வேகமாக அதிகரித்துச் செல்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் இடப்பெயர்வு காரணமாகப் பயன்படுத்த முடியாத நிலையில்

காணப்படும் நிலப்பரப்புக்களின் அளவும் அதிகரித்துள்ளன. இன்னோரன்ன பிற காரணங்களினால் சிறு தொழில் முயற்சிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

## கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிறுதொழில் முயற்சிகளை வளர்த்துச் செல்வதற்கான ஆலோசனைகள்

சிறுதொழில் முயற்சிகளை விருத்தி செய்வதற்குப் பின்வரும் வழிமுறை கையாள்வது பொருத்தமானதாக இருக்கும்.

1) சிறிய நிறுவனங்கள் பேரளவு வியாபார நிறுவனங்களோடு போட்டியிடுவதைத் தவிர்த்தல்

பொதுவாகப் பெரளவான உயர்தொழினுட்பவியல் முறைகளைக் கையாளும் நிறுவனங்கள் ஈடுபடாத வணிகத்துறைகளும் உள்ளன. (உதாரணம்) முகமூடி, இத்தகைய முயற்சிகளில் சிறு நிறுவனங்கள் ஈடுபடுவது போட்டியின்றிச் செயற்படுவதற்கு வழிவகுக்கும்.

2) பிற போட்டியாளரிலிருந்து வேறுபட்டிருத்தல்

சலூன், தையற்காரர், சிற்றுண்டிச்சாலை, சில்லறைக்கடை போன்ற தாபனங்களுக்குச் சிறப்பான வினைத்திறனும் கூடுதலான முதலும் தேவைப்படுமாதலால் ஒரே பட்டினத்தில் அத்தகைய தாபனங்கள் குறைவாகவே இருக்கும். போட்டியெற்படின் போட்டியாளரிடமிருந்து வேறுபட்ட வகையில் செயற்படலாம். அத்துடன் சலூன், தையற்தொழில் போன்றவற்றில் ஈடுபடுபவர்கள் நுகர்வோரின் கல்வித்தகமை, விருப்பு, எதிர்பார்க்கை என்பவற்றை அறிந்து நாகரீகமான முறையில் தமது செவைகளை வழங்கத் தயாராக இருத்தல் வேண்டும். அவர்களுக்கேற்ற வகையில் தமது தொழில் நிலையங்களைச் சுத்தமாக வைத்திருப்பது நுகர்வோரைத் தக்க வைத்திருப்பதற்கு வழிசமைக்கும். இத்தகைய கிராமப்புறத் தொழில் வல்லுனர்கள், கிராமப்புறங்களிலிருந்து பெருமளவு இளைஞர்கள் இத்தேவைகளுக்காக ஏன் நகர்ப்புற நிறுவனங்கள் நாடிச் செல்கின்றார்கள்? என்பதை உணர்ந்து அதற்கேற்ப செயற்பட வேண்டும்.

3) மக்கள் வினைத்திறன் கூடிய பங்கு வகிக்கும் ஒரு வணிகத்தைத் தேர்ந்தெடுப்பது பொருத்தமானதாக இருக்கலாம். (உதாரணம்) பாண் உற்பத்தி, வலிகிழக்குப் பிரதேசத்திலிருக்கும் பேக்கரிகள் ஓரளவு வெற்றிகரமாகச் செயற்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

4) இப்பிரதேசச் சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் போதுமான மூலதனமின்றித் தொழிலை வளர்த்துச் செல்லக் கஷ்டப்படுகின்றனர். எனவே இவர்களுக்கான இலகு கடன் சேவைகளை வழங்குவதற்கு வங்கி போன்ற நிதி நிறுவனங்களைத் தூண்டுவதுடன், அரச அதிகாரிகளும் ஆவன செய்யின் அவற்றை ஓரளவேனும் விருத்தி செய்யும் வாய்ப்புக் கிட்டலாம். கடன் வழங்கும்போது ஆபத்தினை எதிர்வு கூறி, அக்கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான அடிப்படையும் வகுத்துக் கொள்ளப்படுவது சிறந்தது.

5) நவீன தொழினுட்ப வசதியும், மூலப்பொருட் கிடைப்பனவுமின்றி இடர்படும் வெற்றிகரமான தொழில் முயற்சிகளுக்கு இவ்வித வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரச அதிபரூடாக முன் முயற்சிகளைப் பிரதேச செயலகம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

6) சிறு தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் மற்றுமொரு பிரச்சனை உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பின்மை ஆகும். எனவெ பொருட்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதில் அரச நிறுவனங்கள் உதவி செய்யலாம். உற்பத்திப் பொருட்களைப் பிற பிரதேசங்களுக்கு அனுப்புவதற்கோ, அன்றேல் உள்ளூரில் துரித விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கலாம். குறிப்பாக உற்பத்திப் பொருள் கண்காட்சிகளையோ அல்லது மாதிரிச் சந்தைகளையோ ஏற்படுத்தின் அவை முயற்சியாளர்களுக்குப் பேருதவியாக அமையும். முயற்சியாளர்கள் தமக்கிடையே ஒரு அமைப்பினை ∴ சங்கத்தை அமைப்பதன் மூலமும் இவற்றைச் செயற்படுத்தலாம்.

7) வினைத்திறன் மிக்க ஆளணியினரை உருவாக்கும் வகையில் போதிய பயிற்சிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை உரியதரப்பினர்கள் மேற்கொள்வது சாலப் பொருத்தமானதாக இருக்கும். இதற்கென ஒரு கைத்தொழில் அமைப்பு உருவாக்கப்படலாம். அல்லது ஏற்கனவே இருக்கும் கைத்தொழில் வல்லுனர்கள் ∴ நிபுணர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

8) மேலும் சிறப்பான முறையில் செயற்படும் தொழில் முயற்சியாளர்களைப் பேட்டி கண்டு, கௌரவிப்பதன் மூலமும், பரிசில்களை வழங்குவதன் மூலமும் அத்தகைய தொழில் முயற்சியாளர்களையும், தொழில் முயற்சிகளையும் ஊக்குவிக்கலாம்.

9) ஏற்கனவே பிரதேச செயலகங்கள் ரீதியாகச் செயற்பட்ட தொழிற்பயிற்சிப் பட்டறையை (உணவு பதனிடல், ஒட்டுத் தொழில், மற்றும் தொழில் முயற்சிகள்) மீண்டும் செயற்படுத்துவதற்குப் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்குமாயின் இப்பிரதேசத் தொழில் முயற்சிகளை வளர்த்துச் செல்ல முடியும். அத்துடன் பிரதேசத்தில் கிடைக்கும் வளங்களைக் கொண்டு மேலும் உருவாக்கப்படக்கூடிய சிறு ∴ சுய தொழில் முயற்சிகளாகப் பின்வருவனவற்றைச் சிபார்சு செய்யலாம்.

அ கடித உறை தயாரித்தல்
ஆ. உணவு பதனிடல்
இ. ஜாம் உற்பத்தி
ஈ. மெழுகு திரி உற்பத்தி
உ. பற்பொடி, மற்றும் வெண்கட்டி உற்பத்தி
ஊ. பன்ன வேலை
எ. சர்க்கரை ஆலை

மேற்படி சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்படுமாயின் இத்தொழில் முயற்சிகளில் ஓரளவேனும் வெற்றியை அடைய முடியும்.

**முடிவுரை** Conclusion

சிறுதொழில் முயற்சிகள் பற்றிய அடிப்படைப் பின்னணியும், கோப்பாய்ப் பிரதேச சிறுதொழில் முயற்சிகள், அவை எதிர்நோக்கும் பிரச்சனைகள் மிகத் தெளிவாகத் தரப்பட்டிருப்பதுடன், அவற்றை வளர்த்துச் செல்வதற்கான சிபார்சுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. உண்மையில் பெயர் குறிப்பிடக்கூடிய தொழில் முயற்சிகளான சீற் உற்பத்தி,


கண்ணாடித் தொழிற்சாலை, மற்றும் நெசவாலைத் தொழில் என்பன மூடப்பட்டமை இப்பிரதேச மக்கள் பலரின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்திருக்கின்றது. தற்போது செயற்படும் தொழில் முயற்சிகள் சுய தொழில் முயற்சியளவில் இருப்பதால் பெருமளவு வேலை வாய்ப்பை வழங்கும் நிலையில் இல்லை. எனவே "சிறு கைத்தொழில் முயற்சிகள்" விடயத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானதொன்றாக அமைகின்றது.

## Reference


1) Hubert and Link, In Pushpanathan; A; and Zhiyang Lin (2006). Personal charseteristics of an Entrepreneur and its influence on Performance; Journal of management; vol. IV. No. I, October 2006,p p. 43 - 48; south Eastern University of Srilanka.
2) Karunanayake G.P, and Senadheera - G.D.V.R. (2006); Strategic Orientation of Entrepreneurs in small and medium enterprises; Third International conference on Business management-2006; University of Sri Jayewardefnepura; P.1 37.
3) Aldrich. E.H; and cliff. E.J; (1986); The pervasi8ve effect of family on enftrepreneurship towards a family embedded ness perspective; Journal of business venturing vol.1 8.
4) Joseph A. Schumpeter; (1934); The thery of economic development; Cambridge; mass: harvard University Press, pp.7 4.
5) Farook. M.R.M. (1992); Traditional and New enterprises in Srilanka; PIM conference on Management studies.
6) buchele.R, (1967) "Business policy in growing firms" Scranton, pa: chandter publishing company,p p.1 7.
7) Keys, P.R, (1988) Administrative Enterpreneurship, in the public sector;. Admistration in social work. 12,2 : pp.5 9-68.
8) Salazat, guisette. (1997) Public Enterpreneurship : A contradiction in terms? Korean Review of public administration. Vol. 2, No. 01,p p.1 25 - 135.
9) Bermad, E.M and Janathan. P.W. (1998), Responsible risk taking, Public Administrative review. 58,4 (July / August): pp.3 46 - 352.
10) Divisional Secretariat (2007): Resource Profile,D ivisional secretariat,K opay.


**வலி. கிழக்கில் நீர்வசதி**

| | |
|---|---|
| திறந்த கிணறு | - 10125 |
| குழாய்க் கிணறு | - 1459 |
| குழாய்வழி நீர் (Pipe Line) | - 546 |




# கோப்பாய் ஆசிரிய கலாசாலை
## - ஓர் அறிமுகம்



பண்டிதர்,கலாநிதி செ. திருநாவுக்கரசு,
*விரிவுரையாளர்,*
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தின் பண்பாட்டுப் பெட்டகமாகத் திகழ்வது கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆகும். வடமாகாணத்தின் முதலாவது அரசினர் ஆசிரியகலாசாலையாக 1923 ஆம் ஆண்டு செயற்படத் தொடங்கிய இக் கல்வித் கருவூலம், இன்று பவளவிழா, முத்துவிழா ஆகியவற்றையும் தாண்டி 85 ஆண்டுகளாக அரிய கல்விப் பணியாற்றி வருகிறது. ஆயிரமாயிரம் ஆசிரிய மாணவர்களுக்குப் பயிற்சியளித்து, அவர்களது வாண்மைத்திறன்களை இந்த மண்ணில் வாழ்ந்த, வாழுகின்ற மாணவர்களுக்குப் பயன்படச் செய்த பெருமையால் பூரித்து நிற்கிறது. அறாத் தொடர்புடன் சமூக விழுமியங்களைக் கட்டிக்காத்து, தமிழ்ச்சமுதாயத்தின் கல்வி நலனோம்பிய கலாநிலையம் இதுவெனல் தகும். தமிழரும் முஸ்லீம்களும் இணைந்து கற்றதும், சைவரும், கிறிஸ்தவரும், இஸ்லாமியரும் ஒருகுடை நீழலில் ஒன்றுபட்டுக்கல்வித்துறையில் ஆசிரிய பயிற்சி பெற்றதுமான அற்புத வசந்தகாலங்கள் எங்கள் கலாசாலை அன்னையின் பொற்காலங்கள்.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணப் பிரதேசம் உட்பட இலங்கை முழுவதும் பாடசாலைகளின் எண்ணிக்கைகள் அதிகரிக்க, மாணவர் தொகையும் அதிகரித்தது. கிறிஸ்தவ, கத்தோலிக்க சமயக் குழுவினருடன், சுதேசிய பௌத்த, இந்து, இஸ்லாமிய சமயத்தினரும் பாடசாலைகளை உருவாக்கிக் கல்வி வழங்கினர். அரசினர் பொறுப்பிலும் பாடசாலைகள் நிறுவப்பட்டன. இதனால் அதிகரித்து வரும் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்களைப்பயிற்சியளித்து உருவாக்குவதற்குக் கொழும்பிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையால் முடியவில்லை. எனவே தத்தம் சமயச்சார்புடன் ஒவ்வொரு சமயக்குழுவினரும் யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் கலாசாலைகளை நிறுவிப் பயிற்சியளித்தனர். யாழ்ப்பாண நகரில் இருபாலருக்குமான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையினை மெதெடிஸ்த மிசனரிமார் ஏற்படுத்தினர். கோப்பாய், நல்லூர் ஆகிய இடங்களில் சேர்ச் மிசனரிமாரும், தெல்லிப்பழை, உடுவில் ஆகியவற்றில் அமெரிக்கன் மிசனரிமாரும், கொழும்புத்துறை, இளவாலை ஆகிய இடங்களில் கத்தோலிக்க மிசனரிமாரும் ஆசிரியர்களுக்கான பயிற்சி நிலையங்களை அமைத்தனர். சேர். பொன். இராமநாதன் அவர்கள் இந்துப் பெண்களுக்காக மருதனாமடத்திலும், இந்து ஆண்களுக்காகத் திருநெல்வேலியிலும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளை உருவாக்கினார். 1927இல் திருநெல்வேலியில் சைவாசிரிய கலாசாலை அமைக்கப்பட்டது. அதேயிடத்தில் 1945 இல் சைவமகளிர் கலாசாலையும் அமைந்து அது பின்னர் 1946 இல் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு மாற்றப்பட்டது. 1923 - 1946 ஆண்டு வரை கோப்பாயில் இயங்கிய ஆண்கள் ஆசிரியகலாசாலை பின்னர் பலாலிக்கு மாற்றப்பட, கோப்பாயில் மகளிர் கலாசாலை இயங்கியது. 1980 இல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இரு பாலாரும் பயிற்சி பெறும் சூழ்நிலை உருவாகியது.



அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி

1921 இல் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, 1923 இல் செயற்படத் தொடங்கிய கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை தமிழ்ப் பண்பாட்டின் உறைவிடமாக, கல்விப்பண்பாட்டு நிலைக்களனாக, சமூகப்பண்பாட்டு வழிகாட்டியாக விளங்கி வருகிறது. இராமநாதவள்ளல் மனமுவந்தளித்த சத்தியபாமா்த தோட்டத்தின் ஐந்து ஏக்கர்க் காணியில் அமைந்தது. அழகான கட்டடங்களையும், மதவழிபாட்டுத் தலங்களையும், விளையாட்டு மைதானத்தையும், கிருஷ்ணை படிப்பகத்தையும், ஆனந்தக்குமாரசாமி மண்டபத்தையும் கொண்டு




கலைத் திருவுடன் அறிவொளி பரப்பி வருகிறது. வருடாந்தம் "கலைமலர்" சஞ்சிகையை வெளியிட்டு வருகிறது. மல்லாகம் திரு. ஏ. பொன்னையா (1923 - 1936) திரு. ஆ. ஈ. சண்முகரத்தினம் (1936 - 1948), செல்வி. ஞானம் முருகேசு (1948 - 1963), திருமதி. ர. ஆனந்தக்குமாரசாமி (1963 - 1985), செல்வி. க. சின்னப்பு (1985 - 1989), திரு. வை. கா. சிவப்பிரகாசம் (1989 - 1993), திருமதி. சி. இராமநாதன் (1993 - 995) கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை (1995 - 1998), திரு. மு. பரஞ்சோதி (1998 - 2002), திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (2002 முதல்) ஆகிய பத்து அதிபர்கள் இக்காலசாலையின் வளர்ச்சியில் இது வரை பங்கெடுத்துப் பணியாற்றியுள்ளனர். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இக்கலாசாலையன்னையின் புகழை மாணவச் செல்வங்கள் இன்று வரை பரப்பி வந்துள்ளனர்.

ஆரம்பக்கல்வி, சமூகக்கல்வி, தமிழ், சங்கீதம், நடனம், சித்திரம், மனையியல் ஆகிய கல்விசார் நெறிகளில் காலந்தோறும் ஆசிரியர் பயிற்சி இங்கு வழங்கப்படுகிறது. உடற்கல்வி, சமயம், மொழி, கணிதம், விவசாயம், ஆகிய பாடங்களும் பயிற்றப்படுகின்றன. நெறிகளின் எண்ணிக்கைகள் மாணவர் தொகை மற்றும் அனுமதி முறை ஆகியவற்றைப் பொறுத்து வேறுபடும். கடந்தகால் நூற்றாண்டுகால உள்நாட்டுப் போரின் தாக்கம் கலாசாலையின் பல்வேறு செயற்பாடுகளில் வீழ்ச்சியைக் காட்டியுள்ளது. எத்தனை பூகம்பங்கள் ஏற்பட்டாலும் அவற்றால் வெந்தும் சாம்பலாகாது இக்கலாசாலைப் பயிற்சிகள் தொடருகின்றன. முத்தமிழ் நிகழ்ச்சிகளின் பொலிவும், உடலியக்க நிகழ்ச்சிகளின் மலர்வும் சமூகத் தொடர்பாடல்களின் இணைவும் கோப்பாய் ஆசிரியகலாசாலையின் வளர்ச்சிப்படிகளாகும். தற்போது நவீன தகவல் தொடர்பையும், ஆங்கில மொழிப் பயன்பாட்டையும் அவாவிச் செயற்பட வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. குறைவான வளங்களிருப்பினும் அவற்றை நிறைவாக்கித் தரவல்ல பேராசான்களின் துணையோடு சமகாலச் சவால்களையும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை சமாளிக்கும் என நம்பலாம். புனிதமான ஆசிரியத்துவத்தின் மேன்மையானது ஒரு சமூகப் பொறுப்புணர்வுடன் பேணத்தக்க ஆசிரியர்களால் அமைவதாகும். அதனை ஏற்ற இலக்கு நோக்கி இயைவிப்பது தகுதியான ஆசிரியர் பயிற்சியாகும். அந்தப் பயிற்சியும் அனுபவமும் ஈராண்டு கால எல்லையினைக் கொண்டதாயினும், அதன் தாக்கமும் பயன்பாடும் "உறக்குந் துணையதோர் ஆலம் வித்தீண்டி இறப்ப நிழல் பயந்தாங்கு" காணப்படுவதாகும். எனவே கோப்பாயில் அமைந்துள்ள கலைக்கோயில் மானுடத்தில் உயர்வுக்கான திருக்கோயில் எனக் கருத வேண்டும். தானும் வாழ்ந்து, மற்றவர்களையும் வாழ்விக்கும் மானிட நேயத்தின் பிறப்பிடமாக இக்கலாசாலை விளங்குவதில் நாம் பெருமையடையலாம். வலிகாமப் பிரதேசக் கல்வி - கலை - கலாசார ஊற்றுக்களின் நதிமூலம் இதுவென்பதில் ஐயமில்லை.

வலிகிழக்கில் உள்ள பதிவு செய்யப்பட்ட

இந்துக் கோவில்கள் - 236

தேவாலயங்கள் - 27



# வலிகிழக்குப் பிரதேசத்தின் விவசாய அபிவிருத்தியை நிலைபேறானதாக்கல்

## - சில முன்மொழிவுகள்



பொ.சற்குணநாதன்
**B.Sc (Agriculture), P.G.D.E., M.Ed.**
பிரதி அதிபர், ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி

குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு கிராமிய பொருளாதாரம் கணிசமான அளவிலான ஒரு பங்களிப்பினை வழங்கமுடியும் என்ற விடயம் இப்பொழுது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பின்புலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலி. கிழக்குப் பிரதேச கிராமியத்துறையின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்துறையின் பொருளாதாரப் பங்களிப்புக்கள் பற்றி ஆராய்வது மிகப்பொருத்தமானதாக அமையலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் கோப்பாய்ப் பிரதேச செயலாளர் பிரிவானது புவியியல் ரீதியாக வலி. கிழக்குப் பிரதேசமாக வரையறுக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் மொத்தமாக 102.07 சதுரகிலோமீற்றர் நிலப்பரப்பானது 111 கிராமங்களாக விரிந்துள்ளது. அதிக எண்ணிக்கையான கிராமங்களைக் கொண்டிருப்பது இப்பிரதேசத்தின் சிறப்பார்ந்த அம்சமாகும். மேலும் யாழ் குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களை உள்வாங்காமல் வளமான மத்திய பிரதேசத்தில் சிறந்த மண்வளமும், நிலத்தடி நீர்வளமும், சிறந்த போக்குவரத்து உட்கட்டமைப்பும் கொண்டதாக வலி. கிழக்குப் பிரதேசம் விளங்குகிறது.

இப்பிரதேசத்தின் புகழ்பூத்த பண்டைய செழிப்பு நிலைக்கு வெற்றிகரமான வேளாண்மைத் தொழிலே பிரதான காரணியாக இருந்து வந்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இப்பிரதேசம் அமைந்திருக்கின்றமை வேளாண்மை செழித்தோங்குவதற்கு ஏதுவாயிற்று. சிறப்பாகக் குறிப்பிடத்தக்க நிலத்தடி நீரின் வினைத்திறனான பாவனையும் விவசாய செழிப்புக்கு ஒரு காரணமாகக் கருதலாம்.

இப்பிரதேசத்தில் நெற்பயிர்ச் செய்கையானது குறிப்பிடத்தக்களவு மிக முக்கியமான பொருளாதார நடவடிக்கையாக இருந்திருக்கவில்லை. எதிர்காலத்திலும் இதன் வளர்ச்சிப்போக்கு சாதகமாக அமையும் என எதிர்பார்க்க முடியாதுள்ளது. இலங்கையின் ஏனைய மாவட்டங்களைப் போன்று யாழ்ப்பாணத்தில் நீர்ப்பாசன குளங்கள் இல்லாத காரணத்தினால் சிறுபோக நெற்செய்கை பூச்சியமாகவே உள்ளது. ஆனாலும் வருடத்தில் ஒரு தடவை பெரும்போகத்தில் மழையை நம்பிய மானாவாரிப் பயிர்ச்செய்கையாக நெற்செய்கை பண்ணப்படுவதும், இப்பிரதேசத்தின் கணிசமானளவு நெற்காணிகள் உவர்த்தன்மையடைந்து போனமையும் இதற்கான காரணங்களாக முன் வைக்கப்படுகிறது.

நெற்பயிர்ச் செய்கை மூலம் இப்பிரதேச விவசாயிகள் போதியளவு வருமானத்தைப் பெற்றுக்கொள்வதில்லை என்பது யாவரும் ஏற்றுக் கொள்வர். ஆனாலும் செம்மண் தரையில் பணப்பயிர் மற்றும் மற்றும் தோட்டப்பயிர் உற்பத்தியில் ஈடுபட்டுவரும் பெரும் கமக்காரர்களே தமது சொந்தத்தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு ஜீவனோபாயமாக நெற்செய்கையில் ஈடுபடுவதால் அவர்கள் சளைக்காமல் தொடர்ந்தும் நெற்செய்கையை மேற்கொண்டுவருகின்றனர். ஏனையவர்கள் நெற் செய்கையைக் கைவிட்டு உற்பத்திக்காக செலவு செய்யும் பணத்தைக்கொண்டு அரிசியைக் கொள்வனவு செய்து கொள்ளலாம் என்ற மனநிலையில் கணிசமானளவு நெற் காணிகள் கைவிடப்பட்டுள்ளன. எனவே நெற்செய்கை விவசாயிகளின் வருமானத்தை விருத்தி செய்வதற்கான விசேட செயற்திட்டங்கள் முன்வைக்கப்படுவது தவிர்க்க முடியாததொன்றாகும். ஆனால் இதுவரை காலமும் நாம் பெற்றுக் கொண்டிருக்கும் அனுபவத்தின் அடிப்படையில் நெல் சாகுபடித்துறையில் தற்போதைய கட்டமைப்பின் கிராமிய மக்களின் வறுமையைப் போக்குவது சிரமமானதொரு விடயமாகக் கூறப்பட்டாலும் கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வது ஒரு முக்கியமான தேவை என்ற முறையில் வலி. கிழக்குப் பிரதேச நெற் செய்கையாளரின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கு அவசியமான வழிமுறைகள் அறிமுகம் செய்து வைக்கப்படுவது அவசியமாகும்.

அறுபதுகளில் இப்பிரதேச விவசாயிகளில் பெரும்பாலானவர்கள் தமது சுயதேவையை மட்டும் கருத்தில் கொண்டு ஜீவனோபாய விவசாயத்தில் ஈடுபட்டு வந்தனர். பின்னர் எழுபதுகளில் ஆரம்பத்தில் இலங்கை அரசால் கொண்டுவரப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை விவசாயிகளின் மனதில் ஒரு புதுத் தெம்பை ஏற்படுத்தியமையால் இப்பிரதேசத்தில் விவசாயமுயற்சிக்கு சாதகமாக இருந்த அனைத்து வளங்களையும் உச்ச அளவில் வினைத்திறனைப் பயன்படுத்தி தமது கடின உழைப்பையும் விடாமுயற்சியையும் சேர்த்து கொழும்புச்சந்தையை மையமாகக் கொண்டு இலாபம் ஈட்டி தமது சமூகப் பொருளாதார மட்டத்தினை உயர்த்திக் கொண்டனர். அக்காலகட்டத்தில் இப் பிரதேச விவசாயிகள் தமது கவனம் முழுவதையும் பணப்பயிர்களான சின்னவெங்காயம் உருளைக்கிழங்கு, மிளகாய் முதலியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதில் திசை திருப்பியிருந்தனர் ஆனால் தற்போது நாட்டில் உருவாகியுள்ள அசாதாரண நிலைமை, போக்குவரத்து நெருக்கடி, கொழும்புக்கான தரைமார்க்கம் மூடப்பட்டமை, கடற்பயண சிக்கல்கள் போன்ற பல்வேறு சவால்கள் - செய்கை பண்ணும் பயிர்வகைகளையும் செய்கைபண்ணப்படும் காணியின் விஸ்தீரண அளவையும் மாற்றியுள்ளன என்பதனை கீழ்வரும் தரவுகள் (மூலம்:- பிரதேச மூலவளத்திரட்டு- 2006 பிரதேச செயலகம் வலிகிழக்கு கோப்பாய்) உறுதிப்படுத்துவனவாக உள்ளன.

| | செய்கை பண்ணப்படும் காணி அளவு | பயிரிடக் கூடிய முழு விஸ்திர காணி அளவு | கைவிடப்பட்ட காணி அளவு |
|---|---|---|---|
| நெற்காணி | 563.5 ha | 1599 ha | 1035.5 ha |
| மேட்டுக்காணி | 1388 ha | 6221 ha | 4833 ha |

| பயிர்கள் | செய்கை அளவு ( ஹெக்டேயர் ) | | |
|---|---|---|---|
| | 2003 | 2004 | 2005 |
| நெல் | 598 | 575 | 563.5 |
| மிளகாய் | 140 | 105 | 120 |
| சின்ன வெங்காயம் | 345 | 535 | 670 |
| பயறு | 90 | 066 | 67 |
| கௌப்பி | 36 | 32 | 31 |
| நிலக்கடலை | 08 | - | - |
| உழுந்து | 18 | 02 | 2 |
| சோளம் | 07 | 06 | 20.5 |
| பயிற்றை | 60 | 63 | 79 |
| குரக்கன் | 08 | 07 | 12 |
| போஞ்சி | 16 | 20 | 29 |
| தக்காளி | 34 | 39 | 58 |
| பீற்றூட் | 46 | 56 | 63 |
| கத்தரி | 39 | 34 | 47 |
| வெண்டி | 13 | 10 | 15 |
| கோவா | 06 | 7 | 12 |
| பூசனி | 45 | 33 | 39 |
| கரட் | 99 | 90 | 114 |
| முள்ளங்கி | 3 | - | - |
| புகையிலை | 19 | 6 | 75 |

இப்பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் யாழ்-பருத்தித்துறை பிரதான வீதிக்கு மேற்குப்புறமாகவும் பலாலி வீதிக்கு கிழக்குப்புறமாகவும் இடையில் பரந்து விரிந்திருக்கும் நிலப்பரப்பில் மேட்டுநிலப்பயிர்களுக்கு பொருத்தமான கல்சியம் செம்மஞ்சள் இலற்றசோல் (Calcic red yellow lata sols ) எனும் செங்கட்டி நிற செம்மண் (Brick Red Loam) காணப்படுகின்றது. இம்மண்தொகுதி மேட்டுநிலங்களில் செம்மைநிறமாயும் தாழ்ந்த இடங்களில் மஞ்சள் சார்புடையதாயும் காணப்படுகின்றது Bதிகந்தம் (படை ) என வழங்கப்படும் "கொள்ளும் படை" இத் தொகுதியில் காணப்படாமை குறிப்பிடப்பட வேண்டிய ஓர் அம்சமாகும். இம்மண்ணின் ஆழம் பெரும்பாலும் குறைந்தது 120cm-150cm வரை இருக்கும் மேற்படையில் 35சதவீதம் வரையுள்ள களிக்கூறு கீழே சற்றுக் கூடியிருக்கும். மண் மணிகள் வலுவுள்ளனவாகையால் திண்மை பலகாலும் மெதுமையாகவிருக்கும். இதனால் மண்ணரிப்பும் அதிகம் ஏற்படுவதில்லை.

நூலகம்

மண்ணின் pH பெறுமானம் 8.1 ஆக இருப்பதால் சிறிதுகாரத்தன்மையாக இருக்கும். அங்கு நிலவும் பொருத்தமான மண் வெப்பநிலை வளியூட்டம் முதலானவை நுண்ணங்கிளின் தொழிற்பாட்டிற்கு சாதகமாக அமைந்திருப்பதால் சேதனப்பொருட்கள் மிகஎளிதில் உக்கிப்பிரிந்தழிந்து விடுகின்றன எனவே மண்ணில் சேதனப்பொருட்களும்அதனுடன் நெருங்கிய நைதரசனும் குறைவாகவே இருக்கும் இம் மண்ணில் கல்சியம், மகனீசியம் உயர்வாகவும் பெற்றாசியம், பொசுபரசு கணிசமான அளவிலும் இருக்கும் உப்புமூலமுதல், கற்றயன் பரிமாற்றக் கொள்ளளவு என்பன உயர்வாக இருப்பதால் இம் மண்ணில் இடப்படும் செயற்கைப்பசளைகளை நீரில் கரைத்து வீண்போகாது தடுத்து அவற்றைப் பயிருக்கு பயன்படும் வகை உயர்வானது. கிணறுகள் மூலமே நீர்ப்பாசனம் நடைபெறுகின்றது தோட்டச்சிறுபயிருக்கு மிகவும் பொருத்தமான மண் ஆனாலும் மண்ணில் அடிக்கடி சேதனப்பொருட்குறைவு ஏற்பட்டுக் கொண்டிருப்பதால் இம் மண்ணிற்கு அடிக்கடி மாட்டெரு, தழைப்பசளை இடப்படுதல் அவசியமாகும்.

இப்பிரதேசத்தினூடாக செல்லும் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதிக்கு கிழக்குப் பக்கமாக வீதிக்கு அண்மித்ததாக ஒருகுறிப்பிட்ட துாரம் வரை மண் நரை நிறமானவளமான வண்டல் நிறைந்த களித்தன்மையான மண்ணாக இருப்பதால் இது நெற்பயிர்ச் செய்கைக்கு பொருத்தமானதாக உள்ளது ஆனால் வலிகிழக்குபிரதேசத்தையும் தென்மராட்சிப்பிரதேசத்தையும் பிரிக்கும் எல்லையாக உள்ள கடல் நீரேரியில் கடந்த காலங்களில் ஏற்பட்டபெருக்கு காரணமாக வளமான நெற்காணிகளினுள் உவர்நீர் புகுந்ததன் விளைவாக தற்போது பெருமளவு நிலப்பரப்பு உவர்த்தன்மை அடைந்துள்ளமை இப்பிரதேசத்தின் நெல் உற்பத்தியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இருபாலை கோப்பாய் நீர்வேலி சிறுப்பிட்டி புத்தூர் வாதரவத்தை பிரதேசங்களில் கணிசமான அளவு நெற்காணிகள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான நெற்காணிகளை அவதானித்தால் மக்னீசியம் கல்சியம் போன்றவற்றின் உப்புக்கள் குறைவடைந்து pH பெறுமானம் 8.4 க்கு மேற்படும் வகையில் சோடியம் காபனேற்றும் அதன்இருகாபனேற்றும் அதிகரித்தள்ளது. மேலும் அதிகரித்துள்ள காபனேற்று நீர்ப்பகுப்படையும் போது உண்டாகும் சோடியம் ஐதரொட்சைட்டு மண்ணில் உள்ள சேதனப் பொருளை கருமையடையச் செய்யும். இதனால் மண்ணின் நிறம் கருமையடைந்து இருப்பதால் அவ்வகை நிலத்தை கரும்வயல் எனவும் குறிப்பிடப் படுவதுண்டு இவ்வகையில் கைவிடப்பட்டிருந்த நிலத்தை திருத்தி மீண்டும் விவசாயிகள் நெற்செய்கைக்காக பயன்படுத்துவதற்கு தொடர்புடைய நிறுவனங்கள் உதவ முன்வருவதோடு விவசாயிகளிடையே விளிப்புணர்வு கருத்தரங்குகள் மூலம் மண்ணைத்திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

குறைவான பாதிப்பை கொண்ட உவர் நிலமாயின் அதைத்திருத்துவதற்கு புளியம்சருகு , பனைஓலை, நாவற்குழை முதலியவற்றை மண்ணினுள் புதைத்தல் ஓரளவுக்கு பயனளிக்குமென கருதலாம். உவர்த்தன்மை கடுமையாக இருப்பின் இரசாயன முறைகளை கையாழ்வது அவசியம்

அதாவது உவர்நிலத்திலுள்ள காரஉப்புக்களை அகற்றுவதன் மூலமே அவ்வகை நிலத்தை திருத்த முடியும். வயல் முழுவதும் நீரைக்கட்டி கலக்கி ஆவியாக விடுவதன் மூலமும் உப்புக்களை அகற்றலாம். நீரில் கரைந்து மண்ணினுள் செறிந்துள்ள உப்பை தேவையான இடங்களில் வடிகால்களை அமைத்து அகற்ற வேண்டும். இவ்வாறு செய்யும் போது உப்புக்கள் அதிகம் இருக்குமாயின் நீர் நன்கு வடியும் பின்னர் உப்பின் செறிவும் கல்சியமும் குறைவடைவதாலும் சோடியம் அதிகரிப்பதனாலும் நீர் வடிதலில் மந்த நிலை ஏற்படும். எனவே அவ்வகை நிலையை உண்டாக்காமல் கல்சியத்தை சுண்ணாம்பாக இட்டு மண்ணுடன் நன்கு கலக்க வேண்டும். அத்துடன் நீர் எங்கும் ஒரே அளவில் பரவிநிற்கக் கூடியவாறு நிலத்தை நன்றாக மட்டப்படுத்துதல் வேண்டும். இயன்றவரை நிலத்தை தரிசாக விடாமல் பாதுகாக்க வேண்டும் அத்தோடு பயிர் செய்வதாயின் விதைப்பதற்கு பதிலாக நாற்று நடுவது சிறப்பானதாக இருக்கும். இவ்வகையான மண்ணிற்கு அதிகளவில் சேதனப் பசளை இடுதல் எப்போதும் நன்மையளிக்கும். இம்முறை மூலம் இலங்கையில் ஏனைய உலர்வலயப்பிரதேசங்களில் பல நூறு ஏக்கர் நிலம் திருத்தப்பட்டு நெற்பயிர்ச்செய்கை பண்ணப்பட்டு வருவதனை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும். எனவே இப்பிரதேசத்தில் பரம்பியுள்ள வெவ்வேறு இயல்புள்ள மண்களின் இயல்புகளையும் அவை தொழிற்படுகின்ற தன்மையையும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டிய தேவை அண்மைக் காலங்களில் நன்கு உணரப்பட்டுள்ளது. இதற்கு பல்வேறு காரணங்களை முன்வைத்தாலும் தற்போதைய நிலப் பாவனையில் ஏற்படும் பாரிய அழுத்தங்களே முதன்மையானவை. இவ்வகையான மண்களின் குறைபாடுகளையும் அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டிய தகவல்களையும் இம் மண்களிலே நிலையான சீரழிவுகள் ஏற்படத் தொடங்குமுன்னர் பெற்றுக் கொண்டு தற்போதைய சூழ் நிலையில் அவ்வித ஆய்வுகள் விசேடமாக விரைவில் நடாத்தப்பட வேண்டும்.

வலிகிழக்கு பிரதேசத்தின் நிலப்பரப்பு ஒரு குறிப்பிட்ட அளவாகவும் வரையறைக்குட்பட்டதாகவும் உள்ளது. இந்நிலப்பரப்பில் கணிசமான அளவு பகுதி பொருத்தமற்ற நிலஅமைப்பு, கற்கள் காணப்படுவதாலும் பனந்தோப்புக்கள் தொடருவதாலும், வேறு பாவனைகளினாலும் விவசாயம் செய்வதற்கு பொருத்தமற்றதாக காணப்படுகின்றது. குறிப்பாக இப்பிரதேசத்தில் வளமான மண்ணைக் கொண்ட சில நூறு ஏக்கர் நிலப்பரப்பு வீட்டுமனைகளாகவும் கடைத் தொகுதிகளாகவும் மாறிவருகின்ற காரணத்தினால் பயிர்ச் செய்நிலப்பரப்பு குறைந்து செல்வது இப்பிரதேச பொருளாதார வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதாக இருக்கும் என கருதமுடியாமல் உள்ளது. பொருத்தமற்ற மண் பரிபாலன முறைகளினால் பிரயோசனமான மண்பரப்பளவுகளும் பல ஆண்டு காலமாக குறைந்து கொண்டே செல்கின்றது. இவ்வாறான காரணங்களினால் இப்பிரதேச விவசாயிகள் விவசாயத்துறையில் மட்டும் தங்கியிருக்க முடியாத ஒரு பரிதாப நிலை உருவாகி வருவதை யாராலும் தடுத்து நிறுத்தமுடியாமலே போகும். என்பதை யாவரும் ஏற்றுக் கொள்ளவர்

எனவே தற்போது எமக்கு இருக்கின்ற விவசாய நிலப்பரப்பை நன்கு பரிபாலித்து பயன்படுத்தி விவசாய உற்பத்தியை நிலைபேறாக அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

வலிகிழக்கு பிரதேசத்தின் நிலைபேறான விவசாய அபிவிருத்திக்கென விவசாய தொழில் முயற்சிகள் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்படுதல் அவசியமானதும் அவசரமானதுமான தேவையாகும். இந்நிதியத்தின் மூலம் புதியவேளான் நடைமுறைகளை பின்பற்றி புதிய பயிர்களையும் தொழில் நுட்பத்தையும் அறிமுகம் செய்து பயிர்ச் செய்கையில் புதியதொருமாற்றத்தை ஏற்படுத்தலாம் தமது பிரதேசத்தில் உள்ள சிறுகுளங்களை பராமரித்து வரும் சிறு விவசாயிகளுக்கு உதவித்தொகைகள் வழங்குவதன் மூலமாக இப்பிரதேசத்தின் பிரதான சொத்தான நிலத்தடி நீரைப்பாதுகாத்து நிலைபேறான விவசாயத்தை வலுப்படுத்தலாம். இப்பிரதேசத்திலுள்ள பெரும்தனவந்தர்கள், பிரமுகர்கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் இந்நிதியம் வளர்க்கப் படவேண்டும். இந்நிதியத்தின் மூலம் விவசாயிகள் நவீன விவசாயஉபகரணங்களை கொள்ளனவு செய்வதற்கும் ஆராய்ச்சி மையங்களை நிறுவுவதற்கும் உதவிகள் வழங்கப்பட வேண்டும் மேலும் சிறந்த நோயற்ற நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் ஊக்கமளிக்கும் அதேவேளை எமது பிரதான உணவுப் பொருளான அரிசியை உற்பத்தி செய்து வரும் நெல் விவசாயிகளுக்கு உற்பத்தியை அதிகரித்துக்கொள்வதற்கும் விளைச்சலை விருத்தி செய்து கொள்வதற்கும் என போதியளவிலான ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுவது காலத்தின் தேவை ஆகும்.

உசாத்துணை நூல்கள்


Panabokke.C.R., 1978, Soils and Agrocological Environments of Sri lanka, National Resources Series, No. 2., Natural Resources, Energy and Science Authority of Sri lanka, Colombo - p220.

Dr. Alwis.K.A. and Panabokke.C.R.,1972, Hand Book of the Soils of Srilanka(Ceylon), J.Soil Sci.SOC. Ceylon 2:p.1-97.

Panabokke.C.R. and Nagarajah.S., 1964,The Fertility Characteristics of the rice - growing soils of Ceylon.,Tropical Agriculturist 120: p 3-29.

பிரதேச மூலவளத் திரட்டு - 2006., பிரதேசச் செயலகம், வலி. கிழக்கு, கோப்பாய். ப. 10 - 16.




# "தேவதை"

கே.வி.குணசேகரம்
**(கோட்டக் கல்வி அலுவலர், நல்லூர்)**



அம்பலவாணர் மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்க இளைத்த படி நிர்மலாவின் வீட்டு முற்றத்தில் வந்து நின்றார். அவரால் மேலும் ஓர் அடி எடுத்து வைக்க முடியவில்லை. முழங்கால் ""விண் விண்" என்று வலித்தது. நாரிப்பூட்டு விலகிவிட்டதைப் போல் இருந்தது. நிலத்தில் அமரவும் முடியவில்லை, நிற்கவும் முடியவில்லை. "முருகா, என்னை எப்ப உன்னோடு சேர்த்துக்கொள்ளப் போகிறாய்?" என்று பலமாகச் சொன்னார்.

பொல்லின் சத்தமும், அம்பல வாணரின் பலத்த முணுமுணுப்பையும் கேட்ட நிர்மலா வீட்டிலிருந்து வெளியே வந்தாள்.

அவளைக் கண்டதும் அம்பல வாணரின் குரல் தழுதழுத்தது. "பிள்ளை உன்னை, எமது வீட்டில் வந்திருக்கச் சொல்லி எத்தனை தரம் சொல்லிப்போட்டன் கேட்கிறாயில்லை. என்னாலை நடக்க முடியாது. மனிசியும் படுத்த படுக்கை. ஏழு ஆம்பிளைப் பிள்ளைகளையும் நான்கு பெண்பிள்ளைகளையும் பெத்து என்னத் தைக் கண்டனான்..? ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாட்டிலை. போய் இருபது இருபத்தைந்து வருடங்களாச்சு. ஒன் றென்றாலும் வருதில்லை, "இது கிராமமாம். எந்த வசதிகளும் இல்லையாம், எங்கள் இரண்டு பேரையும் போய்ப் பட்டணத்திலை இருக்கட்டாம்". இப்படி அவை ஒவ்வொரு நாளும் சொல்லீனை. இந்த வீட்டிலையே வந்திருக்காத நீ, அங்கை வந்திருப்பியே...? மனிசி இராத்திரித் தொடக்கம் பேச்சு மூச்சில்லாமற் கிடக்கு. ஒருக்கால் வந்து பார் பிள்ளை" அழுதார் அம்பலவாணர்.

நிர்மலா எதுவும் பேசவில்லை. அவரை விலத்திக்கொண்டு அருகில் இருக்கும் அவரது வீட்டிற்குச் சென்றாள்.

காமாட்சி நிர்மலாவைப் பார்த்தாள். அவளின் கட்டிலுக்கு அருகே இருந்த ரெலிபோன் மணி அடித்துக்கொண்டிருந்தது. ரிசீவரை எடுத்துப் பேசும் அளவிற்குத் தைரியமில்லாத காமாட்சி நிர்மலாவைப் பார்த்தாள்.

நிர்மலா ரெலிபோனில் இருந்த ரிசீவரைத் தூக்கிக் காமாட்சியின் காதின் அருகில் வைத்துவிட்டுச் சமைப்பதற்காக உள்ளே சென்றாள்.

"மயூரனா....?" விக்கி விசும்பினாள் காமாட்சி. அவளால் பேசமுடியவில்லை.

மயூரன் என்றதும் வெளியே சுவாலித்துக்கொண்டிருந்த பெரும் தீப்பந் தொன்று திடீரென்று நெஞ்சிற்குட்ப் புகுந்ததைப் போலத் துடிதுடித்தாள் நிர்மலா.

இருபது வருடங்களுக்கு முன்பு அவளுக்குப் பதினாறு வயது. காங்கேசன் துறையில் மிகவும் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து கொண்டிருந்தது அவளது குடும்பம். அவளது தந்தையார் பொன்னம்பலம் பெரியதொரு விவசாயி. நூறு பரப்பிற்கு மேல் தோட்டம் இருந்தது. இரண்டு ரைக்ரர்கள், ஒரு கார், இரண்டு மோட்டார் சைக்கிள்கள், ஒரு லான்ட் மாஸ்ரர், இருநூறுக்கு மேற்பட்ட பசுக்கள், நூற்றுக்கு மேற்பட்ட ஆடுகள், ஆயிரம் கோழிகளைக் கொண்ட பெரிய பண்ணை. அவளது வீட்டு வேலைகளைச் செய்யப் பத்துப் பெண்கள் இருந்தனர். அதைவிடப் பத்துப் பதினைந்து ஆண்கள் தினமும் வேலை செய்தனர். நிர்மலாவும் அவளது இரண்டு தம்பிகளும் தங்கை ஒருத்தியும் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வந்தனர். காலையில் கதிரேசு என்ற தொழிலாளி அவர்களை மோட்டார் வண்டியில் பாடசாலைக்குக் கொண்டு செல்வான். மாலையில் அவர்களை ஏற்றி வருவான்.

ஒரு தீபாவளி அன்று திடீரென்று வீட்டைச் சுற்றிச் செல்கள் விழுந்தன. வீதியால் சனக்கூட்டம் சென்று கொண்டிருந்தது. பொன்னம்பலம் அப்படியான வேளைகளில் வெளியே செல்வதற்கு ஆயத்தமாவார். அப்பொழுது ஒரு கைப்பையையும் அவர் கொண்டு செல்வார்.

முன்பும் பலமுறை செல் அடிக்கும் போது மக்கள் எல்லோரும் வெளியேறுவார்கள். ஓரிரு மணித்தியாலங்களில் செல்லடி நிறுத்தப் பட்டுவிடும். அதன் பின் மக்கள் திரும்பி வந்துவிடுவார்கள். ஆனால் அன்று அப்படி நடக்கவில்லை. ஆமி பிரதேசத்திற்குள் நகர்ந்ததால் அவர்களால் வீட்டுக்கு அதன் பின் செல்ல முடியவில்லை.

சொத்துக்கள் யாவற்றையும் விட்டு விட்டு வந்து இருபது வருடங்கள் கழிந்து விட்டன. அதற்குள் எவ்வளவு மாற்றங்கள், துன்பங்கள்; கஷ்டங்கள் பெருமூச்சு விட்டாள் நிர்மலா.

"மயூரா நிர்மலா தான் எமக்குதவி. பாவம் தகப்பனும் செத்துப் போனார். பிள்ளைகளும் தறிகெட்டுப் போச்சு. பாவம் தாயும் பிள்ளையும்.." காமாட்சி கதைத்துக் கொண்டிருந்தாள்.

மீண்டும், மயூரன் என்ற வார்த்தை அவளை நினைவிழக்கச் செய்தது.

"நிர்மலா...."

"ம்..."

"எவ்வளவு காலமாக நான் உம்மைக் காதலிக்கிறேன். ஒவ்வொரு நாளும் உமது அழகு கூடிக்கொண்டு வருகிறது" அணைப்பை இறுக்கினான் மயூரன். மூச்சுக்காற்று கன்னங்களூடாகக் கழுத்தில் வீசிப் பின் மேலே சென்ற போது நிர்மலா உணர்ச்சிப் பெருக்குடன் அவனை இறுக அணைத்தாள். அந்தரத்தில் பறப்பதைப் போன்ற உணர்வு.

"என்னைக் கைவிட மாட்டியளே?" உங்கடை எல்லாச் சகோதரங்களும் வெளி நாட்டிலை இருக்கினை. அப்படி இருக்க நீங்களும் போகவேண்டுமோ....?

"நான் கட்டாயம் போகவேண்டும் நிம் உலக அதிசயங்கள் ஏழையும் இருவரும் கைகோர்த்துச் சென்று பார்க்க வேண்டும்...." என்றான் மயூரன். அதற்கு மேல் அவளால் பேசமுடியவில்லை.

அடுத்தவாரம் அவன் கனடாவுக்குப் பயணமானான். கனடாவுக்குப் பயணமாகு முன் ஒரு வாரம் அவன் நிர்மலாவுடன் தான் பொழுதைக் கழித்தான். அவன் சென்ற பின் இரண்டொரு முறை ரெலிபோனில் கதைத் தான். அதன் பின் எந்தத் தகவல்களையும் அவளால் அறிந்துகொள்ள முடியவில்லை.

காமாட்சிக்கு அவளை அவன் விரும்புவது விருப்பமில்லை. அதனால் அவன் சென்ற பின்பு அவள் அவர்களது வீட்டிற்கு வருவதில்லை. அவளும் அங்கு செல்வதில்லை. நிர்மலாவின் தாய் இராசம்மா அங்கு சென்று வேலை செய்து கொடுப்பாள்.

இராசம்மா, காமாட்சியுடன் மயூரனைப் பற்றிக் கதைத்தால், காமாட்சி பெரிதாக எதுவும் சொல்லமாட்டாள்; "அவன் என்ரை பிள்ளை இல்லை. வெளிநாட்டிலை போய்க் கூடாத கூட்டமெல்லாங்கூடிக் கெட்டுப்போனான். இப்ப சிறையில் என்று கேள்வி. சகோதரங்களுக்கு இவனால் அவமானம்" என்பாள்.

குடும்ப கஷ்டத்தைப் போக்க இராசம்மா அவர்களின் வீட்டில் வேலை செய்து வந்தாள். மூன்று வருடங்களின் பின் காமாட்சியின் சகோதரனான நாகலிங் கத்தின் மகளைக் கனடாவுக்குக் காமாட்சி அனுப்பி வைத்தாள். அவள் சென்ற சிலமாதங்களுக்குப் பின் கனடாவால் வந்த பொன்னம்பலத்தின் சகோதரியின் மகன், பொன்னம்பலத்தின் வீட்டுக்கு வந்து சொன்னான்; "மாமா நீங்கள் ஏமாந் திட்டியள். மயூரன் நிர்மலாவைக் காதலித்து ஏமாத்தி விட்டுத் தனது மாமனின் மகளைக் கட்டிவிட்டான். திருமணத்திற்கு நான் போனனான்.."

"அப்ப போதைவஸ்து, கடத்தல், சிறை...?" பொன்னம்பலம் வார்த்தைகளை முடிக்குமுன் இராசம்மா சொன்னாள்; "எல்லாம் அந்த மனிசீன்ரை திட்டம், "மயூரனுக்குத் தான் நாகலிங்கத்தின் மகளை காமாட்சி அனுப்புறாள். நீ போய்க் கேள் என்று வள்ளிப்பிள்ளை சொன்னவள்" என்றாள் இராசம்மா.

"பிள்ளை மயூரனோடை கதைக்கப் போறியே...." காமாட்சி கேட்டாள்.

காமாட்சிக்கு, அடுப்பில் பானையில் சூடாக்கிக் கொண்டிருக்கும் சுடுநீரைக் கொண்டுவந்து ஊற்றவேண்டும் என்ற ஆத்திரம் நிர்மலாவுக்கு வந்தது.

நிர்மலா எதுவும் பேசவில்லை. அது காமாட்சிக்குக் கவலையைக் கொடுத்தது. இருப்பினும் பேசாது இருந்தாள். அவளோடு பேசினால் கரைச்சல் என்று அவளுக்குத் தெரியும். நிர்மலா ஒரு நாளும் நெற்றியில் பொட்டு வைப்பதில்லை, வெள்ளைச் சேலையே கட்டுவாள். ஒரு நாள் காமாட்சி அவளின் நிலையால் தனது மகனுக்கு ஏதாவது பாதிப்பு வந்துவிடுமோ என நினைத்துச் சொன்னாள்; "பிள்ளை, நீ குமர். பொட்டும் வைக்காமல் வெள்ளைச் சீலை கட்டியிருக்கிறாய்..." என்று வார்த்தைகளை முடிக்கு முன் நிர்மலா சொன்னாள், "நான் குமர் என்று உங்களுக்கு ஆர் சொன்னது. தாலி கட்டாவிட்டாலும் இரகசியமாய் மாலை மாற்றி குடும்பமாய் இருந்த எனது கணவன் செத்துப் போனான். விதவையள் பொட்டு வைக்கலாமே.....?"

மயூரன் தாயுடன் போனில் கதைக்கும் போதெல்லாம் நிர்மலாவுடன் கதைக்கப் போவதாகக் கூறுவான். அவனது கரைச்சல்

தாங்க முடியாததால் தான் அன்று காமாட்சி, "மயூரனுடன் கதைக்கப் போகி றாயா...?" என்று கேட்டாள்.

அனல் கக்கும் விழிகளோடு நிர்மலா காமாட்சியைப் பார்த்தாள். இருபது வருடங்களுக்கு முன் மயூரன் ரெலிபோனில் பேசியது அவளது நினைவில் வந்தது; "நிம், நான் கனடாவுக்கு வந்திட்டன். மூத்தக் காவுடன் தான் இருக்கிறன். இனிமேல் நீர் கவலைப்படத் தேவையில்லை. உமது சகோதரங்களில் ஒன்றை நான் கூடிய கெதியில் இங்கு எடுப்பன். உம்முடைய தம்பி நன்றாகப் படிப்பன் என்கிறீர். அவனைக் கஷ்டம் காரணமாகப் பட்டணப் பாடசாலை யால் மறித்து ஊர்ப்பாடசாலையில் சேர்த்ததாகச் சொன்னீர். இனிக்கவலைப படாதையும். அவன் கொலசிப் பாஸ் பண்ணியதும் பட்டணப் பாடசாலையில் சேர்ப்பம். காசு கேட்பினை தான், உமக்காக நான் உயிரையும் கொடுப்பன்..."

அப்பொழுது அவனது தம்பி வாசீசன் அங்கு வந்தான். பட்டணப் பாடசாலைகள் பணம் கேட்டதால் அங்கு சேரமுடியாவிட்டாலும், ஊர்ப்பாடசாலையில் படித்துப் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரி யாகி இப்போது ஆசிரியராகக் கடமையாற்று கிறான். அவன் அடிக்கடி சொல்வான்; "அக்கா, புலமைப்பரிசில் பரீட்சையில் என்னுடன் படித்துச் சித்தி யடையாத காண்டீபன் காசு கொடுத்துப் பெரிய பாடசாலையில் படித்து டாக்டராகி விட்டான். நானும் அங்கு படித்திருந்தால் டாக்டராகி யிருப்பன்".

அவனைக் கண்டதும் அவளுக்குக் காமாட்சியைக் கொல்ல வேண்டும் போல இருந்தது. விரைவாக காமாட்சி படுத்திருந்து ரெலிபோன் பேசுமிடத்திற்கு வந்து, அவள் பேசிக்கொண்டிருந்த ரிசீவரைப் பறித்து தூரவீசினாள். அது உடைந்து சிதறியது. நிர்மலா திரும்பிப் பாராது நடந்து கொண்டிருந்தாள்.

"பாவத்திற்கு இரங்கி அந்தக் குடும்பம் இங்கு வந்து போகிறது. நீ சதி செய்து தான் நில்மலான்ரை திருமணத்தைக் குழப்பினனி என்று அவர்களுக்குத் தெரியும். இப்ப அந்தக் குடும்பம் இல்லாவிட்டால் நீ புழுத்துப்போவாய். உன்ரை மக்கள் அனுப்புகிற காசிலை வாழலாமென்று நினைக்காதை. காசுக்காக இங்கு வந்த பலர் கொள்ளையடித்துக் கொண்டு போனவை. உன்ரை வாயாலை கெடுத்தியெண்டால் நீ புழுத்துத் தான் சாவாய். மயூரனின் வார்த்தைகளில் சொல்வதானால் அவள் ஒரு **"தேவதை"** என்றார் அம்பலவாணர்.

**வலிகிழக்கில் தொழில் புரிவோர்**

| | | | |
|---|---|---|---|
| அரசசேவையாளர் | - 2427 | கூட்டுறவு | - 225 |
| விவசாயம் | - 8311 | மீன்பிடி | - 85 |
| தனியார்துறை | - 1572 | மேசன் | - 1229 |
| மரவேலை | - 695 | ஏனையவை | - 6373 |

நன்றி - திட்டமிடல் பிரிவு, பிரதேச செயலகம்.

# "வலி கிழக்கில் கூட்டுறவு" – ஒரு நோக்கு



மா. ஞானலிங்கம்
*ஆசிரியர்,*
*அச்சுவேலி மத்திய கல்லூரி*

"கூட்டுறவு என்ற சொல் புனிதமும் வாழ்வியலோடு இணைந்த வலிமையும் கொண்டது. உயிரிகளின் வாழ்வுடனும் வளர்ச்சியுடனும் கூட்டுறவுப் பண்புகள் இரண்டறக் கலந்துள்ளன. அந்த வகையில் மனிதன் தோன்றிய காலம் தொட்டு வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து இன்றைய உயர்நிலைக்கு மனித இனத்தை மேல்நிலைப்படுத்தி நிற்கின்றது. கூட்டுறவு "ஐக்கியம்" "ஒன்றுகூடி வாழ்தல்" "ஒன்றுபட்டு உழைத்தல்" எனப் பொருள்படும். ஒருவரால் ஆற்றுவதற்கு கடினமான செயலை பலர் ஒன்றுகூடி மிக இலகுவாகவும் சிக்கனமாகவும் செய்து முடித்தல் என்பதே உட்பொருள். ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் உழைப்பது என்பது கூட்டுறவின் அதியுன்னத இலட்சியம்.

## கூட்டுறவின் தோற்றம்:

கூட்டுறவு இயக்கத்தின் தந்தையாக இங்கிலாந்து தேசத்தின் "றொபேட் ஓவன்" (1771- 1858) போற்றப்படுகின்றார். றொபேட் ஓவனின் கூட்டுறவுச்சிந்தனையில் உள்ள உயர்ந்த கருத்துக்களை றொச்டேல் முன்னோடிகள் ஒழுங்கமைத்து வடிவமைத்து 1844ம் ஆண்டு கூட்டுறவுக் கொள்கையாக உலகுக்கு பிரகடனப்படுத்தினர். தடையற்ற அங்கத்துவம் ஜனநாயக நிர்வாகம் ஆண்- பெண் இருபாலார்க்கும் சமவுரிமை தரமான கலப்படமற்ற பொருள்களை விநியோகித்தல் சங்க விடயங்களில் இரகசியம் பேணாத பகிரங்கத்தன்மை உள்ளிட்ட 13 கொள்கை விதிகளைக் கொண்ட பிரகடனத்தின் ஊடாக கூட்டுறவு உலகின் பல்வேறு துறைகளிலும் பரந்து விரிந்துள்ளது.

இலங்கையில் 1906ம் ஆண்டு கூட்டு அம்சங்கள் பொருந்திய கடன் கொடுக்கும் கூட்டுறவு அமைப்பு தெல்தெனியாவில் உள்ள தும்பறை கிராமத்தில் முதலில் உருவாக்கப்பட்டு செயற்பட்டது. 1911ம் ஆண்டின் 7ம் இலக்க முதலாவது கூட்டுறவுச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் முதலாவது பதிவு செய்யப்பட்ட ஐக்கிய நாணய சங்கம 1912ம் ஆண்டு மாத்தறை மாவட்டத்தில் உள்ள வெல்லபடபத் கிராமத்தில் உருவாக்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலாவது ஐக்கிய நாணய சங்கம் 1916ம் ஆண்டு கரவெட்டியில் உருவாகி பதிவு செய்யப்பட்டது.

## யாழ் மாவட்டத்தில் கூட்டுறவு:

1911 இல் இருந்து 1940 வரையான காலப்பகுதி ஐக்கிய நாணய சங்கங்கள் காலம் எனக் கருதப்படும் அளவுக்கு ஐக்கிய நாணய சங்கங்கள் கிராமிய மட்டத்தில் செயற்பட்டு வந்தன. யாழ் மாவட்டத்தின் கூட்டுறவு அமைப்பின் தந்தை எனப் போற்றப்படும் பெரியார் திரு. வீ. வீரசிங்கம் அவர்களின் முயற்சியினால் யாழ் மாவட்டத்தில் உள்ள புகையிலை உற்பத்தியாளர்களை ஒன்றுதிரட்டி யாழ் மாவட்ட மலையாளப் புகையிலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 1933ல் உருவாக்கப்பட்டது. இதில் யாழ் மாவட்ட புகையிலை உற்பத்தியாளர்கள் அனைவரும் உறுப்புரிமை பெற்றிருந்ததோடு பிரதேச ரீதியாக இதன் கிளை அமைப்புக்களும் செயற்பட்டன. 1945ம் ஆண்டு இந்தியாவின் கேரளத்திற்கு யாழ்ப்பாண புகையிலை ஏற்றுமதி தடை செய்யப்படும் வரை இந்தச் சங்கம் சிறப்பான முறையில் சேவையாற்றியது.

யாழ் மாவட்ட விவசாயிகளின் முதலாவது பணப்பயிர்ச் செய்கையான மலையாளப் புகையிலைச் செய்கை ஸ்தம்பிதமடைந்ததைத் தொடர்ந்து சிகரெட் புகையிலைச் செய்கை பீடிப்புகையிலைச் செய்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உற்பத்தி விற்பனை முயற்சிகளும் கூட்டுறவு அமைப்புக்களின் வழிப்படுத்தலில் மேற்கொள்ளப்பட்டு வந்தன. கோப்பாய் நீர்வேலி அச்சுவேலி, புத்தூர், ஆவரங்கால், நவக்கிரி, உரும்பராய் ஊரெழுப் பகுதிகளில் புகையிலைச் செய்கை குறிப்பிடத்தக்களவு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. பிரதேச வாரியாக சிகரெட் பீடிப் புகையிலைகளை உலர்த்தும் போறணைகள் அமைக்கப்பட்டு புகையிலை பதப்படுத்தப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

## வலி கிழக்கில் கூட்டுறவு:

மலையாளப் புகையிலைச் செய்கை யாழ்ப்பாணத்தில் உயர்நிலை பெற்றிருந்த காலப்பகுதியில் கூட்டுறவு அமைப்புக்களின் செயற்பாடுகள் விவசாயிகளுக்கு சந்தைப்படுத்தல் வசதி வாய்ப்புக்களை உறுதி செய்ததோடு தளம்பல் நிலையில்லாத கணிசமான வருமானத்தை ஈட்டிக் கொடுத்தன. மலையாளப் புகையிலைச் செய்கை மேலோங்கியிருந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பிரதான கைத்தொழிலாக சுருட்டுக் கைத்தொழில் விளங்கியது. ஆயிரக்கணக்கானோர் சுருட்டுச் சுற்றும் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். குடாநாட்டில் வலிகாமம் பகுதியில் பல சுருட்டுத் தொழிற்சாலைகள் நிறுவன மயப்படுத்தப்பட்ட நிலையில் செயற்பட்டன. பெரும்பாலானவை தனியார் முதலாளிகளின் நிர்வாகத்தின் கீழ் இருந்தன.

1940ம் ஆண்டு காலப்பகுதியில் சுருட்டுக் கைத்தொழிலில் பல ஆயிரக்கணக்கானோர் ஈடுபட்டிருந்ததாக அறிக்கைகள் மூலம் அறியமுடிகிறது. இரண்டு வகையான சுருட்டுக்கள் தயாரிக்கப்பட்டு பெருமளவில் தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்தக் காலப்பகுதியில் "கோப்பாய் சுருட்டுத் தொழிலாளர் ஐக்கிய சங்கம்" நிறுவப்பட்டு 200க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் சுருட்டுச் சுற்றும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

## வலி கிழக்கு கூட்டுறவுப் பண்டகசாலைகளின் சமாஜம்

இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் உணவுப் பஞ்சம் உண்டான போது இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் மொத்த வியாபாரிகள் மூலமும் தனியார் வியாபாரிகளூடாவும் கூப்பன் முறை மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. 1942-1943ம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த இந்த நடைமுறை எதிர்பார்த்தளவுக்கு சிறப்பான முறையில் நடைபெறவில்லை. பல தவறுகள் நிகழ்ந்ததையடுத்து 1944ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை முழுவதும் கூட்டுறவுப் பண்டகசாலைகள் நிறுவப்பட்டன. கிராமிய மட்டத்தில் உணவுப் பொருள்களை விநியோகம் செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுப் பண்டகசாலைகள் எதிர்பார்த்த அளவுக்கு உணவுப் பங்கீட்டை மேற்கொண்டு வந்தன.

வலி கிழக்கு பிரிவில் கிராமிய மட்டத்தில் 60 இற்கு மேற்பட்ட நிலையங்களுடாக பங்கீட்டு உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வந்தன. கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் உணவுப் பொருள் விநியோகத்தை மேற்கொள்வதற்கு வசதியாக வலி கிழக்கு கூட்டுறவுப் பண்டகசாலைகளின் சமாஜம் ஆரம்பிக்கப்பட்டு 1944.09.25 ம் திகதி து 877ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது. பண்டகசாலைகளின் சமாஜத்துக்கான களஞ்சியம் நீர்வேலியில் நிறுவப்பட்டு அதனூடாக கூப்பன் கடைகளுக்கும் பண்டகசாலைகளுக்கும் பங்கீட்டு உணவுப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வந்தன. பண்டகசாலைகளின் சமாஜம் அச்சுவேலியைச் சேர்ந்த அதிபர் திரு. ச. வீரசிங்கம் தலைமையில் 9 பேர் கொண்ட நிர்வாகக் குழுவின் மேற்பார்வையின் கீழ் செயற்பட்டு வந்தது.

நீர்வேலிப் பகுதியில் உள்ள சமாஜக் களஞ்சியத்திலிருந்து வளலாய் இடைக்காடு உள்ளிட்ட வலி கிழக்கின் வட பகுதியில் உள்ள பண்டகசாலைகளுக்கும் தனியார் கூப்பன் கடைகளுக்கும் உணவு விநியோகம் செய்வதிலுள்ள சிரமங்களைக் கருத்திற் கொண்டு இரண்டாவது களஞ்சியம் ஆவரங்காலில் நிறுவப்பட்டது. 1955ம் ஆண்டு வலி கிழக்கு பிரதேசத்தில் 16 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் 28 பண்டகசாலைகளும் 20 தனியார் கூப்பன் கடைகளும் செயற்பட்டு வந்தன. களஞ்சியத்தில் கடமை புரிந்த முகாமையாளருக்கு 180 ரூபாவும் எழுதுவினைஞருக்கு 160 ரூபாவும் தொழிலாளர்களுக்கு 130 ரூபாவும் மாதாந்த ஊதியமாக வழங்கப்பட்டது.

## விவசாய விருத்தி விளைபொருள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்:

1940ம் ஆண்டு காலப்பகுதியில் யாழ் மாவடடத்தில் பொருளாதார நிலையில் ஏற்பட்ட மாற்றங்களினால் சமூக முன்னோடிகள் கூட்டுறவே கைகொடுக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு 06.03.1942ல் விவசாய கூட்டுறவாளர் சங்கத்தை ஸ்தாபித்தனர். இச்சங்கம் வலிகாமம் வடக்கு கிழக்கு பகுதியை உள்ளடக்கி சுன்னாகம் புகையிரத நிலையத்துக்கு அருகில் காரியாலயத்தையும் களஞ்சியத்தையும் கொண்டு செயற்படத் தொடங்கியது. மலையாளப் புகையிலைச் செய்கை முடிவடைந்து வெங்காயச் செய்கை மூலம் விவசாயிகள் கூடிய வருமானம் பெற்ற காலப்பகுதியாக விளங்கிய நிலையில் பெருமளவு வெங்காயத்தை கொள்வனவு செய்து புகையிரதம் மூலமும் லொறிகள் மூலமும் தென்னிலங்கைக்கு அனுப்பி விற்பனை செய்தது. இந்த வகையில் சங்கத்துக்கு கூடுதலான இலாபமும் கிடைத்தது. அறுபதுகளில் அரச ஊழியர்களுக்கும் இதையொத்த ஊதியமே வழங்கப்பட்டது.

வலி கிழக்கு பகுதியில் வெங்காயச் செய்கை மிகக் கூடிய விளைச்சலைக் கொடுத்தமையால் வலி கிழக்குக்கென புதிய சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. புத்தூரில் தனியான கட்டடத்தில் அதன் செயற்பாடுகள் நடைபெற்றன. 1948ம் ஆண்டில் வலி கிழக்கு விவசாய விருத்தி விளைபொருள் விற்பனை கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து பிரிந்து கோப்பாய் வடக்கில் தனியான சங்கமொன்று ஆரம்பிக்கப்பட்டது. 1949ம் ஆண்டு காலபோக வெங்காய விற்பனை நடவடிக்கைகளை சங்கம் மேற்கொண்டது. கோப்பாய் விவசாய விளைபொருள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் 13.11.1952ல் து 1055ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது. பங்கீட்டு அடிப்படையில் வெங்காயக் கொள்வனவு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு வந்தமையால் இடைக்காடு அச்சுவேலி, ஆவரங்கால், பத்தமேனி, உரும்பராய், ஊரெழு பகுதிகளில் தனித்தனியான சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வெங்காயம் மற்றும் விளைபொருள்களைச் சந்தைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயத்தை வெளிமாவட்டங்களுக்கு பாதுகாப்பாக எடுத்துச் செல்வதற்கு நாரினால் பின்னப்பட்ட கூடுகள் பயன்படுத்தப்பட்டன. வெங்காயக் கூடுகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இந்தியாவிலிருந்து வெங்காயக் கூடுகளை எடுத்து வருவதிலுள்ள சிரமங்கள் காரணமாக யாழ்ப்பாணத்தில் வெங்காயக் கூடுகளைத் தயாரிக்கும் செயற்பாடுகள் தொடங்கப்பட்டன. பனையோலை ஈர்க்கின் மூலம் தயாரிக்கப்பட்ட கூடுகள் நல்ல தரமானவையாக இருந்தன. கிராமங்கள் தோறும் குடிசைக் கைத்தொழிலாக வெங்காயக் கூடு பின்னப்பட்டது. கணிசமான வருமானமும் கிடைத்தது. வெங்காய செய்கையை அடுத்து உருளைக்கிழங்கு மிளகாய்ச் செய்கை என்பனவும் உறுப்பினர் நலனைக் கருத்திற் கொண்டு பிற்காலத்தில் சங்கத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

உணவு விநியோகத்தில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்கள் கூட்டுறவு அமைப்பு முறையில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்களினால் தனித்தனியாகவும் கிராம மட்டத்திலும் செயற்பட்டு வந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 1971ம் ஆண்டு வலி கிழக்கு வட பகுதி (அச்சுவேலி) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வலி கிழக்கு தென் பகுதி (நீர்வேலி) கூட்டுறவுச் சங்கம் எனவும் மறுசீரமைப்புச் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட நிலையில் செயற்பட ஆரம்பித்தன.

## வலி கிழக்கு தென்பகுதி (நீர்வேலி) பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்:

நீர்வேலி கந்தசுவாமி கோயில் முன்றலில் யாழ்ப்பாணம்- பருத்தித்துறை பிரதான வீதியில் தலைமைக்காரியாலயத்தைக் கொண்டு இயங்கி வருகின்றது. எமது பிரதேச செயலக பிரிவில் இருபாலை கோப்பாய் நீர்வேலி உரும்பராய் ஊரெழு பகுதிகளையும் வலி கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் உப அலுவலகத்தின் அச்செழு கிராமத்தையும் தனது சேவைப்பரப்பாகக் கொண்டு செயற்படுகின்றது. பலநோக்கு கூட்டுறவுச்சங்க ஒருங்கிணைப்புக்கு முந்தைய காலப்பகுதியில் தனித்தனியாக செயற்பட்ட கீழ்க்காணும் 18 பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களையும் உள்ளீர்ப்புச் செய்துள்ளது.

| | கூட்டுறவுச்சங்கத்தின்பெயர் | பதிவிலக்கம் | திகதி |
|---|---|---|---|
| 01 | நீர்வேலி தெற்கு ப.நோ.கூ சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 1058 | 08.12.1950 |
| 02 | நீர்வேலி வடக்கு ப.நோ.கூ சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 1433 | 02.04.1958 |
| 03 | அச்செழு ப.நோ.கூ சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 687 | 13.12.1943 |
| 04 | ஊரெழு ப.நோ.கூ சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 536 | 23.05.1943 |
| 05 | உரும்பராய் ப.நோ.கூ சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 1159 | 14.03.1952 |
| 06 | கோப்பாய் வடக்கு ப.நோ.கூ சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 1055 | 13.11.1950 |
| 07 | கோப்பாய் மத்திய ப.நோ.கூ சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 738 | 07.03.1949 |
| 08 | கோப்பாய் தெற்கு ப.நோ.கூ சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 1423 | 20.02.1958 |
| 09 | நீர்வேலி தெற்கு ஐக்கிய பண்டகசாலைச் சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 570 | 09.07.1943 |
| 10 | நீர்வேலி மத்திய ப.நோ.கூ சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 720 | 18.12.1943 |
| 11 | நீர்வேலி விக்கினேஸ்வரா ப.நோ.கூ சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 432 | 31.03.1943 |
| 12 | கோப்பாய் கண்ணகை ப.நோ.கூ சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 736 | 27.12.1943 |
| 13 | கோப்பாய் வடக்கு விநாயகர் ப.நோ.கூ சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 800 | 03.01.1944 |
| 14 | கோப்பாய் ஐக்கிய பண்டகசாலைச் சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 450 | 04.08.1942 |
| 15 | இருபாலை ஐக்கிய பண்டகசாலைச் சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 436 | 31.03.1943 |
| 16 | உரும்பராய் ஐக்கிய பண்டகசாலைச் சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 422 | 13.03.1943 |
| 17 | உரும்பராய் கிழக்கு ஐக்கிய பண்டகசாலைச் சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 817 | 07.01.1944 |
| 18 | உரும்பராய் கணேசா ஐக்கிய பண்டகசாலைச் சங்கம். (வரையறுக்கப்பட்டது) | J 859 | 15.04.194 |

1971ம் ஆண்டு பெப்ரவரி 22ம் திகதி J 1554 l பதிவிலக்கமாகக் கொண்டு தற்போது பதிவு செய்யப்பட்ட 16386 உறுப்பினர்களை பங்குதாரர்களாகக் கொண்டுள்ளது.

பங்குதாரர் விபரம்:

01 ரூபா – 10 ரூபா பங்குகள்: 4290 பேர்.
11 ரூபா – 99 ரூபா பங்குகள்: 3736 பேர்.
100 ரூபாவுக்கு மேற்பட்ட பங்குகள்: 8960 பேர்.

குறிப்பு:

பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் ஒரு ரூபா செலுத்தி உறுப்பினராக இணைந்து கொள்ள முடியும். பின்னர் 10 ரூபா செலுத்தியும் தற்போது 100 ரூபா செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

2007ம் ஆண்டு கணக்கறிக்கையின் படி உறுப்பினர்களின் பங்கு மூலதனமாக ரூபா 1408982.87 ஈட்டப்பட்டுள்ளது.

34 கிளைக்குழுக்களையும் 34800 நிரந்தர நுகர்ச்சியாளர்களையும் கொண்ட வியாபார நடவடிக்கைகள் மொத்த வியாபார நிலையம் – 01, இரும்பு விற்பனை நிலையம் – 01, எரிபொருள் விற்பனை நிலையம் – 01, கோப்சிற்றி 01, வாகனம்(லொறி) 03, இருசக்கர உழவு இயந்திரம் – 01, என்பனவற்றுடன் உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி ஆகிய இடங்களில் மூன்று கிராமிய வங்கிகளையும் கொண்டுள்ளது. கிராமிய வங்கிகள் ஊடாக வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது.

சங்கத்தின் உயர்மட்டப் பணியாளர்கள் என்ற வகையில் தற்போதைய பொது முகாமையாளராக திரு. வ.க. சிவலிங்கம் வர்த்தக முகாமையாளர் திரு. எஸ். கதிர்காமநாதன் கணக்காளர் திரு. ந. குணசேகரன் ஆகியோர் கடமையாற்றுகின்றனர். 7 பேர் கொண்ட இயக்குநர் சபையின் தலைவராக திரு. ந. சுந்தரலிங்கம் சேவையாற்றுகின்றார்.

பணியாளர்களாக கடமையாற்றும் 98 பேரில் நிரந்தர பணியாளர்கள் 70 பேர். ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவோர் 08 பேர் அமைய அடிப்படையில் பணிபுரிவோர் 20 பேர் அடங்குவர். 31 கிளை நிலையங்களில் 23 கிளை நிலையங்கள் சங்கத்திற்கு சொந்தமான கட்டடங்களில் செயற்படுகின்றன. மூன்று லொறிகளும் இரு சக்கர உழவு இயந்திரம் ஒன்றும் பயன்பாட்டிலுள்ள வாகனங்களாகும்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பெரியளவில் இழப்புக்களை எதிர்கொண்ட போதிலும் நடைமுறைச் சொத்து பெறுமதி ரூபா 205841381.71 நடைமுறைச்செல்மதி ரூபா 191612864.84 பணியாளர் பிணைவைப்பு ரூபா 3715500 இளைப்பாற்று நிதி ரூபா 4366012.26 வாழ்க்கைச் சான்றுறுதி வைப்பு ரூபா 599176 (2007ம் ஆண்டு கணக்கறிக்கையில் உள்ளபடி).

சங்கத்தின் சேவைப்பரப்பில் உள்ள மக்களுக்கு அத்தியாவசிய உணவு விநியோகம் பங்கீட்டு உணவு விநியோகம் உள்ளிட்ட சேவைகளை வழங்கி சிறந்த முறையில் சேவையாற்றி வருகின்றது

### வலி கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்:

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி இராஜ வீதியில் உள்ள தலைமைச் செயலகத்தில் ஆரம்ப காலத்திலிருந்து செயற்பட்ட போதிலும் 1995ம் ஆண்டு இடப்பெயர்வின் பின் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான சாலையில் ஆவரங்கால் புத்தூரில் சங்கத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. து 1556 ம் பதிவிலக்கத்தில் 1971.03.10ம் திகதி பதிவு செய்யப்பட்டது. வலி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வடக்கு பகுதியில் தனித்தனியாக செயற்பட்டுவந்தது

- ☆ அச்சு நகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ பத்தமேனி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ தம்பாலை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ இடைக்காடு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ வளலாய் கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ வளலாய் மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ புஸ்பவதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ தோப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ ஆவரங்கால் தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ ஆவரங்கால் கிழக்கு (புத்தகலட்டி) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ நவற்கிரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ புத்தூர் மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ சிறுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ சூரியோதயம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ நாவற்காடு ஐக்கிய பண்டகசாலை சங்கம்
- ☆ அச்சுவேலி தெற்கு ஐக்கிய பண்டகசாலை சங்கம்
- ☆ கதிரிப்பாய் ஐக்கிய பண்டகசாலை சங்கம்
- ☆ புத்தூர் கிழக்கு ஐக்கிய பண்டகசாலை சங்கம்
- ☆ அச்சுவேலி ஐக்கிய பண்டகசாலை சங்கம்
- ☆ அச்சு நகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ பத்தமேனி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ தம்பாலை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ இடைக்காடு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ வளலாய் கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ வளலாய் மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ புஸ்பவதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ தோப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ ஆவரங்கால் தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ ஆவரங்கால் கிழக்கு (புத்தகலட்டி) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ நவற்கிரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ புத்தூர் மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ சிறுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ☆ சூரியோதயம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

☆ நாவற்காடு ஐக்கிய பண்டகசாலை சங்கம்

☆ அச்சுவேலி தெற்கு ஐக்கிய பண்டகசாலை சங்கம்

☆ கதிரிப்பாய் ஐக்கிய பண்டகசாலை சங்கம்

☆ புத்தூர் கிழக்கு ஐக்கிய பண்டகசாலை சங்கம்

☆ அச்சுவேலி ஐக்கிய பண்டகசாலை சங்கம்

என்பனவற்றை உள்ளீர்ப்புச் செய்து ஒருங்கிணைந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமாக 21368 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. 01 -10 ரூபா பங்குகளை கொண்ட 2621 உறுப்பினர்களையும் 11 -99 ரூபா பங்குகளை கொண்ட 9237 உறுப்பினர்களையும் 100 ரூபாவுக்கு மேல் பங்குகளைக் கொண்ட 9510 உறுப்பினர்களையும் கொண்டு மொத்தமாக 21368 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. சங்கம் வலி கிழக்கு பிரதேச சபையில் புத்தூர் உப அலுவலர் பிரிவில் உள்ள அச்செழு கிராமம் நீங்கலாக புத்தூர்-அச்சுவேலி உப அலுவலகப் பகுதியை தொழிற்பரப்பாக கொண்டுள்ளது.

22 அந்தஸ்துப் பெற்ற கிளைகளையும் அந்தஸ்துப் பெறாத 6 கிளைகளையும் புத்தூர் பல் பொருள் விற்பனை நிலையம் மருந்தகம் அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையம் புத்தூர் எரிபொருள் நிரப்பு நிலையம் தொலைத் தொடர்பகம் சுவையகம் இரும்பு விற்பனை நிலையம் விவசாய பொருள் விற்பனை நிலையம் அச்சுவேலி கோப்சிற்றி புத்தூர் கோப்சிற்றி ஆகிய 11 விற்பனை நிலையங்கள் அடங்கலாக 38ற்கு மேற்பட்ட வியாபார நிலையங்களையும் கிராமிய வங்கிச் சேவை போட்டோப்பிரதி சேவை கதிரை வாடகைச் சேவை பிரத்தியேக சேவைகள் என்பவற்றின் மூலம் உறுப்பினர்களக்கும் பாவனையாளர்களுக்கும் பல்வேறு விதங்களில் சேவையாற்றி வருகின்றது.

பதிவு செய்யப்பட்ட 35615 நுகர்ச்சியாளர்களுக்கு பங்கீட்டு உணவுப் பொருள் விநியோகம் நிவாரண உலர் உணவுப் பொருள் விநியோகம் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன. சங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 140 ஆக இருந்த போதிலும் 98 நிரந்தர பணியாளர்கள் சேவையில் உள்ளனர். ஒன்பது பேர் கொண்ட நெறியாள்கைக் குழுவின் தலைவராக கடந்த 10 வருடங்களாக திரு. க. பேரின்பநாயகமும் பொது முகாமையாளர் திரு. த. கவீந்திரதாஸ் வர்த்தக முகாமையாளர் திரு. மு. ஸ்ரீகுமாரன் கணக்காளர் திரு. இ. தயாநிதி உள்ளகக் கணக்காய்வாளர் திரு. க. கிரிவேல் செயலாளர் திரு. பொ. பாலகிருஸ்ணன் உள்ளிட்ட உயர் நிலைப் பணியாளர்கள் சேவையாற்றுகின்றனர். நடைமுறைச் சொத்தாக ரூபா 113037479.73 வும் நடைமுறைச் செல்மதியாக ரூபா 90980725.70 ம் பிணைவைப்பு பணமாக 6717150 ரூபாவும் இளைப்பாற்று நிதியாக 3540054.13 ரூபாவும் வாழ்க்கைத் தள்ளுபடி வைப்பாக 733208.34 ரூபாவும் கணக்கறிக்கையில் காட்டப்பட்டுள்ளது. நான்கு லொறிகளும் ஒரு இரு சக்கர வாகனமுமாக ஐந்து வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 22 நுகர்ச்சிக் கிளைகளில் 21 கிளைகள் சொந்த கட்டடங்களில் செயற்படுகின்றன.

காலத்துக்குக் காலம் யுத்த நடவடிக்கைகளினால் பெருமளவு பாதிப்புக்குள்ளாகி பெரும் பொருளிழப்புக்களை சந்தித்துள்ள போதிலும் யாழ் மாவட்ட பணியாளர்களுக்கான கொடுப்பனவுகளை உரிய காலப்பகுதிகளில் வழங்கி பணியாளர்களின் நலன் நோக்கச் செயற்பாடுகளில் கூட்டுறவு அமைப்பு முறைக்கு ஏற்ப முழுமையாகச் செயற்பட்டு யாழ் மாவட்டத்தில் முதலாவது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமாக விளங்குகின்றது.

## சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது):
## THRIFT AND CREDIT CO-OPERATIVE SOCIETY (LTD):

கூட்டுறவு அமைப்பின் தோற்றமே சிக்கனம் சேமிப்பு கடனுதவி என்ற வகையில் அறிமுகமாவதை சர்வதேச ரீதியிலும் இலங்கை சார்ந்த நிலையிலும் கண்டுணர முடிகின்றது. யாழ் மாவட்டத்தில் வட பகுதி ஐக்கிய மேற் சபை செயற்பட்டு வந்த காலப்பகுதியில் கூட்டுறவு மாகாண வங்கி அமைக்கப்பட்டு அதன் மூலம் ஐக்கிய நாணய சங்கங்கள் தமது நிதித் தேவையைப் பூர்த்தி செய்து வந்தன. 1972ம் ஆண்டு அரசு இவ்வங்கியை மக்கள் வங்கிக்கு அரசுடமையாக்கிய பின் ஐக்கிய நாணய சங்கங்கள் கவனிப்பாரற்ற நிலைக்குச் சென்றன. வங்கிகளும் இந்த அமைப்புக்களுக்கு கடன் வழங்க மறுத்தன. இந்த வகையில் ஐக்கிய நாணய சங்கங்களின் செயற்பாடுகள் உறங்கு நிலைக்குச் சென்றன.

1980ம் ஆண்டு காலப் பகுதியில் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் யாழ் மாவட்டத்தில் மிகவும் சுருங்கிய நிலையில் காணப்பட்டன. அக்காலத்திலிருந்த அனுபவமும் ஆற்றலும் மிக்க கூட்டுறவாளர்களின் முயற்சியினால் 1982ம் ஆண்டு யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் உருவாக்கப்பட்டது. அதனுடன் இணைந்த நிலையில் கிராம மட்டத்தில் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பான முறையில் செயலாற்றி வருகின்றன. யாழ் மாவட்டத்தில் செயற்படும் 524 ற்கும் மேற்பட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களில் எமது பிரதேச செயலர் பிரிவில் ஆகக்கூடியளவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. சமாஜத்தில் பதிவு செய்த நிலையில் 66 சங்கங்களும் கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமல் 16 அமைப்புக்களும் உள்ளன.

*வலி கிழக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் (ஒரே பார்வையில்).*

குறிப்பு:

சமாஜத்தில் பதிவு செய்யப்படாமல் தனிப்பட்ட முறையில் வங்கிச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிலையிலும் ஒருசில அமைப்புக்கள் எமது பிரதேச செயலக பிரிவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அங்கத்தவர்கள் சாதாரணக்கடன் சுயமுயற்சிக்கடன் விருத்தக்கடன் விவசாயக்கடன் வீடமைப்புக்கடன் வெளிநாட்டுக்கடன் உயர்கல்விக்கடன் விதவைகள் கடன் மிக வறிய மக்கள் கடன் குறுங்காலக்கடன் விவசாயக்கடன் நீர் இறைக்கும் இயந்திரக்கடன் இளைஞர் கடன் வியாபாரக்கடன் ஊழியர் கடன் அபிவிருத்திக்கடன் சுயதொழிற்கடன் வாகனக்கடன் விசேட ஊக்குவிப்புக்கடன் உற்பத்தி முயற்சிக்கடன் தேசிய நம்பிக்கை நிதியக்கடன் என 22 வகையான கடனுதவிகளைப் பெற்றுக் கொள்ளும் வசதிகள் உள்ளன. தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு கடன் திட்டங்கள் சுருக்கப்பட்டு சாதாரணக்கடன் பொதுக்கடன் பாரிய கூட்டுறவுச் சங்கங்களின் வியாபாரக்கடன் ஆகிய கடன் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

| தொ. இல. | சங்கங்களின் பெயர் | சேர்ந்த திகதி | பதிவுத் திகதி | பதிவு எண் | சமாச க/கு இலக்கம் |
|---|---|---|---|---|---|
| 01 | நீர்வேலி ஸ்ரீ முருகன் | 01/12/81 | 22/12/58 | J/1456 | 18/10/01 |
| 02 | நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணியா | 02/05/82 | 15/10/51 | J/1120 | 31/10/02 |
| 03 | நீர்வேலி பசுபதி | 02/05/82 | 31/12/52 | J/1203 | 35/10/03 |
| 04 | வலி கிழக்கு(வ.ப) ப.நோ.கூ.சங்க ஊழியர் | 27/02/83 | 03/01/83 | J/1692 | 51/10/04 |
| 05 | வலி கிழக்கு (தெ.ப) ப.நோ.கூ.சங்க ஊழியர் | 24/11/82 | 03/01/83 | J/1695 | 55/10/05 |
| 06 | பத்தைமேனி பெண்கள் | 24/03/83 | 07/02/83 | J/1701 | 60/10/06 |
| 07 | வலி கிழக்கு (வ.ப) தெங்கு ப.பொ. ஊழியர் | 04/04/83 | 07/02/83 | J/1697 | 68/10/07 |
| 08 | உரும்பிராய் கற்பக விநாயகர் | 28/05/82 | 13/05/83 | J/1722 | 72/10/08 |
| 09 | நீர்வேலி துர்க்கா | 31/05/84 | 09/08/83 | J/1731 | 87/10/09 |
| 10 | வலி கிழக்கு (தெ.ப) தெ.ப.பொ.ஊழியர் | 11/08/83 | 03/01/83 | J/1695 | 94/10/10 |
| 11 | நீர்வேலி இலக்குமி மாதர் | 09/04/85 | 04/01/85 | J/1757 | 105/10/11 |
| 12 | தம்பா மகளிர் | 25/11/86 | 12/09/86 | J/1789 | 123/10/12 |
| 13 | நீர்வேலி வடக்கு மகளிர் | 29/11/86 | 13/10/86 | J/1804 | 124/10/13 |
| 14 | கதிரிப்பாய் சுப்பிரமணியர் | 03/11/86 | 30/12/86 | J/1886 | 128/10/14 |
| 15 | இடைக்காடு சிவசக்தி | 30/10/86 | 18/09/86 | J/1788 | 129/10/15 |
| 16 | நவக்கிரி திருவள்ளுவர் | 03/11/86 | 18/09/86 | J/1790 | 130/10/16 |
| 17 | புத்தூர் மேற்கு கௌரி மாதர் | 28/11/86 | 30/09/86 | J/1798 | 133/10/17 |
| 18 | நாவற்காடு காட்டுமலைக் கந்தன் | 31/10/86 | 13/10/86 | J/1805 | 134/10/18 |
| 19 | தோப்பு ஸ்ரீ விநாயகர் | 30/10/86 | 30/09/86 | J/1797 | 140/10/19 |
| 20 | அச்செழு திருத்தணிகை | 30/10/86 | 03/10/86 | J/1802 | 142/10/20 |
| 21 | புத்தூர் குமரகுருபரன் | 30/10/86 | 24/09/86 | J/1806 | 144/10/21 |
| 22 | ஆவரங்கால் பர்வதபத்தினி | 03/12/86 | 03/10/86 | J/1790 | 145/10/22 |
| 23 | ஆவரங்கால் மந்தி சிவகாமி | 30/09/86 | 03/10/86 | J/1801 | 146/10/23 |
| 24 | புத்தூர் மேற்கு வளர்மதி | 30/09/86 | 16/10/86 | J/1807 | 147/10/24 |
| 25 | சிறுப்பிட்டி கலைமகள் | 18/05/87 | 18/02/87 | J/1978 | 186/10/25 |
| 26 | சிற்பபிட்டி தெற்கு உதயதாரகை | 16/03/87 | 20/01/87 | J/1962 | 233/10/26 |
| 27 | சிறுப்பிட்டி ஸ்ரீ ஞானவைரவர் | 13/03/87 | 03/03/51 | J/1078 | 259/10/28 |
| 28 | சிறுப்பிட்டி சி.வை தாமோதரம்பிள்ளை | 17/03/87 | 03/10/86 | J/1800 | 263/10/29 |
| 29 | இருபாலை கலைமணி | 22/03/87 | 20/01/87 | J/1947 | 268/10/30 |
| 30 | புத்தூர் மேற்கு கலைமதி | 30/03/87 | 09/04/87 | J/1994 | 275/10/31 |
| 31 | ஆவரங்கால் தெற்கு விவேகானந்தா | 30/03/87 | 16/03/87 | J/1986 | 276/10/32 |
| 32 | கோப்பாய் சுருட்டுத் தொழிலாளர் | 01/04/87 | 16/07/46 | J/937 | 239/10/33 |
| 33 | நீர்வேலி வடக்கு விநாயகர் | 10/07/87 | 21/10/86 | J/1947 | 289/10/34 |
| 34 | ஊரெழு சங்கிலியன் | 18/02/87 | 20/01/87 | J/1945 | 311/10/35 |
| 35 | உரும்பிராய் தெற்கு | - | 16/03/87 | J/1988 | 312/10/36 |
| 36 | வாதரவத்தை திலீபன் | 24/08/87 | 24/04/89 | J/2047 | 316/10/37 |
| 37 | தென்கோவையூர் உதயதாரகை | 15/07/87 | 03/01/87 | J/1687 | 334/10/38 |
| 38 | கோப்பாய் கண்ணகை அம்பாள் மாதர் | 20/07/87 | 04/04/87 | J/1998 | 338/10/39 |
| 39 | வளலாய் மேற்கு விநாயகர் | 25/06/88 | 11/05/88 | J/2027 | 360/10/40 |
| 40 | வளலாய் கிழக்கு கலைக்கதிர் | 22/06/88 | 08/06/88 | J/2030 | 365/1041 |
| 41 | ஆவரங்கால் சர்வோதயா | 15/08/88 | 30/06/88 | J/2033 | 374/10/42 |
| 42 | வடகோவை சரஸ்வதி | 21/12/88 | 08/06/88 | J/2031 | 379/10/43 |
| 43 | சிறுப்பிட்டி ஜனசக்தி | 01/12/83 | 14/10/88 | J/2041 | 380/10/45 |
| 44 | வளலாய் கிழக்கு கலைவாணி | 05/05/89 | 11/05/88 | J/2025 | 385/10/46 |
| 45 | உரும்பிராய் கிழக்கு செண்பகக்கல் | 30/09/89 | 28/08/89 | J/2056 | 392/10/47 |
| 46 | நீர்வேலி காமாட்சி அம்பாள் | 14/12/89 | 16/05/39 | J/217 | 399/10/48 |
| 47 | இருபாலை பாரதி | 13/06/90 | 25/05/90 | J/2085 | 413/10/49 |
| 48 | அச்சுவேலி ஸ்ரீ விக்கினேஸ்வரா | 25/09/90 | 11/04/90 | J/2082 | 414/10/50 |
| 49 | நீர்வேலி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் | 26/03/91 | 08/03/91 | J/2091 | 431/10/51 |
| 50 | உரும்பிராய் சுபீட்ச | 27/03/91 | 04/03/91 | J/2088 | 432/10/52 |
| 51 | உரும்பிராய் கிழக்கு அம்பாள் | 08/05/91 | 08/04/91 | J/2096 | 433/10/53 |

| தொ. இல. | சங்கங்களின் பெயர் | சேர்ந்த திகதி | பதிவுத் திகதி | பதிவு எண் | சமாச க/கு இலக்கம் |
|---|---|---|---|---|---|
| 52 | அச்சுவேலி கலாநிதி | 20/05/91 | 07/05/91 | J/2090 | 435/10/54 |
| 53 | ஆவரங்கால் மணற்பகுதி | 10/08/91 | 03/01/83 | J/1696 | 445/10/55 |
| 54 | சிறுப்பிட்டி மேற்கு | 03/10/91 | 30/01/36 | J/74 | 451/10/56 |
| 55 | தோப்பு மாரியம்மன் | 12/12/91 | 24/09/91 | J/2110 | 455/10/57 |
| 56 | அச்சுவேலி நாவலர் | 28/01/92 | 07/01/38 | J/145 | 460/10/58 |
| 57 | அச்சுவேலி வடக்கு கதிரொளி | 06/05/92 | 03/01/82 | J/1683 | 465/10/59 |
| 58 | உரும்பிராய் வடக்கு இலக்குமி | 20/05/92 | 01/04/92 | J/2134 | 466/10/60 |
| 59 | புத்தூர் மகாத்மா காந்தி | - | 29/11/91 | J/2115 | 479/10/61 |
| 60 | ஆவரங்கால் கிழக்கு லிங்கன் | 02/02/93 | 25/01/93 | J/2141 | 480/10/62 |
| 61 | ஊரெழு பாலமுருகன் | - | 02/08/93 | J/2146 | 484/10/63 |
| 62 | உரும்பிராய் மேற்கு திருக்குமரன் | 29/12/93 | 13/12/93 | J/2157 | 487/10/64 |
| 63 | புதுவை வடக்கு மகளிர் | 29/06/94 | 04/11/93 | J/2151 | 491/10/65 |
| 64 | புதுவை சொக்கத்திடல் | 08/09/94 | 20/07/94 | யா/வ/கி/க./10 | 495/10/66 |
| 65 | அச்சுவேலி ஸ்ரீ முருகன் | 17/09/94 | 18/07/94 | யா/வ/கி/க./07 | 496/10/67 |
| 66 | புத்தூர் கிழக்கு அறிவொளி | 04/10/94 | 21/06/94 | யா/வ/கி/க./02 | 498/10/68 |
| 67 | பத்தைமேனி அன்னை இந்திராகாந்தி | 22/11/94 | 15/07/94 | யா/வ/கி/க./02 | 499/10/69 |
| 68 | அச்சு.வன்செயலால் பாதிக்கப்பட்டோர் கொத்த. | 24/01/98 | 13/07/94 | யா/வ/கி/க./03 | 510/10/70 |
| | ***கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்படாத சங்கங்கள்*** | | | | |
| 01 | தோப்பு வளர்மதி | NM/10/01 | | | |
| 02 | தோப்பு கலைமகள் | NM/10/02 | | | |
| 03 | பத்தைமேனி கணேசா | NM/10/03 | | | |
| 04 | தமிழாலயம் | NM/10/04 | | | |
| 05 | பூலசிட்டி வளர்மதி | NM/10/05 | | | |
| 06 | விநோபாஜி | NM/10/06 | | | |
| 07 | சாந்தமரியாள் | NM/10/07 | | | |
| 08 | ஆவரங்கால் கிழக்கு கலையகம் | NM/10/08 | | | |
| 09 | கோப்பாய் பிராந்திய சபை | NM/10/09 | | | |
| 10 | புத்தூர் கலைவாணி | NM/10/10 | | | |
| 11 | அச்சுவேலி கலாஜோதி | NM/10/11 | | | |
| 12 | தனிநாயகம் அடிகளார் | NM/10/12 | | | |
| 13 | புத்தூர் மதி | NM/10/13 | | | |
| 14 | நீர்வேலி மேற்கு | NM/10/14 | | | |
| 15 | கதிரிப்பாய் முரசொலி | NM/10/15 | | | |
| 16 | கோப். வன்செயலால் பாதிக்கப்பட்டோர் கொத். | NM/10/16 | | | |

வலி கிழக்கு பிரதேச சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் வெளிக்கள உத்தியோகத்தராக திருமதி உஷா தங்கேஸ்வரன் கடமையாற்றுகின்றார். ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் மிகவும் சீராக செயற்பட்டு வந்த சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் அண்மைக்கால யுத்த சூழ்நிலை இடப்பெயர்வுகள் தொழிற்றுறைப் பாதிப்புக்கள் என்பவற்றினால் எதிர்பாராத தடங்கல்களுக்கு உள்ளாகியிருந்த போதிலும் கடன் தொகையை உரிய காலப் பகுதியில் திருப்பிச் செலுத்தும் உறுப்பினர்கள் தொடர்ந்தும் கடன் வசதிகளைப் பெற்று தமது குடும்ப வாழ்வாதாரச் செயற்பாடுகளை நிறைவு செய்து வருகின்றனர்

## பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்.
## PALM DEVELOPMENT CO-OPERATIVE SOCIETIES.

1971ம் ஆண்டு நவம்பர் மாதம் ஐக்கிய முன்னணி அரசின் நிதியமைச்சர் என். எம். பெரேரா அவர்களின் வரவு செலவுத் திட்டத்தில் வட பகுதியில் உள்ள சீவல் தொழிலாளர்களுக்கு புதிய ஒரு செய்தி தெரிவிக்கப்பட்டது. "வட பகுதியில் மரவரி முறை இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக கூட்டுறவுத் தவறணை முறை அமுல் செய்யப்படும்" என்பதே அச்செய்தி. இவ்வறிவித்தலின் பிரகாரம் 1972ம் ஆண்டு மே தினத்தன்று அப்போதைய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராகவிருந்த திரு. கே. சண்முகலிங்கம் அவர்கள் கூட்டுறவுத் தவறணை முறையை உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்த நாள் ஏழைத்தொழிலாளர்கள் வாழ்வில் ஒளியேற்றிய நாளாக நினைவிற் கொள்ளப்படுகின்றது. 1972 மே 01 இலிருந்து கடந்த 45 வருடங்களுக்கு மேலாக இருந்து வந்த சுரண்டல் மரவரி அமைப்பு முறை இல்லாதொழிக்கப்பட்டது. மரவரி முறையில் பல தொழிலாளர்களின் கூலியைக் குறைத்து கொழுத்த லாபம் ஈட்டியவர்களுக்கும் சீவல் தொழிலாளர்களின் வீடுகளுக்குச் சென்று பல வசதிகளுடன் கள் அருந்தியவர்களின் செயற்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அத்துடன் சீவல் தொழிலாளர்களின் வாழ்வும் வளமும் நிறுவனப்படுத்தப்பட்ட முறையில் மறுமலர்ச்சி அடைந்தது.

1972ம் ஆண்டு முதல் செயற்பட்டு வந்த கள் உற்பத்தி விற்பனைச் சங்கம் என்பது மாற்றி அமைக்கப்பட்டு 1978ம் ஆண்டு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் என மறுசீரமைப்புச் செய்யப்பட்டது. 1993 முதல் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்த அமைப்பு முறை ஆரம்பிப்பதற்கு செனட்டர் திரு. ஜி. நல்லையா பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு. க. நடராசா திரு. சு. நடேசு (சங்கானை) திரு. எம். சி. சுப்பிரமணியம் ஆகியோர் உள்ளிட்ட சமூகப் பிரமுகர்களின் அயராத முயற்சியும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம் அவர்களின் ஒத்துழைப்பும் நிலைக்களனாக நின்றுதவின.

எமது வலி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இரண்டு சங்கங்கள் செயற்படுகின்றன.

## அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். (வரையறுக்கப்பட்டது)
## ATCHUVELY PALM DEVELOPMENT CO-OPERATIVE SOCIETY. (LTD)

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 1972ம் ஆண்டு பெப்ரவரி 29ம் திகதி முதல் J/1554 ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டு சிறப்பான முறையில் செயற்பட்டு வருகின்றது.

கள் உற்பத்தி விற்பனை பாணி உற்பத்தி விற்பனை பனை வெல்லம் உற்பத்தி விற்பனை பனஞ்சீனி உற்பத்தி விற்பனை கல்லாக்காரம் உற்பத்தி விற்பனை கருப்பநீர் உற்பத்தி விற்பனை போத்தல் கள் உற்பத்தி விற்பனை பனை தென்னை சார் உற்பத்திப் பொருள் விற்பனை பாடசாலை உபகரணங்கள் விற்பனை போட்டோஸ்ரட் சேவை கிராமிய வங்கியின் செயற்பாடுகள் என சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் நுகர்ச்சியாளர்களுக்கும் நலன் தரும் விதத்தில் தொழிற்படுகின்றது. எமது

பிரதேச செயலக பிரிவின் வடக்கு பக்கமாக உள்ள 17 கிராம அலுவலக பிரிவுகள் இதன் நிர்வாக பரப்பெல்லைகளாக அமைந்துள்ளது

சங்கத்தின் பொது முகாமையாளர் திரு. பொ. செல்வராசா திரு. கி. வரதராசன் உற்பத்தி முகாமையாளர் திரு. ஆ. சந்திரகாந்தன் கிராமிய வங்கி முகாமையாளர் மேற்பார்வையாளர் திரு. க. சந்திரலிங்கம் ஆகிய உயர்நிலை உத்தியோகத்தர்களுடன் கூடிய 29 பணியாளர்களைக் கொண்ட நிர்வாகக்குழு திரு. செ. காந்தராசா தலைமையில் செயற்பட்டு வருகின்றது.

ஆரம்ப காலத்தில் 14 கிளை நிலையங்கள் 05 தொழிற்சாலைகள் எனப் பரந்தளவில் முழுமையாக செயற்பட்ட போதிலும் அண்மைக்கால அசாதாரண சூழ்நிலைகளினால் பல்வேறு விதமான சொத்துக்கள் சேதங்களுக்கு உள்ளாகியதையடுத்து தற்போது 10 கிளை நிலையங்கள் 02 தொழிற்சாலைகள் என மட்டுப்படுத்தப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

சங்கத்தில் உறுப்புரிமையுள்ள 1657 பேரில் 238 மகளிரும் 1421 ஆண்களும் அடங்குவர். 856 உறுப்பினர்கள் வாக்களிப்பதற்கு தகுதியுள்ளோராகவும் அதற்கான பங்குரிமை கொண்டவர்களாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. சங்கத்தின் 2007ம் ஆண்டறிக்கையின் படி சொத்துடமைகளின் பெறுமதி ரூபா 36962801.69

அங்கத்தவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு விபத்து நலத்திட்டம் ஓய்வூதியத்திட்டம் கட்டாய சேமஉதவு தொகை வழங்குதல் காப்புறுதித் திட்டத்தில் இணைதல் விவசாய ஓய்வூதிய நலத் திட்டத்தில் அங்கத்தவராக இணைதல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சமூக நலத்திட்டங்கள் என்ற வகையில் பாலர் முன்பள்ளிகளை நடாத்தல் (13 பாலர் முன் பள்ளிகள்) முன்பள்ளி மாணவர்களுக்கு வருடத்தொடக்கத்தில் சீருடை வழங்குதல் பாடசாலை உபகரணங்கள் வழங்குதல் பாடசாலைகள் பொது நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவுதொகை வழங்குதல் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்குதல் இலவச சித்த மருத்துவ சேவை வழங்குதல் போன்ற செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் ரூபா 58 லட்சம் வரையான சொத்துடைமைகளை முற்றாக இழந்திருப்பதோடு மூன்று தொழிற்சாலைகளின் செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. மீளக்குடியேறிய பின் புத்தூர் மேற்கு கிந்திட்டியில் புவுனு நிறுவனத்தின் பங்களிப்புடன் 19 லட்சம் ரூபா செலவில் இயந்திரங்கள் இணைக்கப்பட்டு கள் போத்தலில் அடைக்கும் தொழிற்சாலை செயற்பட்டு வருகின்றது. மிகச்சிறப்பாக கடந்த காலங்களில் செயற்பட்ட வல்லை பனஞ்சீனி வெல்ல உற்பத்தித் தொழிற்சாலை திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது.

## கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். (வரைவுள்ளது)
## KOPAY PALM DEVELOPMENT CO-OPERATIVE SOCIETY. (LTD)

கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் து 1573ம் பதிவிலக்கத்தில் 1972.02.18ம் திகதி பதிவு செய்யப்பட்டது. யாழ்- பருத்தித்துறை பிரதான வீதியில் கோப்பாய் தெற்கில் தலைமைச் செயலகத்தைக் கொண்டு செயற்படுகின்றது. 1263 தொழிலாளர்கள் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். ஆரம்பத்தில் 18 கிளை நிலையங்களைக் கொண்டு தொழிற்பட்ட போதிலும் தற்போது 10 விற்பனை நிலையங்கள் செயற்படுகின்றன. இவற்றில் 8 சொந்த கட்டடத்தில் அமைந்துள்ளன. சொத்து மூலதனமாக 18549783 ரூபாவைக் கொண்டுள்ளது.

கள் உற்பத்தி விற்பனை பாணி உற்பத்தி விற்பனை பனை வெல்ல உற்பத்தி விற்பனை பனஞ்சீனி உற்பத்தி விற்பனை கல்லாக்காரம் உற்பத்தி விற்பனை கருப்பநீர் உற்பத்தி விற்பனை போத்தல் கள் உற்பத்தி விற்பனை பனை வெல்லம் சார்ந்த உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல் கிராமிய வங்கிச் செயற்பாடு என்ற வகையில் செயலாற்றி வருகின்றது. 9 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகக் குழு திரு. சி. மகேந்திரராசா தலைமையில் பொது முகாமையாளர் திரு. கி. கிருஸ்ணராஜா உற்பத்தி முகாமையாளர் திரு. மு. அருமைத்துரை கணக்காளர் திருமதி அமலராணி லிங்கேஸ்வரன் மேற்பார்வையாளர் திரு. பொ. டொமினிக் ஆகிய 26 பேர் பணிபுரிந்துள்ளனர்.

அங்கத்தவர்களுக்கான விபத்து நலத் திட்டம் ஓய்வூதியத் திட்டம் சங்க மட்டத்தில் ஓய்வூதியத் திட்டம் சமாஜ மட்டத்தில் ஓய்வூதியத் திட்டம் விவசாயத் திணைக்கள மட்டத்தில் சேமிப்புத் திட்டங்கள் காப்புறுதித் திட்டங்கள் போன்றவற்றையும் சமூக நலத் திட்டங்களாக ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் உள்ளிட்ட பல்வேறு செயற்றிட்டங்கள் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு சமமான நிலையில் மேற்கொள்ளப்படுவதுடன் உறுப்பினர்களின் பெறுமான வசதியைக் கருத்தில் கொண்டு இலவச சித்த மருத்துவ சேவையையும் வழங்கி வருகின்றது.

கடந்த கால யுத்த சூழ்நிலையிலும் பல்வேறு நெருக்கடி நிலையிலும் சங்கம் தனது பணிகளை உயர்நிலையில் மேற்கொண்டு வருகின்ற போதிலும் தலைமையகத்துக்கான புதிய கட்டடம் மற்றும் நவீன மயப்படுத்தப்பட்ட அம்சங்களை உள்வாங்கி மென்மேலும் உயர வேண்டும்.

## வலி கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்.(வரைவுள்ளது). VALI-EAST CO-OP PLANTAINS SALES SOCIETY.(LTD).

வலி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வாழைச் செய்கை பெருமளவில் நடைபெறும் நீர்வேலி சிறுப்பிட்டி அச்சுவேலி புத்தூர் அச்செழு பகுதி விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு வலி கிழக்கு ஐக்கிய வாழைக்குலைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 1951-01-31ம் திகதி து 1073 என்ற பதிவிலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்வதற்கு சில வருடங்களுக்கு முன்னர் 1947ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து சங்கத்தின் செயற்பாடுகள் நடைபெற்று வந்த போதிலும் பாராளுமன்ற உறுப்பினர் கோப்பாய் கோமான் திரு. கு. வன்னியசிங்கம் அவர்களின் அயராத முயற்சியினால் 1951ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு நிறுவனமயப்படுத்தப்பட்டது. தற்போது 338 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். யாழ்ப்பாணம்- பருத்தித்துறை வீதியில் நீர்வேலி வாய்க்கால் தரவை பிள்ளையார் ஆலயத்தின் அருகில் சங்கத்துக்கு சொந்தமான கட்டடத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

யாழ் மாவட்டத்திற்கான தரை வழிப்போக்குவரத்து சீராக இருந்த காலப்பகுதியில் உறுப்பினர்களின் வாழைத்தோட்டங்களுக்கு நேரில் சென்று வாழைக்குலைகளைச் சேகரித்து கொழும்பு ரிப்போரி கிருலப்பனை பகுதிகளில் உள்ள மக்கள் வியாபார நிலையங்களுக்கும் திருகோணமலை மட்டக்களப்பு மாவட்டங்களுக்கும் ஏற்றிச் சென்று விற்பனை செய்ததோடு வாழைக்குலைகளை ஏற்றிச் சென்ற லொறிகள் யாழ்ப்பாணம் திரும்பி வரும் போது உரம் கிருமிநாசினி வகைகளையும் வன்னியிலிருந்து எரு தவிடு போன்ற பொருட்களையும் ஏற்றி வந்து விற்பனை செய்தனர். இந்த வகையில் கணிசமான வருவாயை சங்கம் ஈட்டி வந்தது. யாழ் மாவட்டத்தில் ஏறத்தாழ 6000 ஏக்கர் பரப்பளவில் வாழைச் செய்கை நடைபெறுகின்றது. தரமான

வாழைக்குலைகளை உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம் மற்றும் யாழ் மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் வாழைச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு கருத்தரங்குகளை நடாத்துதல் வாழைச் செய்கை தொடர்பான விடயங்களைக் கொண்ட துண்டுப் பிரசுரங்கள் கையேடுகளை இலவசமாக வழங்குதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆரம்பம் முதல் சங்கத்தின் தலைவராகவும் முகாமையாளராகவும் செயற்பட்ட சிறுப்பிட்டி திரு த.காசிநாதர் சங்க ஆரம்ப வளர்ச்சியில் பணிசமான பங்காற்றினார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சங்கத்தின் தற்போதைய தலைவராக திரு. எஸ். சுந்தரலிங்கமும் செயலாளராக திரு. வே. வி. இராசரத்தினமும் முகாமையாளராக திரு. ஆ. லோகரத்தினமும் கடமையாற்றி வருகின்றனர். சங்கத்தின் பயன்பாட்டிலிருந்து வந்த 27ஶ்ரீ 2056 ம் இலக்க லொறி 1992ம் ஆண்டு வன்செயல்களால் இழக்கப்பட்டது. தற்போது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் வழங்கப்பட்ட லொறி யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட முடியாத நிலையில் வவுனியாவிலுள்ள யு.என்.டி.பி காரியாலயத்தில் உள்ளது. ஏ9 பாதை மூடப்பட்டதையடுத்து சங்கத்தின் தொழிற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீர்வேலியிலுள்ள அலுவலகத்துக்கு விவசாயிகள் கொண்டு வரும் வாழைக்குலைகளை விலைகூறி விற்பனை செய்து வருகின்றனர். இதன் மூலம் தரகர் தொல்லை இல்லாமல் வாழைக்குலைகள் விற்பனை விற்பனை செய்யப்படுவதோடு விவசாயிகள் நியாயமான வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடிகின்றது. சங்கத்திற்கு வாழைக்குலைகளை விற்க வருபவர்கள் குறிப்பிட்ட வீதம் பணம் செலுத்துகின்றனர். இதன் மூலம் சங்கத்தின் தற்போதைய நடைமுறைச் செலவீனங்கள் ஈடுசெய்யப்பட்டு வருகின்றன. மாதாந்தம் 28000- 22000 ரூபாவுக்கு இடைப்பட்ட வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது என முகாமையாளர் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் போது சங்கத்தின் பெயரை வலி கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் என பெயர் மாற்றம் செய்ய தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாழைக்குலை என்றால் "நீர்வேலி" என்ற பெயரை நிலைநிறுத்தக் கூடிய வகையில் உறுப்பினர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு சங்கம் செயற்பட்டு வருகின்றது.

## யாழ் மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம். (வரையுள்ளது)
## JAFFNA DISTRICT TEXTILE WEAVER'S CO-OP SOCIETY. (LTD)

யாழ் மாவட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் 1973ம் ஆண்டு தொடக்கம் எமது பிரதேச செயலர் பிரிவில் உள்ளடங்கும் இருபாலை வீதி கோண்டாவில் கிழக்கில் செயற்பட்டு வருகின்றது. (இராச வீதி- இருபாலை வீதிச் சந்தியின் வட மேற்குப் பக்கத்தில்) 46 பரப்பு நிலம் சங்கத்திற்குரிய வளாகமாகவும் பல கோடி ரூபா பெறுமதியான நெசவு இயந்திர சாதனங்கள் மற்றும் கட்டட வசதிகளுடன் திட்டமிட்ட முறையில் நிர்மாணிக்கப்பட்டு தற்போது மட்டுப்படுத்தப்பட்டளவில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. சங்கத்தின் நிர்வாகப் பொறுப்புக்கள் 2002ம் ஆண்டு கூட்டுறவு ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றன. (தலைவர்: திரு. ப. இராசரத்தினம் உறுப்பினர்கள் திரு. த. கந்தசாமி திரு. செ. கந்தையா) சங்கத்தின் பதில் பொது முகாமையாளரான திரு. க. ஜெயக்குமார் உட்பட 20 ஊழியர்கள் வரை தற்போது கடமையாற்றுகின்றனர்.

யாழ் மாவட்ட நெசவாளர் சங்கம் 1942ம் ஆண்டு யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் நெசவு நூல் விற்பனை நிலையமாகவும் பின்னர் யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபார நெசவு சங்கமாகவும் செயற்பட்டு 1973ம் ஆண்டிலிருந்து J/1609 என்ற பதிவிலக்கத்தில் யாழ் மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் செயற்பட்டு வருகின்றது. 1987ம் ஆண்டுக்கு முந்தைய காலப்பகுதியில் மிகவும் சிறப்பான நிலையில் 350ற்கும் மேற்பட்ட நெசவுத் தொழிலாளர்களைக் கொண்டு 24 மணி நேரமும் செயற்பட்டது. அக்காலப்பகுதியில் சாரம் சேலை துவாய் மெத்தை விரிப்பு வைத்தியசாலைப் பாவனைக்கான துணிவகைகள் என 26 வகையான தயாரிப்புக்களை வழங்கியதுடன் 36 அங்குல அகலமான துணிகளை நெசவு செய்யும் 48 இயந்திரங்களையும் 60 அங்குல அகலமான துணிகளை நெசவு செய்யும் 12 இயந்திரங்களுமாக மொத்தம் 60 நெசவியந்திரங்களும் நூல் சுற்றும் இயந்திரங்கள் நூல் சாயமிடும் இயந்திரங்கள் நூல் பசையிடும் இயந்திரங்கள் துணிகளைப் பதப்படுத்தி இறுதித் தயார்ப்படுத்தும்(குளைளொலைப்) இயந்திரங்கள் போன்ற பல கோடி ரூபா பெறுமதியான சாதனங்களும் அவற்றுக்குப் பொருத்தமான கட்டட அமைப்புக்களும் காணப்படுகின்றன.

உச்சத் தொழிற்பாட்டுக் காலப்பகுதியில் 506 உறுப்பினர்கள் நூல் வகைகளைப் பெற்று தமது இல்லங்களில் கைத்தறி நெசவு வேலையை மேற்கொள்ளுவதற்கும் 117 கைத்தறி நெசவு நிலையங்களுக்கு நூல் வகைகளையும் துணைச்சாதனங்களையும் வழங்கி உதவியது. அக்காலப்பகுதியில்

சுன்னாகம் சாவகச்சேரி நெல்லியடி பளை வேலணை சித்தங்கேணி போன்ற இடங்களில் ஆறு விற்பனை நிலையங்களும் செயற்பட்டன. தற்போது வைத்தியசாலை பயன்பாட்டுக்குரிய

வகைகள் ஜி.எஸ் துவாய் வைத்தியசாலைக் கட்டில் விரிப்பு மெத்தை விரிப்பு துவாய் என்பனவற்றுடன் சாரம் கைக்குட்டை பெற்சீற் உள்ளிட்ட தயாரிப்புக்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தயாரித்து விற்பனை செய்து வருகின்றது. தற்போது 12 இயந்திரங்கள் மட்டும் பயன்படுத்தப்படுவதோடு ஏனையவை பயன்படாமல் காலம் வருமெனக் காத்துக்கிடக்கின்றன.

இங்கு தற்போது கடமை புரியும் உயர்மட்ட ஊழியர்களுக்கு ரூபா பத்தாயிரத்திற்கு மேற்படாத கொடுப்பனவுகளும் சாதாரண தொழிலாளர்களுக்கு ரூபா ஐந்தாயிரத்திற்கு மேற்படாத கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன. கணக்காளர் வெளிமாவட்டத்திற்கு சென்றிருந்ததால் நிதிநிலை தொடர்பான விபரங்களைப் பெறமுடியவில்லை. பதில் பொதுமுகாமையாளர் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. மேற்படி தொழிற்சாலையில் உறங்கு நிலையில் உள்ள வளங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்படுமானால் பல நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைப்பதோடு தரமான தயாரிப்புக்களை உள்ளூரிலேயே பெற்றுக்கொள்ள முடியும்.

### வலி கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்.(வரைவுள்ளது)
### VALI-EAST LIVESTOCK-BREEDERS CO-OPERATIVE SOCIETY.(LTD)

யாழ் மாவட்டத்தில் விவசாயப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் சிறந்து விளங்கும் எமது பிரதேச செயலக பிரிவு கால்நடை வளர்ப்பிலும் மேலோங்கியுள்ளது. விவசாயம் -கால்நடை வளர்ப்பு இணைந்த நிலையில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் கால்நடை

வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் பெரும் பணியாற்றி வருகின்றது. J 2062 இலக்கத்தில் 08.09.1989ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வலி கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தற்போது கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலக வளாகத்தில் உள்ள கருத்தரங்கு மண்டபத்தில் செயற்பட்டு வருகிறது. 100 ரூபா வீதம் பங்குரிமை கொண்ட 1528 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். அங்கத்தவர்கள் செலுத்திய பங்கு என்ற வகையில் 152800 ரூபா பங்கு மூலதனத்தை கொண்டுள்ளது.

மரபு ரீதியாக வளர்க்கப்பட்டு வந்த கால்நடை வளர்ப்பு முறையில் ஏற்பட்ட மாற்றங்களினால் புதிய கால்நடை இனங்கள் அறிமுகம் செய்யப்படுகின்றன. அத்துடன் நவீன அறிவியற் கருவிகளின் உதவியுடன் கால்நடைகள் பராமரிக்கப்படுகின்றன. இந்த மாற்றங்களை உள்வாங்கி எமது பிரதேச கால்நடை வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் பயன்பெறுவதற்கான செயற்றிட்டங்கள் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. சங்கத்தின் செயற்பாடுகளாக கால்நடை வளர்ப்போருக்கான தேவைகளைப் பூர்த்தி செய்தல் நல்லின கால்நடை இளவல்களை விநியோகித்தல் கால்நடைத் தீவனங்கள் மருந்து வகைகளை நியாய விலையில் விற்பனை செய்தல் தொழில்நுட்ப அறிவூட்டல்களை வழங்குதல் கால்நடை வளர்ப்பு தொடர்பான பயிற்சிகளை வழங்குதல் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

தற்போது கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி திருமதி சகுந்தலா மகேந்திரராஜா அவர்கள் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு பொருத்தமான ஆலோசனைகளை வழங்கி வருகின்றார். கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு அருகாமையில் பால் விற்பனை நிலையமொன்றையும் சங்கம் நடாத்தி வருகின்றது. "பத்தொன்பது வருட வளர்ச்சி நிலையின் பின்னரும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் இதுவரையும் தனக்கென நிரந்தரமான கட்டட வசதியைத் தானும் ஏற்படுத்திக் கொள்ளாமல் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஏதிலி நிலையில் தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது" என சங்க உறுப்பினர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வலி கிழக்கு பரந்த பிரதேசமாக இருப்பதால் வலி கிழக்கு தெற்கு வலி கிழக்கு வடக்கு என்ற வகையில் கூட்டுறவு அமைப்புக்கள் செயற்படுகின்றன. இந்த வகையில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமும் வலி வடக்கு (அச்சுவேலி) பகுதியை நடுவிடமாகக் கொண்டு நிறுவப்படுவது கால்நடை வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்களுக்கு உதவியாக இருக்கும். சங்கத்தின் நிதி நிலைமை மற்றும் சொத்துடமை தொடர்பான விபரங்களைப் பெற முயற்சித்தாலும் பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்ள இயலவில்லை.

### காமாட்சி அம்பாள் ஐக்கிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம்.

நீர்வேலியில் வசிக்கும் தொழிலாளர்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட காமாட்சி அம்பாள் ஐக்கிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் J 1017 இலக்கத்தில் 02.11.1949ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. 1952ம் ஆண்டு சங்கத்துக்கென காணி கொள்வனவு செய்யப்பட்டு கட்டடம் நிறுவப்பட்டது. தனித்தனியாக இரும்பு வேலை மர வேலை செய்யும் தொழிலாளர்கள் மூலப்பொருள்களை பெற்றுக் கொள்வதில் உள்ள சிரமங்கள் நெருக்கடிகளை இல்லாமல் செய்து தொழிலாளர்களுக்கு மூலப்பொருள்களை தாராளமாக வழங்கி அவர்கள் தயாரிக்கும் முடிவுப் பொருள்கள் மூலம் அவர்கள் நியாயமான வருமானத்தை பெறுவதற்கு வகை செய்து குறிப்பிட்ட தொழிலாளர் மற்றும் மக்கள் மத்தியில் பெரும் மதிப்புப் பெற்றது.

தொழிலாளர்களால் தயாரிக்கப்படும் பொருள்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்வதற்கு விற்பனை நிலையம் சங்கத்துக்கான பணிமனை களஞ்சியம் தொழிற்சாலை தொழில் நிலையம் என பல அமைப்புக்கள் கொண்டதாகவும் முகாமையாளர் தொழில் மேற்பார்வையாளர் கணக்காளர் விற்பனையாளர் மற்றும் உத்தியோகத்தர்களைக் கொண்டதாக நீர்வேலி இரும்பு மர உற்பத்திப் பொருட்களின் தரநிர்ணயத்தையும் பொருத்தமான சந்தைப்படுத்தல் வசதிகளையும் வழங்கி தொழில் சார்ந்த குடும்பங்களின் வளர்ச்சிக்கு பெரும்பங்களிப்பு செய்து வந்தது.

நீர்வேலி காமாட்சி அம்பாள் பூட்டு வகைகளுக்கும் கத்தி வகைகளுக்கும் யாழ் மாவட்டத்தில் மட்டுமல்லாது இலங்கை பூராகவும் தனி மதிப்பும் தர நிர்ணயமும் இருந்தது. விவசாய கிருமி நாசினி தெளிகருவி தயாரிப்பு திருத்த வேலை என்பவற்றில் தனிமுத்திரை பதித்து தனக்கென தனியான இடத்தைப் பெற்றிருந்தது. ஒப்பந்த வேலைகளையும் பொறுப்பேற்று தனித்துவமான நிலையில் நிறைவு செய்து வந்தது. அண்மைக்கால அசாதாரண சூழ்நிலைகளினால் சங்கத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

## வலி கிழக்கு கூட்டுறவு முன்னோடிகள் சிலர்.

வலி கிழக்கின் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கு அக்காலப்பகுதியில் உழைத்தவர்கள் என்ற வகையில்

ஆசிரியர் இ. குமாரசுவாமி(கோப்பாய்) , அதிபர் ச. வீரசிங்கம்(அச்சுவேலி) , எஸ். தம்பிமுத் து (இடைக்காடு), செ. நடராசா(நீர்வேலி), அ. கா. காசிலிங்கம் விதானையார் , மாணிக்க இடைக்காடர் (இடைக்காடு), சி. கந்தையா , ச. இராசரத்தினம், சி. க. சுப்பிரமணியம் ,ஆசிரியர் எஸ். அருணாசலம் (சிறுப்பிட்டி), சி. கனகசபாபதி(கோப்பாய்) , தம்பி சு. சிவகுரு (ஆவரங்கால்) , நீ. சி. முருகேசு உபாத்தியாயர், நா. தம்பிமுத்து(ஊரெழு) , மு. கந்தசாமி (இடைக்காடு) , சி.பொன்னையா (உரும்பராய்) , ஏ. ஆர். மனுவேற்பிள்ளை (அச்சுவேலி) , ரிப்போட்டர் எஸ். செல்லத்துரை (அச்சுவேலி) , விதானையார் அ.க.த. கிருஸ்ணராசா (ஆவரங்கால்) , க.சி. கனகசபாபதி(அச்சுவேலி) , ஆ. சின்னத்துரை(ஆவரங்கால்), மு. பூபாலசிங்கம் (நீர்வேலி), சி. செல்லத்துரை(உரும்பராய்), த.மயில்வாகனம்(நீர்வேலி), த. பரமானந்தம், திருமதி வேதவல்லி கந்தையா (நீர்வேலி), கே. சண்முகலிங்கம்(அச்சுவேலி), ஆசிரியர் ச. நவரத்தினம் (கோப்பாய்), அதிபர் ஈ. கே. சண்முகநாதன் (நீர்வேலி), கே. பேரின்பநாயகம்(அச்சுவேலி),வ. முத்துக்குமாரசுவாமி (கோப்பாய்), எம். எஸ். இரத்தினசிங்கம் , இ. சுப்பிரமணியம் (நீர்வேலி) , வி. சி கந்தையா போன்றோர் கூட்டுறவுப் பணிகளில் நினைவிற் கொள்ளப்படத்தக்கவர்கள்

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை".



# வலி. கிழக்குப் பிரதேசச் செயலகம்

## செயலக உத்தியோகத்தர்கள் - 2008



## வலி. கிழக்குப் பிரதேசச் செயலக உத்தியோகத்தர்கள்

### முன் வரிசையில் இருப்பவர்கள் [இடமிருந்து வலம்]

1. திரு. எஸ். இராஜரட்ணம் (முகாமைத்துவ உதவியாளர்)
2. திரு. வி. சிவயோகநாதன் (முகாமைத்துவ உதவியாளர்)
3. திரு. எஸ். சிவராசன் (அதி சிறப்பு கிராம அலுவலர்)
4. செல்வி. எஸ். பிரேமினி (உதவி பிரதேச செயலர்)
5. திரு. சி. ஏ. மோகன்றாஸ் (பிரதேச செயலர்)
6. திரு. எஸ். மகேந்திரன் (நிர்வாக உத்தியோகத்தர்)
7. திருமதி. எம். வசந்தமாலா (கணக்காளர்)
8. திருமதி. எஸ். வியாகேசு (பிரதம எழுநனர்)
9. செல்வி. ரி. கவிதா (மேலதிக மாவட்டப் பதிவாளர்)

### இரண்டாம் வரிசையில் நிற்பவர்கள் [இடமிருந்து வலம்]

1. திருமதி. எஸ்.ஜெயசுதாகினி ( முகாமைத்துவ உதவியாளர்)
2. திருமதி. பி. றஜனி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்)
3. திருமதி. பி. அன்பரசி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்)
4. செல்வி. சி. சுஜிதா (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்)
5. திருமதி. ஆர். புஸ்பரூபி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்)
6. திருமதி. வி. பாலவதனி (முகாமைத்துவ உதவியாளர்)
7. திருமதி. ரி. கிருஸ்ணகுமார் (முகாமைத்துவ உதவியாளர்)
8. செல்வி. எஸ். பாமதி (மனிதவள அபிவிருத்தி உதவியாளர்)
9. திருமதி. டி. மகிந்தன் (முகாமைத்துவ உதவியாளர்)
10. செல்வி. கே. தாட்சாயினி (முகாமைத்துவ உதவியாளர்)
11. செல்வி. ஏ.இரட்ணம் (நெசவுப் போதனாசிரியர்)
12. திருமதி. எஸ். யோகராணி (தையல் போதனாசிரியர்)
13. திருமதி. வி. பாலதேவி (நெசவுப் போதனாசிரியர்)
14. திருமதி. கே. எஸ். மகாராணி (முகாமைத்துவ உதவியாளர்)
15. செல்வி. இ. கயல்விழி (பயிலுனர்)
16. திருமதி. ரி. கிருஸ்ணமூர்த்தி (முகாமைத்துவ உதவியாளர்)
17. திருமதி. எஸ். ஜெயமோகன் (முகாமைத்துவ உதவியாளர்)
18. செல்வி. கே. மீரா (முகாமைத்துவ உதவியாளர்)
19. திருமதி. எஸ். சந்திரமாலிகா (முகாமைத்துவ உதவியாளர்)
20. திருமதி. எஸ். தனுசியா (முகாமைத்துவ உதவியாளர்)
21. திருமதி. ஐ. குமாரசாமி (முகாமைத்துவ உதவியாளர்)

### மூன்றாம் வரிசையில் நிற்பவர்கள் [இடமிருந்து வலம்]

1. திரு. பீ. பகீரதன் (விஞ்ஞான தொழில்நுட்ப அலுவலர்)
2. திரு. டெ. யுலிற்றன் (பயிலுனர்)
3. திரு. த. தயாபரன் (முகாமைத்துவ உதவியாளர்)
4. திரு. வே. கமலேந்திரன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்)
5. திரு. ரி. ராஜ்பவன் (முகாமைத்துவ உதவியாளர்)
6. திரு. எஸ். சிவச்செல்வன் (முகாமைத்துவ உதவியாளர்)
7. திரு. ந. தயாளன் (முகாமைத்துவ உதவியாளர்)
8. திரு. வி. குணபாஸ்கரசிங்கம் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்)
9. திரு. சி. ஐங்கரன் (பயிலுநர்)
10. திரு. எஸ். சுரேஸ்சன்ட் (முகாமைத்துவ உதவியாளர்)
11. செல்வி. என். கௌரி (முகாமைத்துவ உதவியாளர்)
12. திருமதி. வி. பாலசுப்பிரமணியம் (முகாமைத்துவ உதவியாளர்)
13. திருமதி. எஸ். கனகாம்பிகை (முகாமைத்துவ உதவியாளர்)
14. செல்வி. கே. தவமணி (முகாமைத்துவ உதவியாளர்)
15. திருமதி. ஆர். ஜெயச்சந்திரன் (முகாமைத்துவ உதவியாளர்)
16. திருமதி. கே. மாலினி (கலாசார உத்தியோகத்தர்)

# அச்சுவேலி சுவாமி ஞானப்பிரகாசரின் வாழ்வும் வரலாற்றுப் பணியும்



செல்வி சசிதா குமாரதேவன்
தொல்லியல் உதவி விரிவுரையாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வலிகாமம் கிழக்கின் கல்விப்பாரம்பரியத்திற்கும், ஆராய்ச்சிப் பணிக்கும் பெருமை தேடித் தந்த மூத்த புலமையாளர் என்ற பெருமை சுவாமி ஞானப்பிரகாசருக்கு உரியது. இவர் 1875 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 30 ஆம் திகதி பல்வேறு சமயப் பெரியார்களையும், வரலாற்று ஆராய்சியாளர்களையும் கொண்டிருந்த மானிப்பாய்க் கிராமத்தில், சாமிநாதபிள்ளைக்கும், காடினர் சிற்றம்பலத்தின் மூத்தமகள் தங்கமுத்துவிற்கும் மகனாகப் பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் வைத்திலிங்கம் என்பதாகும். இவர் சைவ வேளாள குலத்தில் பிறந்தாலும் இளமையில் ஏற்பட்ட கடும் சுரத்தினால் நோயினின்றும் குணமடையும் முகமாக கத்தோலிக்க மதத்தினை தழுவினார். கத்தோலிக்க மதத்தை தழுவிய போது திருமுழுக்குப் பெயராக ஞானப்பிரகாசர் என்னும் பெயரைப் பெற்றுக் கொண்டார். அவரது வளர்ப்புத் தந்தையின் சீரிய வளர்ப்பால் ஞானப்பிரகாசரிடம் அறப்பற்றும், மறைப்பற்றும் பின்னிப்பிணைந்து வளர்ந்தன. இவைதான் பிற்காலத்தில் அவர் கிறீஸ்தவ மறையைப் பரப்பும் மறைபரப்பாளராக வளர்ச்சியடைய ஏதுவாக அமைந்தது.

ஞானப்பிரகாசரின் வளர்ப்புத் தந்தை தம்பிமுத்து. ஒரு சிறந்த தமிழ் அறிஞர், கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்தவர். அவர் அச்சுவேலியில் ஒரு அச்சகத்தின் உரிமையாளர் ஆவர். இவர் தனது வளர்ப்பு மகனின் பெயரால் தனது அச்சகத்தினை "ஞானப்பிரகாசர் அச்சகம் என அழைத்தார். இந்த அச்சகத்தினால் பக்தியான தத்துவங்களும், இலக்கியங்களும், நாடக புத்தகங்களும் பதிப்பித்து வெளியிடப்பட்டன. இப்பின்புலம் பிற்காலத்தில் ஞானப்பிரகாசர் தனது வாழ்நாளை ஆராய்ச்சிப் பணியில் ஈடுபடுத்திக் கொள்ளக் காரணமாக அமைந்ததெனலாம்.



1901ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி ஞானப்பிரகாசர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அனுபவம் வாய்ந்த அமலமரித்தியாக்களின் சபை மறைபரப்பாளர் ஒருவரின் பாதுகாப்பின் கீழ் மறைபரப்புப் பணியை தொடர்ந்தார். இலங்கையில் யாழ்ப்பாணத்தில் உள்ள செனற் மாட்டினுடைய தேவாலயமே முதலாவது கத்தோலிக்க தேவாலயமாகும். அங்குதான் சுவாமி ஞானப்பிரகாசர் குருப்

பயிற்சியை பெற்றுக் கொண்டார். இம் மடத்தில் அவரின் பயிற்சி பிரயோசனமாய் இருந்தமையால் அமலோற்பவ இராகாக்கினி தூதன் என்னும் சஞ்சிகையை ஏற்று வெளியிட ஆரம்பித்தார். தனது பயிற்சிக் காலம் முடிந்ததும் 1898 ஆம் ஆண்டு மாசி மாதம் 17ஆம் திகதி தன்னை சமயத்திற்கு அர்ப்பணித்தார். சுவாமி ஞானப்பிரகாசர் பட்டம் பெற்றதும் தனது முதலாவது நிகழ்ச்சியை தனது சொந்தக் கிராமமாகிய அச்சுவேலியில் ஆரம்பித்தார். பின்னர் ஊர்காவற்றுறை மிசனரி, நல்லூர் சென் பெனடிக் தேவாலயம், பாண்டியன்தாழ்வு, கோப்பாய் தெற்கு தேவாலயம், நீர்வேலி தேவாலயம், மட்டுவில் சென் ஜோசப் தேவாலயம், நாவற்குழி சென் அன்ரனி தேவாலயம், சாவகச்சேரி சென் அல்போன்சோ தேவாலயம், திருநெல்வேலி சென் பிரான்சிஸ் தேவாலயம், ஆகிய தேவாலயங்களிற்கு பொறுப்பாக இருந்தார். யாழ்ப்பாணத்தில் ஞானப்பிரகாசரால் 37 தேவாலயங்கள் சமூக வலுக்குன்றிய மக்கள் வசிக்கும் இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டன.

சுவாமி ஞானப்பிரகாசர் சமய ரீதியாகவும், மொழி ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் சமூகத்திற்கு பல்வேறு பணிகளை ஆற்றினார். சுவாமி ஞானப்பிரகாசர் செல்வர்களிடம் இருந்து உதவிபெற்று ஏழை, எளியவர் எல்லோருக்கும் கல்வி, உணவு, உடை, அமைதியான வாழ்வு என்பவற்றை நல்கிய சமதர்மக் கொள்கையை உருவாக்கியவர். சமயத் தொண்டின் மூலம் குடியேற்றத் திட்டத்தை வகுத்து ஏழை எளியவர்களின் வாழ்விற்கு வளம் அளித்தார்.

1877-1878 காலப்பகுதிகளில் வாந்திபேதியும் அதனைத் தொடர்ந்து பஞ்சமும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தின. அச்சந்தர்ப்பத்தில் ஆயரும், வேதபோதகர்களும் வீதிகளிலும், வீடுகளிலும் கிராமங்களிலும், மூலைமுடுக்குகளிலும் சென்று மக்களிற்கு அருந்துணை புரிந்து ஆறுதல் அளிக்கலாயினர். இதனால் பல மக்கள் கத்தோலிக்க மறைக்குள் சென்றனர். இந்து சமயத்திலே இருந்து ஒருவரைப் பிற சமயத்திற்கு இழுப்பது என்பது இலகுவான காரியமா?"இந்த கஷ்டமான பணியில் சுவாமி ஞானப்பிரகாசர் ஒரு வீரனைப்போல் எதிர்ப்பட்ட இன்னல்களைத் தகர்த்து எறிந்து கிறீஸ்துநாதரின் வெற்றிக் கொடியைக் கிராமம் கிராமமாக எடுத்துச் சென்றார்." என்று சலாப ஆயரும் அடிகளாரின் நண்பருமான எட்மன் பீரிஸ் அவர்கள் சுவாமி ஞானப்பிரகாசரின் சமயப் பரப்பும் பணியையும், சமூகப் பணியையும் சிறப்பித்துக் கூறுகின்றார். மற்றும் உரும்பிராய்ப்பதியில் இறைவனிற்கும் தமிழ் மொழிக்கும் ஆலயம் அமைத்து அரும்பணி புரிந்தார்.

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றிய ஈழத்துப் பெரியார்களுள் தலைசிறந்த ஒருவராகத் தமிழறிந்த மக்கள் அனைவராலும் பாராட்டப்படக்கூடியவர் சுவாமி ஞானப்பிரகாசர். தேவ ஊழியர் ஞானப்பிரகாசர் மாபெரும் எழுத்தாளர், வரலாற்றாசிரியர், பன்மொழிப்புலவர், முற்றிப் பழுத்த மொழி நிபுணர், சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இத்தாலி, பிரெஞ்சு முதலிய 18 மொழிகளை எழுதவும் பேசவும் ஆற்றல் பெற்றிருந்தார்.

பொது நூல் கோப்பாய்

சமஸ்கிருதம் மூலம் பிற ஆரிய மொழிகளை அறிமுகமாக்கிக் கொண்டார். சிங்களத்தின் வழி பாளிய மொழிகளையும், திபெத், பர்மிய, சூர்க்க மொழிகளையும் தெரிந்து கொண்டார். அவர் அறிந்த பிற மொழிகள் இலத்தீன், கிரேக்கம், போர்த்துக்கீஸ், டச்சு, ஜேர்மன் உள்ளிட்ட 70 மொழிகளை அறிந்துகொண்டார். மொழி ஆக்கத்துறையில் அவரது தனிப்பெரும் சாதனை அவர் அமைத்துத் தந்த சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி ஆகும். இவரது பன்மொழிப் புலமையையும், மொழி நூல் ஆய்வுத் திறனையும் நன்கு அறிந்த ஜேர்மன் நாட்டவரும், தமிழ் நாட்டவரும் அவரைப் போற்றினர். சுவாமி ஞானப்பிரகாசரின் பெயரினால் ஜேர்மன் அரசாங்கம் முத்திரை வெளியிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## வரலாற்றுப் பணியில் ஞானப்பிரகாசர்

சுவாமி ஞானப்பிரகாசர் வாழ்ந்த காலச்சூழ்நிலையும், அவர் பெற்ற கல்வியும்தான் அவர் வரலாற்றுக் கல்வியில் ஈடுபடக் காரணமாகியது. சமகாலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட ஆங்கிலேயருக்கெதிரான சுதந்திரப் போராட்டத்தில் இந்தியாவின் ஐக்கியத்தை வலியுறுத்திப் பல வலராற்று நூல்கள் படைக்கப்பட்டன. சமகாலத்தில் இலங்கையில் இதன் தாக்கம் இருந்தாலும் இலங்கையில் பௌத்த சிங்கள கலாச்சாரத்தை முதன்மைப்படுத்தும் வகையில் நூல்கள் எழுந்தன. இத்தகைய கால ஓட்டத்தை நேரடியாக அவதானித்த சுவாமி ஞானப்பிரகாசர் தனது கவனத்தை இலங்கை வரலாற்றை எழுதுவதில் நெறிப்படுத்திக் கொண்டார்.

சுவாமி ஞானப்பிரகாசர் இலங்கை வரலாற்றை அதிலும் குறிப்பாக வடஇலங்கை வரலாற்றை எழுதுவதற்கு யாழ்ப்பாண அரசு தொடர்பாக எழுந்த நூல்களில் 1847 இல் காசிச்செட்டி, 1879 இல் எஸ்.ஜோன், 1884 இல் சதாசிவம்பிள்ளை, 1912 இல் முத்துத்தம்பிப்பிள்ளை, 1918 இல் வேலுப்பிள்ளை ஆகியோர் எழுதிய நூல்கள் பின்புலமாக இருந்தன எனக் கூறலாம் அந்நூல்களுடன் சுவாமி ஞானப்பிரகாசரின் படைப்புக்களை ஒப்பிடும் போது அவற்றில் காணப்பட்ட சில குறைபாடுகளும் ஞானப்பிரகாசர் வரலாற்று நூல்களை எழுதத் தூண்டின எனக் கூறலாம். முன்னையோர் யாழ்ப்பாண அரசு தொடர்பாகப் பிற்காலத்தில் எழுந்த யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை, வையாபாடல் முதலிய மூலநூல்களை அடிப்படை வரலாற்று மூலங்களாகக் கொண்டு எழுதப்பட்டதனால் இவற்றை தமிழ் வரலாற்றைப் பூரணப்படுத்தும் நோக்கில் எழுந்தவை என அவர் கருதவில்லை. ஏனெனில் இந்த நூல்களில் எழுதப்பட்ட கருத்துக்கள் ஒரு முழுமையான தொல்லியல் ஆய்வின் பின்போ அல்லது முழுமையான தமிழ் அறிஞர்களின் ஆராய்வின் முடிவுகளையோ பயன்படுத்திப் பெறப்படவில்லை.

ஆனால் 1928 இல் சுவாமி ஞானப்பிரகாசர் எழதிய யாழ்ப்பாண வைபவ விமர்சனம் என்ற நூல் மேற்குறிப்பிட்ட நூல்களிலிருந்து பெருமளவிற்கு வேறுபட்டு தமிழ், பாளி மூலநூல்களையும் ஓரளவிற்கு தொல்லியல் சான்றுகளையும் வைத்து எழுதப்பட்டவையாகும். தற்கால விஞ்ஞான ஆய்வு நோக்கில் இந்நூலை மதிப்பிடுகின்ற போது அவற்றில் பல குறைபாடுகள் காணப்பட்டாலும் தமிழ் வரலாற்றை பூரணப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு எழுந்த முதல் முன்னோடி ஆய்வு நூலாக இதனைக் கொள்ளலாம்.

தமிழரின் தொன்மை தொடர்பாக சுவாமி ஞானப்பிரகாசர் தனது ஆக்கங்களில் இலங்கையில் வாழ்ந்த ஆதிக்குடிகள் திராவிடர்களே என்றும் அவர்கள் நாகரிகம் படைத்தவர்களாய் இருந்தார்கள் என்றும் அவர்களே நாகரிகத்தின் பல அம்சங்களையும் பிற்காலத்தில் வந்த ஆரியர்களிற்குப் புகட்டினார்கள் என்றும் குறிப்பிடுகின்றார். இதனை உறுதிப்படுத்தும் விதமாக தமிழகத்தின் ஆதிச்சநல்லூர் என்ற இடத்திலும், ஹரப்பா, மொஹஞ்சதாரோ என்ற இடத்திலும், ஈழத்தின் மேற்கு கரையோரங்களிலும் உள்ள பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்கள் இப்பகுதியில் திராவிடர்கள் குடியேற்றம் அமைத்து வாழ்ந்தார்கள் என்பதற்கு சான்றாக காட்டினார். அவரது கூற்றுக்களில் பலவற்றை தற்காலத்தில் ஏற்றுக் கொள்ளும் வகையில் அண்மைக்காலத் தொல்லியற் கண்டுபிடிப்புக்கள் அமைந்துள்ளன.

தமிழரசு தொடர்பாக தோன்றிய தமிழிலக்கியங்கள் புகைபடர்ந்த நிலையிற் காணப்பட்டாலும் இவ்விலக்கியங்களை பிரதான வரலாற்று மூலங்களாகக் கொண்டு தமிழரசு பற்றி ஆராய்ந்த முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற அறிஞர்கள் கி.பி. 8ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட அரசொன்று கதிரமலையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்ததாக கருத்துத் தெரிவித்தனர். யாழ்ப்பாணத் தனியரசு கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்று கி.பி. 8ஆம் நூற்றாண்டில் வளமிழந்து காணப்பட்டது என்னும் கருத்தை ஆதரிக்கும் சுவாமி ஞானப்பிரகாசர் இது சம்பந்தமாகப் பின்வருமாறு கூறுகின்றார்.

> "கி.பி 614 இற்கும் 623 இற்கும் இடையில் அநுராதபுரத்திலிருந்து ஆட்சி புரிந்த சீலமேகவண்ணன் என்னும் சிங்கள அரசன் காலத்தில் சிறிநாகன் என்னும் தலைவன் தென்னிந்தியாவிற்குச் சென்று ஓர் தமிழ் சைனியத்தை இட்டுக்கொண்டு வந்து வட இலங்கையைப் பிடுங்கி அரசாள எத்தனித்தமையைக் காண்கின்றோம். தன் நாமத்தினாற் தமிழனே எனத் தெரிகின்ற இவன்தான் யாழ்ப்பாணத் தனியரசை அடியிட எழுந்தவனாகலாம் என ஊகிக்கக் கிடக்கின்றது. அடுத்த நூற்றாண்டில் தமிழ்த் தலைவர்கள் வட இலங்கையில் வலிமிகுந்த தனியரசு நடத்தி வந்ததையும் அவ்வவ் பொழுதில் சிங்கள அரசர்களால் ஒதுக்குண்டதையும் மகாவம்ச நூல் காட்டுகின்றது. இரண்டாம் மகிந்தன் சிங்கள அரசை ஆண்ட பொழுது வட பாகங்களின் தலைவர்களும் நாட்டாண்மைகளும் அப்பிரதேசங்களைப் பலோத்காரமாய் கட்டியாண்டு கொண்டும் இறைவரிகளை அபகரித்துக் கொண்டும் இருந்தனர்."[ii]
> என்றார்.

சுவாமி ஞானப்பிரகாசரின் கருத்திற்கு பெருமளவிற்கு உடன்படாத பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் பத்மநாதன் போன்ற அறிஞர்கள் தமிழ் இலக்கியங்களையும், பாளி, சிங்கள இலக்கியங்களையும், ஓரளவிற்குத் தொல்லியல் சான்றுகளையும் ஆதாரமாகக் கொண்டு முதலாவது சுதந்திரத் தமிழரசு கி.பி. 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு தோன்றியதெனக் கூறினார். இக்கருத்தே இன்று கற்றோர் மத்தியில் பரவலாக ஏற்கப்பட்டும் வருகின்றது.

சுவாமி ஞானப்பிரகாசர் ஈழத் தமிழ் இடப்பெயர்கள் பற்றியும் பல்வேறு ஆய்வுகளையும் மேற்கொண்டார். இலங்கையின் இடப்பெயர்களை அறிந்து கொள்ளுதல் அதன் வரலாற்றை அறிந்து கொள்ளுதலின் ஒரு பாகமாகும். வடமாகாணத்தில் இடப்பெயர்கள் சில பாளி அல்லது சிங்கள மொழிச் சாயல் பெற்றிருந்ததனைக் காணலாம். இவை பற்றி புத்த ஜாதகக் கதைகளிலும், நம்பொத்த என்ற சிங்கள நிகண்டிலும் விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. ஈழத்தின் இடப்பெயர்களை ஆராய்கின்ற போது வட இலங்கையில் உள்ள தமிழ்ப் பெயர்கள் அப்பகுதியின் பழைமையைக் குறித்துக் காட்டுகின்றன. இலங்கையில் தமிழ் இடப்பெயர் ஆய்வுகள் இதுவரை விஞ்ஞான பூர்வமாக முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய இடப்பெயர் ஆய்வு பற்றி எழுதியுள்ளோரில் சுவாமி ஞானப்பிரகாசரும் ஒருவராவார்.

சுவாமி ஞானப்பிரகாசர் யாழ்ப்பாணம் என்பது யாபென என்பதன் திரிபு என்ற கருத்தை முன்வைத்துள்ளார். யாழ்ப்பாணம் என்னும் பெயர் 15 ஆம் நூற்றாண்டு சிங்கள நூல்களில் யாப்பாபட்டுன எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதனால் யாழ்ப்பாணப் பெயர் யாப்பாநெ என்னும் சிங்களப் பெயரீட்டினின்று உண்டானதென்பது இவரது கருத்தாகும்.

சுவாமி ஞானப்பிரகாசர் யாழ்ப்பாண இடப்பெயர்களிற்கு சிங்கள மூலம், கற்பிக்கும் நோக்குடன் தனது ஆய்வை நடத்தியுள்ளார். உதாரணமாக வில் ஈற்றுப் பெயர்கள், ஓடை ஈற்றுப் பெயர்கள், வத்தை ஈற்றுப் பெயர்கள், ஆய் ஈற்றுப் பெயர்கள், எனப் பலவற்றுக்கு சிங்கள மூலம் கற்பித்துள்ளார். இவ்வாறு கூறப்பட்டுள்ளதை தவிர ஏனையவற்றிற்கு கட்டுக்கதைகளை அடிப்படையாகக் கொண்டு இடப்பெயர் விளக்கம் கொடுக்கப்பட்டிருப்பதை காணலாம். ஆனால் புராதன கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டெழுந்த சமகால ஆய்வுகள் அவரது ஆய்வுகளில் உள்ள குறைநிறைகளைச் சுட்டிக்காட்ட உதவியுள்ளன. இன்று வரலாற்று ஆராய்ச்சியில் இடப்பெயர்கள் முக்கிய மூலாதாரங்களில் ஒன்றாகப் பார்க்கப்படுகின்றன. ஆனால் இதன் முக்கியத்துவத்தை இற்றைக்கு மூன்று சகாப்தங்களுக்கு முன்னரே உணர்ந்த பெருமை ஞானப்பிரகசர் அவர்களுக்கு உரியாதாகும்.

ஞானப்பிரகாசரது வரலாற்று ஆய்வுகள் இன்று பல்கலைக்கழக மட்டத்தில் பலதரப்பட்ட விமர்சனங்களுக்கு உரியதாக இருப்பினும் அவர் வரலாற்று ஆய்வாளர்கள் மத்தியில் நிலைத்து நிற்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் இரண்டு அம்சங்கள் சிறப்பாக நோக்கத்தக்கது. ஒன்று இலக்கியங்களுடன் தொல்லியலையும் பயன்படுத்தி தமிழர் வரலாற்றை ஆராய முற்பட்டமை. இதற்கு கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய இடங்களில் கிடைத்த தொல்லியற் சின்னங்களை அவர் பயன்படுத்திய முறை அவரது ஆய்வுப் புலமையின் முதிர்ச்சித் தன்மையைக் காட்டுகிறது. அடுத்துத் தனக்கிருந்த பல மொழிப்புலைமையால் போர்த்துக்கேய, ஒல்லாந்தஉ கால வரலாற்றை ஆராய்ந்து நவீன கால வரலாற்றை தமிழ் அறிர்கள் ஆராய்வதற்கு களம் அமைத்துக் கொடுத்தமை. இப்பணிகளால் அவர் என்றும் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் நிலைத்து நிற்பார் என்பதில் ஐயமில்லை. இது அவருக்கும், அவர் வாழ்ந்து மறைந்த வலிகாமம் கிழக்கிற்கும் என்றும் பெருமை சேர்க்கும்.

## உசாத்துணை நூல்கள்


அடைக்கலமுத்து. ச., நெஞ்சே நினை, யாழ்ப்பாணம், 1974, ப.05 09.

Sobanadhamudaliyar,K., **Fr.Gnapragasar Sathiya Vetha Pathukavalan** (in Tamil), Jaffna, 1974,p.01.

புஸ்பலதா வாசுதேவன, "சுவாமி ஞானப்பிரகாசரின் சமயத் தொண்டு",சுவாமி ஞானப்பிரகாசர் நூற்றாண்டு விழா மலர். ப. 92.

புஸ்பரட்ணம், ப., யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகர் - புதிய நோக்கு, "முத்தமிழ் விழா மலர்" யாழ்ப்பாணம், 1991. ப.36 55.

Sitrampalam.S.K., **The Megalithic Culture in Srilanka** (Unpublished Ph. D. Thesis) University of Poona, 1980.


**சோலைகள் நிறைந்த பிரதேசம்**

**இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் காட்சிதந்த எம் பிரதேசத்தின் அழகை பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் தனது "காதலியாற்றுப் படை" யில் பதிவு செய்திருக்கிறார். அதில் ஒருபகுதியைச் சுவைப்போம்.**

கண்ணை யிழுக்கும் காட்சி பலவொடு
நின்ற வுள்ளம் முன்னிக் கவர்ந்திடும்
கோவையென் பெயர்புனை மாசிலா வூரின்
யாவையுந் திறமென வாங்குளார் நவில்வர்
வழிவழி தோறு மாம்பொழில் பூத்துக்
கனிதரு தென்றற் காற்றொடு கமழ
நெறிதோறுஞ் செறிந்த நீணிழற் கீழே
கதிரவன் வெயிலாற் களைமிக வடைந்து
நலிதரு முடலச் சலிப்பினை யாற்றத்
துயிலினி தயர்ந்து மாந்தர் தூங்குவர்.

# உச்சுவிற் குளம்



ஸ்ரீ. பிரசாந்தன்
விரிவுரையாளர், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகம்,
அமைப்பாளர், அகில இலங்கை கம்பன் கழகம்.

துயர யானையின் தும்பிக்கையால்
உயர வீசப்பட்டேன்.
வீழ்ந்தபோது
உடைந்து போனதென் உயிர்.
கட்டுக்குலைந்த எனக்குள்
காணாமற் போயின
கவிதைகளும் கனவுகளும்.

ஒத்தடம் கொடுக்க வந்த
குயிலின் பாடலை
கோப்பாய்த் தரவையிற் கண்ணி தகர்த்தது.
உடைந்த எனக்கும் ஆறுதல் இல்லை.

செம்பாட்டு நிலம் புரண்டு துடிக்கும்
குயிலின் செம் பாட்டுக்கும்
ஆறுதல் இல்லை.

கட்டாக்காலிகளும் வர அஞ்சும் தரவையில்
தனித்து முனகுகிற பாடலின் ஈனஸ்வரத்தில்
பற்றி எரிகிறது கனவு.

மாரியில் மட்டும் முலை சுரக்கும் மதகு
விதைப்பு மறந்த வயல்களில்
நீர்க்கடன் செய்கிறது ஆண்டு தோறும்.

உடல்கள் பசளையிடப்பட்ட பின்
விளைச்சல் அதிகரிக்குமா? எனும் நினைப்பெழ
அறுவடையாகிறது ஊரின் ஆத்மா.

இவற்றுக்கிடையே
நிலைமை அறியாது
பருவப் பெயர்ச்சியில் வந்து
உச்சுவிற் குளத்தில் நீச்சலடிக்கிறது
துருவப் பறவையொன்று.

# ஈழத்தில் வில்லிசைக் கலை



- வில்லிசைப் புலவர் க.நா.கணபதிப்பிள்ளை
(சின்னமணி)

**வில்லிசையின் அறிமுகம்**

இயல்,இசை,நாடகம் எனும் மும்மைத்தமிழும் இணையும் திறன் பெற்றது வில்லிசைப் பாடலாகும். மற மாண்பினை உணர்த்தும் வில் அறப்பண்பில் பொருள் சேர் பாட்டுடன் கலந்து பண்ணோடு இயைந்த வில்லிசைப் பாடலாக மலர்ந்தது எனலாம்.

"பாட்டிடைப் கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல் பண்ணத் திய்யே"

என்னும் தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாவுடன் வில்லிசைப் பாடலும் பண்ணும் பொருத்தி நோக்கத்தக்கன.

தமிழ் நாட்டு பாமர மக்களிடையே நெடுங்காலமாகப் பலவகையான பழங்கலைகள் நிலவிவருகின்றன. அவையாவும் நாட்டுப் புறக்கலைகள் எனப் பொதுவாகப் பெயர் பெறுகின்றன. பழங்கலைகளில் பலவும், போற்றுவார் இல்லாமையினால் அழிந்தன. இன்றைய நிலையிலும் தற்கால நாகரிகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் பல கலைகள் அழிந்தும் மறைந்தும் வரும் நிலையில் உள்ளன. மக்களின் வாழ்க்கையுடன் ஒன்றிக் கலந்து இன்று வரை நின்று நிலவும் தமிழ் கலைகளுள் ஒன்றே வில்லப்பாட்டு.

நா நவில் திறம் பெற்ற வில்லுப்பாட்டு நாட்டுப்புறப் பாடல் வகையைச் சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் வில்லுப்பாட்டின் தாயகம் தென் தமிழ் நாடாகும். குறிப்பாகத் திருநெல்வேலி,கன்னியாக்குமாரி ஆகிய மாவட்டங்களில் இதன் வளர்ச்சியையும் தொடர்ச்சியையும் வில்லிசை வரலாற்றில் காண முடிகின்றது. இம் மாவட்டங்களில் சிற்றூர்த் தெய்வங்களுக்கு வழிபாடு நிலவும் கொடை விழாக் காலங்களில் தெய்வ வரலாறுகளையும் தெய்வ நிலை பெற்ற வீரர் வரலாறுகளையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லப் பயன்படும் இவ் வில்லுப்பாட்டு ஊர் பழந்தமிழ்க் கலை. இக் கலை தன் எளிமையாலும் இனிமையாலும் யாவரையும் தன் பால் இழுக்கும் இயல்புடையது. இப்பாட்டின் கதைகளை இரவில் பல மணிநேரம் கேட்டு மகிழ்வர். அத்தகைய முறையில் அலுப்பு சலிப்புக்கு இடமின்றி ஆரவாரத்தடன் அமைவது இக் கலையின் விசேட பண்பாகும்.

போர் வீரரின் முதற் கருவியாக "வில்லே" இக்கலையில் பயன்படும் முதன்மை இசைக் கருவியாக அமைந்துள்ளது. இதற்கு பயன்படும் உடுக்கு,குடம்,தாளம்,கட்டை ஆகிய கருவிகள் மிகப் பழங்காலம் முதல் தமிழ் மக்களிடையே பயன்படும் எளிய இனிய இசைக்கருவிகளாகும். இவைகளின் கூட்டு ஒலியுடன் இந்த இசைக் குழுவின் முதல்வராக அமர்ந்து கதை பாடும் புலவரின் பாட்டும்,ஒலியும் கேட்பவரைக் கிறு கிறுக்க வைக்கும்.

வில்லுப்பாட்டுக் கலையின் நல்லியல்புகளிலும் இசை இன்பத்திலும் உள்ளத்தைப் பறி கொடுத்தவர்கள் இதனை "எளிமையும் , யாவரையும் ஈர்க்கும் இளிமையும் கொண்ட சீரிய நாட்டுப் புற இசைக்கலைகளிலே தமிழ்க்கலைச் செல்வத்தின் அழியாத சின்னமாகத் திகழ்வது" எனப் புகழ்ந்து

கூறுவர். இதில் பாடப்படும் கதைகள் வெறும் பொழுது போக்கு நோக்கத்தில் மட்டும் அமையாமல் "பொது மக்களிடையே பக்தி,பரோபகாரம்,காதல்,வீரம் முதலிய பெருங் குணங்களை வளர்க்கப் பயன்படுகின்றன" எனப் பாராட்டுவர்

"வில்லுப்பாட்டு" என்பதனை வில்,வில்பாட்டு,வில்லு (வில்லுப்பாட்டு) வில்லடி,வில்லடிப்பாட்டு,வில்லடிச்சான்பாட்டு என்றெல்லாம் பலவாறாக அழைப்பதும் உண்டு. இசை அமைதியையும் இசைப்பவரையும் இசைக்கும் கருவியையும் பொறுத்துப் பாடல்கள் பெயர் பெறும். "வில்" என்னும் கருவியை முதன்மையாகக் கொண்டு "வில்லுப்பாட்டு" என்னும் பெயர் அமைவதால், இது இசைக்கும் கருவியால் பெறும் பெயர் எனக் கருதுவர்.

போர் வெற்றிக்குரிய கொற்றவைத் தெய்வம் தாங்கி நிற்பது வில்லே ஆகும். மூவேந்தருள் சேரருக்கு இலச்சினையாகும் சிறப்பினைப் பெறுவதும் வில்லே. வீர மறவரை வில்லேருழவர் எனப் பெருமைப்படுத்துவர்.

வில்லின் வடிவமே கொண்ட யாழைக் கையால் இசை எழுப்பிப்பாடும் ஓர் கலைஞனைப் பெரும்பாணாற்றுப் படையில் காண்கிறோம்.

"........குமிழின்
புழங்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில் யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சி"

எனவரும் அடிகள் குமிழ் மரத்தின் கொம்பினை வளைத்து மரல் நாரினால் ஆன நாண் கொண்டு இழுத்துக்கட்டி விரலால் தெறித்துக் குறிஞ்சிப் பண் பாடிய செய்தியைத் தெரிவிக்கின்றன. கல்லாட்டம் ஒரே நரம்பினை உடைய யாழ் ஒன்றை, "மருத்தவப் பெயர் பெறும் வானக் கருவி" என்று சிறப்பித்துக் கூறுகிறது.

"பாணர் கைவழி" எனப்படும் யாழ் நூலில் கள்ளிக் கோட்டைக்கு அருகே பெருந்தல் மன்னா என்னும் சிற்றூரை அடுத்து உள்ள காட்டில் மாடுகளை மேய்த்துக் கொண்டும் ,பிச்சை எடுத்துக் கொண்டும் வாழும் "புள்ளுவர்" என்போர் தம் கையிலுள்ள ஒரு வகை வில்யாழை இசைத்துக் கொண்டு தம் மிடற்றாலும் பாடுகிறார்கள் என்றும் இப்பாட்டு "வில்பாட்டு" என்று அழைக்கப்படுவதாகவும் இப்பாட்டின் மொழிகளில் எழுபது சதவீதம் தமிழ்ச் சொற்களாகவே இருக்கின்றன என்றும் கூறப்படும் செய்திகள் குறிப்பிடத்தக்கன.

வில்லினை அடுத்துள்ள சிறப்பான கருவியாக அமையும் "உடுக்கு" எனப்படுவது பழங்காலத்தில் பாணர் பயன்படுத்திய துடியே ஆகும். இதன் வகையே ஆநிரை கவரும் காலத்தில் ஒலிக்கப்பட்டதெனவும் கொள்ளலாம். சாத்தனாரின் "கூத்துநூல்" "உடுக்கை" பற்றி மிகவும் சிறப்பித்துக் கூறுகிறது.

"மோனத்து இருந்த முன்னோன் கூத்தில்
உடுக்கையில் பிறந்தது ஓசையின் சுழலே
ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே"

என்னும் அடிகள் அநாதி முதல்வனாம் முன்னோனான ஆண்டவன் ஆடும் கூத்தில் அவனது வலக்கையில் உள்ள "உடுக்கை" மில் தான் ஒசை பிறந்து சுழல்கிறது என்றும் இவ்வாறு சுழலும் ஓசை வட்டத்திடையில் உயிர்த் தெழுவது தான் இசை என்றும் குறிப்பிடுகின்றன. மேலும்

"உடுக்கையில் பிறந்தது ஓம் எனும் ஒலியே
ஓம் எனும் ஒலியே நாட்டியத்து ஒலியாம்"

எனவும் கூறி அந்நூல் உடுக்கையினைச் சிறப்பிக்கிறது.

வில்லுப்பாட்டில் பயன்படும் "குடம்" வாய்ப்புறத்தில் தோலால் மூடிக்கட்டப்படுவதில்லை. எனினும் "குடம்" என்ற பெயரில் அமையும் ஓர் கருவியினைக் கூத்து நூல் குறிக்கிறது. "குக்குலி நொக்கமும் குடுக்கையும் குடமும்" என்றவாறு வருகிறது. வுாய்புறம் தோலினால் கட்டப்படாத நிலையில் கருவி வகைகளும் எதிலும் சேர்க்க இயலாதவாறு தனித்ததோர் அமைப்புடையதாகி விடுகிறது.

ஏனைய தாளமும் கட்டையும் தட்டி ஒலிக்கப்படும் கருவிகளே. நன்கு உருக்கப் பெற்ற தகடால் அமைந்து விளங்கும் தாளம், "நுண்ணுருக்குற்ற விளங்கடர்ப் பாண்டில்" என மலைபடுகடாம் தரும் குறிப்பில் சிறப்பிக்கப்படுதல் காணலாம். வில்லுப்பாட்டு புலவரின் குரல் ஒலிப்புடன் பிற பக்கமேளங்களின் ஒலியமைப்புக்களையும் சேர்த்து நோக்கினால் வில்லுப்பாட்டிலே நரம்புக்கருவி, தோற்கருவி, கஞ்சக்கருவி ஆகிய கருவி வகைகளுடன் மிடற்றுக்கருவியும் ஒருங்கமைந்த ஓர் சிறப்பான அமைப்பினைக் காணலாம்.

## கருவிகளின் அமைப்பும் இயக்கும் முறையும்

வில்லுப்பாட்டின் முதன்மைக் கருவியாகிய வில்லினை உருவாக்கத் தேவையானவை வில்கதிர், முனைக்குப்பிகள், வடம், மணிகள், மணிகளைக் கோர்த்திடத் தேவையான வளையங்கள், கம்பிகள், கயிறுகள் முதலியனவாகும். வில் கதிர் ஏறத்தாழ ஆறு முழ நீளத்தில் அமையும் இது பொதுவாகக் கூந்தற் பனையில் வைரம் பாய்ந்த அடிமரத் துண்டினின்றும் செதுக்கி எடுக்கப்படுவது. நாண் ஏற்றிக் கதிரின் இரு முனைகளும் வடத்தால் இழுத்துக் கட்டப்படுவதற் கேற்றவாறு உறுதிப்பட வளைந்து கொடுக்கும் வகையில் இருக்க இக் கதிரானது கயிற்றால் வரிந்து சுற்றப் பெற்றிருக்கும்.

கதிரின் நடுப்பாகம் குடத்தின் கழுத்துடன் சேர்த்துக் கட்டப்படுவதால் அதற்கேற்றவாறு சிறிது பருமனாக அமைக்கப்பட்டிருக்கும். குடம் மண்குடமாதலால் கதிரின் நடுப்பகுதியில் மெத்தென்று இருக்குமாறு துணி அமைப்புச் செய்து கொள்வதும் உண்டு. வில் குடத்துடன் கட்டியிருக்கும் நிலையில் நாண் வடம் மேலாகவும் கதிர்ப்பகுதி கீழாகவும் அமைந்திருக்கும். இக் கதிர் மூங்கில் கழியாலும் தடித்த பிரம்பினாலும் பாட்டுக்காரர் அவரவர் வசதிக்கேற்ப அமைத்துக் கொண்டாலும் பனை மரக்கதிரே பொதுவாக எல்லோராலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வில்லுப்பாட்டின் மரபுக்கு மாறாக வில்லுடன் இணைக்கப்பட்டிருக்கும். குடத்தை வேறாகவும் வைத்து வில்லடிக்கும்

முறை உண்டு. இது பிழையான அமைப்பாகும். வில்லடிப் புலவர் தனது இரு கைகளிலும் கைக்கு ஒன்றாக இரு கோல்களை வைத்திருப்பார். ஒவ்வொன்றும் ஒன்றரைச் சாண் அளவில் அமைந்திருக்கும். உள்ளீடு பெற்ற கிண்கிணிகளும் பொருந்தப் பெற்றிருக்கும். இவை "வீசும் கோல்கள்" எனப்படும் . இவ் வீசும் கோல்கள் கொண்டு வில் நாண் மீது புலவர் தாளத்திற் கேற்றவாறு தட்டும் போது கிண்கிணி ஒலியும் வில் மணிகளின் ஒலியும் சேர்ந்து இனிய வில் ஒலி உண்டாகும். புலவர்களின் வீசு கோல் வீச்சிலேயே பல வேறு நளினங்களைக் காட்டி வில்லடித்துப் பாடும் போது பார்க்கவும் கேட்கவும் இனிமையாக அமையும்.

குடத்தினை இயக்குவதற்கு கமுகம் மட்டை அல்லது பனையின் கங்கு மட்டை ஆகியவற்றை செதுக்கி பக்திச் சொட்டிக் கட்டை வைத்திருப்பர்.

வில்லுப்பாட்டிற்குப் பயன்படுத்தும் பல தோல்கருவிகள் ஈழத்தில் இல்லாமை ஒரு குறையே. குறிப்பாக பம்பை, உறுமி, தக்கை, தந்துமி போன்ற தோல்கருவிகள் பல பேருக்குத் தெரியாதவையே.

## ஈழத்தில் வில்லிசை வளர்ச்சி

ஈழத்தில் இக்கலை ஐம்பது வருடங்களுக்கு முன்னரே அறிமுகமானது. இவ் வில்லிசைக் கலையை இங்கு அறிமுகப்படுத்தியவர் மீன்பாடும் தேன் நாட்டைச் சேர்ந்த "மாஸ்டர்" சிவலிங்கம் ஆசிரியர் அவர்களே. ஓரிரு கதைகளைப் பாடிவிட்டு அவர் தொடர்ந்து பாடாது ஒதுங்கிக் கொண்டார். காரணம் தெரியவில்லை. இதனைத் தொடர்ந்து திருப்பூங்குடி ஆறுமுகம் ஆசிரியர் அவர்கள் சிறந்த பக்க வாத்தியங்களுடன் இக்கலையை நிகழ்த்தினார். ஓகோ என்று சிறப்பாக வில்லுப் பாட்டு நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் அவர் ஆசிரிய இடமாற்றம் பெற்று மலையகம் சென்ற காரணத்தால் அவரின் வெற்றிடத்தை அக்குழுவின் உடுக்கிசைக் கலைஞராகவும், பக்கப்பாட்டுப் புலவராகவும் இருந்து வந்த நான் வில்லிசையை 1968 ஆம் ஆண்டு தொடங்கினேன். ஆசிரியரின் வழிகாட்டலுடனும் கலைவாணரின் நல்லாசியுடனும் அன்று தொட்டு கோவில் திருவிழாவா? கோலாகலத் தமிழ்விழாவா? எங்கும் வில்லிசையின் நல்லிசை ஒலிக்கத் தொடங்கியது.

மலேசியா, சிங்கப்பூர், சுவீஸ், கனடா போன்ற மேலைத் தேசங்களிலும் இக் கலை ஒலித்து ஈழத்திற்குப் புகழ் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் தலை சிறந்த நாட்டுப் புறக் கலையாகத் திகழும் வில்லிசைக் கலையை முறைப்படி பாடுவதும் பயில்வதும் இக்கலையின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அடிகோலும்.

# வலி கிழக்கு பிரதேச சபையின் செயற்பாடுகள்



## – ஒரு குறிப்புரை

த. நடராசா

செயலாளர்,

வலி கிழக்கு பிரதேசசபை,புத்தூர்

யாழ் குடாநாட்டில் மிகக் கூடிய நிலப்பரப்பினைக் கொண்டதும் நீர் வளம் , நிலவளம் மிகுந்துமான பிரதேசம் வலி கிழக்குப் பிரதேசமாகும். இப் பிரதேசத்திற்குரியதான வலி கிழக்கு பிரதேச சபையானது ஆரம்ப காலங்களில் ஒரு பட்டின சபையையும் (உரும்பிராய் – ஊரெழு) நான்கு கிராம சபைகளையும் (அச்சுவேலி,புத்தூர், நீர்வேலி, கோப்பாய்) உள்ளடக்கியதாக இருந்தது. 1982இல் மாவட்ட அபிவிருத்திச் சபையாக மாற்றம் பெற்று அதன் பின் ஒன்றிணைக்கப்பட்ட வலி கிழக்கு பிரதேச சபையாக இன்று உயர்ந்து நிற்கின்றது. ஆரம்ப காலத்திலிருந்த உரும்பிராய் – ஊரெழு பட்டின சபையும் அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய் கிராம சபைகளும் உப அலுவலகங்களாக்கப்பட்டு ஓர் தலைமை அலுவலக நிர்வாகத்தின் கீழ் இயங்கத் தொடங்கிய இப் பிரதேச சபை தொடக்கத்தில் நீர்வேலியில் ஓர் சின்னஞ்சிறிய கட்டிடத்தில் அமைந்திருந்தது. பின்னர் இதன் தலைமை அலுவலகம் நீர்ப் (நோநுயுசு) திட்டத்தின் உதவியுடன் புத்தூரில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடத்தில் 14.06.2006 இலிருந்து இயங்கி வருகின்றது. இதன் எல்லைகளாக வடக்கே வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையும், தெற்கே நல்லூர் பிரதேச சபையும், கிழக்கே சாவகச்சேரி பிரதேச சபையும், மேற்கே வலி தெற்கு பிரதேச சபையும் உள்ளன.

யாழ் மாவட்டத்தில் நீண்ட காலமாக உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறாத காரணத்தினால் செயலாளரையே நிர்வாகத்தின் தலைவராகவும் கொண்டு இப் பிரதேச சபையானது பொதுமக்களுக்கு சிறப்பான சேவையை ஆற்றி வருகின்றது. இதன் பிரதான சேவையாக உள்ளூராட்சிக்குட்பட்ட வீதிகளைப் பராமரித்தல் மற்றும் சுகாதார மேம்பாடு, எமது சிறார்களின் அத்தியாவசிய தேவையான கல்விக்கு வித்திடும் முன்பள்ளிகளின் வளர்ச்சி, நூலகங்களின் அபிவிருத்தி, மக்களின் அன்றாட தேவைகளான வைத்திய சேவை, நீர் வழங்கல் சேவை என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்கின்றது.



வலி.கிழக்குப் பிரதேச சபை, தலைமை அலுவலகம்

வலி கிழக்கு பிரதேச சபையில் 84 பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளும் 117 சனசமூக நிலையங்களும் உள்ளன. இவற்றில் 71 முன்பள்ளிகள் சனசமூக நிலையங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. எமது சபையின் நேரடி நிர்வாகத்தின் கிழ் 02 முன்பள்ளிகள் அச்சுவேலியில் ஒன்றும் புத்தூரில் ஒன்றுமாக இயங்குகின்றன. இச் சனசமூக நிலையங்களும் முன்பள்ளி

களுக்குமாக அவர்களின் தேவை களுக்கேற்ப தளபாட வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் முன்பள்ளி சிறார்களுக்கான சத்துணவு பெற்றுக்கொடுத்தல் என்பன சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முன்பள்ளி ஆசிரியர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்கு கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டு அண்மைக்காலங்களில் அவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் பெற்றுக்கொடுக்கப்படுகிறது.

சுகாதார மேம்பாடு என்னும் போது வீதி ஓரங்களிலும், சந்தைகளிலும் அவற்றை அண்மித்த பகுதிகளிலுள்ள குப்பை கூழங்களை அகற்றுவதிலும் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். இது தவிர பொது மயானங்களைத் துப்பரவு செய்தல், பொதுச் சுகாதாரப் பணிமனையுடன் இணைந்த செயற்பாடாக பொதுக் கிணறுகளுக்குக் குளோரின் இடல், கட்டாக்காலி நாய்களை அழித்தல் (தற்போது இது நடைமுறையில் இல்லை) விலங்கு விசர் நோயைத் தடுக்கும் நடவடிக்கையாக வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடுதல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் எமது வளமான மண்ணுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் பாதீனிய அழிப்பிலும் எமது தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்ட போதிலும் அதை முற்றாக அழித்தொழிக்க முடியாமலிருப்பது எமது துர்ப்பாக்கியமே.

இவை தவிர ஒவ்வொரு உப அலுவலக எல்லைகளுக்குள்ளும் ஒவ்வொரு ஆயுர் வேத வைத்தியசாலைகள் நிறுவப்பட்டு எமது இரண்டு ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களைக் கொண்டு இலவச வைத்திய சேவைகளையும் செய்து வருகிறது எமது சபை. அதிலும் கிராமங்களின் பின்தங்கிய பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று நடமாடும் சேவைகளையும் எமது மருத்துவ உத்தியோகத்தர்கள் செய்தமை பாராட்டத்தக்க அம்சமாகும்.

மேலும் எமது பிரதேசத்திற்குட்பட்ட சந்தைகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டும் வீதிகள் பல தாரிடப்பட்டும் மிகச்சிறந்த முறையிற் பராமரிக்கப்படுகின்றன. மேலும் எமது சபையானது மக்களின் அன்றாட அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான குடிநீர் வசதியினை, நன்னீர் பெறமுடியாத கிராமங்களுக்கு நேரடியாகக் கொண்டு சென்று வழங்கிவருதலை ஒரு உன்னத சேவையெனத் கொள்ளலாம். தவிர தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அனுசரணையுடன் அச்சுவேலி, புத்தூர் உப அலுவலக எல்லைக்குட்பட்ட குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள பிரதேசங்களில் குறிப்பாக வாதரவத்தையில் தொட்டிகள் அமைத்து குழாய் நீர் விநியோகம் நடைபெறுவதும் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மற்றும் எமது உப அலுவலகங்கள் ஒவ்வொன்றும் தன்னகத்தே ஒவ்வொரு பொது நூலகங்களைக் கொண்டு இயங்குகின்றன. இந் நூலகங்களில் சின்னஞ்சிறுசுகளிலிருந்து பல்கலைக் கழகம் சென்று படிப்போர் வரையுள்ளோரின் தேடலுக்கான அறிவுப் பொக்கிஷங்களான புத்தகங்கள் நிறையவே உள்ளன. இதனால் எமது எதிர்கால சந்ததியினரான மாணவச்செல்வங்கள் இவற்றைப் படித்துப் பயன்பெற முடிகிறது. மேலும் அண்மைக் காலமாக நூலகங்களைப் பயன்படுத்துவோரை அதிகரிக்கச் செய்வதற்காகவும் அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் வாசகர் வட்டம், நூலகத் தொண்டர் குழு என்பன ஆரம்பிக்கப்பட்டு அனுபவம் மிக்க நூலகர்களினால் இவர்களுக்கு பயிற்சி வகுப்புகளும் நடாத்தப்படுகின்றன. இதுதவிர பொதுப் பயன்பாட்டிற்காக வீதியோரங்களில் நிழல் தரும் மரங்கள் நாட்டப்படுவதுடன் எமது உட்கிராமங்களிலுள்ள பொது இடங்களிலும் பயன்தரு மரங்கள் நாட்டப்படுகின்றன.

இவ்வாறான எமது சேவைகள் நிலைத்து நிற்கவும் மேலும் வளர்ச்சியடையவும் பொது மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும எமது வலி கிழக்கு பிரதேச சபை நாடி நிற்கிறது.

# வலி.கிழக்குப் பிரதேச இந்து ஆலய தரிசனம்



*திருமதி. கௌரி சுரேசன்*
Spe.Trd, B.A, Dip.in Edu(Merit), M.Ed
கல்வியியலாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்.

ஓர் ஆன்மா பிறந்து வளர்ந்து இறுதியில் உடலை விட்டுப் பிரியும் வரை எப்படி, எப்படி வாழ வேண்டும் என்று மறை நூல்கள் எடுத்தியம்புகின்றன. அதாவது ஒவ்வொரு மனிதனும் தனது நலத்திற்காகவும், உலக நலனிற்காகவும் சேர்ந்து செயல்கள் புரிய வேண்டும். இதனை வழிப்படுத்துவதற்கே மதங்களின் அடிப்படையில் விரதங்களும் வழிபாட்டு முறைகளும் தோற்றம் பெற்றன.

சனாதன தர்மம் என்று தொன்று தொட்டு நிலவிவரும் நமது சமயம் இன்று "இந்துசமயம்" என்று பொதுப்பெயரால் அழைக்கப்படுகின்றது. இந்துக்கள் கிராமங்கள் தோறும் கோயில்களை அமைத்து வழிபாடாற்றத் தொடங்கினர். கோயில்கள் இறைவனின் உறைவிடங்கள். இவை தேவகிருதம், தேவாகாரம், தேவாலயம் முதலான பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

"அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு"

என்பார்கள் தத்துவ நூல் வல்லார். பிண்டம் என்பது எம்முடல். அண்டம் என்பது பிரபஞ்சமாகும். ஏங்கும் பரந்து வியாபித்து நிற்கும் இறைவன் குடிகொள்வதாகக் கூறப்படும் கோவிலும் பிரபஞ்சமே. ஆன்மாக்கள் ஒடுக்கத்தையும் அமைதியையும் தரும் நிலையமாக விளங்குவது ஆலயமே. ஊரின் முக்கியமான அம்சமாகக் கோவில் விளங்குவதை மனதிற் கொண்டே

"கோவில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்"

என்ற மூதுரையை ஆன்றோர் வழங்கினர். இதற்கமையவே வலிகிழக்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் கிராமங்கள் தோறும் ஆலயங்கள் அமைந்துள்ளமையைக் குறிப்பிடலாம்.

வலிகிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள இந்து ஆலயங்கள்

| இல | கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | ஆலயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | இருபாலை தெற்கு J/ 257 | 06 |
| 02 | இருபாலை கிழக்கு J/ 258 | 06 |
| 03 | கல்வியங்காடு J/ 259 | 11 |
| 04 | கோப்பாய் தெற்கு J/ 260 | 11 |
| 05 | கோப்பாய் மத்தி J/ 261 | 21 |
| 06 | கோப்பாய் வடக்கு J/ 262 | 12 |
| 07 | உரும்பிராய் மேற்கு J/ 263 | 10 |
| 08 | உரும்பிராய் வடக்கு J/ 264 | 05 |
| 09 | உரும்பிராய் கிழக்கு J/ 266 | 05 |
| 10 | நீர்வேலி தெற்கு J/ 268 | 06 |

... நூல ... கோப்பாய்

| | | |
|---|---|---|
| 11 | நீர்வேலி வடக்கு J/ 269 | 06 |
| 12 | நீர்வேலி மேற்கு J/ 270 | 07 |
| 13 | சிறுப்பிட்டி கிழக்கு J/ 271 | 10 |
| 14 | சிறுப்பிட்டி மேற்கு J/ 272 | 04 |
| 15 | புத்தூர் மேற்கு J/ 273 | 04 |
| 16 | புத்தூர் வடக்கு J/ 274 | 05 |
| 17 | நவற்கிரி J/ 275 | 04 |
| 18 | ஆவரங்கால் கிழக்கு J/ 276 | 04 |
| 19 | ஆவரங்கால் மேற்கு J/ 277 | 06 |
| 20 | புத்தூர் கிழக்கு J/ 278 | 07 |
| 21 | அச்செழு J/ 279 | 02 |
| 22 | வாதரவத்தை J/ 280 | 11 |
| 23 | கதிரிப்பாய், தம்பாலை J/ 282 | 10 |
| 24 | இடைக்காடு J/ 283 | 08 |
| 25 | வளலாய் J/ 284 | 05 |
| 26 | அச்சுவேலி தெற்கு J/ 285 | 10 |
| | மொத்தம் | 196 |

**வலிகிழக்கு பிரதேச ஆலய வகைகளும் எண்ணிக்கையும்**

| இல | ஆலய வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | விநாயகர் ஆலயம் | 25 |
| 02 | சிவன் ஆலயங்கள் | 06 |
| 03 | அம்மன் ஆலயங்கள் | 65 |
| 04 | விஷ்ணு ஆலயங்கள் | 01 |
| 05 | முருகன் ஆலயங்கள் | 12 |
| 06 | வைரவர் ஆலயங்கள் | 55 |
| 07 | வீரபத்திரர் ஆலயங்கள் | 06 |
| 08 | நாகதம்பிரான் ஆலயங்கள் | 05 |
| 09 | ஏனையவை | 21 |

வலிகிழக்கு செயலர் பிரிவிலுள்ள கிராம அலுவலர்கள் பிரிவில் அண்மைக்கால ஆய்வுகளின்படி கிட்டத்தட்ட 196 இந்து ஆலயங்கள் காணப்படுகின்றன. இவை அளவில் பெரியவனவாகவும் சிறியனவாகவும், அகமமுறைப்படி அமையாத ஆலயங்கள், மூலமூர்த்திகளில் வைரவர், சிவன், அம்மன், விநாயகர், முருகன், நாகதம்பிரான், ஸ்ரீசக்கரவாழ்வார்(கிருஷ்ணன்) போன்ற மூர்த்திகள் எழுந்தருளி இருப்பதையும் மேலே காட்டப்பட்ட தரவுகளினூடாக அறிய முடிகின்றது.

இவ்வட்டவணைப்படி 21 ஏனைய ஆலயங்களினுள் உள்ளடக்கப்படுபவை-அண்ணமார், நாச்சிமார், பூதவராயர், ஐயனார், முனீஸ்வரர் ஆலயங்கள் என்பனவாகும்.

அந்தவகையில் வலிகிழக்கு செயலர் பிரிவிலுள்ள மக்கள் அதிக நம்பிக்கையோடு வழிபடும் அம்மன், வைரவர், விநாயகர் ஆகிய 3 கடவுளர்களையும் மையப்படுத்தி அவர்களும் ஏனைய

அடியவர்களும் உய்தி பெறும்பொருட்டு இக்கடவுளின் தோற்றம், விரதம், வழிபாட்டு முறை போன்ற விடயங்கள் தொகுத்து வழங்கப்படுகின்றன.

## 1. விநாயகர் வழிபாடு



விநாயகர் வழிபாடும் மனித வாழ்வும் ஒன்றோடொன்று இரண்டறக் கலந்துள்ளன. விநாயகர் என்றால் தனக்கு மேலே தலைவன் இல்லாதவன் எனும் பொருளாகும். விநாயகர் மீது நம்பிக்கை வைத்து தும்பிக்கையைப் பிடிப்பவர்களுக்கு வினைகள் எல்லாம் வேரோடு அகற்றி, துயரமெல்லாம் போக்கி, வேதனை தீர்ப்பவர். இதனை

*"வேழமுகத்து விநாயகனைத் தொழ*
*வாழ்வு மிகுந்து வரும்*
*வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ*
*துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே"*

எனும் அடிகள் விளக்குகின்றன.

### விநாயகர் தோற்றம்

விநாயகர் வழிபாட்டின் தோற்றம் பற்றி பல்வேறு புராணக்கதைகள், மரபுக்கதைகள் என்பன காணப்படுகின்றன. இந்துக்களிடையே முதல் வணக்கத்துக்கு உரியதாகப் போற்றப்படும் விநாயகர் வழிபாடு ஈழத்திலே இராவணன் காலத்திற்கு முன்பிருந்தே ஆரம்பித்ததாக கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

விநாயகக் கடவுளின் உருவத்தை இலகுவில் அமைக்க கல், மரம், செம்பு, மண் என்பவற்றைப் பயன்படுத்தலாம் என ஆகமங்கள் கூறுகின்றன. விநாயகரைப் பூஜை செய்வதற்கு இவற்றுடன் பளிங்கு, முத்து, பவளம், யனைத்தந்தம், வெள்ளெருக்கு வேர், அத்திமரம், அரைத்த சந்தனம், வெண்ணீறு, சர்க்கரை, பசுஞ்சாணி என்பவைகளினால் பிள்ளையாரை அமைக்கலாம்.

நாம் விநாயகரின் முன் காதுகளைப் பிடித்து, நெற்றியில் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போட்டு வணங்குகின்றோம். இதனை இப்படியும் பொருள் கொள்ளலாம். அதாவது எவ்வளவு உயர்ந்த கௌரவமுள்ள மனிதனானாலும் சிந்தையைக் கட்டுப்படுத்தி வாழ்க்கையில் பணிவுடன் இருக்க வேண்டும் என்பதை இந்த வணக்கம் அடையாளம் காட்டுகின்றது.

## 2. அம்மன் வழிபாடு



சிவன் அறிவின் ஆதாரம் என்றால் சக்தி அதன் இயக்கமாக அமைகின்றாள். சிவன் உலகத் தோற்றத்திற்கு அடிப்படையாக அமையும் போது சக்தி அதனை இயக்கும் தத்துவமாக விளங்குகின்றாள்.

"சக்தியின்றிச் சிவம் அசையவும் முடியாது"

எனச் சௌந்தர்ய லகரியில் சங்கராச்சாரியார் குறிப்பிடுகிறார்.

அமைதியான முகத்தோற்றமுடைய பெண் உருவங்களை இன்றைய இந்து மதத்தில் வழிபாடாற்றுகின்ற கௌரி, கல்யாணி, வடிவாம்பிகை ஆகிய தெய்வங்களாகவும், அச்சமூட்டும் வடிவத்தில் துர்க்கை, காளி, நீலி ஆகியவைகளையும் காணமுடிகின்றது. இன்று கிராமங்கள் தோறும் இவையே சக்தி வழிபாடாக வழிபடப்படுகின்றன. சக்தி வழிபாட்டில் ஆகம விதிமுறைக்கேற்ப நடைபெறும் ஆலயங்களில் ஸ்ரீசக்கர பூசை முதலிடம் பெறுகின்றது.

## 3. வைரவர் வழிபாடு



வைரவர் என்ற சொல்லின் பொருளை நோக்கின் வைரம் போன்று திண்மையான தேகம் படைத்தவராகவும், பக்தர்களுக்கு வைரத்தாலான கோட்டை போன்ற காவற் தெய்வமாக விளங்குவதாலும் சிவபெருமானின் காவற் திருக்கோலம் வைரவர் என அழைக்கப்பட்டது.

ப- படைத்தல்
ர- காத்தல்
வ- அழித்தல்

ஆகிய இம் முத்தொழில்களையும் ஆற்றுவதால் இறைவன் "பைரவன்" என அழைக்கப்படுகின்றார். வைரவரிற்கு எண்ணற்ற வடிவம் உண்டு. இவரிற்கு 4, 8, 10 என எண்ணற்ற கரங்கள் உண்டு. நிர்வாணமாக விளங்குவர். உக்கிரப்பார்வை, கோரப் பற்கள், ஜீவாலாகேசம், கபாலமாலை, சிங்கினி மாலை, சிலம்பு, பாம்பு இவற்றுடன் விளங்குவர்.

### வைரவர் உற்பத்தி

#### மகா வைரவர், அட்ட வைரவர் தோற்றம்

ஒரு சமயம் அந்தகசூரன் என்பவன் தேவர்களைத் துன்புறுத்தியதுடன் அவர்களைப் பெண்வேடத்துடன் திரியும்படி செய்து அவமானப்படுத்தினான். தேவர்களின் முறையீட்டுக்குச் செவிசாய்த்த சிவபெருமான் மகா வைரவரை உற்பத்தி செய்து அந்தகனைக் கொன்று வரும்படி ஆணையிட்டார். வைரவர் அதி உக்கிரத்துடன் அவன்மீது போர் தொடுத்தார். அவருடைய திருமேனியிலிருந்து அக்ஷ்ட வைரவர்கள் தோன்றினார். அந்த எட்டு வைரவர்களும் தேவர்கள் அக்ஷ்ட மாதர்களை அழித்து இன்பம் பெறச் செய்தனர்.

ஆலயங்களில் நடைபெறுகின்ற பூஜைகள், கிரியைகள் போன்ற வழிபாடுகளில் விநாயகருக்கு வணக்கம் செலுத்துதல் முதலிடம் பெறுவது போன்று இவற்றின் முடிவிலே வைரவரிற்கு வணக்கம் செலுத்துதல் முதலிடம் பெறுகின்றது.

ஆலய மகோற்சவத்தின் இறுதியில் வைரவர் சாந்தி செய்யப்படுவதும் நித்தியபூசையில் அர்த்தசாமப் பூசை முடிந்தபின் ஈசானபதத்தில் உள்ள வைரவரிடம் ஆலயத்திறப்பு ஒப்படைக்கப்படுவதையும் காணலாம். அது மட்டுமன்றி மகோற்சவ ஆரம்பத்தின் கிராமசாந்தியில் வைரவர் வழிபாடும் இடம்பெறுகின்றது. கோயிலைக் காவல் செய்யும் தெய்வம் மாத்திரமல்ல சுற்றாடலையும் வைரவர் காக்கின்றார். கோயில்களிலோ அல்லது அதன் சூழல்களிலோ திருட்டு, கொலை முதலிய பழிபாவங்களைப் புரிய மக்கள் அஞ்சுவதும் வைரவர் மீதுள்ள பயத்தினால் ஆகும். வைரவர் துக்ஷ்ட நிக்கிரக சிக்ஷ்ட பரிபாலனம் செய்பவர் ஆவர்.

**விநாயகர், அம்மன் வைரவர் விரதங்களும் பூஜைப் பொருட்களும் வருமாறு**

## விநாயகர்

☆ ஆவணி மாதச் சதுர்த்தி- ஆவணி மாதச் சுக்கிலபட்ச நான்காம் நாளாகிய சதுர்த்தி

அறுகம்புல்
தும்பை
வன்னி
மந்தரைப் பூ

☆ வெள்ளிக்கிழமை விரதம்- வைகாசி மாதத்து சுக்கிலபட்ச முதற் சுக்கிர வாரம் தொடக்கம்.

தேங்காய்
மோதகம்

☆ குமாரசஷ்டி விரதம்- கார்த்திகை மாதம் கிருஷ்ணபட்சப் பிரதமை முதல் மார்கழி மாதம் சுக்கிலபட்ச சஷ்டி திதி வரை

வெல்லம்
எள்ளுருண்டை
அப்பம்
அவல்
பொரி

☆ சங்கடஹர சதுர்த்தி- மாசி மாதம் தேய்பிறையில் செய்வாய்க் கிழமையோடு வரும் சதுர்த்தி தொடங்கி ஓர் ஆண்டு அனுட்டித்தல்

கரும்பு
வாழைப்பழம்
மாம்பழம்
பலாப்பழம்
கிழங்கு வகைகள்
பயறு வகைகள்

## சக்தி

☆ உமா சுக்ரவாரத்து விரதம்- சித்திரை மாதத்து வளர்பிறை முதல் வெள்ளிக்கிழமையில் ஆரம்பித்தல்

மல்லிகை, முல்லை
ரோஜா
தாமரை

☆ ஐப்பசி உத்திர விரதம்- ஐப்பசி மாத உத்திர நட்சத்திரத்தில் பார்வதி தேவியை எண்ணி நோற்பது

தாழம்பூ
வில்வம்
மருக்கொழுந்து
துளசி

பொது நூலகம் யாழ்ப்பாணம் கோப்பாய்

☆ நவராத்திரி விரதம்– புரட்டாதி மாத வளர்பிறைப் பிரதமை முதல் நவமி ஈறாகவரும் 9 நாட்கள்
வாழைப்பழம்
மாம்பழம்
மாதுளை
சக்கரைப் பொங்கல்
வெண் பொங்கல்

☆ வரலக்ஷ்மி விரதம்– ஆவணி மாத பௌர்ணமிக்கு முந்திய வெள்ளிக் கிழமை
கதம்பம்(கறிச்சாதம்)
தயிர்ச்சாதம்
பாயாசம்
வைரவர்

☆ தை மாதத்தில் வரும் முதல் செவ்வாய் தொடங்கி ஒவ்வொரு செவ்வாயும்(மங்கல வாரம்)

☆ சித்திரை மாதப் பரணி நட்சத்திரத்தையும்

☆ ஐப்பசி மாதப் பரணி நட்சத்திரத்தையும் விரதமாக அனுகூஷ்டித்தல்
சிவப்புப் பட்டு
மாவிளக்கு
நெய் அபிஷேகம்
முழுத்தேங்காய்
நார்ப்பழங்கள்
தேன்
வடை
அவித்த உணவுகள்
செண்பகப்பூ
சிவப்பு வர்ணப் பூசணிக்காய்

இந்துசமயம் நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது. மக்களை மக்களாக வாழ்வதற்கு வழிகாட்டுவது. வாழ்க்கையில் தன்னம்பிக்கையினையும் தளராத முயற்சியையும் தருவது. மனித நேயத்தை வளர்ப்பது. அனைத்திற்கும் ஆதாரமாக உள்ள இறைவனிடத்தில் நம்பிக்கை கொள்ளச் செய்வது. இந்த நம்பிக்கையுடன் கூடிய வழிபாடுதான் சமுதாய மேம்பாட்டிற்கும் செம்மைக்கும் மூல காரணமாக அமைகின்றது.

## கருத்தேற்றம்

☆ இறை வழிபாட்டு முறைகள் பற்றி இந்துக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல். இவற்றினை மக்களிடையே ஏற்படுத்த கருத்தரங்குகள் , இந்து மாநாடுகள், முத்தமிழ் விழாக்கள், இலத்திரனியல் செயற்பாடுகள், நாடகங்கள் என்பனவற்றினை நடாத்துதல்.

☆ யுத்தத்தால் அழிந்த, சிதைந்த, பூட்டிய ஆலயங்களைப் புனரமைத்தல்.

☆ வழிபாட்டு முறைகள், கிரியைகள், தீட்சை போன்ற மக்களிற்கு பயனுறுதி வழிகளில் நூல்களை ஆக்கி வெளியிடல்.

☆ கிராமங்கள் தோறும் வாழும் பாமர மக்களாலும் பயன்பெறக்கூடிய கிரியைகள், விரதங்கள், நிவர்த்திக்கடன் போன்ற சமய விடயங்களை இலவசமாக பிரசுரித்தல். அல்லது பிரசங்கங்களை அமைத்து மக்களைச் சென்றடையச் செய்தல்.

☆ கோயில்களிற்கு தமிழர் பண்பாடாற்றிற்கு ஏற்ற ஆடைகளை ஆண்,பெண் வர்க்கத்தினர் அணிந்து செல்லல்.

☆ தற்கால சமுகத்தில் பெரியவர், சிறியவரிடையே ஒழுக்கச் சீர்குலைவுகள் காணப்படுகின்றன. இதற்கு நின்மதி, பாதுகாப்பு, நம்பிக்கை, பக்தி, அன்பு, அகிம்சை போன்ற மேம்பாடுகளை நன்மை செய்கின்ற, பாதுகாக்கின்ற இறை வழிபாட்டினூடாக மேம்படுத்தல்.

☆ பாரம்பரியத்தை நிரூபித்து சிறந்த பண்பாடு, பழக்கவழக்கம், சமயப் பற்றுக்கொண்ட சீரிய சமூகத்தைத் தோற்றுவித்தல்.

**உசாத்துணை நூல்கள்**


1. பேராசிரியர்.எஸ்.நாராயணசாமி "மகா பைரவர்" திருவாடுதுறை ஆதீனம். 2004.

2. கலாநிதி.சி.க.சிற்றம்பலம் - "யாழ்ப்பாணம் தொன்மைவரலாறு", யாழ்.பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம், 1993

3. திரு.ப.சிவானந்த சர்மா "சைவ விரதங்களும் விழாக்களும்", திருக்கணித அச்சகம், மட்டுவில், 1988.

4. "ஐங்கரன் அமிர்தம்", இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மணிமண்டபத் திறப்பு விழா சிறப்பு மலர். மலர்க்குழு. ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மணிமண்டபம், இணுவில். 09-05-2004

5. "மகாசக்தி மகத்துவமலர்" நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் கோவில், மகா கும்பாபிஷேக சிறப்பு வெளியீடு, 1998.

6. "இந்து ஒளி", அகில இலங்கை இந்து மாமன்றம், பொன்விழா சிறப்பு மலர்- பாகம் - 1, அகில இலங்கை இந்து மாமன்றம். 2007.

## வலி. கிழக்குப் பிரதேசச் செயலகம்

### வெளிக்கள உத்தியோகத்தர்கள் - 2008



## வலி. கிழக்குப் பிரதேசச் செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள்

**இருப்பவர்கள் [இடமிருந்து வலமாக]**

1. திருமதி. கே. மாலினி (கலாசார உத்தியோகத்தர்)
2. திரு. ந. சத்தியரூபன் (கலாசார அபிவிருத்தி உதவியாளர்)
3. திரு. வி. தபேந்திரன் (சமூக சேவை உத்தியோகத்தர்)
4. செல்வி. எஸ். பிரேமினி (உதவி பிரதேச செயலர்)
5. திரு. சீ. ஏ. மோகன்றாஸ் (பிரதேச செயலர்)
6. திரு. எஸ். மகேந்திரன் (நிர்வாக உத்தியோகத்தர்)
7. திரு. என். நமசிவாயம் (காணி உத்தியோகத்தர்)
8. திரு. என். இராஜேஸ்வரன் (அபிவிருத்தி இணைப்பாளர்)
9. திரு. எஸ். அநுராகாந்தன் (விளையாட்டு உத்தியோகத்தர்)

**நிற்பவர்கள் [இடமிருந்து வலமாக]**

1. செல்வி. பி. வசந்தி (அபிவிருத்தி உதவியாளர்)
2. செல்வி. என். அஜந்தாதேவி (அபிவிருத்தி உதவியாளர்)
3. செல்வி.எஸ். வரதீஸ்வரி (சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர்)
4. செல்வி. எஸ். கஜேந்தினி (நிகழ்ச்சி திட்ட உதவியாளர்)
5. செல்வி .என். ஜெயகௌரி (மகளிர் அபிவிருத்தி அலுவலர்)
6. திருமதி. எஸ். தயாளினி (உளவளத்துணை உதவியாளர்)
7. செல்வி என். கஜானி (அபிவிருத்தி உதவியாளர்)
8. செல்வி. ஜ. அபிராமிதேவி (நிகழ்ச்சி திட்ட உதவியாளர்)
9. செல்வி. ஜே. மஞ்சுளா (நிகழ்ச்சி திட்ட உதவியாளர்)
10. திரு. எ. ஜேசுதாஸ் (அபிவிருத்தி உதவியாளர்)
11. திரு. இ. தயாபரன் (தொழில்நுட்ப அலுவலர்)
12. திரு. ச. காந்தீபன் (தொழில்நுட்ப அலுவலர்)
13. திரு. சி. முரளிநாத் (கணி வெளிக்கள போதனாசிரியர்)
14. திரு. ஆர். தனரூபன் (அபிவிருத்தி உதவியாளர்)

# வலி. கிழக்கு நுழைவாயில்



இ. கோகுலன் H.N.D.A
வாதரவத்தை, புத்தூர்

வலிகாமம் கிழக்குப் பகுதி பெரும்பாலும் செம்மண் நிலப்பரப்பைக் கொண்ட பொன் கொழிக்கும் பூமி. இதன் கிழக்கு எல்லைப்பகுதி கடல்நீர் ஏரியை (உப்பாறு தொண்டமான் ஆறு) கொண்டுள்ளது. அக்காலத்தில் இக்கடல் நீர் ஏரியை அண்டியபகுதிகள் நன்னீராக இருந்தது. காலப்போக்கில் இப்பகுதிகள் உவர் நிலமாக மாற்றமடைந்தது.

அமரர் பாலசிங்கம் முன்னெடுத்த ஆனையிறவுக்கும் தொண்டமனாற்றுக்கும் இடையிலான கடலேரித்திட்ட வேலைகள் ஆரம்பமாகி செயற்பட்டு இடைநடுவில் அரசியல் அனர்த்தங்களால் கைவிடப்பட்டபோது நின்ற வெள்ளத்தையும் வந்த வெள்ளம் கொண்டுபோன கதையாக மகாவலிகங்கை வடக்கே திருப்பிவடப்பட்டமையால் முன்பிருந்த நிலைமைகள் படிப்படியாக மாற்றம் பெற்றன. நல்ல விளைச்சல் தந்த இப்பகுதி மண்வளம் சவர் நிலமாக மாற்றமடைந்தது. இதனால் சுமார் 5000 ஏக்கர் நிலம் கடலேரித்திட்டத்தால் காவுகொள்ளப்பட்டது. வலிகாமம் கிழக்கு கரையோரப்பகுதிக்கு ஏற்பட்ட துர்அதிஷ்ட நிகழ்வாக அமைந்துவிட்டது.

இப்பகுதியில் அமைந்துள்ள பெருநிலப்பரப்பு மேய்ச்சல் தரவையாகவும் வயல்வெளிப்பிரதேசமாகவும் வருடம் பூராக சிறுதானிய உற்பத்தியாலும் பச்சைப்பசேலென இருக்கும் காட்சிகள் நினைவுத்திரையில் விழும் போது மீண்டும் மீண்டும் அசைபோட ஆனந்தம் கொந்தளிக்கும். இந்த நிலைமையானது நிலைத்து நிற்கவில்லையே என எண்ணக்கருக்கள் முட்டி மோதும் போது வவுனியாவுடன் கைவிடப்பட்ட மகாவலியை வடக்கே திருப்பும் கடலேரித்திட்ட முயற்சிகளில் மகாவலிகங்கையை நோவதா அரசியலாளரை நோவதா என்ற நினைப்பும் நிலையும் ஒன்றையொன்று தாவிக் கொள்வதைப் பார்க்கலாம். இது ஒரு நிலைப்பாடு.

ஆனையிறவில் இருந்து மட்டுவில் வாதரவத்தை ஊடாக சங்கானை செல்லும் வீதி (ABதரம்) வலி கிழக்கை ஊடுருவிச் செல்லும் பிரதான வீதியாக அமைந்திருந்தது. அக்காலத்தில் மாட்டுவண்டிகளும், தொடர்ந்து லொறிகள் போன்ற வாகனங்களும் பாவனைக்கு வந்தபோதும் கால்நடைப் பிரயாணங்களும் இப்பகுதி ஊடாகவே இடம்பெற்றதை நினைவுகூரலாம். இதனால் தூர இடங்களுக்கான பிரதான பாதையாகவும் குறுக்கு வழிப்பாதையாகவும் வாதரவத்தையூடான பாதையே அமைந்து இருந்து காலவிரையத்தையும் செவினத்தையும் கட்டுப்பாட்டில் வைத்து சிரமம் இன்றி பிரயாணம் அமைந்தது அந்தக்காலம். இதனால் யாழ்ப்பாணம் கண்டிவீதி (A9வீதி) பெரிதாக பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

இரண்டாம் உலகமகாயுத்தம் நடைபெற்றபோது அதன் தாக்கம் இலங்கை பூராகவும் பரவியிருந்தது இதனால் இலங்கையின் வடபகுதியின் பாரம்பரியமாக நிலவிவந்த கூட்டுக் குடும்ப வாழ்க்கையும் பண்டமாற்றும் எத்தகைய தாக்கத்தையும் எதிர்கொள்ளும் வல்லமை பொருந்தியதாக அமைந்தது. வன்னிப்பெருநிலப்பரப்பில் இருந்து தென்மராட்சி ஊடாக வலிகாமம் முழுமையும் பண்டமாற்று தாராளமாக இடம்பெற்றிருந்தது, நெல், தானியம் உள்வரவும் சிறுதானியங்கள் வெளியேறவும் ஊற்றுக்காலாக வலிகாமம் கிழக்கு இருந்தது. இந்த நடை முறையினால்

ஆனையிறவு சங்கானைப்பாதை பிரபல்யம் பெற்றது. வலிகாமம் கிழக்கில் விளைந்த பசும்பால் போன்ற வெள்ளுப்பு தாராளமாக விளைந்த பகுதி கடலேரித்திட்டப் பகுதியாகும். இதனால் இப்பகுதி அரசினர் கவனத்தையும் ஈர்ந்திருந்தது.

பிரதான போக்குவரத்து வீதிகளில் முக்கிய மையப்பகுதிகளில் ஆயங்கள் தோற்றுவிக்கப்பட்டன. வருவாய்த்துறைக்கு வளம் சேர்க்கவும் பர்மா, இந்தியா, போன்ற இடங்களில் இருந்து கடல் வழியாக இலங்கைக்கு கொண்டுவரப்படும் அத்தியாவசியப் பொருட்கள் வல்வெட்டித்துறையில் வந்து இறங்கி இப்பாதை ஊடாக தென்னிலங்கை சந்தையையும் ஒரு கலக்கு கலக்கிய காலம் அது. இதில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற வேறுபாடு இன்றி சகலரும் போட்டி போட்டு ஈடுபட்டனர். ஆனையிறவில் பாரிய பரிசோதனை நிலையம்(ஆயம்) அமைக்கப்பட்டிருந்தது. இதற்கு ஆனையிறவு பொலிஸ் நிலையம் என்பதாக தனி காவல்துறை நிலையம் இருந்தது. இதேபோன்று வலிகாம நுழைவாயிலான வண்ணாத்தி பாலத்துக்கு அருகாமையிலும் ஆயம் ஆரம்பிக்கப்பட்டு பிரபல்யம் பெற்றிருந்தது. குடிவரவு, குடிஅகல்வு கடமைகள் மூலம் வேற்றுநாட்டவர் குடியேற்றத்தையும் கட்டுப்படுத்தியதுடன் அந்நாட்டினதும் குடாநாட்டினதும் அத்தியாவசியப்பொருட்கள் கள்ளச்சந்தைக்கு உள்ளே வராமல் பார்த்துக் கொண்டனர். குடாநாட்டின் வலிகாமம் பகுதிக்கு வருபவர்களுக்கு நுழைவாயிலாக அமைந்திருந்தது. வாதரவத்தை என்னும் கிராமமாகும்.

வீரவாணிக்குறிச்சி பெருந்தெருவோரம் அமைந்த பகுதி. ஆயத்திற்கு மிக அணித்தாக அமைந்திருந்தது. நெடும் தூரத்தில் இருந்து வருவோர், போவோர் ஆகிய ஈருருள் வண்டி, மாட்டுவண்டி பிராணிகள் இவ்இடத்தை இடைத்தங்கல் களமாக கொள்வர். அக்காலத்தில் இந்த வளைவிலே மூன்று தேநீர்க்கடைகள் இரவுபகலாக இயங்கிவந்தன. நிரைநிரையாக தரித்து நிற்கும் மாட்டுவண்டிகளில் ஏற்றிவைத்திருக்கும் லாந்தர் விளக்குகள் இரம்பியமான பெரு ஒளியை பெருக்கி நிற்கும் போது விழாக்கோலம் காணும். இவ்வூருக்கே பெருமை சேர்க்கும். சிலர் வாதரத்தை மக்களால் மேடையேற்றப்படும் பப்பவராயன் கூத்தையும் பார்த்து விட்டு புத்தூரில் உள்ள மழவராயர் கந்தையாவின் அன்னசத்திரத்தில் உணவு உண்டு தமது பயணத்தை தொடர்வர். இதனை விட இவ்ஊருக்கே பெருமை சேர்க்கும் தாளங்குடை மடிக்க முடியாதது புயல்காற்றையும் தாங்கக்கூடியது இங்குள்ள கடைகளில் விற்பனையாகியது தற்போது உற்பத்தி இல்லை. வற்றாளைக் கிழங்கும், வெங்காயமும் காலபோகத்தில் களை கட்டி இருப்பதை இப்போது காண முடியவில்லை. நன்னீர் நிலைகள் சவர்நீராகிவிட்டன. அண்மைக்கிராமங்கள் கண்டிருக்கும் அடிப்படைவசதிகள் காலத்திற்கு ஏற்பவேனும் இம்மியளவும் இடம்பெறவில்லை. கோடைகாலத்தில் பட்டியாக கால்நடைவளர்ப்போர் தமது மாடுகள், செம்மறியாடுகளை கால்நடையாக நிரைநிரையாக வன்னிப்பெருநிலப்பரப்புக்கு கொண்டு செல்வதும் மாரிகாலத்தில் மீளவும் வலிகாமம் அழைத்து வருவதும் கண்கொள்ளாக்காட்சி. இவற்றுக்கு விதானை மூலம் உத்தரவுப்பத்திரம் பெற்றே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

ஆனால் இன்றோ... வாதரவத்தை நங்கை நல்லாள் தனிமைப்படுத்தப்பட்டு பொட்டிழந்து, பூவிழந்து, வளம் இழந்து, வனப்பிழந்து, பொலிவிழந்து நலிவுற்றிருப்பதை எவர்கண்டார்? பொட்டுவைத்து, பூச்சூடி, பொலிவூட்டி வனப்பு வளம் சேர்த்து மகுடம் சூட்ட யார் வருவார்?

வலி கிழக்கு நுழைவாயில் கிராமம் அக்காலத்தில் போவோர், வருவோரை உபசரித்து உயர்ந்து நின்றது. மீண்டும் ஒருமுறை வளமுடன் வாழ நுழைவாயிலில் ஒளிக்கீற்று வீசவேண்டும்.

# வலி கிழக்குப் பண்பாட்டுப் பேரவை

## பண்பாட்டு விழா ஒழுங்கமைப்புக் குழு - 2008



## வலி. கிழக்குப் பண்பாட்டுப் பேரவை
## பண்பாட்டு விழா ஒழுங்கமைப்புக் குழு

**இருப்பவர்கள் [இடமிருந்து வலம்]**

1. திரு. நா. கணபதிப்பிள்ளை
2. திரு. அ. க. த. கிருஷ்ணராசா
3. திரு. எஸ். முத்துக்குமாரசாமி
4. செல்வி. எஸ். பிரேமினி
5. திரு. சி. ஏ. மோகன்றாஸ்
6. திரு. எஸ். மகேந்திரன்
7. திரு. க. தர்மலிங்கம்
8. திருமதி. சிவை. குகனேசன்
9. திரு. து. மாணிக்கவாசகர்

**நிற்பவர்கள் [இடமிருந்து வலம்]**

1. திரு. ந. சத்தியரூபன்
2. திரு. எஸ். கேதீஸ்வரன்
3. திரு. இ. கணேசலிங்கம்
4. திரு. க. கிருபாகரன்
5. திரு. என். கமிலஸ்
6. திரு. க. வைத்தியநாதன்
7. திரு. எஸ். ரி. வரதராஜன்
8. திரு. ச. சசீபன்
9. திரு. எஸ். வசந்தகுமார்
10. திரு. ரி. கோகுலானந்தன்
11. திரு. எம். ஞானலிங்கம்
12. திரு. கே. சிவகுமார்
13. திரு. எஸ். முகுந்தன்
14. திரு. ரி. ஜெயசீலன்
15. திருமதி. கே. மாலினி

# என்னவளே



## (ஊர்க்கவி)

எஸ். கே. கிருபாகரன்
ஆசிரியர்.

கீழ்வலி காமத்தாள் -நீ
கள்ளிகட்டை யிருவாலை - உனை
நீர்வேலி கொண்டடைத்தேன் - நான்
எங்கோ பாய்கிறாய் - நீ
நிலாவரைக்கும் போய் கரந்தனென
புத்தூர் புகுந்து பூதர்மடத்திருந்தாலும்
அச்சுவேலி கொண்டு அதையும் அடைத்திடுவேன்
சிறுபிட்டியேறி அச்செழு வுடைத்து
ஆவரங்கால் கொண்டு பாய்ந்திடாதே
வாதரை வத்தைவழி வந்துவிடு
என்கோமகளே!

# வண் அத்தை குட்டி

## (சிலேடைக்கவி- அத்தை மகளையும் வண்ணத்துப் பூச்சியையும் பாடியது.)

முற்றத்து முருங்கையின் கீழ்
முக்கிற் பச்சைச்சளி வடிய
பரட்டை மயிர்க் கொட்டியாய்
பார்ப்பதற்கு அருவருப்பாய் தின்றாய்
எங்கோ சிலகாலம் காணவில்லை?
ஏதோ ஓர்மூலையில் கூண்டில் ருதுவானாயாம்
அத்தோ சிலநாள் கழிய
அதே மரத்தடியில் வியத்தகு
பட்டாம் பூச்சியாய் சிறகடிக்க
பார்த்து மயங்கினேன் நான்.

# நீர்வேலி வசந்தன் கூத்து – ஒரு சிறு குறிப்பு



க. திலகநாதன்,
விரிவுரையாளர் (நாடகத்துறை)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

இலங்கை வாழ் தமிழ் மக்களிடையே பல கலைகள் பயிலப்பட்டு வருகின்றன. இக்கலைகள் மக்களுக்கு இன்பம் அளிப்பன. அவர்களின் நோய் நொடிகளைப் போக்குவன. அவர்களுக்கு திருப்தி அளிப்பன. அவை சடங்கு சார்ந்தும் இடம்பெறும் சடங்கிலிருந்து விடுபட்டும் இடம்பெறும். இக் கலைகளைப் படைக்கும் அல்லது ஆக்கும் கலைஞரும், அவற்றை சுவைக்கும் மக்களும் பயனடைவர். கலைப்பொருளின் உருவாக்கம் கற்பனையுடனும் கண்டுபிடிப்புகளுடனும் கூடியது என்பர். கலைஞர் தம் ஆக்கத்திறமையால் நுகர்வோருக்கு முற்றிலும் புதியதொரு உலகைப் படைக்கின்றனர். படைத்தல் என்பது ஒரு புத்துருவாக்கச் செயல்முறை ஆகும். இச்செயல் முழுமை அடையாதவரை முடிவுப் பொருளான கலைப்பொருள் பற்றி எதுவும் கூறமுடியாது என்பது ஒரு சாராரின் நிலைப்பாடு ஆகும். கலை என்பது திட்டமிட்டு வருவதால் கலையாக்கத்தைக் கோட்பாடாக விளக்க முடியும் என்பது பிறிதொருசாரார் நிலைப்பாடாகும். அவர்களின் அபிப்பிராயப்படி கலையாக்கச் செயல் தயார்படுத்தல், அடைகாத்தல், அகக்காட்சி அல்லது கண்டுபிடிப்பு. ஸ்தூலமாக்குதல் என்ற படிமுறைகளுக்குள் நிகழ்கிறது.

விஷ்ணு தர்மோத்திரம் "கூட்டுப்புழு நிலையிலிருந்து வண்ணத்துப்பூச்சி வெளிக்கிளம்புவது போல கலைஞனின் தியானத்திலிருந்து கலைப் பொருட்கள் பிறக்கின்றன" என்கிறது. கூத்துருவாக்க முறைமையிலும் இத்தகைய ஒரு படைப்புச் செயற்பாட்டையே காண்கின்றோம்.

வசந்தன் கூத்து என்பது மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வன்னி போன்ற தமிழர் வாழும் பகுதிகளில் ஆடப்பட்டுவரும் சடங்கு சார்ந்த கூத்து மரபாகும். ஆயினும் எந்த ஒரு பிராந்தியத்திலும் இக்கூத்தே பிரதானமாக ஆடப்படுகின்றது எனக் கூறுமுடியாது மட்டக்களப்பிலே வடமோடி, தென்மோடி, மகிடி, வசந்தன், பறைமேளக்கூத்து என்பன ஆடப்படுகின்றன. அவர்கள் தமது பிரதான கூத்துக்களாக வடமோடி, தென்மோடியையே குறிப்பிடுவர். வன்னியில் கோவலன் கூத்து, வசந்தன் கூத்து, மகிடிக்கூத்து ஆடப்பட்டாலும் கோவலன் கூத்தையே பிரதான கூத்தாகக் கொள்வர் யாழ்ப்பாணத்தில் வடமோடி, தென்மோடி, காத்தவராயன், சிந்துநடைக் கூத்து என்பவற்றையே பிரதானமானவையாகக் கொள்வர் இவ்வாறு ஒவ்வொரு பிரதேசத்திலும் வசந்தன் கூத்து பிரதானமானதாக இல்லாவிடினும் அது ஆடப்படுவதைக் காண்கின்றோம்.

மட்டக்களப்பு பிரதேசத்தைப் பொறுத்தவரையில் வசந்தன் கூத்து பன்னிருவர் வட்டமாக நின்று கோல் கொண்டு தாள அமைதி பிசகாது ஆடும் ஓர் ஆடல் எனக் கூறப்படுகிறது. இவ்வாடல் சமயக் கரணத்துடன் தொடர்புபட்டது. ஊரிலே மழை இல்லாதபோது ஊரினை வடசேரி,

தென்சேரி என இரண்டாகப்பிரித்து கொம்பு முறிப்பார்கள். இக்கொம்பு முறிப்பில் வெற்றி கொண்டோர் இக்கூத்தினை ஆடி மகிழ்வர் . கண்ணகி அம்மன் மதுரையை எரித்தும் சினம் தணியாது கோபம் கொண்டு வருகையில் அம்மனை மகிழ்விக்க சிறுவர்கள் ஆடிய கூத்து இது என்பது ஒரு ஐதீகம். கண்ணகி அம்மன் குளிர்த்தி நாட்களிலும் இது ஆடப்படுகின்றது.

கண்ணகி அம்மன் வழிபாடு, குளிர்த்தி, கொம்பு முறித்தல் போன்ற நிகழ்வுகளிலும் வேளாண்மை முடிந்ததும் வயல் வெளிகளிலும் இக்கூத்து ஆடப்படுகின்றது. வசந்தன் கூத்தில் கதை இல்லை. ஆனால் ஆடலும் பாடலும் உண்டு. விடிய விடிய நடைபெறும் இக்கூத்தில் மத்தளமும் சல்லரியுமே வாத்தியங்களாகும்.

இங்கு வரும் இராகம் தாளம் என்பன தென்மோடிக் கூத்துவகையைச் சார்ந்தவை. வசந்தன் கூத்து கோயில் வெளியில் தனியான வட்டவடிவ அரங்க அமைப்பில் ஆடப்படும் அதேவேளை வேளாண்மை செய்து அறுவடை செய்த வயல் வெளிகளிலும் ஆடப்படும். வேளாண்மைத் தொழிலுடன் சம்பந்தப்பட்டது. வசந்தராசன் வசந்தன் கூத்து பார்க்க வருவது போலவும் வசந்தன் பிள்ளைகள் வேளாண்மை தொழிலுடன் தொடர்புடைய நிகழ்வுகளையும் பெரிய சிறிய தெங்வங்களின் கதைகளை அபிநயிப்பது போலவும் அக்கூத்து அமையும்.

யாழ்ப்பாணத்தில் கட்டுவன், உரும்பிராய், நீர்வேலி போன்ற பகுதிகளிலும் இக்கூத்து ஆடப்படுகின்றது. அண்மையில் யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தினர் கட்டுவன் வசந்தன் கூத்தினை மிக அழகாக ஆடினர். உரும்பிராயில் வீரபத்திரர் வசந்தன் சிறப்பாக ஆடப்படுகின்றது.

நீர்வேலிப்பகுதியில் நீர்வேலி வடக்கு கிராமத்தில் வசந்தன் கூத்தை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆடுகின்றனர். பரம்பரை பரம்பரையாக அவர்கள் இக்கூத்தை ஆடுகின்றனர். கூத்தின் அனைத்துப் பாத்திரங்களையும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே ஏற்றுக் கொள்ளர். வேறு எவரும் அனுமதிக்கப்படுவதில்லை.

கூத்தின் ஐதீகக் கதையைப் பொறுத்தவரை "வசந்தன் கூத்தை முதலில் அரிஅரிப்பட்டர் என்பவரே எழுதினார். அவருக்கு ஒருமுறை அம்மன் நோய் வந்து விட்டது அவர் நோயின் வலி தாங்க முடியாமல் அம்மனை நினைத்துப் பாட்டுப் பாடினார். உடனே அவருக்கு நோய் குணமாகிவிட்டது. அவர் உடனே அந்தப் பாடல்களை தனது நண்பர்கள் வேலை செய்யும் கம்மாலையிலும் பாடிக்காட்டினார். அங்கு வேலைசெய்யும் சிலர் பாடும் போது இரும்புத் துண்டுகளால் தாளம் போட மற்றவர்களும் எழுந்து ஆடிக்காட்டினர். இவ்வாறு தான் இக்கூத்து பிறந்தது என்பதாகும் பொதுவாக வசந்தன் கூத்து என்பது வோளான் தொழிலுடன் தொடர்புடையது எனக் கூறினாலும் இங்கு கம்மாலைத் தொழிலுடன் தொடங்கியது என்பது கவனிக்கத்தக்கது.

இன்று அக்கூத்தை நீர்வேலியில் வாழும் லோகேஸ்வரன் குடும்பம் ஆடுகின்றது. பதினைந்து தலைமுறையாக இக்கூத்து ஆடப்பட்டு வருகின்றது என்பது கவனிக்கத்தக்கது. ஆரம்பத்தில் நீர்வேலியில் ஆடப்பட்டு பின் திருமணத் தொடர்புள்ள பகுதிகளிலும் ஆடப்படுவதாகச் சொல்லப்படுகின்றது.

குறிப்பாக வைகாசி விசாகத்தின்போது முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவிலிலும் அக்கூத்து ஆடப்படும். மிக முக்கியமாக நேர்த்திக்கடன் கருதி ஆடப்படுவதைக் காணலாம். பக்திபூர்வமாக ஆடப்படும் இக்கூத்து ஆரம்பிக்கும் தினத்தன்று மாலை ஏழு மணிக்கு கோவிலுக்கு சென்று வாசலில் கும்பம் வைத்து அக்கும்பத்தில் தாம் ஆடும் வசந்தன் கம்புளையும் வைத்து பூசை செய்வார்கள். முடிந்ததும் காப்புப்பாடல் பாடி கூத்து ஆரம்பமாகும். கூத்தைஆட ஆரம்பித்தால் யாரும் வெளியே செல்லமுடியாதவாறு இறுக்கமான கட்டுப்பாடுகள் பேணப்பட்டன.

அவர்களிடம் இருபது வகையான வசந்தன் கூத்துக்கள் இருக்கின்றன. எட்டு அல்லது பத்து சோடிகள் சேர்ந்து ஆடுவார். முதலில் தரு சொல்லி பின்னர் பாட்டுப் பாடி ஆடப்படும். தேட்டம் துரிதம், நடனம், தனத்தொங்கல் என்று பதினெட்டு வசந்தன்களும் ஆடி முடிய இடைக்காப்பு கட்டப்படும்.

இந்த வசந்தன்கள் எல்லாமே அம்மனுக்கும் பிள்ளையாருக்கும் உரியன. ஆனால் பதினெழாவது வசந்தன் மட்டுமே அனுமாருக்குரியது. இறுதியாகக் காப்புக் கட்டி முடிய கும்ப பூசை செய்து அதனைச் தூக்கிக்கொண்டு கோயில் வீதியால் வலம்வந்து கும்பம் சரிக்கப்பட்டு கூத்து நிறைவுபெறும்.

இங்கு பாடகர்கள் இருவர் இருப்பர். பறை, தாளம், கம்பு என்பன இசைவாத்தியங்களாகப் பயன்படுத்தப்படும். ஆடுபவர்கள் வேட்டியைக் கொடுக்காகக் கட்டி அதன்மேல் சால்வையைப் போர்த்திக் கட்டியபடி ஆடுவர்.

உண்மையில் வசந்தன் கூத்து என்பது மகிழ்விற்குரிய மகிழ்ச்சிக்குரிய கலைவடிவமாகும். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல மட்டக்களப்பிலும் கூட இக்கலைவடிவம் அருகிச் செல்கின்றது என்பது மனவருத்தத்திற்குரிய விடயமாகும். படித்தவரும் கலைஆர்வம் கொண்டவரும் இக்கலையை வளர்க்கவேண்டும் என்பதே அனைவரினதும் அவாவாகும்.

## உசாவியவை:


சுந்தரம்பிள்ளை.செ., வட இலங்கை நாட்டார் அரங்கு, குமலன் புத்தக இல்லம், 2000.

மௌனகுரு.சி., அரங்கியல், பூபாலசிங்கம் பதிப்பகம், 2003.

மௌனகுரு.சி., ஈழத்து தமிழ் நாடக அரங்கு, குமரன் புத்தக இல்லம், 2004.

சண்முகநாதன். ம., தெய்வநாயகம். எஸ்., தமிழ் அரங்கியல் மரபும் மாற்றங்களும் (தொகுப்பு) - இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், 1997.

சிவத்தம்பி. கா., மௌனகுரு. சி., திலகநாதன். க., அரங்கு ஓர் அறிமுகம், - மனிதவள மேம்பாட்டு நிறுவனம், திருமலை, 1999.

# வலி. கிழக்குப் பிரதேசச் செயலகம்

## சமுர்த்தி உத்தியோகத்தர்கள் - 2008



## வலி. கிழக்குப் பிரதேசச் செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்கள்

முன் வரிசையில் இருப்பவர்கள் [இடமிருந்து வலம்]

1. திரு. ரி. பாலச்சந்திரன்
2. திருமதி. ஜெ. வசந்தி (சமுர்த்தி தலைமையக முகாமையாளர்)
3. திருமதி. கு. சுகந்தி (சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர்)
4. செல்வி. எஸ். பிரேமினி (உதவி பிரதேச செயலர்)
5. திரு. சி. ஏ. மோகன்றாஸ் (பிரதேச செயலர்)
6. திரு. எஸ். மகேந்திரன் (நிர்வாக உத்தியோகத்தர்)
7. திரு. என். கமிலஸ் (சமுர்த்தி முகாமையாளர்)
8. திரு. எஸ். முகுந்தன் (சமுர்த்தி முகாமையாளர்)
9. திரு. பி. சரேஸ்குமார் (சமுர்த்தி முகாமையாளர்)

இரண்டாம் வரிசையில் நிற்பவர்கள் [இடமிருந்து வலம்]

1. திரு. எம். சந்திரசேகரம்
2. திரு. எம். பத்மநாதன்
3. திரு. பி. சேவல்கொடியோன்
4. திரு. பி. தயேந்திரன்
5. திரு. ரி. கேதீசன்
6. திருமதி. ஆர். விஜயகுலமணி
7. திருமதி. பி. றஜனி
8. திருமதி. பி. கவிதா
9. திருமதி. பி. வதனரூபி
10. திருமதி. எம். புஸ்பமாலா
11. திருமதி. ஜெ. காந்தரூபி
12. திருமதி. எம். குமுதினி
13. செல்வி. இ. கலைவாணி
14. திரு. ரி. ஜெயசீலன்
15. திரு. ஏ. றமணன்
16. திரு. ரி. கோகுலானந்தன்

மூன்றாம் வரிசையில் நிற்பவர்கள் [இடமிருந்து வலம்]

1. திரு. எஸ். சிவனேசன்
2. திரு. ஏ. ஜெயசிங்கம்
3. திரு. சி. சிவகுமார்
4. திரு. கு. சிவகுமார்
5. திரு. எஸ். கேதீஸ்வரன்
6. திரு. எம். சுதர்சன்
7. திரு. எஸ். பிறேமதாஸ்
8. திரு. எம். கயூகரன்
9. திரு. யு. பகீரதன்

# செம்புல நங்கையை என்றுமே வாழ்த்துவம்



வே. இளையகுட்டி
புத்தூர்.

யாழ்குடா நங்கையின் குழல்தனைச்சீவி
நேர்வகிடு எடுத்தது போலொரு வீதி
யாழ் - பரு. வீதி
வீதியின் மேல்பால் கீழ்பாலாக
விரிந்து கிடப்பது வலி - கிழக்கு

மேற்றிசை செம்மண், ஊரெழு, உரும்பிராய்
கோவை நவக்கிரி அச்சுவேலியும்
ஆவரங்கா லொரு அமைந்து பரந்த
பூமி தன்னில் புழுதி வீசினும்
பொன்னாய் விளையும்.

நீர்வை, சிறுப்பிட்டி, இருவாட்டி மண்ணில்
சூல் கொண்ட கோதைபோல் தோற்றமளிக்கும்
வாழையினங்கள் ஈன்ற குலைகள்
வல்லை கடந்ததும் - வண்ணாத்திப்பால
எல்லை கடந்தும்
வலிகாமம் கிழக்கின் வருவாய் பெருக்கும்

கிழங்கு மரக்கறி வெங்காய மூடை
கனரக வாகன அணிதனில் ஏற்றி
தலை நகர் சென்று பணமலை குவித்த
இனிய நாட்கள் எண்ணிப் பார்க்க
அடடா........ அடடா!

கீழ்பால் அமைந்த நீர்வை இருபாலை
புதுவை கிழக்கு ஆவரங்காலும்
நெல்லொடு பலவகைத் தானியம் பெருக்க
தலை நகர் உணவு தடைப்பட்ட போதும்
உலைகள் கொதிக்கும் உந்தி நிரப்பும்.

மண்ணுடன் புரண்டு பயிர் வளர்த்தாலும்
கண்ணெனும் கல்வி கலாச்சாரத்
தொன்மையும் கொண்டது எம் வலி - கிழக்கு

உரும்பிராய் மண்ணின் பெருமை தன்னை
உலக அரங்கில் நிலைபெறச் செய்த
அஞ்சா நெஞ்சன், அடங்காத் தமிழன்
சுந்தரனா ரொடு ஐந்து லிங்கங்கள்

கோவையூர் தந்த மூத்தவர் 'சீ. சீ. எஸ்.'
ஆட்சியாளரின் ஆலோசகராய்
'டீ. எஸ்.' காலம் சிறப்புச் செய்த
கந்தையா மைந்தன் வைத்தியநாதன்

நைந்து கிடந்த பைந்தமிழ் ஏட்டினை
சொந்த நிதியில் நூலுருவாக்கி
செந்தமிழ் வளர்த்த சிறுப்பிட்டிச் சான்றோன்
சி. வை. என்று செல்லமாய் அழைக்கும்
தாமோதரனார்

புதுவை மைந்தன், சோமாஸ் கந்தனின்
அருள் நிறை வள்ளல் – இலவசக்கல்வி
பெறுவதற்காக,
பயன்தரு நிலம் பல நிலக் கொடை செய்த.
மிளிர்ந்து நிற்கும் சோமாஸ்கந்தத்
தாபகர் மழவர் மைந்தன் கந்தையா

நீர்வையூர் அயலொடு நிமிர்ந்தெழச் செய்த
கார் நிகர் வள்ளல் அத்தியார் அருணாசலம்

அச்சுவேலியூர் வைத்திய சாலை
'சென்திரேசா' மகளிர் வித்தியாலயம்
சொந்த நிதியும் நிலமும் கொடுத்து
தோன்றச் செய்த தோன்றலாம் 'செனேற்றர்'
'சேர்' எனும் சிறப்புடைச் சிற்றம்பலம் காடினர்

இன்னும் பல்லோர் ஒளிவிளக்கானார்
ஏற்றிய தீபச் சுடர்தனில் எங்கள்
வலி – கிழக்கு என்றும் வளர்ந்து வளம் பெற
வாழ்துவோம் கூடி வாழிய வாழி!

பொது நூல் கோப்பாய்

# வலி கிழக்கில் வளம் பெற்ற ஆட்டக்காவடி



சி. கிருஷ்ணபிள்ளை (சு.நீ.)
ஆவரங்கால்.

நாட்டுக் கூத்துக்கள் (ஆட்ட நாடகங்கள்), இசை நாடகங்கள் (கொட்டகைக் கூத்துக்கள்) வசன நாடகங்கள் மற்றும் காவடி, கரகம், கும்மி, கோலாட்டம் முதலானவை தமிழர்களின் பாரம்பரிய கலைகளாகும்.

இந்தப் பாரம்பரிய கலைகளில் சில இன்றைய சமூக மட்டத்தில் வீழ்ச்சி நிலையில் காணப்படுவதால் இன அடையாளத்தை சிதைக்கும் நிலை அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் ஆட்டக்காவடி அல்லது காவடி ஆட்டத்தை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

முறைப்படி அண்ணாவியிடம் பயிற்சி பெற்று முருகன் ஆலயங்களில் நேர்த்தி வைத்து நிறைவு செய்யும் இந்த ஆட்டக்காவடி நிகழ்வுகளுக்கும் கரக ஆட்டம், கும்மியாட்டம், கோலாட்டம் ஆகிய பாரம்பரிய கலை நிகழ்வுகளுக்கும் தனித்தனியாக ஆட்டமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

கரக ஆட்டம் மகாமாரி, முத்துமாரி அம்மன் அருள்பெற வேண்டி ஆடுவதாக அமைந்திருக்கும். தனி ஒருவரும் இதனை நிறைவு செய்யலாம். "உடுக்கு " பிரதான பின்னணி வாத்தியமாக அமைந்திருக்கும்.

கும்மி ஆட்டம், கோலாட்டம் என்பன நாட்டிய நடன நிகழ்வுகளைத் தழுவுகின்ற முறையில் வகுக்கப்பட்டுள்ளன.

காவடி ஆட்டத்தில் கரக ஆட்டம், கும்மிஆட்டம், கோலாட்டம் ஆகிய மூன்று ஆட்டங்களுடன் மேலதிகமாக விரிவான முறையில் ஆதிஆட்டம், கியால்ஆட்டம், கப்பல்ஆட்டம் என மொத்தம் ஆறு ஆட்டங்கள் அடங்கி இருக்கின்றன.

"கப்பல் ஆட்டம்" ஆழ்கடலில் கப்பலில் பாய்விரித்து தண்டு வலித்து பிரயாணம் செய்யும் செயற்பாட்டை சித்திரிப்பதாக அமைந்திருக்கும். ஒவ்வொரு ஆட்டமும் 15 முதல் 20 நிமிடங்கள் வரை கால எல்லை கொண்டதாக இருக்கும்.

இந்த ஆட்டக்காவடி நிகழ்வு இன்று பாடசாலை மற்றும் கலாசார விழாக்களில் மட்டுமேசிறிய அளவில் இடம் பெறும் ஒரு கலை நிகழ்வாக இடம் பெற்று வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

சைவப் பெருமக்களால் இறையருள் பெற வேண்டுதல் செய்யும் முகமாக நேர்த்தி வைத்து பலவிதமான முறைகளில் காவடிகள் எடுத்து நேர்த்திக்கடன் நிறைவு செய்து வழிபாடு செய்யும் முறைமை முருகன் ஆலயங்களில் இருந்து வந்தது.

இத்தகைய பாரம்பரிய கலைகள் வரிசையில் ஆட்டக்காவடியை மெருகூட்டி வளர்த்த பெருமை சந்நிதி முருகனுக்கு உண்டு. 1930களில் இருந்து 1960களின் பிற்பகுதிவரை சந்நிதி முருகன் ஆலயத்தில் இவ் ஆட்டக் காவடியைத் தரிசிக்க முடிந்தது. ஆனால் இன்று

காவடிக்கலைக்குரிய பிரபல்யம் பெற்ற சந்நிதி முருகன் ஆலயத்தில் இத்தகைய ஆட்டக்காவடிகளைக் காணமுடியாத ஒன்றாகி விட்டது.

வலி கிழக்குப் பிரதேசத்தின் சில கிராமங்களுக்கும் ஆட்டக்காவடிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

முதன் முதல் தோற்றம் பெற்ற ஆட்டக் காவடி அண்ணாவியரான சின்னத்தம்பி என்பவர் வலி கிழக்கில் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றார்.

1901ல் ஆவரங்கால் கிராமத்தில் பிறந்த இவர் ஆட்டக்காவடி முறைமையை தனது சுயமுயற்சி மூலம் இயைபுபடுத்தி இசை, தாளம், ராகம் ஆகியவைகளை ஒழுங்கமைத்து நான்கு இளைஞர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு ஆட்டக்காவடியில் பயிற்சி அளித்து 1930ம் ஆண்டில் செல்லச்சந்நிதி முருகனுக்கு நேர்த்தி வைத்து வலி - கிழக்கு கிராமத்தில் இருந்து ஆட்டக்காவடியை ஆடிச்சென்று செல்லச்சந்நிதியில் நேர்த்தியை நிறைவு செய்ததாக கூறப்படுகின்றது.

இந்த வகையில் யாழ் குடாநாட்டில் ஆட்டக்காவடியை அறிமுகப்படுத்தி, முதன் முதலில் அரங்கேற்றிய பெருமை எமது பிரதேசத்துக்கே உரியதாகும் என நம்பலாம்.

இதன் பின்னர் வலி - வடக்கில் காங்கேசன்துறை, மயிலிட்டி, வடமராட்சிப் பிரிவில் உடுப்பிட்டி, கெருடாவில் தென்மராட்சியில் மட்டுவில் ஆகிய கிராமங்களில் அண்ணாவிமார் தோன்றி ஆட்டக்காவடிக் கலையை வளர்த்து சந்நிதி முருகன் ஆலயத்தில் அரங்கேற்றினார்கள்.

இதே சமயம் அண்ணாவி சின்னத்தம்பியின் இரு புதல்வர்களும் தந்தையாரிடம் பயிற்சி பெற்று அண்ணாவிமார்களாகி பலாலி, வசாவிளான், சிறுப்பிட்டி, புத்தூர், நாவற்குளி, கைதடி ஆகிய கிராமங்களுக்கு சென்று அங்குள்ள இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து சந்நிதி முருகன் ஆலயத்தில் ஆட்டக்காவடியை நிறைவு செய்தார்கள்.

1950களில் சந்நிதி முருகன் ஆலயத்துக்கு மட்டுவில் வலி கிழக்கு பிரிவிலுள்ள சிறு ஆலயங்களில் நடைபெறும் உற்சவங்களில் சிறுவர்களை கோஷ்டியாக சேர்த்து நேர்த்தி வைத்து பயிற்சி அளித்து காவடி எடுத்து நேர்த்தியை நிறைவு செய்த பெருமையும் எமது பிரதேசத்துக்கு உண்டு.

1949களின் பிற்பகுதியில் இருந்து 1950கள் இறுதி வரை வலி - கிழக்கு பிரிவில் பாடசாலைகள் மற்றும் பொது அமைப்புக்கள் மட்டத்தில் ஆட்டக்காவடிக்கலை பிரபல்யம் பெற்றிருந்தமை குறிப்படத்தக்கது.

பல பாடசாலைகள் தங்கள் விழாக்களின் போது காவடி ஆட்டத்தை ஒரு நிகழ்வாக தங்கள் நிகழ்ச்சி நிரலில் சேர்த்திருந்தன. அந்நாட்களில் வலி - கிழக்கு தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ் மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன நடாத்திய சங்கீத விழா மற்றும் கலை விழாப்

போட்டிகளில் வலி - கிழக்குப் பிரிவின் சில பாடசாலைகள் பங்கு பற்றி ஆட்டக்காவடியை ஆடி நிறைவு செய்து முலாவது இடம் பெற்றதன் மூலம் பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற்றிருந்தனர்.

1951ம் ஆண்டில் மாட்சிமை தங்கிய இரண்டாவது எலிசபெத் மகாராணியும் அவர்தம் கணவர் எடின்பரோ கோமகனும் பொதுநலவாய நாடுகளுக்கு சுற்றுப் பிரயாணம் செய்யும் நோக்கில் இலங்கைக்கு வர இருந்தார்கள்.

அவர்களை வரவேற்கும் முகமாக கொழும்பில் அவர்கள் முன்னிலையில் நடைபெறும் கலைநிகழ்வுகளுக்காக அப்போதைய யாழ் மாவட்ட அரச அதிபர் திரு. P. J. ஹட்சன் அவர்களின் கோரிக்கைக்கு இணங்க யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத்தினர் பொது அமைப்புக்களில் இருந்து போட்டிகளின் மூலம் தெரிவு செய்த கலைநிகழ்ச்சிகளில் வலி - கிழக்குப் பிரிவில் இருந்து ஒரு காவடி ஆட்டக்குழு தெரிவு செய்யப்பட்டிருந்தமை. ஆட்டக்காவடி அல்லது காவடி ஆட்டம் வலி - கிழக்குப் பிரிவில் மிகமிக வலுவான முறையில் வளம் பெற்றிருந்தமைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும். (மகாராணியின் தந்தையார் காலமானதையடுத்து அரசதம்பதிகளின் வருகை இரத்துச் செய்யப்பட்படியால் இந்த நிகழ்வு நடைபெறவில்லை)

நேர்த்தி வைத்து நிறைவு செய்யும் ஆட்டக்காவடி நிகழ்வுக்கு இணைப்பாடகர்களையும், அணிசெய் கலைஞர்களையும், பங்களிப்பாளர்களையும் வலி - கிழக்கின் பல கிராமங்களில் இருந்தும் அண்ணாவிமார் தெரிவு செய்து வைத்திருப்பார்கள்.

ஆண்டு தோறும் காவடி நிகழ்வுக்கு அழைக்கப்படும் இவர்கள் அந்நாளில் கொட்டகைக் கூத்து இசை நாடகங்களுக்கு பின்னணி வழங்கும் புகழ் பெற்ற கலைஞர்களாக இருந்தபடியால் இவர்களைப் பார்ப்பதற்கும் இசையை ரசிப்பதற்கும் பெருமளவுமக்கள் வீதியில்கூடி இருப்பர்.

முருகப்பெருமான் இறையருள் பெற வேண்டுதல் செய்து ஆட்டக்காவடி எடுக்கும் முறை இன்று முற்றாக அருகிவிட்டது என்றே கூறலாம். இதற்கு முக்கிய காரணம் அண்ணாவி பரம்பரை அற்றுப்போனதேயாகும்.

இத்தகைய முருக இறையின்பம் தரும் ஆட்டக்காவடியை தூர்ந்து போகாமல் பேணிப்பாதுகாப்பது தமிழர் பாரம்பரிய கலைகளை கட்டிக்காக்கும் பொறுப்பு மிக்க தமிழர் சமுதாயத்தின் கடமையாகும்.

❋ ❋ ❋

# வலி கிழக்கில் சிறுவர், முதியோர் நலம் பேணும் அமைப்புக்கள்

## – ஓர் அறிமுகக் குறிப்பு



க. தர்மலிங்கம் (ச.நீ.)
நீர்வேலி.

உலகின் கவன ஈர்ப்புக்குள்ளான பருவத்தினருள் சிறியோரும், முதியோரும் முதன்மையானவர்கள். இவர்களுக்குரிய முக்கியத்துவம் கருதியே வருடந்தோறும் டிசம்பர் மாதம் முதல் திகதியை சிறுவர் மற்றும் முதியோர் தினமாக உலகளாவிய ரீதியில் பிரகடனஞ் செய்துள்ளனர்.

வலி கிழக்குப் பிரதேச செயலக எல்லைப்பரப்பில் சிறுவர் மற்றும் முதியோர் நலம் பேணும் அமைப்புக்களை ஆவணப்படுத்த வேண்டும் என்ற வேணவாவுடன் அவற்றை நேரடியாக நாடிச் செவ்வி கண்டு பெற்ற தகவல்களின் அடிப்படையில் இக்கட்டுரை அமைக்கப்பட்டிருக்கிறது. இட விரிவு அஞ்சி அறிமுகக் குறிப்புகளாகவே தகவல்கள் மலர்கின்றன.

### கருணாலயம் - நீர்வேலி


கருணாலயத்திலுள்ள கட்டடங்களுள் ஒன்று

மாடமாளிகை என வியக்கவைக்கும் கட்டிட அமைப்புடன் நீர்வேலியில் இராச பாதையை அண்டி கரந்தன் சந்திக்கு சமீபமாக "கருணாலயம்" கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. வேலுப்பிள்ளை பரமலிங்கம் என்ற கொடை வள்ளல் மட்டக்களப்பு, திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைத்த கருணாலயத்தைப் போல நீர்வேலியலும் ஆண்பிள்ளைகளின் பயன்பாட்டிற்கென கருணாலயத்தை அமைத்துள்ளார்.

2006ஆம் ஆண்டில் தைப்பூச நன்னாளில் கட்டிடம் திறக்கப்பெற்று 27.04.2007 தொடக்கம் பிள்ளைகள் அனுமதிக்கப்பட்டனர். தற்போது 43 பிள்ளைகளுடன் இன் நிறுவனம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

தாய் அல்லது தந்தையை இழந்த பிள்ளைகள் நீதிமன்ற உத்தரவின் பேரில் இங்கு அனுமதிக்கப்பட்டு சைவச் சூழலில் வளர வகை செய்திருக்கிறார்கள்.

## கருணை இல்லம் - உரும்பிராய்


கருணை இல்லத்தின் முன்புறத் தோற்றம்

யாழ், பலாலி பிரதான வீதியில் உருப்பிராய் கற்பக விநாயகர் ஆலயத்திற்குச் சமீபமாக கருணை இல்லம் அமைந்திருக்கின்றது. ஆதரவற்ற பெண் பிள்ளைகளுக்கு அபயக்கரம் நீட்டும் அமைப்பாக இது விளங்குகிறது.

தமிழ் அனாதைகள் அறக்கட்டளை என்ற அமைப்பின் நிறுவுநர் பொன் தெய்வேந்திரம் என்ற கொடைவள்ளலால் இந்நிறுவனம் அமைக்கப்பட்டது.

தற்போது 29 பெண்பிள்ளைகள் இங்கு தங்கியுள்ளனர். இங்கு 06 வயதுக்கும், 12 வயதுக்கும் இடைப்பட்ட வயதிலுள்ள பெண்பிள்ளைகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

## பாலர் பகல் விடுதி - நீர்வேலி

சமுதாய முன்னேற்றக்கழகம் என்ற அமைப்பினால் 08.07.1956 இல் ஆரம்பிக் கப்பட்ட இவ்விடுதி நீர்வேலி கந்தசாமி கோவில் தெற்கு வீதியில் அமைந்திருக்கிறது.


பாலர் பகல் விடுதியின் முகப்புத் தோற்றம்

மூன்று வயதுக்கும் ஆறுவயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகள் பகல் வேளைகளில் பராமரிக்கப் படுகின்றனர். இத்தகைய பராம ரிக்கும் பண்பு ரஷ்யாவில் ஆரம்பிக்கப்பட்டதாக அறிய முடிகிறது. இக் கலாசாரம் மேற்குலக நாடுகளில் தீவிரமாகக் கைக்கொள்ளப்படுகிறது.

வேலைக்குச் செல்லும் பெற்றோர் தமக்குக் கிடைத்த வரப்பிரசாதமென இந்நிறுவனச் செயற்பாட்டை ஆதரிக்கின்றனர்.

தற்போது 86 பிள்ளைகள் பகல் பராமரிப்புக்கு உட்படுகின்றனர். இப்பராமரிப்புக்காகப் பெற்றோரிடமிருந்து சிறுதொகைக் கட்டணம் அறவிடப்படுகிறது.

## பாலர் பகல் விடுதி - கோப்பாய்

கோப்பாய் வடக்கு, சரவணபவானந்த வித்தியாலயத்தை அண்மித்து பாலர் பகல் விடுதி அமைந்துள்ளது.




இங்கும் மூன்று வயதுக்கும் ஆறு வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகள் பகல் வேளையில் மட்டும் பராமரிக்கப் படுகின்றனர். பெரும்பாலன பெற்றோர் கூலித்தொழிலாளர்களாக உள்ள நிலையில் அவர்களுக்கு இச்செயற்பாடு பேருதவி புரிவதாகச் சொல்கின்றனர்.

சுமார் ஐம்பது மாணவர்களும் மூன்று ஆசிரியைகளும் இங்கு உள்ளனர். சமூக விருத்தி கழகம் என்ற நிறுவனத்தினரால் இவ்விடுதி நடத்தப்படுகின்றது.

## மக்கள் நலன்காக்கும் பிரிவு - இருபாலை




1986ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் கோப்பாய் பிரதேச செயலக எல்லைப் பரப்பில் வசிப்பபோருக்கு மாத்திரம் சேவையை வழங்குகின்றது. இதன் அலுவலகம் இருபாலைச் சந்திக்குச் சமீபமாக பழம் வீதியில் அமைந்துள்ளது.

குறிப்பாக தாய் அல்லது தந்தையை இழந்த மாணவர்களுக்கான மேம்பாட்டுக்கெனப் பொருளாதார உதவியை வழங்கி வருகிறது. கல்வி உபகரணங்கள் , போசாக்கு உணவுகள், தனியார் கல்வி நிறுவனக் கல்விக்கான உதவு தொகைகள் என இவர்களது சேவை விரிந்து செல்கிறது. இவை 15 வயதுக்குட்பட்ட பிள்ளைகளையே மையப்படுத்தி வழங்கப்படுகின்றது.

தற்போது 30 பிள்ளைகள் பயனாளிகளாக உள்ளனர்.

இது தவிர கணவனை இழந்தோருக்கான சுழற்சிக்கடன் திட்டம், தொழிற்கல்வி வழங்கல், சுய தொழில்திட்டம் முதலிய செயற்பாடுகளையும் இந்நிறுவனம் முன்னெடுத்துள்ளது.

## பாலம் சிறுவர் இல்லம் - இருபாலை கோப்பாய்

சுவிஸ்லாந்திலுள்ள "நியூலைப் சேச்" என்ற தேவாலயத்தின் உதவியோடு 05.03.1999ஆம் ஆண்டு யாழ், பருத்தித்துறை வீதிக்கும் இருபாலைச் சந்திக்கும் சமீபமாக இந்நிறுவனம் அமைக்கப்பட்டது.

கொழும்பைத் தலைமையகமாக்கொண்ட "பாலம் செயற்றிட்டம்"(யுடயய அசழதநஉவ) என்ற அமைப்பினர் இதனை நடத்துகின்றனர்.

தற்போது இவ் இல்லத்தில் 13 ஆண்களும், 18 பெண்பிள்ளைகளுமாக மொத்தம் 31 பிள்ளைகள் உள்ளனர்.

## மனித மேம்பாட்டுக் கல்வி நிறுவனம் - கோப்பாய்


சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்வி நிலையம்

வடபிராந்திய சத்தியசாயி சேவா சங்கத்தில் அங்கம் வகிக்கும் கோப்பாய் சத்திய சாயி சேவை நிலையத்தால் பரிபாலிக்கப்படுகிறது.

அன்பை அடிப்படையாகக் கொண்டு வாழ்வியலில் வெற்றி காணலாம் என்ற பகவான் பாபாவின் செய்தியை வலுவுள்ளதாக்கும் வகையில் இவர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். பொருளாதார நிலையில் நலிவுற்ற மாணவர்களுக்கும் உதவிகளை வழங்கி வருகின்றனர்.

## மாறிவில் மகளிர் விடுதி - அச்சுவேலி


மாறிவில் விடுதியின் முன்புறத் தோற்றம்

இயேசு சபை அகதிகள் பணியகம் (JRS) என்ற நிறுவனத்தால் பரிபாலனம் செய்யப் படுகிறது.

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரிக்கு அணித்தாக இவ் விடுதி அமைந்துள்ளது.

12.03.2004 இல் தனது செயற்பாட்டை ஆரம்பித்த இவ்விடுதியில் தற்போது 40 பெண் பிள்ளைகள் உள்யளனர். நான்கு அருட் சகோதரிகள் இங்கு தங்கியிருந்து ஆண்டவரின் குழந்தைகளென இப்பிள்ளைகளைப் பராமரிக்கின்றனர்.

கத்தோலிக்கத் திருச்சபையின் ஆளுகைக்கு உட்பட்ட தொடர்பகம், அஞ்சலி அகம் முதலிய அமைப்புகளும் இவர்களது பணிக்கு உந்து சக்தியாக விளங்குகின்றனர்.

## சங்கமம் - கோப்பாய்

சங்கமத்தில் உள்ள கட்டடத் தொகுதிகளுட் சில...


தென்கோவை மரியன்னை தேவாலயத்தின் பின்புறமாக மிகப பெரிய வளாகத்தில் 10 புதிய வீடு களை உள்ளடக்கிச் சங்கமம் காட்சி தருகிறது.

அமலமரித் தியாகிகள் சபையால் (OMI)

நிர்வகிக்கப்படும் இந்நிறுவனத்தில் 130 பிள்ளைகள் இலவசக் கல்வியைப் பெறுகின்றனர். பாடசாலை நேரம் தவிர்ந்த பிற நேரங்களில் இங்கு வரும் இப்பிள்ளைகளுக்கு பாடசாலைசார் கல்விக்கான வழிகாட்டல் உதவிகளும் மற்றும் கலைசார் கற்கைகளும் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

பிள்ளைகளின் உள உடல் இயக்கத் திறன்களை மேம்படுத்தும் வகையில் இவர்களுக்கான செயற்பாடுகள் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன. சமய நிறுவனமாக இருந்தாலும் சமயங்கடந்த நிலையில் பிள்ளைகளுக்கான செயற்பாடுகள் அமைந்துள்ளமையைக் காண முடிந்தது.

## "பாசச்சோலை" கியுடெக் சிறுவர் பராமரிப்பு இல்லம் - கோப்பாய்


பாசச்சோலை இல்லத்தின் பக்கத் தோற்றம்

கோப்பாய், இருபாலைச் சந்திக்குச் சமீபமாக கோண்டாவில் வீதியில் இந் நிறுவனம் அமைந்துள்ளது. யாழ் ஆயர் இல்லத்துடன் தொடர்புடைய கரித்தாஸ், கியுடெக் நிறுவனத்தினர் இச்சிறுவர் இல்லத்தை நடாத்தி வருகின்றனர்.

18.03.1992 இல் இந்த இல்லப் பணிகள் 25 பெண் பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்டனவாயினும் 1995 இல் இடம்பெற்ற வலிகாம இடப்பெயர்வுடன் செயற்பாடுகள் தடைப்பட்டுப் போயின. ஆயினும் பின் 2000 ஆம் ஆண்டில் மீண்டும் இல்லப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் போது ஆண்பிள்ளைகளுக்கான இல்லமாக இது செயற்படத் தொடங்கியது. தற்போது 18 ஆண் பிள்ளைகள் இங்கு இருக்கின்றனர்.

# முதியோர் இல்லங்கள்

## அன்னை தெரேசா அமைதி இல்லம் - கோப்பாய்


அமைதி இல்ல முகப்புத் தோற்றம்

கல்கத்தாவை தலைமையகமாகக் கொண்ட அன்புக் கன்னியர் மறை பரப்புச் சபையினரால் கோப்பாயில் 1998 இல் அமைதி இல்லம் நிறுவப்பட்டது.

இருபாலைச் சந்தியையும் கோண்டா விலையும் இணைக்கும் வீதியில், கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குச் சமீபமாக இந்த இல்லம் அமைந்திருக்கிறது.

கொழும்பு, கண்டி, மொரட்டுவை, திருகோணமலை, வவுனியா, காலி, குருநாகல், கோப்பாய் என இலங்கையில் எட்டு இடங்களில் இத்தகைய இல்லங்கள் உள்ளன.

கோப்பாய் அமைதி இல்லத்தில் கென்யா, இந்தியா, வங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த ஐந்து அருட் சகோதரிகள் சமயங் கடந்த நிலையில் சமூகப் பணியாற்றுகின்றனர்.

குடும்பத்தவரால் கைவிடப்பட்ட, திக்கற்றவர்களுக்கு அமைதி இல்லமே கதியாக அமைந்திருக்கின்றது. இங்கு தற்போது 35 முதியவர்களும், 05 பிள்ளைகளும் தங்கியுள்ளனர்.

அமைதி இல்லத்தின் சூழலும் தொண்டாற்றும் அருட்சகோதரிகளின் கனிவும் வார்த்தைகளால் வடிக்கப்பட முடியாதது.

அமைதி இல்லப் பணிகளுக்காக எவரிடமிருந்தும் எத்தகைய அன்பளிப்புக்களையும் இவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை என்பது இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

## மெதடிஸ் மிசன் முதியோர் இல்லம் - புத்தூர்


முதியோர் இல்லத்தின் முகப்புத் தோற்றம்

மறை பரப்பும் பணியில் ஈடுபட்ட மெதடிஸ்மிசனரிமார் 1901 இல் புத்தூரில் ஓர் ஆங்கில மருத்துவமனையை நிறுவினர்.

இதனுடன் சேர்ந்த அங்கமாக 1994இல் முதியோரைப் பராமரிக்கும் செயற்பாடுகள் ஆரம்பமாகின.

60 வயதிற்கு மேற்பட்ட சுகதேகியாகவுள்ள ஆண், பெண் இருபாலரும் இவ் இல்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். தற்போது உணவுக்காகவும் இருப்பிடத்திற்காகவும் மாதமொன்றிற்கு ரூபா 4000ஃஸ்ரீ அறவிடுகின்றனர்.

10 ஆண்கள், 08 பெண்கள் என மொத்தம் 18 பேர் தற்போது தங்கியுள்ளனர். இவர்களில் அநேகர் அரச ஓய்வூதியர்களாக இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## நிறைவுரை

முற்கண்டவை தவிர இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் கிளை, சர்வ தேச லயன்ஸ் கழக அச்சுவேலி, கோப்பாய் கிளைகள் முதலியன சிறுவர் முதியோர் நலச் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றி வருகின்றன.

நம் மண்ணில் தீராத அவலமாகத் தொடரும் யுத்தத்தின் வடுக்களால் ஏதோ ஒரு வகையில் தாக்குண்டவர்களே இங்குள்ள சிறுவர், முதியோர் நலம் பேணும் அமைப்புக்களில் தங்கியிருக்கின்றனர். சிறுவர்களும் முதியோர்களும் நமது மண்ணின் அரும்பெரும் சொத்துக்கள் ஆவர். இவர்களை நமது செல்வங்களாகக் கொண்டு மதிப்பது நம்மவர் கடனாகும். இதுபற்றிய விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்.

இவர்களைத் தமது உறவுகளாகக் கருதித் தொண்டுள்ளத்தோடு பராமரிக்கும் தொண்டர்கள் தெய்வீகப் பணியாளரேயாவர்.

# பொய்மையும் வாய்மையிடத்த....

## – கோப்பாய் சிவம்



"கவனமாய்ப் போட்டு வாங்கோ" வழக்கமான வார்த்தைகள் வழக்கமான ஆதங்கத்துடன் இயல்பாக வாயிலிருந்து தானே உதிர முத்தம்மா விடை கொடுக்கிறாள், ஏதோ நீண்ட பயணத்திற்கு விடை கொடுப்பதுபோல. பதிலுக்கு ராசரத்தினமும்,

"பிள்ளையார்தான் துணை. நீயும் கவனமாய் இரு. பிள்ளையள் கவனம். மூத்தவனைக் கண்டபடி திரிய விடாதை"

என்று விடைபெற்றுக் கொண்டு லொறியில் ஏறி அமர்கிறான். வழக்கம்போல மணல் ஏற்றிவரும் தனது தொழிலுக்குத்தான் அவன் புறப்படுகிறான். என்றாலும் கவனம், கவனம் என ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ள வேண்டிய காலமாக இருக்கிறது. நாட்டு நடப்பு அப்படி உள்ளது. எந்த நோரம் எங்கே என்ன நடக்கும் என்பது சொல்லமுடியாத நிலை.

வழக்கம்போல ஒழுங்கை முடிவில் இருக்கும் ஆலடிப் பிள்ளையாரின் முன்னால் லொறி நிற்கிறது. தயாராக வைத்திருந்த கற்பூரம் தீப்பெட்டியையும் தேங்காயையும் எடுத்துக்கொண்டு இறங்கிப் பிள்ளையாரின்முன் வந்து கற்பூரத்தையும் ஏற்றித் தேங்காயையும் உடைத்து வணங்குகிறான். "பிள்ளையாரே, வழியிலை ஒரு தொந்தரவும் இல்லாமல் வந்துசேர வழிகாட்டு" என்று சொல்லிக்கொண்டு திரும்பியவன் திகைப்போடு மறுபடியும் பிள்ளையாரின் முகத்தைக் கூர்ந்து கவனிக்கிறான். ஏனோ பிள்ளையார் தன்னைப்பார்த்துச் சிரிப்பதுபோல அவனுக்குத் தோன்றியதால்தான் அவ்வாறு மீண்டும் கூர்ந்து பார்த்தவன் அது தனது பிரமையாக்கும் என நினைத்துச் சிரித்துக்கொண்டு திரும்புகிறான். ஐந்து ரூபா விற்ற தேங்காய் ஐம்பது ரூபா விற்கும்போதும் தனது வழக்கமான வழிபாட்டை அவன் நிறுத்தவில்லை.

தேங்காய்ச்சொட்டு ஒன்றை வாயில் போட்டுக்கொண்டு லொறிக்குத் திரும்ப அங்கு கிளீனர் தவபாலனும் வந்துசேரச் சரியாக இருந்தது. "ஏறு தவம்" என்று கூறிக்கொண்டு தானும் ஏறி அமர்ந்து லொறியைக் கிளப்பினான்.

புத்தூர்ச் சந்தியை நெருங்கியதும் மிக நிதானமாக வீதியில் போக்குவரத்து இருக்கிறதா, பிரச்சினை ஒன்றும் இல்லையா என்பதை அவதானித்துக்கொண்டு வடமராட்சியை நோக்கித் திருப்புகிறான். போகும் வழியெங்கும் சோதனைச் சாவடிகளும் விசாரணைகளும் மண் ஏற்றும் பெமிற் பரிசோதனையும் என்று மெதுவாக வாகனம் நகர்கிறது.

முன்பு மிகச் சுதந்திரமாக லாபகரமான தொழிலாக நடந்துவந்த இந்த வியாபாரம் இன்று நெருக்கடி

மிகுந்த ஒன்றாக அமைந்துவிட்டதே எனக் கவலைப்பட்டவாறு லொறியைச் செலுத்துகிறான் இராசரத்தினம். பெமிற் எடுக்கவேண்டும். அது கிடைப்பதே குதிரைக் கொம்பு. அதன்பின் மணல் ஏற்றச் செல்வதற்கு எல்லா நாட்களிலும் அனுமதி கிடைப்பதில்லை. டீசல் விலையோ பலமடங்கு ஏறிவிட்டது. அரைப் பயணத்துடன் திரும்பிய நாட்கள் அநேகம். கொழுத்தும் வெயிலில் நடுத்தெருவில் மணிக்கணக்காக நின்று தூங்கும் நாட்கள் அநேகம்.

வல்லை முனியப்பர் கோவில் நெருங்கும்போது பல வாகனங்கள் காத்திருப்பது தெரிகிறது. 'ஓகோ, பாதை அடைச்சாச்சுப்போலை..." என முணு முணுத்துக்கொண்டு தனது லொறியையும் பின்னால் நிறுத்துகிறான்.

''துலைஞ்சுது போ. இனி எத்தினை மணிக்குத் திறக்கிறாங்களோ தெரியாது'' என்று புறுபுறுத்தான் தவபாலன்.

** ** **

நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார் கோவிலின் வாசலில் தொண்டர் கூட்டம் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தது. கும்பாபிஷேகத்திற்கு நாள் வைத்துவிட்ட உற்சாகத்தில் வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. மேஸ்திரியார் புறு புறுத்தார்,

''நான் அண்டைக்கே சொன்னனான் மணல் இன்னும் தேவையெண்டு. பேசாமலிருந்திட்டு இப்ப அவசரமாய் வேலையை முடி எண்டால் மணல் இல்லாமல் நான் என்ன செய்யிறது''

''நானும் எல்லா இடமும் அலைஞ்சுபோட்டுத்தான் வந்து நிக்கிறன். ஒரு இடமும் கிடைக்கேல்லை. இனிப் பிள்ளையார்தான் வழி விடவேணும்''

அந்த வேலைக்குப் பொறுப் பானவர் சலிப்போடு சொல்கிறார்.

''எப்பிடியும் இண்டைக்குக் கிடைச்சாத்தான் வேலையைக் கொண்டு போகலாம். பேந்து என்னைக் குற்றம் சொல்ல வேண்டாம''

மேஸ்திரியின் வார்த்தைகள் முடியுமுன்னரே மறுபடி மணலுக்கு ஓடுகிறார் அவர். 'ஒரு லோட் மணல் பெறுவதற்கு எவ்வளவு சிரமப்பட வேண்டியுள்ளது இந்த நாட்டிலே' என்று எண்ணிக்கொண்டே விரைகிறார் அவர்.

** ** **

ஒருவழியாகப் பாதை திறந்து தடைகள் பலவற்றையும் தாண்டி மணல் ஏற்றிக்கொண்டு திரும்பியாயிற்று. வரும்போது தான் 'செக்கிங்' அதிகம். ஒவ்வோர் இடத்திலும் நின்று அடையாளஅட்டை, வாகன அனுமதிப் பத்திரம் முதல் மணல் பெமிற் வரை சகல பத்திரங்களும் பார்வையிடப்பட்டு மெல்ல மெல்ல வல்லை வெளியை நெருங்கிவிட்டது லொறி. அங்கும் வழமைபோல் யாவும் பரிசோதிக் கப்பட்டன. கடும் காற்றில் பத்திரங்கள் சில கையைவிட்டுப் பறந்தன. கிளீனர் தவபாலன் காற்றுடன் போட்டிபோட்டு ஓடிப்

பொறுக்கிச் சேர்த்தான். லொறியை இயக்கியபடி,

"எல்லாம் சரியாய் இருக்கே தவம்? வடிவாய்ப் பார்"

என்று இராசரத்தினம் கேட்க,
"ஓமண்ணை"

என்று பதில் சொல்லிய படி அவற்றை உள்ளே வைத்தான் தவபாலன். லொறி சீராகப் போகத் தொடங்கியது. வழியில் 'மறிப்புக்கள்' எதுவும் இல்லாமலிருந்தது. புத்தூரில் லொறியை நிறுத்தித் தனக்குத் தெரிந்த ஒருவரிடம் தான் கொண்டுவந்த 'கறிச்சாமா'னையும் கொடுத்து,

"மணல் ஏத்திப்போட்டன். கோப்பாயிலை ஒருத்தருக்குப் பறிச்சுப் போட்டு வாறன் எண்டு சொல்லிவிடுங்கோ"

என்று வீட்டிற்குச் செய்தி அனுப்பிவிட்டு வெகு உற்சாகமாக 'அக்சில்றேற்ற'ரை மிதித்த இராச ரத்தினத்திற்குப் பாட்டுப்பாட வேண்டும் போல இருந்தது.

"பிள்ளையார் சுளிபோட்டு....." என்று ஒரு பக்திப் பாடலை முணு முணுத்தான்.

"என்னண்ணை இந்த நேரத் திலையும் பக்திப்பாட்டே? விஜ யின்ரை பாட்டொண்டை எடுத்து விடுங்கோவன்"

என்று தவபாலன் சொல்லவும் லொறி நீர்வேலிச் சந்தியில் சோதனைச் சாவடியில் நிறுத்தப்படவும் சரியாக இருந்தது. லொறியிலிருந்து இறங்கிய இராசரத்தினம் சகல ஆவணங்களையும் பரிசோதனைக்காகக் கொடுக்கிறான். அவற்றைப் பார்த்த அதிகாரி,

"பெமிற் இல்லே?" என்று அரைகுறைத் தமிழில் கேட்கிறார்.

"இருக்குதையா" என்று சொல்லிக்கொண்டு அவரது கையிலிருந்த ஆவணங்களை வாங்கித் தானும் தேடுகிறான் இராசரத்தினம். மணல் பெமிற்றை மட்டும் காணவில்லை. தலைக்குள் ஏதோ 'சுரீர்' என்றது.

"பொய் சொல்லிறது" என்று உறுமியபடி அடிப்பதற்கு அந்தப் படைவீரர் கையை ஓங்கியபொழுது குனிந்து அதிலிருந்து தப்பிய இராசரத்தினம்,

"டேய் தவம், அப்போதை வடிவாய்ப் பாத்தனியே, பெமிற் கிடந்ததே?"

என்று கேட்டுக்கொண்டு மெல்ல லொறிக்குள் நகர்ந்து அங்கே மறுபடி தேடுதல் நடத்தினான். தான் முதலில் சரியாகப் பார்க்காத தவறை எண்ணித் தவம் இப்போது தறதறவென விழிக்கத் தொடங்கினான். வல்லையில் காற்றுக்குப் பறந்தபோது அந்தப் பத்திரம் தவறிவிட்டது என்பதை இப்போது புரிந்துகொண்ட இராசரத்தினத்துக்கு நடுங்கத் தொடங்கியது. செய்யாத தவறுக்கு என்ன தண்டனை கிடைக்கப் போகிறதோ என எண்ணிக்கொண்டு லொறியிலிருந்து திரும்பும்போது,

"கள்ள மணல் ஏத்திறது?" என்று அனல்பறக்கக் கேட்டபடி நெருங்குகின்ற

இராணுவ அதிகாரி இயம தூதன் போலத் தென்பட்டது அவனுக்கு.

"இல்லை சேர் ........." என்று தயங்கிய இராசரத்தினத்திற்கு, நடந்த உண்மையைக் கூறுவது பயனற்றது என்பது புரிந்தது. அதற்கிடையில் தலையில் ஓர் அடி விழுந்து விட்டது. மண்டை கிறுகிறுத்தது. கண்களுக்குள் பல வண்ணங்கள் தெரிந்தன. அந்த நிறங்களுக்கிடையில் காலையில் தன்னைப் பார்த்துச் சிரித்த தனது பிள்ளையார் இப்போதும் அதே தோற்றம் காட்டுவதுபோல் இருந்தது. திடீரென ஏதோ ஆரவாரம் கேட்டு நிமிர்ந்தவனுக்கு அந்த நீர்வேலிச் சந்தியின் அருகிலிருந்த வாய்க்காற்றரவைப் பிள்ளையார் கோயிலில் சிரமதானம் செய்யும் தொண்டர்களின் ஆரவாரம்தான் அது எனப் புரிந்தது. திடீரென மின்வெட்டுப் போல ஓர் சிந்தனை.

"ஐயா, கோயில் வேலைக்குத் தான் மண்......" என்று இழுத்தான்.

மறுபடி அடிப்பதற்கு ஓங்கிய கை கீழே இறங்கியது.

"எந்தக் கோவிலுக்கு?"

பொய் சொல்லுகின்ற தயக்கத்துடன் இராசரத்தினத்தின் கை மெதுவாக அருகிலிருந்த பிள்ளையார் கோயிலைக் காட்டியது.

சிறிது நிதானித்துப் பார்க்கிறான் அந்தப் படைவீரன்.

"பொய் சொன்னா என்ன நடக்கும் தெரியும் தானே?" என்று உறுக்கியதற்கு விடைசொல்லும் துணிவு இராசரத்தினத்திற்கு இல்லை. தலைக்குள் என்னவோ செய்தது. படைவீரன் அதற்கிடையில் அங்கு நின்ற ஒரு சிறுவனைக் கூப்பிட்டு,

"பூசாரியைக் கொண்டு வா" என்று தமிழைத் துன்புறுத்தினான்.

என்னவோ ஏதோ என்று பயந்தவாறு அங்குவந்த குருக்களை அவன் கேட்டான்,

"மண் நீங்களுக்குத் தானே?"

எதுவும் புரியாத குருக்கள் இராசரத்தினத்தைப் பார்த்தார். அவனது கெஞ்சும் கண்கள் ஆயிரம் கதைகள் கூறின. குருக்களுக்கு ஓரளவு புரிந்துவிட்டது. 'ஆம்' எனத் தலையாட்டினார்.

"கொண்டுபோ. இனி இப்பிடி இல்லை. சரியா?"

என்று அவன் உறுமியதற்கு மௌனமாகத் தலையாட்டியபடி லொறியில் ஏறினான் இராசரத்தினம். குருக்கள் கோவில் வாசலுக்குத் திரும்பினார். லொறியிலிருந்த மணலைக் கோவில் வாசலில் பறித்துவிட்டுக் குருக்களின் காலைத் தொட்டு வணங்கினான் இராசரத்தினம். இப்போது குருக்களின் மனத்திற்குள் அந்தப் பொல்லாத பிள்ளையார் சிரிக்கிறார்.

# வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில இடங்களின் இடப்பெயராய்வு



செல்வி. ரேணுகா சின்னராசா,
உதவி விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

ஒரு நாட்டினுடைய பண்டைய கால வரலாறு அதன் பண்பாடு போன்றவற்றை அறிய உதவும் வரலாற்று மூலதாரங்களுள் இடப்பெயர்களும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தினை பெற்று நிற்கின்றன. இந்தவகையிலே உலகில் பல நாடுகளதும் அவற்றினது உட்பிரதேசத்தினுள் உள்ளடங்குகின்ற இடப்பெயர்களது ஆய்வு இன்று தனி ஒரு துறையாக வளர்ந்து காணப்படுகிறது. இந்த வகையிலே வரலாற்றுப் பெருமைமிக்க இலங்கையின் வடபகுதியில் அமையப்பெற்றுள்ளதே வலிகாமம் கிழக்கு பிரதேசமாகும். இப்பிரதேசம் பண்டைய காலம் தொட்டு தனித்துவமான பிரதேசமாக விளங்கியமையை அவதானிக்க முடிகிறது. பல வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள வலிகாமம் கிழக்கு பிரதேசத்திலுள்ள 31 கிராமசேவையாளர் பிரிவுகள் உள்ளடங்கி இருப்பதனைக் காணலாம். சிறப்பாக இருபாலை, கோப்பாய், கல்வியங்காடு, உரும்பிராய், நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர், நவக்கிரி, ஆவரங்கால், அச்செழு, வாதரவத்தை, பத்தமேனி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், அச்சுவேலி ஆகிய பிரதேசங்கள் இப்பிரிவினுள் உள்ளடங்கிருப்பதனைக் காணலாம்.

இங்கு இடப்பெயராய்வின் தோற்றம் பற்றிப் பார்க்கும் போது நாடோடிகளாக அலைந்து திரிந்த ஆதிகால மக்கள் தமது வாழ்க்கைக்குத் தேவையான வசதிதரக்கூடிய பொருளாதார வளமுள்ள இடங்களிலே நிலையாக வாழ முற்பட்டனர். அத்தகைய குடியேறிய இடங்களைப் பிறருக்கு குறிப்பாக உணர்த்துவதற்காகவும் பிற இடங்களிலிருந்து அவ்விடங்களை வேறுபடுத்தி அடையாளம் காண்பதற்காகவும் பெயரிட்டு அழைக்கத் தொடங்கினர் இதனைத் தொடர்ந்தே இடப்பெயர்களது தோற்றம் இடம் பெற்றதனைக் காணலாம்.

நிலையான குடியிருப்பை ஏற்படுத்தி வாழத் தொடங்கிய ஆதிகால சமுதாயம் அக்காலச் சூழலுடன் இணைந்த வகையில் தமது தொழில்களையும் ஆக்கிக் கொண்டது இவ்வாறு தாம் வாழ்ந்த பிரதேசத்தை ஏனையோருக்குச் சுட்டிக்காட்டுவதற்கு இயற்கையோடு ஒட்டியதாக இடப்பெயர்களை அமைத்துக் கொண்டனர். அதாவது நிலம் நீர் தாவரம் சார்ந்ததாக இவ்விடப்பெயர்கள் ஆரம்பத்திலே இடப்பட்டன. அவை பெரும்பாலும் பொது சிறப்புக்கூறுகளற்ற இடப்பெயர்களாகவே காணப்பட்டன தமிழகத்திலே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை,

எனும் நிலப்பாகுபாட்டைச் சேர்ந்த இடப்பெயர்கள் தோற்றம் பெற்றதைப் போலவே இலங்கையிலும் அதன் உட்பகுதியிலும் இடப்பெயர்கள் அவ்வப்பிரதேச பௌதீக வளங்களது இருப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதாகத தோற்றம் பெற்றதனைக் காணக கூடியதாகவுள்ளது.

இவ்விடப் பெயர்களானவை குறிப்பாக மரப்பெயர்கள், ஆற்றுப் பெயர்கள், தொழில் ரீதியிலான பெயர்கள் என பின்நாளில் தோற்றம் பெறலாயின வரலாற்றிலே இவ்விடப்பெயர்கள் பற்றிப் பார்க்கும் போது வரலாற்றிலே தெளிவற்ற அல்லது அறியப்படாத பல விடயங்களை தெளிவுபடுத்துகின்றன இவ்வகையிலே இடப்பெயர்களானவை வரலாற்று மூலங்களாகக் கொள்ளப்படுகின்றன சில இடப்பெயர்கள் ஒரு பிரதேசத்தினுடைய அல்லது வட்டாரத்தினுடைய வரலாற்றையும் அதன் தனித்துவத்தினையும் அடையாளம் காண்பதற்கு உதவுகின்றது. அடிப்படை ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றன அரசியல், பொருளாதார, சமய, சமூக, பண்பாட்டு, அம்சங்களையும் தொல்லியல் சான்றுகள் மூலம் அறியப்படுகின்ற வரலாற்றுச் செய்திகளையும் இவ்விடப்பெயர்கள் மேலும் ஆதாரப்படுத்தி நிற்கின்றன.

இன்று உலகில் தனியொரு துறையாக வளர்ச்சி பெற்று விளங்கும் இவ் இடப்பெயராய்வு வரலாறு, மொழியியல், விஞ்ஞான, நாட்டார் வழக்கியல் ஆகியவற்றுடன் இணைந்து விஞ்ஞான ரீதியில் ஆராயப்பட்டு வருகின்றமையைக் காணலாம் இவ் அறிவியற் துறையானது 19ம் நுற்றாண்டின் இறுதிப்பகுதியிலே தோற்றம் பெற்றது குறிப்பாக அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் கி.பி 1841 இல் இருந்து முறையான இடப்பெயராய்வுகள் ஆரம்பமாகின. இந்தியாவில் 1979 இல் இந்திய இடப்பெயராய்வுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாய்வு முயற்சிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன. இலங்கையிலே இன்னமும் ஆரம்பநிலையிலேயே காணப்படுகின்ற இவ் இடப்பெயராய்வானது 19ம் நூற்றான்டின் நடுப்பகுதியில் பிரித்தானியரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. விஞ்ஞான ரீதியிலே இங்கு இடப்பெயராய்வு பெரும்துறையாக வளர்ச்சி பெறாவிட்டாலும் பல அறிஞர்களாலும் பல இடப்பெயராய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதனைக் காணலாம் இலங்கையிலே தென்னற் (Tennet 1860), லூயில் (Lewls, 1895), பாக்கர் (Parkar, 1909), வேலுப்பிள்ளை (1918), சாமுவேல் (Samuvel), ஞானப்பிரகாசர் (Gnanaprakasar 1952), பெரேரா (Perera, 1965), நிக்லஸ் (Nicholas 1962), பரணவிதான (Paranavithana, 1970), கன்னாங்கர (Kannangara, 1984), பாலசுந்தரம், 1988), ரகுபதி (1987), பகவதி (14991), சைமன் காசிச் செட்டி, எஸ், டபில்யு, குமாரசாமி, ஹோார்ஸ்பரோ, எஸ்,சபாரத்தின முதலியார், தேவராஜன், ப.புஸ்பரட்ணம் (2001) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இலங்கையின் வட பகுதியான யாழ்ப்பாண மாவட்டத்தினுடைய அனைத்துப் பெயர்களும் ஆராயாது சுவாமி ஞானப்பிரகாசர் எஸ்,டபில்யு, குமாரசாமி, யே.பி.லூயிஸ் போன்றோர் ஒரு சில இடப்பெயர்களையே திரும்ப திரும்ப ஆராய்ந்தமையைக் காணலாம். இவர்களில் சிலர் சிங்கள இடப்பெயர்களை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணத்திலும் சிங்கள மயப்படுத்தப்பட்ட இடப்பெயர்களே வழங்கப்பட்டு வந்ததாக குறிப்பிட்டுள்ளதனைக் காணலாம். இதனால் இலங்கையின் தமிழ் இடப்பெயர் பற்றிய ஆய்வுக்கு பெரும் பங்கம் ஏற்பட்டதனைக் காணலாம். இவற்றைவிட தமிழ், சிங்களவர்களுடைய நீண்டகால வரலாற்றுப் போக்கில் பல தொடர்புகள் காணப்படுகின்ற போதிலும் கூட இருபிரிவினரும் தத்தமது தனித்துவமான மொழி, மதம், பண்பாடு, புவியியல் தன்மைகளுக்கு ஏற்ப தமிழ், சிங்கள, இடப்பெயர்களையும் அடையாளம் கண்டனர். பிராமிக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது பல முக்கிய அம்ங்களைக் கொண்டுள்ள இடப்பெயர்கள் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது பொது சிறப்பு விகுதிகளை அடிப்படையாகக் கொண்டு இடப்பெயர்கள் பற்றிய ஆய்வானது பிரதேசத்திற்கு பிரதேசம் வளர்த்தெடுக்கப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது

இவ்விடப்பெயராய்வு பற்றிப் பார்க்கும் போது ஆரம்பகால குடியிருப்புக்களானவை நீர்நிலைகளை மையமாகக் கொண்டே அமைக்கப்பட்டன. இதனை வெளிப்படுத்துவதாக இவ்விடப்பெயர்கள் காணப்படுகின்றன. இதனையே ஓடை, குளம், போன்றவற்றை பின்னொட்டுக் கூறுகளாகக் கொண்ட இடப்பெயர்கள் ஆதாரப்படுத்துகின்றன. இந்தவகையிலே வலிகாமம் கிழக்குப் பிரதேசத்திலே ஓடை, குளம், ஆகியவற்றை பின்னொட்டுக் கூறுகளாகக் கொண்ட இடப்பெயர்கள் பற்றிப் பார்க்கலாம் இப்பிரதேசமானது பரந்தளவிலே குளங்களைக் கொண்டிருப்பதோடு அதனை அடிப்படையாகக் கொண்ட விவசாய நடவடிக்கைகளுக்கும் தனித்துவமான மையமாகக் காணப்படுகிறது. இந்தவகையிலே J/277னுள் உள்ளடங்கியுள்ளதே நெல்லியோடை எனும் பிரதேசமாகும். இந்தநெல்லியோடை என்னும் பிரதேசமானது நெல்லி மரங்கள் நிறைந்ததாகவே இன்றைவரை இருப்பதுடன் இது புராதனகாலம் தொட்டே நெல்லிமரங்கள் நிறைந்த ஒதுக்குப்புறம் போன்ற ஓடை, அமைப்பிலே காணப்படுகிறது. இதனை மையமாகக் கொண்டே நெல்லியோடை எனப்பெயர் பெற்றருப்பதாக இங்குள்ள வயதுமுதிர்ந்தோர் குறிப்பிடுகின்றமை கவனிக்கத்தக்கது.

மேலும் இப்பிரதேசத்தில் வயல்நிலங்கள் அதிகமாக் காணப்படுவதுடன் அதிகமான குளங்களும் காணப்படுகின்றன. இவற்றிலே வண்ணான்குளம், கேணிக்குளத்தடி எனப் பல குளங்களும் நீர்நிலைகளின் பெயரால் வழங்கப்படுகின்ற இடப்பெயர்களாகக் காணப்படுகின்றன. வண்ணான் குளம் என்பது காரணப் பெயராகவே காணப்படுகிறது. அதாவது

இங்கு சலவைத் தொழிலாளர் ஆடைகளை தோய்த்து உலர்த்தி தொழிலில் ஈடுபட்டு காலம் காலமாக வந்தமையால்

இப்பிரதேசத்தினை வண்ணான்குளம் எனும் பெயரினாலே அழைக்கலாயினார். இப்பெயரே இன்றுவரை அழிவடையாது நிலவுகின்றது இக்குளத்தினைச் சுற்றி அதிகமான கற்கள் காணப்படுவதோடு இன்று இத்தொழிலில் ஈடுபடுவோர் அருகிலேயே இக்குளத்தினை மையப்படுத்தியதாகக் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. எனினும் வண்ணான்குளம் எனும் பெயர் இன்றுவரை பழக்கத்திலே இருந்து வருகின்றது இதனோடு வட்டக்குளம் எனும் பெயரும் இக்கிராமத்திலே இடப்பெயராகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலும் நிலவியல்பு அடிப்படையிலேயும் இங்கு இடப்பெயர்கள் காணப்படுவதனைக் காணலாம். நிலத்தின் தோற்ற அமைப்பின் அடிப்படையிலே பின்வருமாறு பாகுபடுத்தப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| கட்டு | கல் | கலட்டி | காடு |
| கரி | குடா | குண்டு | குழி |
| செம்பாடு | தரை | திடல் | தீவு |
| பள்ளம் | பிட்டி | மணல் | மலை |
| முனை | மூலை | வளை | |

இவற்றுள் இவ்வாய்வுக்குட்படுத்தப்பட்ட கூறுகளாக மலை, பிட்டி, கட்டு, கலட்டி, திடல் என்பன விளங்குகின்றன. முதலிலே "மலை" எனும் பின்னொட்டுக் கூறினைத் தாங்கியதாக வலிகாமம் கிழக்கினுள் மந்திரி மலை எனும் இடப்பயர் காணப்படுகின்றது மலை எனும் சொல் உயர்ந்த பர்வதத்தினைக் குறிக்கின்ற போதிலும், இப்பிரதேசத்திலே மலைகள் எதுவும் அற்ற போதிலும்கூட மேட்டு நிலங்கள் நிறைந்து காணப்படுவதால் இப்பெயரினைப் பெற்றிருக்கலாம் தனிநபர் பெயரான மந்திரி என்பதோடு மலை எனும்பதமும் பிற்பட்டகாலத்திலே இணைந்திருக்கவும் ஏதுண்டு அடுத்து "பிட்டி" எனும் விகுதிச்சொல்லுடன் இணைந்த வகையிலே பல இடப்பெயர்கள் இங்கு வழங்கப்பட்டு வருவதனைக் காணலாம். இற ்றைக ்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுக்களிலும் சமகால பாளி இலக்கியங்களிலும் "பிட்டி" என முடியும் இடப்பெயர்கள் வழங்கப்பட்டிருப்பதனையும் காண்கிறோம் (eg.Punapitti, I.C, 1970 Nso 115, 1217, 1218) E.2 Vii :71) இது உயர்நிலம், மேடு எனப் பொருள்குறித்து நிற்கின்றது. இங்கு தோல்ப்பிட்டி, சிறுப்பிட்டி என இடப்பெயர்கள் காணப்படுகின்றன. சிறுப்பிட்டியானது மேட்டுப்பாங்கான மண்பிட்டிகளைக் கொண்டு காணப்படுவதனையும் அவதானிக்க முடிகிறது இதனால் இது காரணப்பெயராக வழங்கப்பட்டிருக்கலாம்.

அடுத்து "திடல்" என்பது பற்றிப் பார்க்கும் போது இதுவும் நிலத்தோற்றத்தினை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்படுகின்றது. மாட்டுவண்டிச் சவாரிக்குப் பெயர்போன இவ்விடமானது திடலாகக் காட்சிதருவதனையும் கொண்டு சவாரித்திடல் என வழங்கப்பட்டு வருவதுடன் இன்றும் இங்கு மாட்டுவண்டி சவாரிகள் இடம்பெற்று வருவது கண்கூடாகும் அடுத்து "கலட்டி" எனும் கூறும் முக்கியம் பெறுகின்றது. இது புராதன காலம் தொட்டு மக்கள் பாவனைக்கு அற்றதாகக் காணப்பட்டதோடு கலட்டி எனும் பிரதேசமானது சிறுசிறு பற்றைகளைக் கொண்டதாகவும், கற்பிரதேசங்களாகவும் காணப்பட்டது. ஆனால் காலப்போக்கில் இவை மக்கள் பாவனைக்குரிய குடியிருப்புப் பிரதேசங்களாக மாறி இருப்பதனைக் காண்கிறோம். இது தனிநபர் பெயர்களைத் தாங்கியதாகவும் காணப்படுகின்றன. உதாரணமாக இராமநாதன் கலட்டி, புத்தகலட்டி, தச்சன்கலட்டி என்பன இப்பிரதேசத்தினுள்ளே வழங்கப்படுகின்ற சில இடப்பெயர்களாகும்.

இதனைவிட நிலப்பயன்பாடுகள் இடப்பெயர்களும் இங்கே காணப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் நிலையாக ஓரிடத்தில் தங்கி வாழ முற்பட்ட மனிதன் தான் வாழும் நிலத்தை பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தத் தொடங்கினான். இதனால் வளம் பெருக்க மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவால் புதிய தோட்டங்களும், வயல் நிலங்களும் உருவாகியதுடன் அவை புதுபுதுப் பெயரிலும் அழைக்கப்படலாயின. இப்பிரதேசத்தினைப் பொதுவாக நோக்கும் போது வயல் நிலங்களும், தோட்ட நிலங்களும் நிறைந்தே காணப்படுகின்றன. இந்த வகையிலே "வத்தை" எனும் பின்னொட்டுச்சொல்லினைத் தாங்கியவாறு பல ஊர்ப்பெயர்களும், குறுச்சிப் பெயர்களும் பரவலாக இடப்பட்டிருப்பதனைக் காண்கின்றோம் "வத்தை" என்றால் சிங்களத்தில் தோட்டம் எனும் கருத்திலும் சில இடம்பெற்றுள்ளன. இவ்வாறு வழங்கப்பட்ட இடங்களானவை தோட்டக்காணிகளாகவே காணப்பட்டதுடன் இன்று குடியிருப்புப் பிரதேசங்களாகக் காட்சி தருவதனைக் காணுகிறோம்.

இந்த வகையிலே வத்தையில் முடியும் வாதரவத்தை என்பது முக்கியம் பெறுகின்ற இடப்பெயராகும். புத்தூர் கிழக்குப் பகுதியிலே வாதரவத்தை அமைந்துள்ளது. வாதுவை மரங்கள் இங்கு காணப்பட்டதாகவும் பண்டைநாளில் வாதுர (வாதுமை) மரத்தினால் வள்ளம் (வத்தை) கட்டி தொண்டமனாற்றினூடாக உப்பேற்றிச் சென்றதாகவும் அதனாலேயே இப்பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது (இ. பாலசுந்தரம், 1989 :81) இதனை விட பல குறிச்சிப்பெயர்களும் காணப்படுகின்றன. இதில் சிங்களவர் வாழ்ந்தமையால் சிங்காவத்தை எனும் இடப்பெயர் நல்லூர் பகுதியிலே வழங்கப்பட்டும் வருகிறது. மேலும் யார்வத்தை, அல்லியவத்தை, தீயாவத்தை, மாலாவத்தை எனப் பல இடப்பெயர்களும் வலிகாமம் கிழக்குப் பிரதேசத்திலே குறிச்சிப் பெயர்களாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதனைவிட குடியிருப்பு நிலைசார் இடப்பெயர்களும் பல இங்கே காணப்படுகின்றன. இவற்றிலே பாய் ஊர், ஆலை ஆகியவற்றினை விகுதிச் சொற்களாகக் கொண்ட இடப்பெயர்கள் அடங்குகின்றன இதில் ஊர் பற்றி நோக்கலாம்.ஊர் என்பது கிராமம், நகர், இடம்,வசிக்கும் ஊர் எனப்பல பொருட்களைக் குறிக்கின்றது மக்கள் செறிவாகக் குடியிருந்தமையையே சங்ககால இடப்பெயர்களும் சுட்டி நிற்கின்றன. இந்தவகையிலே முன்னொட்டாகவும், பின்னொட்டாகவும் இவ் ஊர் பயன்படுத்தப்பட்டுள்ளதனைக் காணலாம் இதற்குச் சான்றாக ஊரெழு, நல்லூர், புத்தூர் ஆகிய இடப்பெயர்கள் காணப்படுகின்றன. இவ் இடங்களில் மக்கள் செறிவாக இன்றும் வாழ்ந்து வருகின்றமையை அவதானிக்க முடிகிறது இதனைவிட "பாய்" என்பதும் குடியிருப்பு நிலை சார் இடப்பெயரது பின்னொட்டுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆதிப்பிராமிக் கல்வெட்டிலும் பாய் என முடிய இடப்பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது பாய் என்பது பண்டைய காலத்தில் இடம் அல்லது இருக்கை என்றும் தற்காலத்தில் இருக்கை, படுக்கை விரிப்பு எனவும் பொருள் கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலே "பாய்"என்பது சிங்கள இடப்பெயர்களின் இடத்தைக் குறிக்கும் "பாய" என்ற சொல்லிலிருந்து தோன்றியதாக வேலுப்பிள்ளை (1918) அவர்களும் சுவாமி ஞானப்பிரகாசரும் சுட்டிக் காட்டியுள்ளளனர் (ஞானப்பிரகாசர், 1928 : 36) மேலும் கி.பி 2இல் நிலவிய கண்ணகி அல்லது பத்தினி வழிபாடு, நாகவழிபாடு கண்ணகி கோவில் இருந்த இடங்கள் "பாய்" எனப்பட்டதாகவும், "பெ" என்பது கோவில் இருந்த இடத்தைச் சுட்டி நின்றதாகவும் குறிப்பிடப்படுகிறது. இந்த வகையிலே இப்பிரதேசத்திலே கோப்பாய், கதிரிப்பாய் என்ற இடப்பெயர்கள் பாயில் முடிவதனைக் காணலாம். இதில் கோப்பாய் பற்றிப் பார்ப்போமானால் கோ + பாய் எனப் பிரித்து கோ என்பது அரசன் அல்லது மன்னன் என்பதனையும் பாய் என்பது இருக்கை என்ற கருத்திலும் அரசனது இருக்கை அல்லது இருப்பிடம் என வழங்கப்படுவதனைக் காணலாம். யாழ்ப்பாண அரசு காலத்திற்குரியதான புராதன அரண்மனை இங்கு காணப்படுவதுடன் இராஜவீதியும் இங்கு காணப்படுவது கோப்பாய் எனும் இடம் அரசிருக்கையின் மையமாகத் திகழ்ந்ததையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

அடுத்து ஆலை என்பதும் முக்கியம் பெறுகிறது ஆலை என்பது ஆரம்பத்தில் நீர் இறைக்கும் பொறி, நீர் வழிந்தோடும் சிறு வாய்க்கால், மழைநீர் வழிந்தோடும் பள்ளமான நிலம், ஆயம் எனப் பொருள்படுகிறது. இது ஒரு தமிழ்ச் சொல்லின் அடியாகும் இவ்வாறு ஆலையில் முடிகின்ற இடப்பெயர்களாக தம்பாலையும் சில குறிஞ்சிப் பெயர்களும் காணப்படுகின்றன இவ் ஆலை என்பது தொழிற்சாலைகளைக் கொண்ட இடத்தினை தற்காலத்திலே குறித்து நிற்கின்றது.

அடுத்து ஊராட்சி நிலைசார் இடப்பெயர்கள் முக்கியத்துவம் பெறுகின்றன இவ் ஊராட்சி நிலைசார் இடப்பெயர் புரம், வேலி என முடிகின்ற இடப்பெயர்கள் அதிகளவிலே காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது இந்தவகையிலே "புரம்" என்றால் ஊர்,நகரம், இராசதானி, வீடு, மேல்மாடம் எனப்பல பொருட்களில் வழங்கப்படுகின்றது. இது புரி என்றும் வழங்கப்படுகின்றது. சிங்களத்திலே "புர " என வழங்கப்பட்ட சொல்லே தமிழ் மயப்படுத்தப்பட்டதாக சிங்களவர்கள் வாழ்ந்த இடங்களுக்கு சூட்டப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற போதிலும் இலங்கையில் சிங்கள மொழித் தோற்றத்திற்கு முன்பே கி.மு 3,2 ஆம் நூற்றாண்டுகளில் புரம் என வழங்கப்பட்டதனை தமிழறிஞர்கள் எடுத்துக்காட்டுகின்றனர் இந்த வகையிலே ஆனந்தபுரம், வசந்தபுரம், செல்வபுரம், யோகபுரம், வேவிபுரம் எனப் பல இடப்பெயர்கள் காணப்படுகின்றன. இவை காலப்போக்கிலே தனிநபர் பெயரிலே ஏற்படுத்தப்பட்ட சிறு குடியிருப்பு மையங்களாகவும் காணப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இதனைவிட ஊராட்சி நிலைசார் இடப்பெயர்களாக வேலியில் முடிவடைகின்ற இடப்பெயர்களும் காணப்படுகின்றன. ஒவ்வொரு ஆட்சிப் பிரதேசத்தினையும் வரையறை செய்து பேணப்பட்டமையை இவ் வேலி எனும் வகையீடு குறித்து நிற்கிறது இவ்வேலியை பின்னொட்டுச் சொல்லாகக் கொண்ட இடப்பெயர்களாக நீர்வேலி, அச்சுவேலி ஆகியன இப்பிரதேசத்திலே காணப்படுவதுடன் பல குறிச்சிப் பெயர்களும் காணப்படுவதனைக் காணலாம். இவை இன்றும் மக்கள் செறிவாக வாழ்ந்து வரும் பிரதேசங்களாக காணப்படுகின்றன.

இதனோடு பல தனித்துவமான இடப்பெயர்களும் வழங்கப்பட்டு வந்தமையை அவதானிக்க முடிகின்றது இதில் காடு என முடியும் இடப்பெயர்களை நோக்கலாம். பிராமிக் கல்வெட்டுக்களில் பொது விகுதியாகவும், சிறப்பு விகுதியாகவும் இடம் பெற்றுள்ளது. காடு என்பது தனித் தமிழ்ச் சொல்லாக இருப்பதுடன் கடி,கடே என்ற வேர்ச்சொல்லினடியாகப் பிறந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. காடு என்பதற்கு வளம், மிகுதி, நெருக்கம்,இடம், சிற்றூர் எனப் பல கருத்துண்டு இலங்கையிலேயே காடு என முடியும் இடப்பெயர்கள் தனிநபர்கள், சமூகம், மதம், தாவரம், இயற்கையமைப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளன. இக்காடு என முடியம் இடப்பெயர்கள் தொன்மையான வரலாற்றினை கொண்டிருப்பதாக கூறப்படுகிறது. பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புபட்டதாக இக்காடு என முடியும் இடப்பெயர்கள் காணப்படுகின்றன இந்தவகையிலே இப்பிரதேசத்தில் இடைக்காடு, சடையகாடு, கல்லியன்காடு ஆகியன காடு என முடிகின்ற இடப்பெயர்களாகக் காணப்படுகின்றன. ஆரம்பத்திலே இப்பிரதேசங்கள் சிறுகாடுகளைக் கொண்டிருந்த போதிலும் இன்று குடியிருப்புப் பிரதேசங்களாகவே காணப்படுகின்றன.

கோப்பாய்

மேலும் ஆவரங்கால் என்பதும் முக்கியமான ஓர் இடப்பெயராகக் காணப்படுகிறது. இவ்விடப்பெயர் பற்றி நோக்கும் போது ஆவரை + கால் என்னும் இரண்டு சொற்களால் இணைக்கப்பட்டுள்ளது ஈண்டுக்கால் என்பது தோட்டக்கால' என்ற தொடரைப்போல நிலத்தினை குறிப்பதாகவும் கால் என்பது கிழவி, இடம், வழி, வாய்க்கால் என்ற பொருளிலே குறிப்பிடப்படுகிறது. திரு கதிர். தணிகாசலம் பின்வருமாறு குறிப்படுகின்றார். கால் தங்குமிடம் ஆவாரம் + கால் எனவும் ஆ + உரோஞ்சு + கால் அதாவது மாடுகள் உரோஞ்சும் கற்களைக் குறிக்கிறது ஆவுரோஞ்சுக்கால' என வழங்க ஆவரங்கால் என மருவிற்று என குறிப்பிடுகின்றார். இதுவும் தனித்துவமானதொரு இடப்பெயராகக் காணப்படுகின்றது.

இதனை விட பல்வேறுபட்ட தமிழ் நாட்டுச் சாதிகளது குடியிருப்பை வெளிப்படுத்துவதாகவும் இப்பிரதேசத்திலே பல இடப்பெயர்கள் காணப்படுகின்றன. இந்த வகையிலே மலையாளர்கள் குடியேறிய இடங்களாக தீயாவத்தை தீயின் (கோப்பாய்), மலையான், மலையன் சீமா (சிறுப்பிட்டி), காணப்படுகின்றது. சேர நாட்டவர்களது குடியிருப்புப் பிரதேசங்களாக பல காணப்படுகின்கின்றன. ஆண்டி ஆண்டிசீமா (ஆவரங்கால்), இடையன் - இடையன்சீமா (சிறுப்பிட்டி), கம்பன்சீமா (சிறுப்பிட்டி) குஜவர் - குசவன்குளனை அல்லது குசவன்குழி (கோப்பாய்), சங்கிலியன் - சங்கிலியாவத்தை (சிறுபிட்டி), சாலியன் - சாலியன் கொட்டி (இருபாலை) என்பன காணப்படுகின்றன. மேலும் கொங்கு நாட்டு ஊர்ப் பெயர்களுடன் கூடிய குடியேறிய இடங்களாக கொங்கா வோடை (ஆவரங்கால்) கொங்கு நாட்டையும், சிங்காவத்தை (நல்லூர்) சிங்களவர்களும், மாலாவத்தை (புன்னாலைக்கட்டுவன்) கன்னட இனத்தவர்களும், கலிங்கராயன் வயல் (நீர்வேலி) கலிங்கர்கள் குடியிருந்ததாகவும் அவர்களை நினைவுபடுத்துவதாகவே இவ்விடப்பெயர்கள் காணப்படுவதாகவும் கு.முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை குறிப்பிடுகின்றார் (கு.முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை :1982)

இவ்விடப்பெயராய்வு என நோக்கும் போது விரிவான ஆய்வினை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். எனினும் வெறுமனே இலக்கியத்தரவுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நோக்குவது அவ்வளவு பொருத்தமானது அல்ல அவ்விடப் பெயர்கள் தொடர்பாக நிலவுகின்ற ஐதீகங்கள், மரபுவழிச் செய்திகள், புராண, இதிகாசம் சார் செய்திகளை அடிப்படையாகக் கொண்டும் அவ்விடங்களில் வதியும் ஊர் வயதுமுதிர்ந்தோரிடம் பெற்ற தரவுகளைக் கொண்டும் கல்வெட்டுச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டும் இவ்விடப்பெயராய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இவ்வாறாக வலிகாமம் கிழக்குப்பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஊர்களின் இடப்பெயராய்வு பற்றி நோக்கும் போது பல சுவையான வரலாற்றுப் பின்னணியுடன்

கூடிய இடப்பெயர்கள் பற்றி அறிய முடிகின்றது. இதில் சில இடப்பெயராய்வுகளே ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இப்பிரதேசம் பற்றிய முழுமையான இடப்பெயராய்வுகள் பற்றிய ஆய்வுக்கு இவ் ஆய்வு முன்னோடியாக அமையும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். சில இடப்பெயர்களது இடப்பெயராய்வு பற்றியே இங்கு தரப்பட்டாலும் இப்பிரதேச இடப்பெயராய்வு நோக்கினூடாக இவ்விடங்களது வரலாற்றுப் பார்வையும் தொன்மை பற்றியும் அவதானிக்க முடிகிறது இச்சிறு முயற்சியின் மூலமாக தமிழர்களது தொன்மையில் இவ்விடங்கள் எவ்வாறு பிணைந்திருக்கின்றன என்பதனையும் அறிந்து கொள்ள முடியும்.

## உசாத்துணை நூல்கள்:

1. தணிகாசலம், கதிர், 1992, தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும், சரவணா பதிப்பகம், சென்னை.
2. பாலசுந்தரம், இ, 1989, இலங்கை இடப்பெயர் ஆய்வு -2 (வடமராட்சி தென்மராட்சி), வல்லிபுரம் இந்து கல்வி கலாசார மன்ற வெளியீடு.
3. புஸ்பரட்ணம்,ப, 2001, பண்டைய இலங்கையில் தமிழும், தமிழரும் (பிராமிக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு), கொழும்பு தமிழ்ச் சங்கம்
4. பத்தினியம்மா, தி, 2000, வலி வடக்குப் பிரதேச மலர், ஊரும் பேரும், செயலக வெளியீடு, யாழ்ப்பாணம்.
5. Pushparatham B, **Tamil place Names As Glened From The Brahimi Inscriptions Of Srilanka.**
6. Subramaniam, S.V, 1984, **The Place names in Early Tamil Litrature, All India Conference Of The place Name Society Of India**, Mysore.

### காதலியாற்றுப்படை குறிப்பிடும் எமது பிரதேச வளம்

நீர்வேலி யென்பேர் நீள்பதி வழியிற்
சேரிரு புறமுந் தண்ணென் றிருக்கும்
வாழைக் குழாங்கள் வளர்ந்தினிதோங்கி
மாழைமென் னோக்கி வானை யளாவிடும்
கோழிச் சேவல் பெடையொடு கூடி
வாழைப் பாத்தி கிளறிடும் போது
காதலர்ப் பிரிந்து நலிவுறு மாதர்
துனிபுக வெய்தித் துரத்துபு வாழைநற்
றடலா னெறிந்து தட்டிக் கலைக்க
நீடிய கமுகிற் சோடாய்ப் பறந்து
கூடிப் பாளையின் நாடி யிருத்தலும்
வீழ்ந்திடு பாக்குச் சாய்ந்திடு கதலிக்
குலைமே லெற்றப் பொலுபொலு வென்று
வழியதின் வீழும் பழமது பொறுக்கிப்
போவோர் வருவோர் பசிதனைத் தணிப்பர்
கடிது புத்தூர் கழிகுவை யாயின்
நொடியி லாவரங் காலதனை நாடுவை
அயற்பல் லூரின் அகழ்ந்துமே லெடுத்து
வண்டி யேற்றிக் கொண்டு வந்த
வள்ளிக் கிழங்கும் வளமுறு சவாரிக்
கட்டையு மலிந்து கடைகளிற் கிடக்கும்
அச்சு வேலியென் னழகுறு பதியின்
வைச்சிடு தென்னங் கன்றுமே லோங்கி
இந்திர நாட்டே றேணி போலச்
சுந்தரவானைத் தொட்டுமெல் லசையும்

- பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை

# வலி. கிழக்குப் பிரதேசச் செயலகம்

## நிர்வாக உதவியாளர்கள் - 2008



## வலி. கிழக்குப் பிரதேசச் செயலக அலுவலக உதவியாளர்கள்

1. திரு. கே. நந்தராஜன்
2. திரு. எஸ். யோகேஸ்வரன்
3. திரு. வி. வன்னியசிங்கம்
4. திரு. கே. சற்குணலிங்கம்
5. செல்வி. எஸ். பிறேமினி (உதவிப் பிரதேச செயலர்)
6. திரு. சி. ஏ. மோகன்றாஸ் (பிரதேச செயலர்)
7. திரு. எஸ். மகேந்திரன் (நிர்வாக உத்தியோகத்தர்)
8. திரு. வி. பரமநாதன் (சாரதி)
9. திரு. கே. சுரேஸ்குமார்
10. திரு. கே. காண்டீபன்

# வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலக எல்லைக்குள் காணப்படும் தொல்லியற் சின்னங்களும் அவற்றின் வரலாற்றுப் பெறுமதியும்



*பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்*
வரலாற்றுப் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## வலிகாமம் – பெயரும் பெயர் வந்த வரலாறும்

இன்று வலிகாமம் என அழைக்கப்படும் பிரதேசம் யாழ்ப்பாண மாவட்டத்தின் நிர்வாகப் பிரிவுக்கு உட்பட்ட பிரதான நிர்வாக வட்டாரங்களில் ஒன்றாகும். அதில் வலிகாமம் என்ற பெயருக்கும், அது உள்ளடங்கியிருக்கும் யாழ்ப்பாணம் என்ற பெயருக்கும் 2000 ஆண்டுகளுக்கு குறையாத தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு. வரலாற்று மூலங்களில் இலங்கையின் தனித்துவமான பிராந்தியங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அது யாழ்ப்பாணம் என்ற பெயர் தோன்ற முன்னர் நாகதீபம், நாக நாடு, மணவை, மணற்றி என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இலங்கையின் முதல் வரலாற்று இலக்கியமான மகாவம்சம் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னரே இப்பிராந்தியத்தை நாகதீபம் என குறிப்பிடுகிறது. அதை வல்லிபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 1700 ஆண்டுகளுக்கு முற்பட்ட பொற்சாசனமும் உறுதிப்படுத்துகிறது. சற்றுப் பிற்பட்ட கால தமிழ் இலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் இது நாகநாடு என அழைக்கப்படுகிறது. அதை தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 1262ஆம் ஆண்டுக்குரிய பாண்டியக் கல்வெட்டு மேலும் உறுதிப்படுத்துகிறது. யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய பிற்காலத் தமிழ் இலக்கியங்களில் இது மணவை, மணற்றி, மணற்றிடர் ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகிறது. யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூல் செங்கடநகரியில் (சிங்கை நகர்?) இருந்து ஆட்சிபுரிந்த மன்னன் மணற்றி என்ற இடத்தை இரண்டு கண்களும் குருடனான யாழ்பாணனுக்கு பரிசிலாகக் கொடுத்தான் எனக் குறிப்பிடுகிறது. அதைப் பெற்ற யாழ்பாணன் என்பவனின் பெயரில் இருந்தே யாழ்ப்பாணம் என்ற பெயர் தோன்றியதாகக் கருதப்படுகிறது. இப்பெயர் கி.பி.15ஆம் நூற்றாண்டுக்குரிய பாண்டியக் கல்வெட்டிலிலும், சமகாலத் திருப்புகளிலும் யாழ்ப்பாணாயன் பட்டினம் எனக் குறிப்பிடப்படுகிறது. சிங்கள இலக்கியங்களிலும், போத்துக்கேய ஆவணங்களிலும் இது யாபாபடுன என அழைக்கப்படுகிறது.


ஆயினும் யாழ்ப்பாணம் என்ற பெயர் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வலிகாமம் என்ற பெயர் புழக்கத்தில் இருந்ததற்குப் பல ஆதாரங்கள் உண்டு. உதாரணமாக கி.பி.12ஆம் நூற்றாண்டுக்குரிய சோழக்கல்வெட்டுகள் சோழரின் படை வீரர்கள்

பல்லவராயன் தலைமையில் இலங்கைமீது படையெடுத்த போது அவர்கள் வடஇலங்கையில் வலிகாமம், மட்டுவில், ஊர்காவற்துறை, மாதோட்டம் ஆகிய இடங்களை வெற்றி கொண்டு அங்கிருந்த படைவீரர்களைச் சிறைப்பிடித்ததோடு யானைகளையும், பிற வணிகப்பொருட்களையும் கைப்பற்றியதாகக் கூறுகின்றன. பாளி இலக்கியங்கள் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் கலிங்கமாகன் பொலநறுவையில் ஆட்சி புரிந்த போது அவனது கொடிய ஆட்சியால் அங்கு வாழ்ந்த சிங்கள மக்களும், இராசதானியும் தெற்கு நோக்கி நகர்ந்த போது அவனது அரசு வடஇலங்கைக்கு நகர்ந்ததாகக் குறிப்பிடுகின்றன. அப்போது அவனது அரசுக்குப் பாதுகாப்பான கோட்டைகளும், படைவீரர்களும் நிலைகொண்டிருந்த முக்கிய இடங்களில் ஒன்றாக வலிகாமத்தைக் குறிப்பிடப்படுகிறன.

வரலாற்று அறிஞர்களில் சிலர் வலிகாமம் என்ற பெயரைச் சிங்கள மொழிக்குரிய இடப்பெயராகப் பார்க்கின்றனர். இதற்கு சிங்கள மொழியில் கம, காம, கமுவ என்ற பின்னொட்டுச் சொல்லுடன் முடியும் இடப்பெயர்கள் சிங்களப்பிரதேசத்தில் பரவலாக இருப்பதால் சிங்களத்தில் வலிகம் (வலி மணல், கம - கிராமம்) என அழைக்கப்பட்ட இடமே பிற்காலத்தில் தமிழில் வலிகாமம் என மாறியதாகக் கூறுகின்றனர். ஆனால் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் ல கம, காம என்ற சொல் சிங்கள மொழி தோன்றுவதற்கு 1000 ஆண்டுகளுக்கு முன்னரே பிராகிருத மொழிக்குரிய இடப்பெயராக் பயன்படுத்தப்பட்டுள்ளன(Paranavithana 1970). இதற்கு மேலும் உதாரணமாகத் தென்னிந்தியாவில் தெலுங்கு மொழி பேசும் ஆந்திரமாநிலத்தில் தற்காலத்திலும் பயன்பாட்டிலுள்ள நந்திகாமம், புன்னன்கமம் முதலான இடப்பெயர்களைக் குறிப்பிடலாம்.. மொழியியல் அறிஞர்கள் பிராகிருத மொழியில் இருந்து தமிழ் உட்பட திராவிட மற்றும் சிங்கள மொழிகள் பல சொற்களை கடன் வாங்கியிருப்பதை எடுத்துக்காட்டியுள்ளனர். வலிகாமத்தைப் பொறுத்தவரை இங்கு கிறிஸ்தவசகாப்த காலத்தில் இருந்து தமிழ் மற்றும் பிராகிருத மொழியின் பயன்பாடு இருந்ததற்கு நம்பகத்தன்மையுடைய சாசன ஆதாரங்கள் உண்டு. இதனால் வலிகாமம் என்ற பெயர் இங்கு பண்டு தொட்டு பயன்பாட்டிலிருந்து வருகின்ற இடப்பெயர் எனக் கூறலாம்..

இந்த வரலாற்றுப் பின்புலம்தான் யாழ்ப்பாண அரசு காலத்தில் பின்பற்றப்பட்ட நான்கு நிர்வாக வட்டாரங்களில் வலிகாமம் முக்கிய நிர்வாகப் பிரிவாகத் திகழக் காரணமாக இருந்துள்ளது. இந்நிர்வாகப் பிரிவே பெரும்பாலும் ஐரோப்பியர் ஆட்சியிலும் தொடர்ந்திருந்தது. ஆனால் இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் ஏற்பட்ட நிர்வாக மாற்றம் மற்றும் மக்கள் தொகைப்பெருக்கம் என்பவற்றால் ஒரு பிராந்தியமாக இருந்த வலிகாமம் நிர்வாக வசதிக்காக வலிகாமம் மேற்கு வலிகாமம் கிழக்கு எனப் பிரிக்கப்பட்டு தற்போது வலிகாமம் கிழக்குப் பிரதேசம் 31 கிராமசேகர் பிரிவுக்கு உட்பட்ட நிர்வாக வட்டாரமாகக் காணப்படுகிறது.

## பூர்வீக மக்கள் பற்றிய தொல்லியற் சின்னங்கள்.



தற்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் மூதாதையினர் யார்? அவர்கள் எங்கிருந்து வந்தார்கள், எப்போது வந்தார்கள்? முதலான கேள்விகளுக்கு முழுமையான விடைகாண நம்பகத் தன்மையுடைய ஆதாரங்கள் மேலும் கண்டறியப்பட வேண்டியுள்ளது. யாழ்ப்பாண அரசு தொடர்பாக 17 ஆம் நூற்றாண்டின் பின்னர் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் ஒன்றான யாழ்ப்பாண வைபவமாலை தமிழ் நாட்டில் தொண்டை நாட்டைச் சேர்ந்த மண்ணாடு கொண்ட முதலி தலைமையில் வலிகாமத்தில் இருபாலையில் ஏற்பட்ட குடியேற்றம் பற்றிக் கூறுகிறது. ஆயினும் இக்குடியேற்றத்துடன்தான் இங்கு முதலில் மக்கள் வாழத்தொடங்கினர் என்பது இதன் அர்த்தமல்ல. 1971 இல் வலிகாமம் மேற்கில் உள்ள கந்தரோடையில் பென்சில்வேனியப் பல்கலைக்கழக அரும்பொருள் ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வின் மூலம் இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தை ஒத்த பெருங்கற்கால மக்கள் இப்பிரதேசத்தில் வாழத் தொடங்கியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மானிடவியலாளர்கள் இப்பண்பாட்டைப் பின்பற்றியவர்களைத் திராவிடர் என அழைக்கின்றனர். இப்பண்பாட்டுக்குரிய மக்களே வடஇலங்கையின் ஏனைய வட்டாரங்களிலும், இலங்கையின் பிறபாகங்களிலும் வாழ்ந்துள்ளனர் என்பது சமீப கால ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது. இப்பண்பாட்டு வழிவந்த மக்களே காலப்போக்கில் தமிழ் சிங்கள மொழி பேசும் மக்களாக மாறினர்.

அண்மையில் யாழ்ப்பாணத்தின் புராதன குடியிருப்புக்கள் பற்றிய தொல்லியல் ஆய்வை மேற்கொண்ட கலாநிதி பொ.இரகுபதி இங்குள்ள நாற்பதுக்கு மேற்பட்ட வரலாற்றுத் தொடக்க காலக் குடியிருப்புமையங்களைஅடையாளப் படுத்தியுள்ளார் (Ragupathy 1978). அவற்றுள் சில வலிகாமம் கிழக்குப் பிரதேசத்திற்கு உட்பட்டவையாகும். வலிகாமத்தின் வட எல்லையில் அமைந்துள்ள வளலாய், தொண்டமானாற்றின் கிழக்குப் பகுதி மற்றும் அதன் தொடர்ச்சியாக அரியாலைவரை உள்ள நீர்நிலை சார்ந்த பிரதேசத்தில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வில் இருந்து இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மக்கள் இப்பிராந்தியத்தில் வாழத்தொடங்கியுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. அம்மக்களில் பெரும்பான்மையோர் பண்டு தொட்டு தமிழ் மொழி பேசி வந்தனர் என்பதை கந்தரோடை, ஆனைக்கோட்டை (படம்-1) ஆகிய இடங்களில் கிடைத்த சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. இவற்றின் அடிப்படைளில் வலிகிழக்குப் பிரதேசத்திலும் இற்றைக்கு 2000 ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்து வருகின்றன எனக் கூறலாம்.

## புராதன மதங்கள் பற்றிய தொல்லியற் சின்னங்கள்

ஒரு பிரதேசத்தின் வரலாற்றுத் தொன்மையையும், அப்பிரதேசத்தில் வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற மக்களின் பண்பாட்டையும் அடையாளப்படுத்துவதில் அப்பிரதேசத்தில் தோன்றி வளர்ந்துள்ள மதங்களுக்கும், அவை சார்ந்த பண்பாட்டு விழுமியங்களுக்கும் முக்கிய பங்குண்டு. இன்று வலிகாமம் கிழக்குப் பிரதேச எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இந்து, கிறிஸ்தவ மதங்களே பிரதான மதங்களாக காணப்படுகின்றன. ஆயினும் இம்மதங்கள் மட்டும்தான் பண்டுதொட்டு இப்பிரதேசத்திற்குரிய மதங்களாக இருந்தன எனக் கூறமுடியாது. யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்கள், நம்பொத்த முதலான சிங்கள இலக்கியங்கள், போத்துக்கேயர், ஒல்லாந்தர் கால ஆவணங்கள் என்பன மேற்கூறப்பட்ட மதங்களுடன் வீரசைவம், பௌத்தம், இஸ்லாம் முதலான மதங்களும் இப்பிரதேசத்தில் வழக்கிலிருந்ததாகக் கூறுகின்றன.

## இந்து மத எச்சங்கள்



இப்பிரசேத்தின் பெரும்பான்மை மக்களின் மதமாக இந்து மதம் காணப்படுகிறது. இம்மதத்திற்கு தொன்மையான, தொடர்ச்சியான நீண்ட பாரம்பரிய வரலாறு உண்டு. போத்துக்கேய ஆசிரியரான கெய்ரோஸ் தமது காலத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிதும், பெரிதுமாக இருந்த 500ற்கு மேற்பட்ட இந்து ஆலயங்களை இடித்தழித்ததாகக் குறிப்பிடுகிறார். அவ்வாறு அழிக்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தியே அவர்கள் தமது கோட்டைகளையும், கிறிஸ்தவ ஆலயங்களையும் அமைத்துக் கொண்டனர். அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களில் கணிசமானவை வலிகாமத்திலும் இருந்துள்ளன என்பதில் ஐயமில்லை. இந்து மதம் என்ற சொல் பிருத்தானியர் ஆட்சியில் இஸ்லாமிய மதத்தில் இருந்து ஏனைய மதங்களை வேறுபடுத்த பயன்படுத்திய சொல்லாகும். இதனால் இந்து மதத்திற்குள் சைவம், வைஸ்ணவ மதங்கள் மட்டுமன்றி பௌத்த மதமும் உள்ளடங்குகின்றது. ஆயினும் தற்காலத்தில் பிராமணர் பூசை செய்யும் ஆகம மரபுக்குட்பட்ட ஆலயங்களை மட்டுமே இந்துமதமாகப் பார்க்கும் போக்கு பலரிடம் காணப்படுகிறது.

ஆனால் வடஇந்தியத் தொடர்பால் தமிழகத்திலும், ஈழத்திலும், ஆகமமரபு பரவ முன்னர் சிறிய ஆலயங்களில் தெய்வ வழிபாட்டுச் சின்னங்களை வைத்து வழிபடும் மரபு பண்டு தொட்டு இருந்து வந்துள்ளன. அம்மரபு இன்றும் காணப்படுகின்றது. இவ்வாலயங்களை திராவிட மரபு அல்லது நாட்டார் வழிபாட்டு மரபு என அழைக்கின்றனர். ஆனால் இவையும் எமது பண்பாட்டின் தொன்மையான அடையாளச் சின்னங்கள் என்பதை மறந்துவிடுகிறோம். ஈழத்தில் இம்மரபு இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியதை கந்தரோடை,

... நூல் ... நிலையம்
கோப்பாய்

பூநகரி, அநுராதபுரம், மாமடு, பொம்பரப்பி முதலான இடங்களில் கிடைத்த இருதலை, முத்தலைச் சூலங்கள், வேற் சின்னங்கள் சுடுமண்ணால் அமைந்த இலிங்க வடிவங்கள் என்பன உறுதிப்படுத்துகின்றன. இவை அக்காலத்தில் வழக்கிலிருந்த மக்களின் வழிபாட்டு நம்பிக்கைகளைப் பிரதிபலிப்பதாக உள்ளன. அறிஞர்கள் இச்சின்னங்களில் சிலவற்றை இந்து தெய்வங்களின் முன்னோடி (Proto Hinduism) வடிவங்களாகப் பார்க்கின்றனர். இவ்வகைச் சின்னங்களை ஆகம மரபு பரவ முன்னர் ஈழத்திலும், தமிழகத்திலும் ஆலயங்களில் வைத்து வழிபடப்பட்டதற்கு சங்க இலக்கியத்திலும் ஈழத்துப் பாளி நூல்களிலும் பல சான்றுகள் காணப்படுகின்றன. இவற்றை நினைவுபடுத்தும் ஆலயங்கள் பல வலிகாமத்தில் கோப்பாய், சிறுப்பிட்டி, புத்தூர், பத்தமேனி, வாதரவத்தை முதலான ஊர்களில் காணப்படுகின்றன. அவற்றுள் அண்ணமார், பெரியதம்பிரான், காளி, வைரவர், நாச்சிமார் ஆகிய ஆலயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவற்றில் சிலவற்றிற்கு தொன்மையான வரலாறு இருக்கலாம் என்பதற்கு உதாரணமாக இவ்விடத்தில் ஒன்றைக் குறிப்பிடலாம். 1995 இல் வலிகாமம் கிழக்கு எல்லையில் உள்ள இயற்றாலைக் காட்டுப் பகுதியில் ஆய்வை மேற்கொண்ட போது செங்கட்டியால் அமைக்கப்பட்ட மேடையின் மேல் வட்டமாக வேல், சூலம் என்பற்றுடன் இணைக்கப்பட்டிருந்த ஏழு கற்கள் பலவேறு சிறுதெய்வங்களின் பெயரால் வழிபடப்பட்டு வந்ததை அறிய முடிந்தது. அந்த மேடை அமைக்கப்பட்ட செங்கட்டிகளை ஆய்வு செய்த போது அவற்றில் 2000 வருடங்களுக்கு முற்பட்ட எழுத்துக்களை அவதானிக்க முடிந்தது. மேலும் அதன் சுற்றாடலில் ஆய்வு செய்த போது ஏறத்தாழ 700 உரோம நாணயங்களையும், பிற்பட்ட சோழ, பாண்டியர் கால நாணயங்களையும் சேகரிக்க முடிந்தது. இவ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இப்பிரதேச மக்களுக்கும், அவர்கள் வழிபட்டு வரும் ஆலயங்களுக்கும் 2000 ஆண்டுகளுக்கு குறையாத வரலாறு இருக்கலாம் என்பது தெரிகிறது. இருப்பினும் இவ்வகை ஆலயங்கள் பல சமீப காலங்களில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, பண்பாட்டு மாறுதல்களால் அந்தணர் பூசை செய்யும் ஆகம மரபுக்குரிய ஆலயங்களாக மாற்றப்பட்டதுடன் பாரம்பரியமாக இருந்து வந்த ஆலயப் பெயர்களும் மாற்றம் பெற்றுள்ளன. உதாரணமாக முன்னர் . வைரவர், நாகதம்பிரான், பெரியதம்பிரான், காளி எனப் பெயர் கொண்டிருந்த ஆலயங்கள் தற்போது சிவன், ஈஸ்வரர் அம்மன் ஆலயங்கள் எனப் பெயர் மாற்றம் பெற்றுக் காணப்படுகின்றன. இப்பெயர் மாற்றத்தை அவ்வப் பிரதேச மக்கள் நாகரிக முன்னேற்றம் எனக் கருதினாலும் அதன் மூலம் எமது பண்பாட்டின் தனித்துவமும், தொன்மையும் மறைக்கப்படுகின்றதென்பதை மறந்துவிடுகிறோம்.

பத்தி இயக்கத்தைத் தொடர்ந்து தமிழகத்தில் பல்லவர் காலத்தில் கற்களைப் பயன்படுத்தி ஆகம மரபில் ஆலயங்கள் அமைக்கும் முறை தோன்றியது. இம்மரபு சமகாலத்தில் இலங்கையிலும் ஏற்பட்டதை பத்தி இயக்கத்தை தலைமையேற்று நடாத்திய நாயன்மார் பாடல்களில் வரும், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலான ஆலயங்கள் பற்றிய செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. இருப்பினும் 16ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போத்துக்கேயரும், பின்வந்த ஒல்லாந்தரும் கடைப்பிடித்த

கலையழிவுக் கொள்கையால் இங்கிருந்த 500க்கு மேற்பட்ட இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டன. இதனால் வலிகாமத்தில் 16ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்த இந்து ஆலயங்கள் பற்றிக் கூறமுடியாதிருக்கிறது. இருப்பினும் இக்கால வரலாற்று மூலங்களில் காணப்படும் செய்திகளில் இருந்து முன்பிருந்த ஒரு சில ஆலயங்களை அடையாளம்காண முடிகிறது.


வலிகாமம் கிழக்கில் இதுவரை கிடைத்த கல்லில் செதுக்கப்பட்ட காலத்தால் முந்திய இந்துச் சிற்பமாக புத்தூரில் கிடைத்த விஸ்ணு சிலையைக் குறிப்பிடலாம். பருத்திதுறை சுண்ணாகம் வீதியை இணைக்கும் இடத்திற்கு அருகில் உள்ள கிறிஸ்வத ஆலயத்தின் அத்திவாரப்பகுதி 1824 இல் அகழப்பட்ட போது அத்திவாரத்திற்குப் பயன்படுத்தப்பட்ட கற்களில் ஒன்றாக இதுவும் காணப்பட்டது. இச்சிலை பற்றிப் பின்னர் ஆய்வு செய்த அறிஞர்கள் 16ஆம் 17ஆம் நூற்றாண்டுகளில் இங்கிருந்த விஸ்ணு ஆலயம் அழிக்கப்பட்ட போது அதில் வைத்து வழிபடப்பட்ட சிலையையே அங்கு கட்டப்பட்ட கிறிஸ்தவ ஆலயத்தின் அத்திவாரத்திற்குப் போட்டுக் கட்டியிருக்கவேண்டும் எனக் கூறுகின்றனர்( Navaratnam C.S.1964:70, சிற்றம்பலம் ச.க.1993: 217). இவ்வாதாரத்தின் அடிப்படையில் 16 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இவ்விடத்தில் அல்லது இதற்கு அருகில் ஒரு விஸ்ணு ஆலயம் இருந்திருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.

நல்லூர் இராசதானி கால ஆலயங்கள் பற்றிக் கூறும் ஸ்ரீதக்ஷிணகைலாச புராண நவசையப் படலத்தில் புத்தூரில் இருந்த சிவன் கோயில் பற்றியும், அதன் கேணி பற்றியும், நந்தவனம் பற்றியும், பல இடத்தைச் சேர்ந்த மக்கள் வந்து வழிபட்டு நன்மையடைந்தது பற்றியும் கூறப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள சிவன் கோயில் தற்போதுள்ள புத்தூர் சிவன் கோயிலையே குறிப்பதாக கருதுகின்றனர். போர்த்துக்கேய மொழிகளில் எழுதப்பட்டுள்ள வரலாற்று நூல்களில் அச்சுவேலிக்குத் தெற்கே புத்தூரில் உள்ள 16 ஆம் நூற்றாண்டு கால இரண்டு சைவ ஆலயங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுள் முதலாவது ஆலயம் சிறிது எனவும், இதற்குத் தெற்கே அமைந்த ஆலயம் பெரிது எனவும்

குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்து அரசன் சங்கிலி மன்னனுடன் நடந்த போரில் போர்த்துக்கேயர் வெற்றியடைந்தமையால் சங்கிலி மன்னனுக்கு உதவி புரியும் பொருட்டு தென்னிந்திய நாயக்க வம்சப் படைகள் வடமராட்சியில் இருந்து புத்தூர் நோக்கி வந்ததாகவும், அப்போது போர்த்துக்கேயப் படைகள் இரண்டு ஆலயங்களையும் தமது பாதுகாப்பு அரண்களாகப் பயன்படுத்தி சிறிய கோயிலுக்கு முன்பாக 1621 இல் நடந்த போரில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ்ப்படைகளைக் கொலை செய்து ஆயுதங்களைக் கைப்பற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. இதன் பின்னர் மீண்டும் சங்கிலி மன்னனுக்கு சார்பாக தமிழ்ப் படையெடுப்பு மேற்கொள்ளலாம் எனக் கருதி போர்த்துக்கேயர் இவ்வாலயங்களிலும் அயலில் உள்ள வயல்வெளிகளிலும் சில நாட்கள் தங்கிப் பின்னர் சாவகச்சேரிக்கு சென்றதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்நூலில் கூறப்பட்டுள்ள அம்சங்களையும், போராட்டம் நடந்ததாக கூறப்படும் இடங்களையும், தங்கி நின்ற வயல்கள், அவர்கள் சாவகச்சேரிக்கு சென்றதாக கூறப்படும் பாதையையும் நோக்கும் போது இங்கு கூறப்பட்டுள்ள பெரிய ஆலயம் புத்தூர் சிவன் கோயிலையும், சிறிய ஆலயம் சிவன் கோயிலிற்கு வடக்கே கிட்டிய தூரத்தில் அமைந்துள்ள நீண்ட கால வரலாற்றைக் கொண்டதாக கூறப்பட்டு வந்துள்ள புத்தூர் காரைக்கூடல் வைரவர் கோயிலையும் குறிப்பதாகக் கருத இடமுண்டு. இப்புதிய சிவன் கோயில் மிகப் பழைமையானதென்பதை வாய்மொழிச் செய்தியை அடிப்படையாக வைத்து பலர் கூறினாலும், மழவராயர் கந்தையா இதைப் புதுப்பித்து கட்ட முன்னர் ஓலையால் வேயப்பட்ட நிலையில் இருந்ததாக கூறுவர். ஆனால் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண மன்னனுக்கு எதிராக மேற்கொண்ட போராட்டத்தின் போது கற்களால் கட்டப்பட்ட ஆலயங்களைப் பாசறையாகப் பயன்படுத்தியதற்கு நல்லூர்க் கந்தன் ஆலயம் பற்றிய செய்தி சிறந்ததொரு சான்றாகும். அதுபோல் புத்தூரில் உள்ள ஆலயங்களை அவ்வாறு பயன்படுத்தியிருப்பதாக கூறியிருப்பது இக்கோயிலும் போர்த்துக்கேயர் காலத்திற்கு முன்பு கல்லால் கட்டப்பட்டிருந்ததை எடுத்துக்காட்டுகிறது எனலாம். ஆயினும் போர்த்துக்கேயர் தமது போராட்ட நடவடிக்கையின் போது புத்தூரில் இருந்த ஒரு ஆலயத்தை இடித்ததாக கூறியுள்ளனர். அவ்வாறு இடிக்கப்பட்ட ஆலயம் புத்தூர் சிவன் கோயிலா என்பதற்கும் அதைத்தான் மழவராயர் கந்தையா பின்னர் புதுப்பித்துக் கட்டினாரா என்பதற்கும் தற்போதைய நிலையில் தகுந்த சான்றுகள் இல்லை. எவ்வாறாயினும் தற்போதைய சிவன் கோயிலின் தோற்றம் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சியில் தோன்றியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

## பௌத்தமத எச்சங்கள்



தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் பௌத்த மத சின்னங்கள் கிடைக்கும் போது அவற்றை ஒரு மதத்தின் பண்பாடாகப் பார்க்காது முன்பொரு காலத்தில் சிங்கள மக்கள் வாழ்ந்த இடங்களாகப் பார்க்கும் தப்பான எண்ணம் எம்மக்களிடம் உண்டு. இதனால் அவற்றைப் பாதுகாக்கவும் தவறிவிடுகின்றனர். ஆனால் பண்டைய காலத்தில் இந்து மதமோ அல்லது பௌத்த மதமோ குறிப்பிட்ட ஒரு மொழி பேசும் மக்களுக்கு மட்டும் உரிய மதங்களாக இலங்கையில் இருக்கவில்லை. பாளி இலக்கியங்களையும், கல்வெட்டுக்களையும் ஆராய்ந்து பார்த்தால் தமிழர்களும் பௌத்தர்களாக, பௌத்த மதத்திகு ஆதரவு கொடுத்து வளர்த்தவர்களாக இருந்துள்ளனர் என்பதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக கதிர்காமம்,

அறகம, அநுராதபுரம் ஆகிய இடங்களில் கிடைத்த கி.பி.5ஆம் நூற்றாண்டுகுரிய கல்வெட்டுகள் 16 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த பரிந்தன், தாடிகன் ஆகிய தமிழ் மன்னர்கள் பௌத்தர்களாக இருந்து அம்மதத்தை வளர்த்ததால் அவர்கள் புத்ததாசன், பரிதேவன் முதலான பட்டங்களைப் பெற்றதாகக் சுறுகின்றன. இவ்வாதாரங்கள் தமிழகத்தைப் போல் இலங்கையிலும் தமிழ்ப் பௌத்தம் வளர்ந்திருந்ததைக் காட்டுகின்றன.


இம்மதம் வலிகாமம் கிழக்கிலும் இருந்துள்ளதென்பதை புத்தூரில் நவக்கிரி என்ற இடத்தில் கிடைத்த பௌத்த சின்னங்கள் உறுதிப்படுத்துகின்றன. இங்கு 1954ஆம் ஆண்டு நிலாவரை கிணற்றுக்கு அருகில் உள்ள தோட்டம் பிறதேவைக்காக பண்படுத்தப்பட்ட போது புத்தர் சிலையுடன் பிற பௌத்த சின்னங்களும் வெளிவந்தன. இங்கு கிடைத்த புத்தர் சிலை ஆந்திர மாநிலத்திற்கே உரிய ஒருவகைப் பளிங்கு கல்லால் ஆக்கப்பட்டது. அது உடைந்த நிலையில் மூன்றடி மூன்றங்குல உயரமுடையது (படம் - 3). இச்சிலை சுண்ணாகத்திலும், வல்லிபுரத்திலும் கண்டுபிடிக்கப்பட்ட புத்தர் சிலைகளின் கலைமரபை அப்படியே ஒத்துள்ளன. இச்சிலைகள் பெரும்பாலும் ஆந்திராவில் வடிக்கப்பட்டு அங்கிருந்து நேராக அல்லது தமிழகத்தின் ஊடாக இங்கு கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. தற்போது இச்சிலை யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இச்சிலை காணப்பட்ட இடத்தில் இருந்து தாதுகோபங்களின் எச்சங்களும், புத்தபாதம் வரையபட்ட கற்களும் கிடைத்ததாகக் கூறப்படுகிறது ( சிற்றம்பலம் சி.க.1992:245). இவ்வாதாரங்கள் இங்கு முன்பொரு காலத்தில் பௌத்த ஆலயம் இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகிறது.

## போத்துக்கேய ஒல்லாந்தர் கால கிறிஸ்தவ ஆலயங்கள்

16ஆம் நூற்றாண்டிலிருந்து ஏற்பட்ட ஐரோப்பியரது வருகை இலங்கை வரலாற்றில் முக்கிய காலகட்டமாகப் பார்க்கப்படுகிறது. வர்த்தக நோக்கோடு முதலில் வந்த போத்துக்கேயரும், பின்னர் வந்த ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் காலப்போக்கில் இலங்கையின் ஆட்சியாளர்களாக மாறி ஏறத்தாழ 350 ஆண்டுகள் இலங்கை அரசியலில் ஆதிக்கம் செலுத்தினர். இதனால் இலங்கையின் அரசியல், பொருளாதாரம், சமூகம், பண்பாடு என்பவற்றில் பல மாற்றங்கள் ஏற்பட வழியேற்பட்டன. அவற்றுள் போத்துக்கேயரும், ஒல்லாந்தரும் மதம் தொடர்பாக பின்பற்றிய கொள்கைகள் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதங்கள் யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய வட்டாரங்களிலும் படிப்படியாக தோன்றி வளரக் காரணமாயின. 1602 இல் யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க ஆலயத்தை முதலில் அமைத்த போத்துக்கேயர் காலப்போக்கில் ஏனைய இடங்களிலும் அம்மதத்தைப் பரப்பி அங்கெல்லாம் தமது ஆலயங்களை அமைக்கப் பாடுபட்டனர். இதற்காகக் கல்வியை ஒரு கருவியாகப் பயன்படுத்தி மக்களைக் கவரும் வகையில் கலைநிகழ்ச்சிகளையும், மேடை நாடகங்களையும் அரங்கேற்றினர். ரினிடாடா என்ற வரலாற்று ஆசிரியர் 1634 இல் யாழ்ப்பாணத்தில் 71438 பேர் கத்தோலிக்க மதத்திற்கு மாறியிருந்ததாகவும் அதற்காக 2. கததோலிக்க ஆலயங்கள் அமைக்கப்பட்டதாகவும் கூறுகிறார். வலிகிழக்கில் இவ்வகை ஆலயங்கள் புத்தூர், கோப்பாய் போன்ற ஊர்களில் அமைக்கப்பட்டன.

போத்துக்கேயரிடம் இருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் கத்தோலிக்க மதத்திற்குப் பதிலாக 1658 இல் இருந்து புரட்டாஸ்தாந்து மதத்தைப் பரப்ப பல முயற்சிகளை மேற்கொண்டனர். அவர்களும் தமது மதத்தைப் பரப்ப போத்துக்கேயர் பின்பற்றிய வழிமுறைகளை கையாண்டதுடன் அச்சு இயந்திரத்தை அறிமுகப்படுத்தி அதனுடாகப் பல வெளியீடகளை செய்து மக்களிடம் விளிப்புணர்வை ஏற்படுத்தினர். பால்டியஸ் என்ற அறிஞரின் கூற்றுப்படி ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்ட போது 20 கத்தோலிக்க ஆலயங்கள் இருந்ததாகவும், அவற்றுள் கட்டிடக் கலையில் சிறந்த கத்தோலிக்க ஆலயங்களை புரட்டாஸதாந்து ஆலயங்களாக மாற்றியதாகவும் தெரிகிறது. இவர்களின் ஆட்சியிலதான் வலிகிழக்கில் புத்தூர், கோப்பாய், அச்சுவேலி ஆகிய இடங்களிலும் புரட்டாஸ்தாந்து ஆலயங்கள் முதன் முதலாகக் கட்டப்பட்டது.

பொதுவாக போத்துக்கேயர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இந்து ஆலயங்கள் இருந்த இடங்களில் அல்லது அதன் அருகில் கத்தோலிக்க ஆலயங்கள் கட்டப்பட்டன. இவை


04


பெரும்பாலும் மண், மரம் கல் எனபன கொண்டு கட்டப்பட்டவையாகும். இவ்விடங்களை ஒல்லாந்தர் கைப்பற்றி அவ்வாலயங்கள் சிலவற்றை புதிய மாற்றங்களுடன் புரட்டாஸ்தாந்து ஆலயங்களாக மாற்றினர்(படம் - 4). இன்று யாழ்ப்பாணத்தின் சில இடங்களில் ஒல்லாந்தர் காலத்திற்குரிய அதே தோற்றப்பாட்டுடன் கூடிய புரட்டாஸ்தாந்து ஆலயங்களைக் காணமுடிந்தாலும் வலிகாமம் கிழக்கில் அவற்றைக் காணமுடியவில்லை. வலிகிழக்கில் தற்போது காணப்படும் புரட்ஸ்தாந்து ஆலங்கள் ஒல்லாந்தரின் பின் ஆட்சிக்கு வந்த ஆங்கிலேயர் காலத்தில் மாற்றியமைக்கப்பட்ட ஒல்லாந்தர் கால ஆலயங்கள் அல்லது புதிதாகக் கட்டப்பட்ட பிருத்தானியர் கால ஆலயங்களாகும்.

## கோப்பாய் சங்கிலியன் கோட்டை

வரலாற்றில் வலிகாமம் கிழக்கு முக்கியப்படுத்திப் பேசப்படுவதற்கு கோப்பாயில் காணப்படும் சங்கிலியன் கோட்டை ஒரு முக்கிய காரணமாகும். இதற்கு நல்லூர் யாழ்ப்பாண மன்னர்களின் இராசதானி இருந்தபோது அதற்கு வெளியேயும் அவர்களின் நிர்வாக மையம் இருந்ததற்குச் சான்றாக உள்ளது. 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண மன்னர்களிற்கும் இடையே நடந்த போராட்டத்தில் யாழ்ப்பாண மன்னர்கள் கோப்பாயில் உள்ள கோட்டையை தமது முக்கிய பாதுகாப்பு அரணாக பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக, சங்கிலி மன்னன் காலத்தில் போர்த்துக்கேயர் மீண்டும்

படையெடுக்கலாம் என அஞ்சித் தனது படையின் ஒரு பிரிவை நல்லூரிலும் இன்னொரு பிரிவை கோப்பாயிலும் வைத்திருந்ததாகத் தெரிகின்றது. இதனால் வரலாற்று ஆசிரியர்கள் சிலர் கோப்பாய் நல்லூரின் உப தலைநகர் எனவும், வேறு சிலர் கோப்பாய் நல்லூரின் பாதுகாப்பு இருக்கை (கோ-அரசன், பாய்- இருக்கை ) எனவும் கூறுகின்றனர்.

இவ்வாறு தமிழ் மன்னர்களின் வரலாற்றோடு கோப்பாய் கோட்டை சிறப்பித்துக் கூறப்பட்டாலும் தற்போது அங்கு ஒரு புராதன கட்டிடம் இருந்ததற்கான அழிபாடுகள் மட்டுமே காணப்படுகின்றன (படம் - 4). ஆயினும் தற்காலத்திலும் அது சங்கிலியன் கோட்டை என்றே அழைக்கப்படுகிறது. இவ்விடம் கோப்பாய் சந்தியில் இருந்து வடக்காகச் சில யார் தூரத்தில் வலப்பக்கமாக சற்று உள்நோக்கி (பிரதான வீதியிலிருந்து கிழக்காகச் செல்லும் ஒழுங்கை இக்கட்டடப் பகுதிக்கு செல்கிறது.) அமைந்துள்ளது. நீண்ட காலத்திற்கு முன் மிகப் பெரிய பாதுகாப்பு அரணாக இருந்த இக்கடடிடடம் அண்மைக் காலங்களில் இடிக்கப்பட்டு அவ்விடங்களில் புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன. எஞ்சியிருந்த கட்டிடப் பகுதிகள் கூட இடிக்கப்பட்டு வேறு தேவைகளிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வரணின் சுற்றாடலில் கிணறு வெட்டிய போதும், வீடு கட்ட அத்திவாரம் வெட்டிய போதும் பழைமையான கலைச் சின்னங்கள் வெளிவந்ததாக அறிய முடிகின்றது. அண்மையில் இவ்விடத்தில் தொல்லியல் ஆய்வை மேற்கொண்ட கலாநிதி இரகுபதி இங்கு பரவலாகக் கிடைத்த மட்பாண்டங்களை ஆய்வு செய்து அவற்றின் காலம் யாழ்ப்பாண அரசு தோன்றுவதற்கு முற்பட்டதாக இருக்கலாம் எனக் கருத்து தெரிவித்துள்ளார். இக்காலக் கணிப்பு யாழ்ப்பாண அரசு தோன்ற முன்னரே இவ்விடத்தில் செறிவான மக்கள் மக்கள் குடியிப்புக்கள் இருந்ததைக் காட்டுகிறது. ஆகவே வலிகிழக்கில் தொல்லியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய முக்கிய இடங்களில் இதுவும் ஒன்று என்பதில் ஐயமில்லை.



05

## வலிகிழக்கில் கிடைத்த பண்டைய நாணயங்கள்

பண்டைய கால மொழி, எழுத்து மதம், கலை, மக்கள் குடியிருப்புக்கள், அயல்நாட்டுத் தொடர்புகள் என்பவற்றை அறிய உதவும் முக்கிய மூலாதாரமாக நாணயங்கள் பார்க்கப்படுகின்றன. வலிகாமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பண்டைய நாணயங்களில் இருந்து அங்கு இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்பிருந்து மக்கள் வாழ்ந்ததையும், அப்பிரதேசம் இந்தியாவுடன் மட்டுமன்றி கிரேக்க, உரோம மற்றும் சீன நாடுகளுடன் பண்டைய காலத்தில் வணிக உறவு கொண்டிருந்ததை ஆணித்தரமாக

உறுதிப்படுத்துகின்றன. ஆனால் அவ்வகையான பண்டைய நாணயங்கள் வலி. கிழக்கில் கிடைத்ததாகத் தெரியவில்லை. ஆயினும் கி.பி.13ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இங்கு நாணயங்கள் புழக்கத்தில் இருந்ததற்குப் பல ஆதாரங்கள் உண்டு. அவற்றுள் யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

யாழ்ப்பாண இராசதானி கால நாணயங்கள் கிடைத்த இடங்களில் அச்சுவேலி, இடைக்காடு, கோப்பாய், சிறுப்பிட்டி, இருபாலை ஆகிய இடங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இந்நாணயங்களில் தமிழில் "சேது" என்னும் மொழி மங்கல வாக்கியமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு நாணயங்களை வெளியிடப்பட்ட ஆரியச் சக்கரவர்த்தி மன்னர்கள் தங்கள் பழம்பதியாகிய புண்ணிய தலங்கள் நிரம்பிய இராமேஸ்வரத்தின் மேற் கொண்டிருந்த ஈடுபாடும் சமய அபிமானமும் காரணம் எனக் கூறப்படுகின்றது. இத்தகைய வாசகம் கொண்ட நாணயங்களே 13 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17 ஆம் நூற்றாண்டு வரை பெரும்பாலும் செம்பிலும் சில பொன்னிலும் வெளியிடப்பட்டதாக தெரிகிறது. ஆனால் புத்தூரில் புத்தகலட்டி என்ற இடத்தில் இவர்கள் வெளியிட்ட வெள்ளி நாணயம் ஒன்றும் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது(படம் - 5). இந்நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு நல்லூர் இராசதானி காலத்தில் ஆரியச் சக்கரவர்த்தி மன்னர்களின் அரசியல், பண்பாட்டு நடவடிக்கைகள் வலிகிழக்கில் செல்வாக்குப் பெற்றிருந்ததை அறியமுடிகிறது.




## வலிகிழக்கில் கிடைத்த பண்டைய சாசனங்கள்

வரலாற்று ஆய்வில் நம்பகத் தன்மையுடைய முக்கிய ஆதாரங்களில் சாசனங்களுக்கு முக்கிய இடமுண்டு. அவை இலக்கியங்களைப் போல் தொடர்ச்சியாக வரலாற்றைக் கூற உதவாவிட்டாலும் சம்பவங்கள் நடந்த காலத்தில் அவை எழுதப்படுவதால் அவற்றால் அறியப்படும் செய்திகள் இலக்கியங்களைக் காட்டிலும் அதிக உண்மைத்தன்மை உடையனவாக உள்ளன. ஆயினும் இலங்கையின் ஏனைய இடங்களைப் போல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிக எண்ணிக்கையிலான சாசனங்கள் காணப்படவில்லை. இதற்கு கல்வெட்டக்களை எழுதுவதற்குப் பொருத்தமான கற்கள் இப்பிரதேசத்தில் இல்லாமை ஒரு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது. இதனால் இங்கு ஒரு சில கல்வெட்டுக்களே கிடைத்துள்ளன. அவற்றுள் வரலாற்று முக்கியத்துவம் உடைய உரும்பிராய் தமிழ்க் கல்வெட்டுகள், கள்ளியங்காடு செப்பேடுகள் வலிகாமம் கிழக்கில் கிடைத்திருப்பது சிறப்பாக நோக்கத்தக்கது.

## உரும்பிராய் தமிழ்க் கல்வெட்டு

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் வலிகாமத்தில் மட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் கிடைத்த கல்வெட்டுகளிலும்

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மொழிக் கலப்பின்றி தமிழில் எழுதப்பட்ட இக்கல்வெட்டுகளை முதலியார் இரசநாயகம் கி.பி. 1567 ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்டதாகக் கூறுகிறார். ஆனால் பிற்காலத்தில் இவற்றை விரிவாக ஆராய்ந்து பதிப்புச் செய்த பேராசிரியர் இந்திரபாலா இதன் காலம் மேலும் முற்பட்டதாக இருக்கலாம் எனக் கூறுகிறார். இதில் முதலாவது கல்வெட்டின் தோற்றம் திரிசூல வடிவில் இருப்பதுடன் அதன் வாசகத்தில் திருசூலம் என்ற வாசகம் வருவதால் இதற்கு திரிசூலக் கல்வெட்டு எனப் பெயரிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு இங்கிருக்கும் கோவிலுக்குச் செய்த தானம் பற்றிக் கூறுகிறது. ஆயினும் அது என்ன தானத்தைக் குறித்ததென்பது தெரியவில்லை. பொதுவாக திரிசூலக் கற்கள் கோவிலுக்கு வழங்கப்பட்ட நிலத்தின் எல்லையில் நாட்டப்படுவதால் இக்கல்வெட்டில் வரும் செய்தி நிலத்தானம் பற்றி இருக்கலாம் என்பது இந்திரபாலாவின் கருத்தாகும். கல்வெட்டின் நடுப்பகுதியில் கோவிலுக்குத் தானம் அளித்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தாலும் அவை தெளிவற்றதாகவே காணப்படுகின்றன.

இரண்டாவது கல்வெட்டு தெளிவாக இருப்பதுடன் இதன் காலம் கி.பி.16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது 17 நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இக்கல்வெட்டு கோவில் பண்டாரத்திற்கு அதாவது கோவில் திறைச்சேரிக்கு ஐந்து பணம் தர்மாமக இடப்பட்ட செய்தியைக் கூறுகிறது.

## கள்ளியங்காடு செப்பேடுகள்

யாழ்ப்பாண ஆட்சியாளர்கள் தமது ஆட்சி தொடர்பான செய்திகளை செப்பேடுகளில் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பான சான்றுகள் யாழ்ப்பாண வைபமாலையிலும் காணப்படுகிறது. இச்செப்பேடுகள் சில தனிப்பட்ட சிலரிடம் இருப்பதாகத் தெரிகிறது. ஆயினும் அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தை உணராது மறைத்து வைத்திருப்பதாகவும் தெரிகிறது. இந்நிலையில் யாழ்ப்பாண அரசு பற்றிய செப்பேடுகள் இருண்டு வலிகாமம் கிழக்கின் தென்னெல்லைக்கிராமமான கல்வியங் காட்டில் திரு.சிவக்கொழுந்து அவர்களிடம் இருந்து கிடைத்திருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தாகும். இச்செப்பேடுகளின் இருபக்கங்களும் பேச்சுத் தமிழில் உள்ளது (படம் - 7). இவற்றுள் ஐந்து வரிகளில் உள்ள முதலாவது சாசனம் யாழ்ப்பாண

07


மன்னன் பரராசசேகர மகாராசா சிதம்பரம் சென்று பணிகள் செய்தது பற்றிக் கூறுகிறது. இரண்டாவது சாசனம் கயிலை வன்னியர் தர்மசாசனம் பற்றியது. இவ்விரு சாசனங்களில் இருந்து யாழ்ப்பாண மன்னர்கள் தமது ஆட்சிக்காலத்தில் சிதம்பரம் சென்று ஆற்றிய பணிகள் தெரிகிறது. இன்றும் சிதம்பரத்தில் யாழ்ப்பாண மன்னர் பெயரில் மடம் இருப்பது இப்பட்டயங்களின் வரலாற்று உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

## வலிகிழக்கிலுள்ள ஆவுரஞ்சிக் கற்கள்

வலிகிழக்கில் புழக்கத்திலுள்ள பல்வேறு வீதியோரங்களிலும், பயன்பாட்டிலில்லாத வீதிகளிலும் ஏனைய இடங்களிலும் ஆவுரஞ்சிக் கற்கள் தனித்தும், சுமைதாங்கியுடனும், சில இடங்களில் கேணி, குளம், கிணறு முதலான நீர்நிலைகளுக்கு அருகிலும் காணப்படுகிறன. ஆயினும் பல இடங்களில் இவை அழிவுற்று முன்பொரு காலத்தில் இருந்ததற்கான அடையாளங்கள் மட்டுமே காணப்படுகின்றன. தற்காலத்தில் இவை தேவையற்ற கவனிபாரற்ற பொருட்களில் ஒன்றாக நோக்கப்படுகின்றது. ஆனால் அதற்குள் எமது பண்பாடு, மதம், கலை, பொருளாதாரம், மக்கள் குடியிருப்புக்கள், சமூக ஏற்றத்தாழ்வு என்பவற்றின் தொன்மையும் தொடர்ச்சியும் அடங்கியுள்ளதைப் பலர் மறந்து விடுகின்றனர். பேச்சு வழக்கில் ஆவுரஞ்சிகல் என்ற கொல்லுக்கு பழந்தமிழ் இலக்கியங்களில் "ஆவுரஞ்சுதறி", "ஆதீண்டு குற்றி," "தம்பம்" எனப் பல பெயர்கள் வழக்கில் இருந்துள்ளன. சீவகசிந்தாமணியில் இதற்கு பசுக்கள் உரஞ்ச அமைக்கப்படும் தம்பம் என விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.


08


பொதுவாக கால்நடைகளுக்கு உடலில் ஏற்படும் ஒருவித கடியை இவ்வாவுரஞ்சிக் கற்களில் தேய்பதன் மூலம் அவற்றைப் போக்குவதற்காகவே மேற்கூறப்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டிருக்க வெண்டும். வலிகாமத்தில் இற்றைக்கு 2500 வருடங்களுக்கு முன்னரே நெல் மற்றும் கோதுமை முக்கிய விவசாய உற்பத்திப் பொருளாக இருந்ததை கந்தரோடையில் மேற்கொண்ட அகழ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது. அக்காலத்தில் இருந்து இவ்விவசாய நிலங்களைப் பண்படுத்த கால்நடைகள் வீட்டு மிருகங்களாக வளர்க்கப்பட்டதற்கும் அங்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இலங்கைத் தமிழர் பண்பாட்டில் பசு ஒரு முக்கிய செல்வமாகப் பார்க்கப்பட்டு வருகிறது. யாழ்ப்பாண அரச காலக் கொடிகளிலும், நாணயங்களிலும் காளை அரச முத்திரையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு கால் நடைகளின் பயன்பாட்டிற்கு இலங்கைத் தமிழரிடையே நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் இருப்பதால் அவற்றிற்காக அமைக்கப்பட்ட ஆவுரஞ்சிக் கற்களுக்கும் தொன்மையான வரலாறு இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. வலிகாமத்தில் காணப்படும் சில ஆவுரஞ்சிக்கற்களின் பழமையையும், அவை காணப்படும் இடங்களின் தன்மையையும் பார்க்கும் போது போத்துக்கேயர், ஒல்லாந்தர் காலக் கலையளிவுக் கொள்கையில் இருந்து

தப்பிய எமது பண்டைய நினைவுச் சின்னங்களில் ஒன்றாக இவ்வாவுரஞ்சிக் கற்களைப் பார்க்கலாம். ஏனெனில் வலிகிழக்கில் தற்காலத்தில் நீண்ட காலமாக மக்கள் வாழ்வதற்குப் பொருத்தமற்ற இடங்களில்கூட இவ்வாவுரஞ்சிக் கற்கள் சுமைதாங்கியுடன் சேர்ந்தும், தனித்தும் காணப்படுகிறது. இதற்கு ஆவரங்காலில் இருந்து கிழக்குப் பக்கமாக கப்புதூவுக்கும் செல்லும் போது மக்கள் நடமாட்டமற்ற காட்டுப்பகுதியில் காணப்படுகின்றன. ஆவுரஞ்சிக் கற்களைக் உதாரணமாகக் குறிப்பிடலாம். இவை ஆவுரஞ்சிக் கற்களின் பழமையை மட்டுமன்றி முன்பொரு காலத்தில் அவ்விடங்களில் மக்கள் குடியிருப்புக்கள், விவசாய உற்பத்தி நிலங்கள் போக்குவரத்துப் பாதைகள் என்பன இருந்ததையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளன. ஆவுரஞ்சிக் கற்கள் கால்நடைகளின் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டாலும் அவற்றை அமைத்துக் கொடுத்ததற்கு வேறு சில நோக்கங்களும் இருந்ததாகத் தெரிகிறது. இக்கற்களை சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருந்தவர்களே பெரும்பாலும் தமது குடும்பத்தில் உள்ளவர்கள் இறந்ததன் நினைவாக அமைத்துக் கொடுத்துள்ளனர். அவ்வாறு அமைக்கப்பட்ட ஆவுரஞ்சிகல்லுக்கு முன்பாக ஆண்டு தோறும் மக்கள் ஒன்று கூடி இறந்தவரை நினைவுபடுத்தம் மரபும் இருந்ததாகத் தெரிகிறது. வலிகிழக்கில் உள்ள சில ஆவுரஞ்சிக் கற்களை ஆராய்ந்து பார்த்த போது அதில் இறந்தவரின் மத நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் சமயச் சின்னங்கள் குறிப்பாக சூரியன், சந்திரன், வேல், சூலம் முதலான சின்ங்கள் கோடுகளாக வரையப்பட்டுள்ளதைக் காணமுடிந்தது. இதனால்தான் இவ்வாவுரஞ்சிக் கற்களை எமது பண்பாட்டின் தொன்மையான அடையாளச் சின்னமாகப் பார்க்கவேண்டியுள்ளது.

## சுமைதாங்கி கற்கள்

வலிகிழக்கில் அழிந்தும், அழியாமலும் அதன் பயன்பாட்டை அறியாத நிலையில் காணப்படும் கட்டிடக் கலைகளில் இதுவும் ஒன்றாகும். இது மரநிழலின் கீழ் ஆவுரஞ்சி, கேணி, கிணறு, குளம் என்பவற்றை மையமாகக் கொண்டு காணப்படுகின்றது. இதை அமைத்ததன் நோக்கம் கால்நடையாகப் போக்குவரத்துச் செய்வோர் தலையில் சுமந்து செல்லும் பொருட்களை சுமைதாங்கியில் இறக்கி வைத்து களைப்பாறச் செய்வதாகும். அதற்குப் பொருத்தமான முறையில் சுமைதாங்கியின் கட்ட அமைப்பும் காணப்படுகிறது. திருவிளையாடற் புராணம் இதை “சுமைதாங்கிமேற் சாத்துவர்” எனக் குறிப்பிடுகிறது அதற்குப் பொருத்தமான முறையில் சுமைதாங்கியுடன் நிழல் தரும் மரமும், நீர்நிலைகளும் காணப்படுகிறன. 18 ஆம் நூற்றாண்டில் மோட்டார் வாகனங்கள் பயன்பாட்டுக்கு வருவதற்கு முன்னர் வடமாகாணத்து மக்கள் மாட்டுவண்டி, கால்நடையாக தமது பயணத்தை மேற்கொண்டனர். அதன் தொடர்ச்சி இன்றும் .காணப்படுகிறது. இதனால் இச்சுமைதாங்கிகளுக்கும் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இன்று வலிகிழக்கில் அன்னியர் ஆட்சிப்பெயரால், சமூகத்தில் உயர்பதவி வகித்தவர் பெயரால் வீதிகள் காணப்படுகின்றன. ஆனால் அவ்வீதிகள் அதிகம் பயன்பாடு இன்றி அதன் பெயர் மட்டும் பிரபலியப்படுத்தப்பட்டுக் காணப்படுகிறது. அவ்வீதிகளின்

ஓரங்களில் முன்பொரு காலத்தில் பயன்படுத்தப்பட்ட சுமைதாங்கிக் கற்கள் அழிந்தும், அழியாமலும் காணப்படுகிறன. இதற்கு உதாரணமாக ஆவரங்காலின் கிழக்குப் பகுதியில் மக்கள் நடமாட்டமற்ற சிறு பற்றைக் காடுகள் உள்ள இடத்தில் உள்ள சுமைதாங்கிக்



கற்களைன் குறிப்பிடலாம். இவ்வாதாரம் முன்பொரு காலத்தில் இவ்விடத்தினூடாக மக்கள் கால் நடையாக அல்லது மாட்டு வண்டியில் பயணம் செய்ததைக் காட்டுகிறது. இதற்கு ஆதாரமாக போத்துக்கேய ஆசிரியரான குவைரோஸ் அச்சுவேலிக்கும் புத்தூருக்கும் இடையே யாழ்ப்பாண மன்னனுக்குச் சார்பான படைகளை எதிர்கொண்ட போத்தக்கேயப் படைகள் அங்கிருந்து கிழக்குப் பக்கமாக சாவகச்சேரி சென்றதாக கூறுவதை நோக்கலாம். அவ்வாறு செல்வதற்குப் பயன்படுத்தி பாதை மேற்கூறப்பட்ட ஆவரங்கால் கப்புதூவு பாதையாக இருக்கலாம்.

வழிப்போக்கர்களின் நன்மை கருதி சுமைதாங்கிக் கற்கள் அமைக்கப்பட்டாலும் அவற்றை அமைத்துக் கொடுத்தவர்கள் பொருளாதாரத்திலும், சமூக அந்தஸ்திலும் உயர்ந்த நிலையில் இருந்தவர்களாக உள்ளனர். அதை சுமைதாங்கி கற்களில் பொறிக்குப்பட்ட சாசனங்களில் இருந்து அறியமுடிகிறது. மேலும் வலிகிழக்கில் காணப்படும் பெரும்பாலான சுமைதாங்கிக் கற்கள் குழந்தைப் பிரசவத்தின் போது இறந்தவர்களின் நினைவாகவே அமைக்கப்பட்டதாகத் தெரிறது. இதனால் இவற்றை அமைத்த குடும்பத்தினர் அல்லது குறிப்பிட்ட சமூகம் அதையொரு நினைவுச் சின்னமாகப் பார்த்து அதை அழிந்த போகாது பாதுகாத்து வருவதுடன் குறிப்பிட்ட காலங்களில் சமய நிகழ்ச்சிகளையும் நடாத்தி வருகின்றனர். ஆகவே எமது பண்பாட்டில் ஆவுரஞ்சிக் கற்களைபோல் சுமைதாங்கிக் கற்களும் முக்கிய நினைவுச் சின்னமாகப் பாதுகாக்க வேண்டியுள்ளது.

## மடங்கள்

பண்டு தொட்டு மடங்கள் எமது பண்பாடடில் முக்கிய வரலாற்று அம்சமாக் காணப்படுகிறது. இது பல்வேறு பெயர்களில், பல்வேறு நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டு வந்துள்ளன. யுாழ்ப்பாணப் பேரகராதியில் மடம் என்ற சொல்லுக்கு கோவில், இரதம், இடம் என்ற பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. யாழ்பாண அரசர்களின் முக்கிய பணியாக மடங்கள் அமைக்கப்பட்டதைச் செப்பேடுகள் கூறுகின்றன. பரராசசேகரன் சிதம்பர மடத்திற்காகச் செய்த திருப்பணிகளுக்கு வலிகிழக்கில் அச்சுவேலி, புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள நிலங்க்ள் சிலவற்றைத் தானமாகக் கொடுத்தான் என செப்பேடுகள் கூறுகிறன. அதை உறுதிப்படுத்தும் வகையில் இன்றும் இவ்வூர்களில் உள்ள சில காணிகள் சிதம்பரத்துக்

காணிகள் என அழைக்கப்படுவதைக் காணலாம். அண்மையில் யாழ்ப்பாணத்து பண்பாட்டில் மடமும் மடக்கட்டிடக்கலையும் என்ற பயன்தரும் ஒரு நூலை ஆசிரியை செல்வி குமுதா சோமசுந்தரக் குருக்கள் ஆக்கியுள்ளார். அதில் வலிகிழக்கில் உள்ள கோப்பாய் பூதர் மடம், புத்தூர் மழவராயர் மடம், ஆவரங்கால் கேணிமடம், நீர்வேலி நறுவத்தான் மடம் என்பன பற்றிக் குறிப்பிட்டுளார். ஆனால் இங்கிருந்த பல மடங்கள் ஏற்கனவே அழிவுற்றுவிட்டதால் அதைப் பற்றிய விபரங்களை அவரால் சேகரிக்க முடியவில்லை. இதற்கு ஒரு உதாரணமாக அச்சுவேலி வல்லை றோட்டில் பிரபலமாக இருந்த நெருப்பு மூட்டி மடத்தைக் குறிப்பிடலாம். தற்போது அவ்விடத்தில் குடியிருப்புக்களே காணப்படுகின்றன.

வலிகிழக்கில் பெரும்பாலான மடங்கள் போக்குவரத்துப் பாதைகளை அண்டியே காணப்படுகின்றன அல்லது காணப்பட்டன எனக் கூறலாம். இம்டங்களுக்கும் ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி என்பவற்றிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. இதனால் இம்மடங்களை வழிப்போக்கர்களின் நன்மைகருதி அதிலும் வணிகர்களின் நன்மை கருதி அமைக்கப்பட்டவை எனக் கூறலாம். ஏனெனில் தூர இடங்களில் இருந்து வருவோர் தமது வணிகப் பொருட்களை இரவில் மடங்களில் பாதுகாப்பாக வைத்துவிட்டு காலையில் செல்வது பண்டைய வழக்கமாக இந்தது மடங்கள் தோன்ற முன்னர் வணிகர்கள் மரநிழலை தமது தங்குமிடமாகப் பயன்படுத்தினர். சங்க இலக்கியத்தில் இவ்விடம் நிழல்தரு மரம் எனக் குறிப்பிடப்படுகிறது. மடம் என்ற சொல்லுக்கு மண்டபம் என்ற பெயரும் வழக்கில் இருந்துவருகிறது. அநுராதபுரத்தில் உள்ள 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டு ஒன்று தமிழ் வணிகர்கள் ஒன்று கூடும் மண்டபம் அமைக்கப்பட்ட செய்தியைத் தருகிறது. அதில் ஒவ்வொரு வணிகர்களின் இருக்கையிலும் அவர்களின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. பேராசிரியர் இந்திரபாலா இதை ஈழத்தில் முதலில் தோன்றிய கட்டிடக் கலையாகக் குறிப்பிடுகிறார். இடைக்காலத்தில் மடம் என்ற சொல்லுக்கு அம்பலம் என்ற இன்னொரு பெயரும் இருந்துள்ளது. புத்தளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி.11 ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டு ஒன்று நானாதேகிகர் என்ற வணிகர்களின் போக்குவரத்திற்கு வசதியாக அம்பலம் ஒன்று இருந்தது பற்றிக் கூறுகிறது. தமிழ்நாடு வேதாரணியத்தில் உள்ள கல்வெட்டுக்கள் பல யாழ்ப்பாணத்தில் வலிகாமம், தென்மராச்சி ஆகிய ஊர்களைச் சேர்ந்த பிரமுகர்கள் அங்கு மடங்கள் அமைத்து அவற்றைத் தொடர்ந்து நிர்வகித்து வந்தது பற்றிக் கூறுகின்றன. அதில் வலிகிழக்கில் உள்ள சில ஊர்களும் இடம்பெற்றுள்ளன. இதனால் அங்குள்ள வீதி ஒன்று யாழ்ப்பாண வீதியென்றே அழைக்கப்படுகிறது. அத்துடன் அங்கிருக்கும் வீணையில்லா சரஸ்வதி சிற்பமொன்று யாழ்ப்பாணத்தார் கலைமரபு எனவும் அழைக்கப்படுகிறது. இவ்வரலாற்றுப் பின்னணியை வைத்துப் பார்க்கும் போது ஈழத்தமிழர் பண்பாட்டில் மடங்கள் முக்கிய இடத்தைப் பெற்றதெனக் கூறலாம். வலிகிழக்கில் உள்ள மடங்கள் பலவற்றை நோக்கும் போது அண்மைக் காலங்களில் பஸ்தரிப்பு நிலையங்கள்

கோப்பாய்

அமைக்கப்பட்ட இடங்களுக்கு அருகில் ஆவுரஞ்சி, சுமைதாங்கிக் கற்கள் காணப்பட்ட இடங்களிலுமே பெரும்பாலும் இருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. அதேவேளை ஆவுரஞ்சிக் கற்கள், சுமைதாங்கி கற்கள் என்பன அமைக்கப்பட்டதற்கு உள் நோக்கம், பயன்பாடு, சமூக ஆந்தஸது, சமய முக்கியத்துவம் இருந்ததோ அதையே மடங்களும் பெறுகின்றன. இதனால் அவற்றின் வரலாற்றுப் பழமையையும், பண்பாட்டுப் பெறுமதியையும் நாம் புறக்கணித்து விடமுடியாது.

உலக காலாசார அமைப்பு இற்றைக்கு 100 வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றுப் பெறுமதியுடைய பொருட்கள் அனைத்தும் குறிப்பிட்ட பிரதேசத்தின் அல்லது அப்பிதேச மக்களின் பண்பாட்டுச் சின்னங்கள் எனக் கூறுகின்றது. இப்பொருட்களும், வரலாற்றுச் சின்னங்களும் யாழ்ப்பாணத்திற்கு ஏன் ஈழத்தமிழர்களுக்குப் பொதுவானதாக இருப்பினும் அப்பொருட்கள் பலவும் வலிகிழக்கிலும் உண்டு என்பதை இவ்விடத்தில் நினைவுபடுத்துவது அவசியமாகும். நவீன தொழில்நுட்ப வளர்ச்சியாலும், வெளியிடத் தொடர்பாலும் புதிய பல பொருட்கள் சமகாலத்தில் பாவனைக்கு வந்துள்ளன. இதனால் நாம் பாரம்பரியமாகப் பயன்படுத்தி வந்த பலவகைப்பட்ட பாவனைப் பொருட்கள் ஓதுக்கப்பட்டுவருகின்றன. அதன் மூலம் எமது பண்பாட்டின் தனித்துவம் மறைக்கப்படுத்தப்படுவதுடன் எதிர்காலத்தில் அவை எதற்காக முன்னர் பயன்படுத்தப்பட்டது என்ற தெளிவும் இல்லாமல் போய்விடுகிறது. உதாரணமாக வலிகிழக்கில் நாம் மேற்கொண்ட கள ஆய்வில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள் பயன்படுத்தப்பட்டு வந்த தயிர்கடையும் மத்து, இடியப்ப உரல் அம்மி, குளவி. திருகை, பாக்குவெட்டி, திருவலை, உரல், உலக்கை, கட்டில், கதிரை, உறி, நீர்த்துப்பெட்டி, ஓலைப்பாய், மண்பானை, சட்டி, மூக்குப்பேணி, செப்பு பாத்திரங்கள், மரத்தாலான கலைப் பொருட்கள, ஆடைப் பொருட்கள் முதலானவை பாவனைக்கு உதவாத பொருட்களாக கைவிடப்பட்டிருப்பதைக் காண முடிந்தது. ஆனால் அவற்றில் எமது தொழில்நுட்பம், கலையுணர்வு, பண்பாட்டுத் தனித்துவம் அடங்கியிருப்பதை மறந்துவிடுகிறோம். தென்னிலங்கையில் இப்பொருட்களைப் பாதுகாக்க அருங்காட்சியகங்கள் உண்டு. அந்த வாய்ப்பு எமக்கில்லை. ஆகவே அவற்றை ஆவணப்படுத்தவும், பாதுகாக்கவும் வலிகிழக்குப் பிரதேச செயலகம் முன்வரவேண்டும் என்பதே அப்பிரதேச மக்களின் வாஞ்சையாகும்.

**துணைநூல்கள்**

Navaratnam,C .S., 1964, A Short History of Hinduism in Ceylon,J affna.

சிற்றம்பலம், சி. கு,. 1992, யாழ்ப்பாண இராச்சியம்., யுாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு. யாழ்ப்பாணம்.

# வலி. கிழக்கின் வற்றாத நீர் வளம்.
# நிலாவரை, பொக்கணைக் கிணறுகள்.



ந.குமரசிறி
ஆசிரியர், ஊரெழு கணேச
வித்தியாலயம்

வலி. கிழக்கில் அதிசயமான அற்புதமான இடங்களைப் பார்க்க வேண்டுமென நாடுவோர் நிலாவரைக் கிணற்றையும், பொக்கணைக் கிணற்றையும் பார்ப்பதற்காகச் செல்வர். வீடுகள் தோறும் கிணறுகள் இருக்கும் போது இக்கிணறுகளில் மட்டும் என்னதான் விசேடம் இருக்கிறது? என்பது அறியாதாரின் கேள்வியாக இருக்கும்.

கிணறுகள் எல்லாம் மனித எத்தனத்தில் தோண்டப்படுவனவாக இருக்கையில் இங்கு குறிப்பிடப்பட்டவை மட்டும் தானாகவே தோன்றின என்பது ஊர் மக்களின் நம்பிக்கையாகவுள்ளது. வீட்டில் உள்ள சாதாரண கிணறுகள் ஒன்றரை தொடக்கம் இரண்டரை மீற்றர் விட்டமுடையனவாக இருக்கின்றன. நிலாவரைக் கிணறு ஏற்றத்தாழ 10 மீற்றர் நீளத்தையும் அதே அளவு அகலத்தையும் உடையதாக, சதுர வடிவானதாக இருக்கிறது. இதன் ஆழமும் மிகக் கூடுதலாக உள்ளது. ஏனைய கிணறுகள் வற்றும் இயல்புடையவை. நிலாவரைக் கிணறோ என்றும் வற்றாத நீர்வளமாக உள்ளது.




நிலாவரைக் கிணறு போல வற்றாத நீர் நிலைகள் குடாநாட்டின் வேறுசில இடங்களிலும் உள்ளன. மானிப்பாயில் இடிகுண்டுக் கிணறு, வேம்பிராய்க் கிணறு, கரவெட்டியில் அத்துளுக்கிணறு, ஊரெழுவில் பொக்கணைக் கிணறு, குரும்பசிட்டியில் பேய்க்கிணறு போன்றவற்றை இந்த வரிசையில் கொள்ளலாம். இவை வெவ்வேறு ஆழங்களில் நீர் மட்டங்களைக் கொண்டுள்ளன. நிலாவரைக் கிணறு தரையில் இருந்து 7 மீற்றர் ஆழத்திலும் பொக்கணைக் கிணறு ஒன்றரை மீற்றர் ஆழத்திலும் நீர் மட்டத்தைக் கொண்டுள்ளன.

இக்கிணறுகளின் தோற்றங் குறித்துப் பல்வேறு கர்ணபரம்பரைக் கதைகள் நம்மிடையே உள்ளன. இராமாயண காலத்தில் இலங்கைக்கு வந்த வானரப் படைகளுக்குத் தண்ணீர்த் தாகம் ஏற்பட்டதால் இராமன் தனது வில்லினால் குத்தி நீர் எடுத்த இடமே நிலாவரைக் கிணறு என்றும்

வானரப் படையினர் நீர் அருந்திய இடத்தில் தானும் நீர் அருந்த விரும்பாத இராமன் ஊறெழுவில் தோண்டி நீர் அருந்திய இடமே பொக்கணை என்றும் கூறப்படுகிறது. சாதாரணமாக மனிதர்களால் இத்தகைய கிணறுகளைத் தோண்டுவது சாத்தியமில்லையாதலால் இத்தகைய கர்ண பரம்பரைக் கதைகள் உலாவுவது தவிர்க்க முடியாததே. இது எவ்வளவிற்கு உண்மையானதென்பதும் நீண்ட ஆய்வுக்குரியதே.



ஊறெழுவிலுள்ள பொக்கணைக் கிணறு

இக்கிணறுகள் எப்படி உருவாயினவென்பதற்கு அறிவியலாளர் கூறும் விளக்கத்தை நோக்குவோம். யாழ்ப்பாணக் குடாநாடு மயோசீன் காலச் சுண்ணாம்புக் கற்களால் ஆனது. நீர் உட்புக விடும் தன்மை இதற்கு உண்டு. பெய்கின்ற மழைநீர் உட்கசிந்து வன்மையான பாறைநீராகத் தேங்கியிருக்கும்.

மழைநீர் வளியினூடாகப் பெய்யும் போது அதனுடன் காபனீரொட்சைட்டு ($CO_2$) கலக்கிறது. அதன் அம்மழைநீர் காபோனிக் அமிலமாக ($H_2CO_3$) மாறுகிறது. இங்குள்ள மயோசீன் சுண்ணக் கற்கள் கல்சியம் காபனேற் ($CaCO_3$) என்ற இரசாயனப் பதார்த்தத்தை உடையனவாகும். கல்சியம் காபனேற்றைக் காபோனிக் அமிலம் கரைத்துவிடக் கூடியது. இதன் காரணமாகச் சுண்ணப் பாறைகளைக் கரைத்து நீர் உட்செல்கிறது. பாறைகள் கரையும் போது சில இடங்களில் தரையின் கீழ், பெரிய பள்ளங்கள் உருவாகிவிடுகின்றன. அத்தகைய பள்ளங்கள் பெரும் நீர்க்குகைளாகவும் விளங்கக் கூடும். இவற்றுள் பெருமளவு நீர் தேங்கி நிற்கிறது. அவையே வற்றாக்கிணறுகள் ஆகின்றன.

எது எவ்வாறெனினும் எங்கள் பிரதேச வற்றாத நீர் வளமாக, உள்ளூர்ச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக, இக்கிணறுகள் விளங்குவது நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தரவல்லதாகும்.

**வலி. கிழக்கில் மக்கள் தொகை** (மே 2008 கணக்கெடுப்பின் படி)

| | | |
|---|---|---|
| குடும்பங்களின் தொகை | - | 20835 |
| ஆண்களின் தொகை | - | 33357 |
| பெண்களின் தொகை | - | 37400 |
| மொத்தம் | - | 70757 |

# கோப்பாய் கல்விக் கோட்டச் செயற்பாடுகள்

## ஒரு குறிப்புரை



சின்னத்தம்பி சித்திரவடிவேல்,
கோட்டக்கல்வி அலுவலர்,
கோப்பாய்.

தற்போதய கல்வி அமுலாக்கல் கொள்கைக்கு அமைய ஒவ்வொரு பிரதேச பிரிவுகளுக்கும் ஒரு கோட்டக்கல்வி அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் யாழ் கல்வி வலயத்தில் உள்ள மூன்று கோட்டங்களில் ஒன்றாக கோப்பாய் கோட்டம் காணப்படுகின்றது கோப்பாய் பிரதேசமானது பரந்த பாரிய நிலப்பரப்பையும் பலதரப்பட்ட பொருளாதார வளமுடைய மக்களையும் கொண்ட ஓர் பிரதேசமாகும். வடக்கே வளலாய், இடைக்காடு ஆகியவற்றையும் மேற்கே உரும்பிராயையும் தெற்கே இருபாலை வரையுமான பல கிராமங்களை உள்ளடக்கிய ஒரு பிரதேசமாகும்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்திலுள்ள 115 பாடசாலைகளில் 43 பாடசாலைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் இக்கல்விக் கோட்டத்தில் தற்பொழுது 37 பாடசாலைகளே இயங்கும் நிலையில் உள்ளன. ஏனைய பாடசாலைகள் அயற்பாடசாலைகளுடன் இணைந்து இயங்குகின்றன. இப் பாடசாலைகளில் யா/ இடைக்காடு மகா வித்தியாலயம், யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி என்பன 1AB தரத்தையும் யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி, யா/ புனித திரேசா மகளிர் கல்லூரி, யா/ அத்தியார் இந்துக்கல்லூரி என்பன 1C தரத்தையும் சேர்ந்ததாக உள்ளன. 10 பாடசாலைகள் தரம் 2 யையும் எஞ்சிய 20 பாடசாலைள் தரம் 3 யையும் சேர்ந்தன வாகவும் காணப்படுகின்றன.



இக் கோட்டத்தில் உள்ள 43 பாடசாலைகளில் 06 பாடசாலைகள் தற்போதைய போர்ச் சூழல் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டோ அல்லது அயற்பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டோ உள்ளன. அவையாவன யா/அச்சுவேலி வடக்கு றோ.க. த. க. பாடசாலை, யா/வளலாய் அ. மி. த. க. பாடசாலை, யா/அச்சுவேலி ஸ்ரீ விபசி வித்தியாலயம், யா/ கோப்பாய் வடக்கு சி. சி. த. க. பாடசாலை, யா/ பூதர்மடம் அ. த. க. பாடசாலை, யா/ஊரெழு சி. சி. த. க. பாடசாலை என்பனவாகும்.

தற்போது இயங்கிவரும் 37 பாடசாலைகளில் 17 பாடசாலைகளிலே க. பொ. த. (சாதரண தர) வகுப்புக்கள் வரை கல்வி கற்பிக்கப்படுகின்றன.14 பாடசாலைகளில் தரம் 05 வரையும் எஞ்சிய 06 பாடசாலைகள் தரம் 09 வரையும் கற்றல் இடம்பெறுகின்றது.

கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலத்தை பொறுத்த வரை, இருக்கின்ற ஆசிரிய வளம் சீராக பகிரப்பட்டுள்ளபோதிலும் ஆசிரிய வளம் பற்றாக்குறையாகவே உள்ளது.

இக் கல்விக் கோட்டம் பெருவிளையாட்டுக்கள், மெய்வல்லுநர் போட்டி போன்றவற்றில் மட்டும்மன்றி தமிழ்த்தினப் போட்டி, கணித விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாடம் சார்ந்த போட்டிகளிலும் யாழ் வலய மட்டத்தில் உயர் பெறுபேறுகளைப் பெற்று வருவது போற்றுவதற்குரியது.

பரீட்சை பெறுபெறுகளைப் பொறுத்தவரை ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சையில் 2007ஆம் ஆண்டில் 84 மாணவர்கள் சித்தியடைந்மை போற்றுவதற்குரியதாகும். இப் பெறுபெறுகளானது வரும் ஆண்டுகளில் மேலும் அதிகரிப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. இதற்காக கோட்டமட்டத்தில் மாதம் இரு பயிற்சிப் பரீட்சைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

க. பொ. த.ப. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில மொழி தவிர்ந்த ஏனைய பாடங்களில் கோப்பாய் கோட்ட மாணவர்கள் உயர் பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். 2007ஆம் ஆண்டு பெறுபெறுகளின் படி க. பொ. த. உயர்தர வகுப்புகளில் கல்வி கற்பதற்கு தகுதி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் இக் கோட்டத்தைச் சேர்ந்த யா/ வாதரவத்தை வித்தியாலயம், யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் என்பன யாழ் கல்வி வலயத்தை பொறுத்த வரையில் முறையே 7ஆம், 12ஆம் இடங்களை பெற்று இருப்பதை கல்வி வலய திட்டமிடல் பிரிவின் தரவுகள் வெளிப்படுத்துகின்றன. கோப்பாய் கோட்ட கல்வி அலுவலகம், கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளில் கோப்பாய் பிரதேச செயலகத்துடன் இணைந்து செயற்பட்டு யாழ் கல்வி வலயத்தின் கல்வி மேம்பாட்டுக்காக அயராது உழைத்து வருகின்றது.

## அறிவை வளர்த்திட



அறிவு வளர்ச்சிக்கு ஒரேஒரு வழிமுறைதான் இருக்கிறது. அதுதான் நம்முடைய மனத்தை ஒருமுகப்படுத்துவதாகும். கல்வியின் அடிப்படைக் குறிக்கோளே மனத்தை ஒருமுகப்படுத்துவதுதான். சாதாரண மனிதனிலிருந்து எல்லாச் சத்திகளையும் பெற்ற யோகிவரை அனைவரும் தங்களுடைய அறிவு வளர்ச்சிக்கு அந்தமுறையைத் தான் பின்பற்றியாக வேண்டும்.

– சுவாமி விவேகானந்தர்

# வலி. கிழக்கில் தொழிலாளர் வர்க்கத்தினரின் முன்பள்ளிகள் ஓர் ஆய்வு



அ. பஞ்சலிங்கம்
முன்னாள் அதிபர்
யாழ். இந்துக்கல்லூரி

எமது பிரதேசங்களில் தற்பொழுது முன்பள்ளி கல்வி சம்பந்தமான விளிப்புணர்வு ஏற்பட்டு வருவதனை அவதானிக்க கூடியதாக உள்ளது. பாலர்களின் வளர்ச்சிப் பாதையில் முன்பள்ளி கல்வி முக்கிய இடத்தை வகிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. முறையாசாரக்கல்விக்கு அடித்தளம் இடப்படும் இடம் முன்பள்ளி ஆகும். மேலும் பாலரின் வருங்கால ஆளுமையால் முக்கிய பங்கினை வகிப்பது இப்பருவத்தில் நாம் வழங்கும் அனுபவங்கள் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவ்வாறு மிகவும் முக்கியம்வாய்ந்த பாலர் கல்வியின் நிலை வலி கிழக்குப் பிரதேசத்தில் எவ்வாறு அமைந்து உள்ளது என்பதை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்

வலி – கிழக்கு பிரதேசத்தை உற்று நோக்குவோமாயின் தொழிலாளர் வர்க்கத்தினை சேர்ந்த மக்களே அதிகம். அவர்களின் பாலர்கள் கற்பதற்கு உருவாக்கப்பட்ட முன்பள்ளிகளே இப்பிரதேசத்தில் அதிகம். இம் முன்பள்ளிகள் பல குறைபாடுகளை கொண்டு உள்ளன.

வலி–கிழக்குப் பிரதேசத்தில் 85 முன்பள்ளிகள் காணப்படுகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் உள்ளன. இம் முன்பள்ளிகளில் உள்ள பௌதீக ஆளணி கல்வி சார் நிலைமைகள் ஆராயப்பட வேண்டியவை. இதன் பொருட்டு எழுமாறாக பத்து முன்பள்ளிகள் (தொழிலாளர் வர்க்கத்தை சேர்ந்தவை) தெரிவு செய்யப்பட்டு தகவல் திரட்டப்பட்டன.

அட்டவணை – 01

<u>தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளின் விபரம் பின்வருமாறு</u>

| இல | முன்பள்ளி | முகவரி |
|---|---|---|
| 01. | கணேஸ்வரன் | வாதரவத்தை |
| 02. | கதிரொளி | அச்சுவேலி |
| 03. | முத்தமிழ் | ஊரெழு |
| 04. | ஒளிநிலா | அச்செழு |
| 05. | கிராம அபிவிருத்திச் சங்கம் | அச்செழு |
| 06. | இராசன் | கோப்பாய் |
| 07. | சரஸ்வதி | நவற்கிரி |
| 08. | உதய சூரியன் | உரும்பிராய் |
| 09. | வசந்த நிலா | இருபாலை |
| 10. | சிறுப்பிட்டி தெற்கு | சிறுப்பிட்டி |

தொழிலாளர் வர்க்கத்தினரின் 4 முன்பள்ளிகள் சம்பந்தமான பின்வரும் அம்சங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

பொது நூல் நிலையம்
கோப்பாய்

01. பௌதீக வசதிகள்

a) சொந்தமான கட்டடம்

b) போதிய இடவசதி

c) நீர் வசதி

d) மலசலகூட வசதி

e) தளபாடம்

f) பாலர் கதிரையும் மேசையும்

g) களஞ்சிய அறை

h) விளையாட்டு மைதானம்

i) முன்பள்ளியுடன் இணைந்த மைதானம்

02 ஆசிரியர்களின் தகைமை

03 மாணவர், ஆசிரியர் விகிதம்

04 பாடவிதானம் சம்மந்தமானவை

05 அறிக்கை சார்

மேற்கூறப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக விரிவாக ஆராய்ந்து பெற்ற தகவல்களைப் பார்ப்போம்

**01. பௌதிக வசதிகள்**

50% முன்பள்ளிகள் தமது சொந்தக் கட்டிடத்தில் இயங்குகின்ற போதும் செயற்பாடுகளுக்கு போதிய வசதி காணப்படவில்லை. நீர்மற்றும் மலசலகூட வசதிகள் 50% முன்பள்ளிகளில் மட்டும் உள்ள பொழுதிலும் மீதி 50% முன்பள்ளிகளும் அருகிலுள்ள கிணறுகளில் இருந்து வாளிகளில் நீரை எடுக்கின்றனர். தளபாட வசதிகளைப் பொறுத்தமட்டில் 60% முன்பள்ளிகளில் போதிய வசதிகள் காணப்பட்ட பொழுதிலும் சிலதளபாடங்கள் சிறுவர்களுக்கு பொருத்தமானதாகக் காணப்பட வில்லை. மேலும் 50% முன்பள்ளிகளுக்கு விளையாட்டு மைதானம் அமைந்துள்ள போதிலும் அங்கு கற்பாறைகள் நிலத்துக்கு வெளியே நீட்டுகின்றமையை காணமுடியும். நிழல் மரங்களும் குறைவாக உள்ளமையினால் பிள்ளைகள் சுடு வெயிலில் விளையாடுகின்றனர். மூன்று வயதுப்பிள்ளைகளின் செயற்பாடு 4 வயது பிள்ளைகளின் செயற்பாடுகளில் இருந்து வேறுபட்டவை. எனவே அவர்களுக்கு வெவ்வேறாக கற்பித்தல் நடத்தப்பட வேண்டிய தேவை உண்டு. இருந்த போதிலும் 80% முன்பள்ளிகளில் இவ்வசதி காணப்படாமை மிகப் பெரிய துர்ரதிஷ்டமாகும். அநேகமாக முன்பள்ளிகளில் குறைந்த தொகையான ரூ 50/=, ரூ 100/= வரையே பெறறோரிடமிருந்து மாதக்கட்டணமாகப் பெறுகின்றனர். இத்தொகையினைக் கூடப் பெரும்பான்மையான பெற்றோர் செலுத்துவதற்குத் தயங்குகின்றனர்.

## 2 ஆசிரியரின் தகைமை

வலி கிழக்குப் பிரதேச பின்தங்கிய குக்கிராம முன்பள்ளி ஆசிரியர்களின் தராதரங்கள், பயிற்சி, அனுபவம் என்பவற்றை நோக்கும் போதே அவை திருப்திகரமாக இல்லை. ஒருவருட டிப்ளோமா முடித்த ஒரு ஆசிரியர் மட்டும் காணப்படுகின்றார். க. பொ. த. சாதாரண கல்வியுடன் எவரும் இல்லை. மீதி ஆசிரியர்கள் க. பொ. த. சாதாரணம் வரை கற்றவர்கள். அவர்களுக்கு ஒழுங்கான நன்கு திட்டமிடப்பட்ட பயிற்சி வழங்கப்படுவதில்லை. ஆசிரியர்களின் வேதனத்தை பார்த்தால் அவர்களில் 77% மானோர் ரூபா 1000 த்திலும் குறைவாகவே பெறுகின்றனர்.

## 3 மாணவர் ஆசிரியர் விகிதம்

எமது பிரதேச சபைகள் 15 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தினை நிர்ணயிக்கின்றன. ஆனால் இங்கு 14:1 என்ற விகிதம் நிலவுகின்றமை ஒரு அனுகூலமாகும்.

## 4 பாடவிதானம்

சகல பாடசாலைகளும் பொதுவான ஒரு பாட வினாத்தாளினை பின்பற்றுகின்றன. இது இருந்த போதிலும் கற்பித்தல் உபகரணங்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது. (100%)

## 5 கற்கை விருத்தி

4 வயது மாணவர்களின் கணிதம்சார் அடைவுகளை ஆய்வுக்கு உட்படுத்திய பொழுது பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன.

a) அட்டவணை - 30 மாணவர்களின் தொகுதி கணிதம் சார் அடைவுகள்

| இல | வகை | மாணவர் தொகை | வீதம் |
|---|---|---|---|
| 01. | நிறைவுகளை இணங்காணல் | 25 | 83% |
| 02. | 1,2,5 ரூபா குத்திகளை இணங்கால் | 22 | 73% |
| 03. | 9 வரை எண்ணுதல் | 25 | 83% |
| 04. | பொருளொன்றின் உருவை வரை | 20 | 66% |
| 05. | நடுப்புள்ளியை இனங்காணல் | 18 | 60% |
| 06 | முழுதிலிருந்து அரைப்பங்கினை இனங்காணல் | 15 | 50% |
| 07 | பொருட்களின் எண்ணிக்கையுடன் 1-9 எண்களை இணைத்தல் | 20 | 66% |
| 08 | பொருத்தமற்ற பொருளை மிகுதியில் இருந்து வேறாக்கல் | 23 | 76% |
| 09 | நீள வேறுபாட்டினை இனங்காணல் | 30 | 100% |

பொது நூல் நிலையம்
கோப்பாய்

கணிதம் சார்அடைவுகளில் 72% முனபள்ளி மாணவர்களின் அடைவு திருப்தி கரமாகவுள்ளது.

(b) சுற்றாடல் தொடர்பானது

சுற்றாடல் அம்சமும் மாணவர் அடைவும்

| வகை | மாணவர் தொகை (30) | வீதம் |
|---|---|---|
| 01. பிறருக்கு உதவுதல் | 25 | 83% |
| 02. உணவின் முன்பும் பின்பும் கைகளைக் கழுவுதல் | 20 | 66% |
| 03. நற்பழக்கம் | 10 | 33% |
| 04. காலணி அணிதல் | 16 | 53% |
| 05. தூய உடையணிதல் | 11 | 36% |
| 06. நகம், பல், தலை தூய்மை | 12 | 40% |
| 07. வருகை தருவோரை கனம்பண்ணல் | 22 | 73% |
| 08. பொருட்களை ஒழுங்காக வைத்தல் | 22 | 73% |
| 09. குழுச் செயற்பாடு | 27 | 90% |
| 10. மென்தசைநார் பயிற்சி | 30 | 100% |
| சராசரி | | 55% |

சில அம்சங்களின் முக்கியமாக தூய்மை சம்பந்தமான விடயங்களில் கூடிய சிரமத்தை எடுக்க வேண்டியுள்ளது.

**C) ஆங்கிலம் தொடர்பானது**

ஆங்கில அறிக்கை அம்சங்களின் 33% மாணவர்களே விடை கூறினர். 01 முதல் 10 வரை ஆங்கிலத்தில் கூறுவார்கள். ஆனால் A முதல் Z வரை கூறுவதில் சிரமப்படுகின்றனர். அதேபோல் அறிவுறுத்தல்களை விளங்க முடிவதில்லை.

**d) சமய விவகாரம்**

சமய சம்பந்தமான விடயங்களில செயற்பாடு திருப்பதிகரமாக உள்ளது

**C) தமிழ் மொழி சம்பந்தமானது**

அட்டவணை:- தமிழ் மொழித்தேர்ச்சி

| வகை | மாணவர் தொகை | வீதம் |
|---|---|---|
| 01. கதை கூறுல் | 22 | 73% |
| 02. வாசிப்பதில் அக்கறை | 05 | 16% |
| 03. எழுதுவதில் அக்கறை | 19 | 63% |
| 04. அறிவுறுத்தலை விளங்குக | 27 | 90% |
| 05. உணர்வுகளை வெளிப்படுத்தல் | 27 | 90% |
| 06. தெளிவாகப் பேசல் | 26 | 86% |
| 07. பாட்டுப்பாடல் | 25 | 83% |
| 08. படங்களை இனங்கால் | 20 | 66% |
| 09. 2,3 எழுத்துச் சொற்களை பார்த்துஎழுதல் | 25 | 83% |
| சராசரி | | 72% |

மேற்குறிப்பிட்ட அம்சங்களில் காணப்படும் குறைபாடுகள் தேவைகள் ஆகியவற்றை நிறைவுசெய்வதாயின் பெருந்தொகை (நிதியும்) முதலீடும். முன்பள்ளியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அற்பணிப்புடன் செயற்படும் ஆற்றலும் தேவையும் இதனை அரசாங்கத்தால் மட்டும் நிறைவு செய்ய முடியும். வருடத்தில் ஒரு சில முன்பள்ளிகளையும் விருத்திசெய்து மாதிரி முன்பள்ளிகளாக உருவாக அரசாங்கம் அல்லது அரசார்பற்ற நிறுவனங்களாவது காலம் தாழ்த்தாது முன்வர வேண்டும்.

72% மாணவர்கள் திருப்திகரமாக செயற்பட்டுள்ளனர்.

**அழகியல் அம்சம்**

நிறந்தீட்டல், நிறம் இனங்காணல் போன்றவற்றை 81.5% மாணவர்கள் திறம்படச் செய்துள்ளனர்.

மேற்கூறப்பட்ட அம்சங்களில் காணப்படும் குறைபாடுகள், தேவைகள ஆகியவற்றை நிறைவு செய்வதாயின் பெருந்தொகை (நிதியும்) முதலீடும் முன்பள்ளியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆற்றலும தேவை. இதனை அரசாங்கத்தால் மட்டுமே நிறைவு செய்யமுடியும். வருடத்தில் ஒரு சில முன்பள்ளிகளையேனும் விருத்திசெய்து மாதிரி முன்பள்ளிகளை உருவாக்க அரசாங்கம் அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களாவது காலம் தாழ்த்தாது முன்வர வேண்டும்.

இவ்வாய்வின் அடிப்படையில் பின்வரும் தேவைளை இவ்வேளையில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும் என நம்புகின்றேன்.

01. பௌதிக வளங்கள், ஆசிரியர் தகைமை, பயிறசி, வேதனம் ஆகியன திருப்திகரமாக இல்லை.

02. முன்பள்ளிக் கல்விச் சேவை திருப்திகரமற்ற அமைப்பினை உடையது.

03. பயிற்சி வசதிகள் போதுமானது அல்ல. அத்துடன் ஒழுங்கான முறையிலும் அமையவில்லை.

04. பிள்ளைகளின் வளர்ச்சிக் கோலங்கள் பற்றிய அறிவு ஆசிரியர்களிடையே விருத்தி செய்தல் அவசியம்.

05. பாடவிதானம் செம்மையாக பின்பற்றப்படுவதில்லை.

06. கற்பித்தல உபகரணங்கள் போதாமை.

07. முன்பள்ளிகள் தகுந்த பேற்பார்வைக்கு உட்படுத்தப்படாமை.




## "சாஹித்ய ரத்னா"
# கவிஞர் கலாநிதி. இ.முருகையன்

ச.லலீசன்
B.A.(Hons.), P.G.D.E. (Distinction), M.Ed.

ஈழத்துக் கவிதை இலக்கியப் பாரம்பரியம் நீண்ட வரலாற்றையுடையது. சங்கப் புலவராகிய ஈழத்துப் பூதந்தேவனாருடன் ஆரம்பமாகும் இக்கவிதைச் செல்நெறி, இன்று உலகத் தரத்திற்கு வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்க் கவிதைத் துறையைச் செழுமையடையச் செய்த மரபுவழிப்பட்ட நவீன கவிஞர்கள் என்ற நிலையில் மூவரைக் குறிப்பிட்டுக் காட்டுவர். மகாகவி, நீலாவணன், முருகையன் என்போரே அம்மூவருமாவர். இவர்கள் மூவருமே கவிதை எழுதுவதற்கு யாப்பை தளை, கட்டு, இடைஞ்சல் எனக் கருதாதவர்கள்.

பாரதியை மஹாகவி எனப் போற்றுவதற்குப் பிரதான காரணம் அவர் நமது மொழிக்குப் புதியதோர் ஒளியைக் கொடுத்தமையே ஆகும். தமிழ் மொழியில் முன்னென்று மில்லாதவகையில் புதிய சொற் சேர்க்கைகளையும் மரபுத் தொடர்களையும் கையாண்டு மக்கள் கவிஞன் என்ற உயர் தகுதிப்பாட்டைப் பாரதி பெற்றார். பாஞ்சாலி சபத முன்னுரையில் பாரதியின் கூற்று இதனை மெய்ப்பித்து நிற்கிறது.



கவிஞர் கலாநிதி. இ. முருகையன்

*"சுவை புதிது, பொருள் புதிது, வளம்புதிது*
*சொற் புதிது, சோதி மிக்க*
*நவகவிதை எந்நாளும் அழியாத*
*மகா கவிதை..."* என்கிறார்.

பாரதிக்கு ஒப்பாக, ஈழத்தில் மக்கள் இலக்கியம் படைத்தவர் எனத் துணிந்து கூறத் தக்க பெருமைக்குரியவராக, நம்மவரான கவிஞர் முருகையன் திகழ்கிறார் என்பது மிகைப்படுத்தலாக இருக்காது.

### வாழ்க்கைப் பின்னணி

#### அ) கல்வியும் மணவாழ்வும்

கவிஞர் முருகையன் 1950 களில் இருந்து எழுதி வருகிறார். சாவகச்சேரியிலுள்ள கல்வயலில் 1935 ஆம் வருடம் ஏப்பிரல் மாதம் இருபத்து மூன்றாம் திகதி தமிழாசிரியர் இராமுப்பிள்ளை, செல்லம்மா மணஇணையரின் இரண்டாவது புதல்வராக முருகையன் பிறந்தார். சிவானந்தன் (நாடகம் கவிதையில் பிரபலம் பெற்றிருந்தவர்), மகேஸ்வரி, கமலாம்பிகை என்போர் இவரது சகோதரர்கள்.

தொடக்கக் கல்வியைக் கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பெற்றபின் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் (1948 1952) பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புவரை பயின்றார். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் (1953 1956) விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்றார். 1960 ஆம் ஆண்டில் தனது சொந்த விருப்பின் பேரில் இலண்டன் பல்கலைக் கழகப் பட்டத் தேர்வில் ஆங்கிலம், தமிழ், கணிதம் ஆகிய மூன்று பாடங்களுக்குத் தோற்றி கலைமாணி முதற்பிரிவிலே சித்தியடைந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வியியல் துறையில் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் பெற்றார்.

09 ஆம் திகதி யூன் மாதம் 1967 ஆம் ஆண்டில் நீர்வேலியில் தவமணிதேவியை வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டதிலிருந்து வலி.கிழக்கு அன்னையின் அருந்தவச் சொத்தானார். இவருக்கு நாமகள், நாவலன் என இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

## ஆ) ஆளுமை உருவாக்கத்தின் பின்புலம்

ஈழத்துக் கல்விப் பாரம்பரியத்தில் மரபுவழித் தமிழ்க் கல்வி யாழ்ப்பாண மன்னர் காலத்திலிருந்து முக்கியத்துவம் பெற்றிருந்தது. புராண படனச் செயற்பாடு இன்றும் பல ஆலயங்களில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. முருகையனின் தந்தையார் புராணபடன வல்லுநராக இருந்தமையும் இத்துறையில் முருகையனை ஈடுபடுத்தியமையும் அவருக்கு நல்லதொரு அத்திவாரத்தை ஏற்படுத்தியது.

யாழ் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற காலத்தில் (பேராசிரியர்) கைலாசபதியின் பள்ளித் தோழனாக விளங்கினார். இந்த நட்பும் அவரது ஆளுமை உருவாக்கத்தில் கணிசமான செல்வாக்கைச் செலுத்தியிருக்கிறது. கைலாசபதி அவர்கள் பாடசாலை நாட்களில் முருகையனுடன் இருந்த தொடர்பிறுக்கம் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

*" ... என்னுடைய நினைவு பதினைந்து, இருபது ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று நிலைக்கிறது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லாரியிலே விடுதி மாணவராக நாமிருவரும் வாழ்ந்த நாட்கள் பளிச்சிடுகின்றன. இலக்கியத் தாகமும், வேட்கையும் நெஞ்சிலே தோன்றிய காலமது. விடுதி மாணவர் கையெழுத்துப் பத்திரிகையிலே இருவரும் ஏதேதோ எழுதி இன்பங்கண்ட பொழுதுகள் எல்லாம் மீண்டும் பசுமை பெறுகின்றன. இளம் எழுத்தாளருக்குள்ள புத்துலகப் பரிச்சய உணர்ச்சி உந்துதலின் பேரில் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் அனுப்பிய பெரிய பெரிய விஷயங்கள் இப்போது மலைப்பை உண்டு பண்ணுகின்றன."*

## வகித்த பதவிகள்

முருகையன் வகித்த பதவிகளும் அவரது இலக்கிய முயற்சிகளுக்கு ஆதரவளிப்பனவாகவே அமைந்தன. முதலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் விஞ்ஞான கணித ஆசிரியராக ஏழாண்டுகள் கடமையாற்றினார் (1956 1962). பின் அரச கரும மொழித்

திணைக்களத்தின் மொழி பெயர்ப்பாளராகச் சேர்ந்தார். பின் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் வெளியீட்டுப் பிரிவின் பிரதம பதிப்பாசிரியராக விளங்கினார். இக்கால கட்டத்தில் விஞ்ஞான நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தும் கலைச் சொற்களை ஆக்கியும் பெருந்தொண்டாற்றினார். இம்முயற்சி அவரது மொழித் திறனையும் மொழியாற்றலையும் செழுமையடைச் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் அவர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராகவும் (1978 1983) முல்லைத்தீவில் கல்விப் பணிப்பாளராகவும் (1983 இற்குப் பின்) யாழ் மேலதிக கல்விப் பணிப்பாராகவும் பணியாற்றினார். தொடர்ந்து யாழ் பல்கலைக் கழக ச் சிரேஷ்ட உதவிப் பதிவாளராகப் (1986 1995) பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் மொழி பெயர்ப்பு உத்திகள் என்னும் பாடத்தைப் போதிக்கும் இடைவரவு (Visiting) விரிவுரையாளராகப் பணியாற்றியிருந்தார்.

## எழுத்துலகப் பிரவேசம்.

முருகையனின் முதற் கவிதை முயற்சி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலேயே தொடங்கியது. இது பற்றி கலைவாணி முத்துக்குமாரு பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

*முருகையன் அவர்கள் 7 ஆம் வகுப்பில் கல்வி கற்ற போது மகாத்மா காந்தி (இறந்த) நினைவாக ஒரு சஞ்சிகை வெளியிடுவதற்கு ஆக்கங்கள் தருமாறு மாணவர்களிடம் கோரியிருந்தனர். அச்சஞ்சிகைக்காக முருகையன் கவிதை ஒன்றை எழுதிக் கொடுத்தார். ஆனால் அது பிரசுரிக்கப்படாது நிராகரிக்கப்பட்டது. பின்னர் அதே கவிதையை அவரது தந்தையார் பாராட்டினார். அச்சஞ்சிகை வெளியானதும் முருகையன், அதில் படங்களுக்குப் பின் வெறுமையாக இருக்கும் இடத்தில் தனது கவிதையை ஒட்டி வீட்டுக்குக் எடுத்துச் சென்றாராம். "எவ்வளவு அருமையான கவிதை" என் முருகையனின் தந்தை முருகையனைப் பாராட்டிப் பல்வேறு விதமாகப் புகழ்ந்தார். இது அவரது எழுத்துத்துறை முயற்சி தொடர உந்து சக்தியாக அமைந்தது."*

1950 ஆம் ஆண்டு இந்து இளைஞன் சஞ்சிகைக்கு கைலாசபதி அவர்கள் ஆசிரியராக இருந்தபோதே முதன் முதலாக முருகையனின் கவிதை அச்சுருவில் வெளிவந்தது. "சத்தியம் நிலைக்க வேணடும்" என்ற தலைப்பிலே அமைந்தது இந்தக் கவிதை.

*வள்ளுவனின் வழுவற்ற கொள்கை யில்லை*
*வளமுடைநல் லகிம்சையுடன் ஒழுக்க மில்லை*
*முள்ளுகளாம் தீமைநிறை இருள்சூழ் பாதை*
*முனைந்து கொண்டே செல்கின்ற உலகுதன்னில்"*

என்று தொடங்கித் தொடர்ந்து செல்கின்றது.

தனது எழுத்துலகப் பிரவேசம் குறித்து 17 ஜனவரி 1999 இல் வெளியான தினக்குரல் பத்திரிகையில் முருகையன் பின்வருமாறு கூறுகின்றார்.

எழுத்தாளர்களைச் செவ்வி காண வருகின்றவர்கள் எடுத்த எடுப்பிலேயே தொடுக்கும் கேள்விகள் சில உண்டு. தங்களுக்கு எழுத வேண்டும் என்ற ஆர்வம் எந்த வயதில் முகிழ்த்தது? பல்வேறு இலக்கிய வடிவங்கள் இருக்க நீங்கள் சிறுகதையை (அல்லது கவிதையை அல்லது நாடகத்தை) த் தேர்ந்தெடுத்தது ஏன்? இந்த விதமான கேள்விகள் அவ்வப்போது என்னை நோக்கியும் தொடுக்கப்பட்டதுண்டு. அவற்றுக்கு நான் தந்த விடைகளின் சாரத்தைத் தொகுத்துச் சற்றே செப்பனிட்டு இங்குதர எண்ணுகிறேன்.

ஆர்வம் எப்போது முகிழ்த்தது என்று திட்டவட்டமாகச் சொல்கிறது கடினம்.பதின் மூன்று பதினாறு வயதிலே அது மெல்ல மெல்லத் தலைகாட்டியிருக்க வேண்டும். இப்படிப்பட்ட சமாச்சாரங்களுக்கெல்லாம் ஆண்டு மாதம் தேதி குறித்து வரையறையாகச் சொல்ல முடியாதுதானே!. அப்படிச் சொல்ல முடியும் என்று சிலர் நினைப்பதுண்டு. அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை பழம் புலவர்களின் வரலாறுகளிலே ஒரு சிறப்பான சந்தர்ப்பத்திலே அவர்கள் திடீரென்று பாட்டியற்றிப் பாடினார்கள் என்று வரும். திருஞான சம்பந்தர், ஔவையார், காளமேகப் புலவர் அருணகிரிநாதர் போன்ற பலர் பற்றி இவ்விதமான கதைகள் வழங்குகின்றன. அந்தக் கதைகள் அற்புதச் சுவை பொருந்தியவையாக இருப்பதால் மக்கள் மனதைக் கவருகின்றன. புலமை பற்றியும் கவிதை பற்றியும் மரபுவழியாக மக்களிடை நிலவி வரும் மதிப்புக்கும் வியப்புக்கும் இப்படிப்பட்ட கதைகள் காலாய் உள்ளன. ஆனால், என்னைப் பொறுத்த வரையில் அப்படியொரு அற்புதமும் நிகழவில்லை"

இங்கும் முருகையன் தனக்குரிய கிண்டல்பாணியைக் கைவிடவில்லை என்பதும் நோக்கத்தக்கது.

## பல்பரிமாணத் தமிழ்ப் பணி

ஈழத்து இலக்கியப் பரப்பில் மக்கள் இலக்கியம் படைத்த முற்போக்குக் கவிஞராக முருகையன் திகழ்கிறார். அவர் படைத்த எழுத்துகளுக்கான வடிவங்களோ பலப்பல.

கவிதை, நாடகம் , இசைப்பாடல்கள், மொழி பெயர்ப்பு, சிறுகதை எனப் பல தளங்களில் முருகையன் காலடி பதித்திருந்தாலும் தனக்குப் பிடித்தமான இலக்கிய வடிவமாக உள்ளது கவிதைதான் என அவரே குறிப்பிடுகின்றார்.

நான் கவிஞராக அறிமுகமானமை பற்றிக் குறிப்பிடும் அவர்.

"வையம் என்றும் பயன் பெறுமாறொரு
வண்ணமான கருத்து முகிழ்த்திடின்
பெய்யலாம் ஒரு செய்யுளில்..."
என்று காலம் கனியும்வரை பொறுத்துக்
காத்திருந்தேன் அதன்பின்னர்

*"காத்திருந்து பலபகல் சென்றதும்*
*கருத்து வந்து திரண்டது நெஞ்சிலே!*
*வார்த்தை கூடி வரிசையில் வந்தன*
*வந்து வந்து மனத்திரை மீதிலே*
*கூத்தடிக்க அவற்றை எழுதினேன்*
*குறை திருத்தி மினுக்கிப் புதுக்கினேன்*
*பார்த்தவர்கள் கவிதைதான் என்றனர்*
*படித்தவர்களும் "ஆம்!" என ஒப்பினர்.*

பொது நூலகம் கோப்பாய்

எனத் "தேனருவியில் 1962 இல் எழுதியதாகக் குறிப்பிடுகின்றார். (தினக்குரல் 17.01.1999)

கவிதை எழுதுவதுதான் முருகையனுக்கு மிகவும் பிடித்தமான காரியம் இதனை அவரே குறிப்பிட்டிருக்கிறார். அதற்கான நியாயப்படுத்தல்களையும் செய்திருக்கிறார். இதற்காக அவர் கூறும் நியாயங்கள் வருமாறு

அ) *சொற்கலைகளின் அரசியாகக் கவிதை உள்ளது. மொழியின் உச்சப் பயன்பாடு கவிதையிலேதான் நிகழ்கிறது.*

ஆ) *ஒப்பீட்டளவிலே சுருக்கமும் செறிவும் மிகுந்த இலக்கிய வடிவம்கவிதைதான்.*

இ) *நல்ல கவிதைகள் பல தளங்களிலும் சென்று பொருள் பயக்கும் செழுமையும் ஆற்றலும் நிறைந்தவை*

ஈ) *வெளிவெளியாக எல்லாவற்றையும் அவிழ்த்துக் கொட்டிவிடாமல் குறிப்பினால் உணர்த்திவிடும் தன்மையினால் அலுப்பையும் சலிப்பையும் தராத உயிர்ப்பு மிக்க நாகரிகமான வடிவங் கொண்டது கவிதைதான்.*

உ) *திருப்திகரமான கவிதையொன்றை இயற்றுவது ஒருவருடைய படைப்பாற்றலைச் சோதனை பண்ணும் ஒரு சவால் அந்தச் சவாலை எதிர் கொள்வதில் படைப்பாளிக்கு உண்டாகும் மகிழ்ச்சியும் வெற்றியுணர்வும் மகத்தானவை.*

இந்த எண்ணப்பாடுகளே அவரைச் சிறந்த கவிஞனாகப் புடமிட்டன எனலாம்.

## முருகையனின் எழுத்துகள்

முருகையன் கவிதையைச் சிறப்பாகக் காதலிதாலும் பல்வேறு இலக்கிய வடிவங்களிலும் தனது ஆளுமையை வெளிப்படுத்தித் தமிழன்னைக்குத் தொண்டு செய்துள்ளார்.

ஒரு வரம் (1964 ஆங்கிலக் கவிதைகளைத் தழுவிய தமிழாக்கம்), நெடும் பகல் (1967 தனிக்கவிதைகளும் நெடும் பகல் என்ற காவியமும்), ஆதிபகவன் (1978 காவியம்), மாடும்

கயிறுகள் அறுக்கும் (1990,), நாங்கள் மனிதர் (1992), மேற்பூச்சு (1995), சங்கடங்கள் (2000), ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும் (2001) , உண்மை (2002) முதலிய கவிதைத் தொகுப்புக்களையும்

நித்திலக் கோபுரம், அந்தகனே ஆனாலும், வந்து சேர்ந்தன (1965), தரிசனம் (1965) கோபுர வாசல் (1969), கடூழியம், செய்கோல், கலைக்கடல், கொண்டுவா தீயை கொளுத்து விறகையெல்லாம் , சும சும மகாதேவா, அப்பரும் சுப்பரும், கந்தப்ப மூர்த்தியர், வழமை, இடைத்திரை, குனிந்ததரை, வெறியாட்டு, பொய்க்கால், குற்றம் குற்றமே, தந்தையின் கூற்றுவன், இரு துயரங்கள், கலிலியோ, உயிர்த்த மனிதர் கூத்து, எல்லாம் சரிவரும், கர்வபங்கம் (அன்ரிகனி) உட்பட 25 நாடகங்களுக்கு மேல் எழுதியுள்ளார். கர்வபங்கம் (அன்ரிகனி) கடந்த ஆண்டில் (2007) நூலுருப்பெற்றது.

பல இசைப் பாடல்களை ஆக்கியுள்ளார். இவை பல ஆலயங்கள் மீது பாடப்பட்டனவாகும். நீர்வேலிக் கந்தசுவாமி கோவில் சார்ந்த வெளியீடாக, இவர் எழுதி வெளியிட்ட பாடல்கள் வலி.கிழக்கில் உள்ள இந்து ஆலயங்களில் இன்று பிரபலமாக ஒலித்தவண்ணமுள்ளன.

"யமசாதனை" போன்ற சில சிறுகதைகளையும் எழுதியுள்ளார். திருவெம்பாவை பற்றிப் பத்திரிகையில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு ஆனந்தப் பொய்கை என்ற நூலாக அண்மையில் நீர்வைக் கந்தசாமி கோவிலில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கவிதை நயம் (1970,பேராசிரியர் கைலாசபதியுடன் இணைந்து எழுதியது), ஒரு சில விதி செய்வோம்(1972,கவிதைச் சிந்தனைகள்), இன்றைய உலகில் இலக்கியம் (1988) முதலிய விமர்சன நூல்களையும் எழுதினார்.

மொழிபெயர்ப்பு நுட்பம்(2002) என்ற இவரது நூல் மொழி பெயர்ப்பு உத்திகள்பற்றிப் பயிலும் மாணவர்களுக்குக் கலங்கரை விளக்கமாக உள்ளது.

## முருகையனின் கவிதைப் பொருள்

இலக்கியத்தை மக்கள் இலக்கியமாகப் படைக்கும் பண்பு முருகையனிடம் மலிந்துள்ளது. எழுத்துலகப் பிரவேசக் காலங்களில் மார்க்சீய வாதியாகவே முருகையன் தன்னை இனங்காட்டினார். தன் மனதை உலுப்பும் சங்கதிகள் எவையோ? சமூகத்திற்கு சொல்ல வேண்டிய செய்திகள் எவையோ அவற்றையே முருகையன் எழுதுகிறார். அவர் 1998 இல் எழுதிய விலை மதிப்பு என்ற கவிதை இன்றைய காலகட்டத்துடனும் பொருத்திப்பார்க்கத் தக்கது அதன் ஒரு பகுதி வருமாறு

*மயிர்களுக்கும் பெறுமானம்*
*உண்டு காணும்*
*வடிவழகுப் பொருட்கடையில்*
*தொங்குகின்ற*
*முடிமயிரைக் கூட*
*ஒரு தொகை காசுக்கே*
*முதலாளி வியாபாரம் பண்ணுகிறார்.*
*தயிர் வடைக்கு விலை உண்டு*
*துடைப்பக் கட்டைத் தடிகளுக்கும்*
*விலை உண்டு*
*மென்று துப்பும்*
*"பொயிலை" நெட்டுத் துண்டுக்கும்*
*விலை உண்டய்யா*
*புழுதி மண்ணும் பெறாதிங்கே*
*- மனித ஆவி*

மனித வாழ்க்கை பற்றிய தத்துவ விசாரணையாகவும் இவரது பாடல்கள் அமைந்துள்ளன.
"நான் யார்?" எனக் கவிஞர் தத்துவ விசாரணை செய்கிறார்

*"நான் ஆர்?*
*என் எண்ணம் ஆர்?*
*ஞானங்கள் யாவையோ?*
*தேன் ஏன் இனிக்கிறது?*
*தேசிக்காய்*
*ஏனோ*
*புளிக்கிறது"*

சமூக விடுதலை பற்றிய சிந்தனைகள் அவரது எழுத்துகளில் ஆழமாக ஒலித்தன.

தேவாரம் திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங்களிலும் முருகையன் அதீத ஆளுமை கொண்டவர். இதன் தாக்குறவு அவரது கவிதைகளில் வெளிப்பட்டது.

"செந்துவர் வாயுமை பங்கனின் திருப்பெயர்
பாடும் பணியே பணியாம் அன்பர்
விடைஏ றியவா விசைவார் மிளிரும்"

மரபுவழிப் பட்ட யாப்புகளான ஆசிரியப்பா, விருத்தப்பா, கட்டளைக் கலித்துறை, வெண்பா எனப் பல்வேறு யாப்புகளையும் முருகையன் கையாண்டுள்ளார். வெண்பா கவிஞரின் கைகளில் கட்டுண்டு கிடக்கிறது. அது அவர்கள் என்ற காவியத்தில்

"வேலையோ துன்பம் வினைகள் கொடுந்துன்பம்
ஊனம் பொதிந்த உடல் துன்பம்
ஆனதனால்
விட்டிடுதல் வேண்டும் இவற்றை
விடுதலையே
உத்தமப்பே ரின்பத்தின் ஊற்று"

இங்கு நேரிசை வெண்பாவை புதுக்கவிதையின் அமைப்புப் போலக் கையாண்டுள்ளார்.

நாடக எழுத்தாளர் என்ற நிலையில் பாநாடகங்களை எழுதிய முன்னோடி எழுத்தாளராக முருகையனையே கொள்வர். மஹாகவியின் பாநாடகங்களும் பிரபலமானவை. ஆயினும் முருகையனின் பாநாடகப் பரிசோதனை வெற்றியடைந்த பின்னரே மஹாகவியின் பாநாடகங்கள் வெளிவந்தன. எனவே ஈழத் தமிழுலகில் இந்த இலக்கிய உத்தியின் மூலவராக முருகையனையே கொள்ள வேண்டும்.

கடந்த ஆண்டு நூலுருப் பெற்ற கர்வபங்கம் நாடக நூலில் அவரது பாநாடகச் சுவையை மணப்பதற்காக ஒருசிறு காட்சியைத் தரிசிப்போம்.
அன்ரிகனி உயிரோடு கல்லறை புகுவாள். அப்போது அவள் பேசுவதாகக் கவிஞர் பேசுகிறார்.

"என்னருமை நாடே! இறுதிப் பயணமிது
இன்னுமென்ன சொல்ல இருக்கிறது? சாக்காடு
வந்து தழுவும் மதில் அறைக்குப் போகின்றேன்
நன்மண நாள் ஒன்றுமில்லை நாயனமும்; கேளாது"

இந்தப் பாநாடகத்திற்கு முகவுரை எழுதிய கவிஞர் சோ.ப. பின்வருமாறு குறிப்பிடுகிறார்.
"நாடக உரையாடலுக்கு ஆங்கிலத்தில் உகந்தது iambus எனும் யாப்பு. ஷேக்ஸ்பியர் கையாண்டது அதுவே. கிரேக்க நாடகங்களை மொழிபெயர்த்த ஆங்கிலக்கவி வாணர் iambic யாப்பையே பயன்படுத்தினர். தமிழ் நாடகாசிரியர்களும் தமிழ் மொழிபெயர்ப்பாளர்களும் அகவற்பாவைப் பயன்படுத்தினர். "மகாகவி" தம் நாடகங்களைக் கலிப்பாவில் எழுதினார். முருகையனும் இம்மொழிபெயர்ப்புக்குக் (கர்வபங்கம்) கலிப்பாவையே பயன்படுத்தியுள்ளார்.மேலே காட்டப்பட்ட மேற்கோள்கள் அவ்வகைப்பாவின் பொருத்தப்பாட்டை நிரூபிக்கும். முருகையனின் கவிநடையின் செழுமை ஆங்கிலத்தில் இல்லை. கிரேக்கத்தில் இருந்திருக்கும்."

முருகையனின் மொழிபெயர்ப்பு,பாநாடகம் முதலியவற்றின் சிறப்பிற்கு கவிஞர் சோ.ப.வின் நயப்புரை பெருமையைத் தருகிறது.

பொது நூலகம் யாழ்ப்பாணம்

## புனைபெயர்கள் - எழுத்துகள் வெளிவந்த ஏடுகள்

கவிஞர் முருகையன் பல்வேறு புனைபெயர்களைக் கையாண்டு இலக்கியங்களைப் படைத்துள்ளார். இ.மு., இனியன், ஈழதாசன், ஈழன், உள்ளூர் மு.வேலுப்பிள்ளைப் பாவலர், ஐயனார், சித்தமழகியான், செந்திரு, செவ்வகன், சேயோன், சொல்லாடி, திரு. ஈழன், மு., மு.செவ்வகன், மு.வேலுப்பிள்ளை, முனி, வயலூர் முருகன் முதலிய புனைபெயர்களைக் கையாண்டுள்ளார்.

இவரது எழுத்துகள் ஈழத்தின் பல்வேறு பத்திரிகைகளிலும் சிற்றிதழ்களிலும் வெளிவந்துள்ளன. இந்தியாவில் இருந்து வெளிவரும் சரஸ்வதி, தாமரை, தீபம், அமுதசுரபி, எழுத்து, கலைமகள் முதலிய இதழ்களிலும் வெளிவந்தன. " கலைமகள்" ஆசிரியராக இருந்த கி.வா.ஜகந்நாதன் இலங்கைக்கு வருகை தரும் வேளைகளிலெல்லாம் நீர்வேலியிலேயே தங்கியிருப்பது வழக்கமாகவிருந்தது. இதனால் கி.வா.ஜ விற்கும் முருகையனுக்குமிடையில் நெருக்கமான தொடர்பு உண்டாகியிருந்தது.

## கவிஞரின் மனக்குறை

*"எனது படைப்புகள் யாவும் முழுமையான தொகுப்பாக வெளிவரவேண்டும் என்பதே எனது விருப்பமாகவும் கனவாகவும் இருக்கிறது. அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறேன்."* என்று முருகையன் அடிக்கடி கூறுவார். அண்மையில் (20.04.2008) கொழும்பில் வெளியாகும் தினக்குரல் பத்திரிகைக்குப் பேட்டியளித்தபோதும் இந்த ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

## பெற்ற பட்டங்கள் விருதுகள்

கவிஞரை நாடி எத்தனையோ விருதுகள் வந்தன. விருதுகள் பற்றிக் கருத்து வெளியிட்ட கவிஞர் முருகையன் *"விருதுகளும் போட்டிகளும் எனக்குத் தேவையில்லாத ஒன்று என்றுதான் நான் நினைக் கிறேன். நாங்கள் செய்யக் கூடியதைச் செய்வோம். அப்படிச் செய்த பிறகு அதன் அருமை பெருமை தெரிந்தவர்கள் அதற்குரிய பலன்களைச் சொல்லட்டும் என்பதுதான் என்னுடைய கணிப்பு"* என்கிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 06.10.1999 அன்று நடாத்திய பட்டமளிப்பு விழாவில் முருகையனின் கலை இலக்கியப் பணிகளுக்காகக் கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கித் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது. இதற்காக 11.02.2001 இல் நீர்வேலியில் பெருமெடுப்பில் விழாவெடுத்துச் செம்புல மைந்தர்கள் குதூகலித்தனர். (2000 ஆம் ஆண்டில் நாட்டில் அசாதாரண சூழல் நிலவியதால் 2001 இல் விழா எடுத்தனர்.)

கலை இலக்கியத்துக்காக இலங்கை அரசால் வழங்கப்படுகின்ற அதியுயர் விருது சாஹித்ய ரத்னா என்ற விருது ஆகும். தமிழ்மொழிக்காக 2001 ஆம் ஆண்டிலிருந்து இவ்விருதை வழங்கி வருகின்றனர். முதன் முதலாக இவ்விருது டொமினிக் ஜீவாவிற்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து பேராசிரியர் சிவத்தம்பி, வரதர், சொக்கன், பண்டிதர் சச்சிதானந்தன் போன்றோருக்கு வழங்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டில் இவ்விருது கவிஞர் முருகையனுக்கு வழங்கப்பட்டது.

*நிறைவுரை*

தமிழன்னைக்கு அளப்பரிய தொண்டாற்றும் தவப்புதல்வன் வலி.கிழக்கு அன்னையின் மைந்தனாக வாழ்வது நமக்கெல்லாம் பெருமைதரும் விடயமாகும். தனது உடல் நலக்குறைவினால் கடந்த 13.11.2007 இல் இருந்து கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காகத் தங்கியிருக்கும் கவிஞர், மிக விரைவில் எம்மண்ணிற்கு வந்துவிடுவோம் என இக்கட்டுரையாளரிடமும் தொலைபேசியில் தெரிவித்தார். அவரது அறிவுப்புலக் குளிர் நிழலில் இளைப்பாறி, அருந்தமிழ் பருகிய தவவாய்ப்பு இக்கட்டுரையாசிரியருக்கும் உண்டு.

*"கடந்த ஐம்பதாண்டு கால ஈழத்து இலக்கிய வரலாற்றில் நிலையானதோர் இடத்தை வகிக்கும் முருகையன் இன்றைய யுத்தச் சூழ்நிலையிலும் தாம் பிறந்த மண்ணைவிட்டுப் பெயர்ந்து போகாமல் இருந்து கலை இலக்கியக் கல்விப் பணிகளை அமைதியாக ஆர்வத்தோடு செய்து வருகின்றமைக்காக அவரைப் போற்றித் துதிக்கின்றோம்" எனப் பேராசிரியர் எஸ் சிவலிங்கராசா "மொழி பெயர்ப்பு நுட்பம்"* நூலில் (2001) குறிப்பிட்டமையை யாவரும் மனங்கொண்டு செயலுருவாக்க வேண்டும். கவிஞரின் மன ஆதங்கத்தைத் தீர்ப்பதில் வலி.கிழக்குப் பண்பாட்டுப் பேரவை தன்னாலான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

**உசாவியவை**


- ☆ முருகையன், கோபுரவாசல், செய்யுட்கள் வெளியீடு, 149/3, காலி வீதி, கொழும்பு, 1969.
- ☆ முருகையன், ஒருசில விதி செய்வோம், வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம். 1972.
- ☆ சிவத்தம்பி.கா., ஈழத்துத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், 1978.
- ☆ பாரதியார் கவிதைகள், பூம்புகார் பதிப்பகம், 1986.
- ☆ முருகையன், அது – அவர்கள், தேசிய கலை இலக்கியப் பேரவை, 1986.
- ☆ கலைவாணி முத்துக்குமாரு, ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபில் கவிஞர் இ.முருகையன் கவிதைகள் – ஓர் ஆய்வு நோக்கு, ( யாழ் பல்கலைக் கழகச் சிறப்புக் கலைமாணிப் பரீட்சைக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பிரசுரிக்கப்படாத ஆய்வேடு), தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1992.
- ☆ முருகையன், ஒவ்வொருபுல்லும் பூவும் பிள்ளையும், தேசிய கலை இலக்கியப் பேரவை, 2001.
- ☆ முருகையன். இ., மொழி பெயர்ப்பு நுட்பம், குமரன் புத்தக இல்லம், 2001.
- ☆ முருகையன்.இ., (பதிப்பாசிரியர்கள்: கலாமணி, கலாநிதி த., கயிலைநாதன் திலகநாதன்) கர்வபங்கம் , கலை அகம் வெளியீடு, 2007
- ☆ முருகையன். இ., எழுத்தாளர்களை நோக்கிய மாமூல் கேள்விகள் இரண்டு, 17 ஜனவரி1999, ப.19.
- ☆ கார்த்தியாயினி சுபேஸ், செவ்வி , ஞாயிறு தினக்குரல், 20 ஏப்பிரல் 2008 ப.33.
- ☆ கார்த்தியாயினி சுபேஸ், செவ்வி, ஞாயிறு தினக்குரல், 27 ஏப்பிரல் 2008 ப.33.

## வலி. கிழக்குப் பண்பாட்டுப் பேரவை

'செம்புலம்' மலர்க் குழு - 2008



## வலி. கிழக்குப் பண்பாட்டுப் பேரவை மலர்க் குழு

### இருப்பவர்கள் [இடமிருந்து வலம்]

1. திரு. க. தர்மலிங்கம் (உதவிப் பதிப்பாசிரியர்)
2. திரு. அ. க. த. கிருஷ்ணராசா (உறுப்பினர்)
3. திரு. ச. லலீசன் (பதிப்பாசிரியர்)
4. செல்வி. எஸ். பிரேமினி (உறுப்பினர்)
5. திரு. சி. ஏ. மோகன்றாஸ் (பேரவைத் தலைவர்)
6. கலாநிதி. தி. வேல்நம்பி (உறுப்பினர்)
7. திருமதி. சிவை. குகனேசன் (உதவிப் பதிப்பாசிரியர்)

### நிற்பவர்கள் [இடமிருந்து வலம்]

1. திரு. எம். ஞானலிங்கம் (உறுப்பினர்)
2. திரு. நா. சுவாமிநாதன் (உறுப்பினர்)
3. திரு. எஸ். ரி. வரதராஜன் (உறுப்பினர்)
4. திரு. இ. குணநாதன் (உறுப்பினர்)

# கோப்பாய்ப் பிரதேசத்தின் இன்றைய கல்வி நிலை

## சில குறிப்புகள்



*கலாநிதி த. கலாமணி,*
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கோப்பாய்ப் பிரதேசம் எனச் சுட்டப்படும் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகப்பிரிவானது யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதேச செயலக / உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பதினைந்தினுள் ஒன்றாகும். மொத்த நிலப்பரப்பாக (நீர்ப்பரப்பைத் தவிர்த்து) 983.6 சதுர கிலோ மீற்றரைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் கிழக்குப்பிரதேசம் 101.1 சதுர கிலோமீற்றர் பரப்பைக் கொண்டது. இது யாழ் மாவட்டத்தின் முழுநிலப்பரப்பில் 10.3 சதவீதமானதாகும். 435 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட யாழ் மாவட்டத்தில் 31 கிராம அலுவலர் பிரிவுகள் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகப் பிரிவினுள் அடங்குவன. பொது நிர்வாக வசதிக்காக பிரதேச செயலக, உதவி அரச அதிபர் பிரிவுள் என்பவற்றோடு பிரதேச சபைகளும் அமைந்திருந்தாலும், கல்வி நிர்வாகமானது கல்வி வலயங்களாலும் கல்விக் கோட்டங்களாலும் மேற்கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பாடசாலைகளின் கல்வி நிர்வாகம் ஐந்து கல்வி வலயங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணம், தீவகம், தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சி ஆகிய இந்த ஐந்து கல்வி வலயங்களுள், யாழ்ப்பாணம் கல்வி வலயமானது யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் எனும் மூன்று கல்விக்கோட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது. கோப்பாய் கல்விக்கோட்டம் வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவை முற்றாக உள்ளடக்குவதாகும். இக்கல்விக் கோட்டத்தில் தற்போது இயங்கும் 37 பாடசாலைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 1**
**கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் வகைகள்**

| பாடசாலை வகை | எண்ணிக்கை |
|---|---|
| I AB | 04 |
| I C | 03 |
| II | 10 |
| III | 20 |
| மொத்தம் | 37 |

இவற்றுள் இரு, 1AB வகைப்பாடசாலைகள் தரம் 6 -13 வரை வகுப்புகளைக் கொண்டன. ஏனைய இரு, 1AB வகைப் பாடசாலைகளும் மூன்று 1C வகைப் பாடசாலைகளும் தரம் 1-13 வரை வகுப்புக்களைக் கொண்டன. II ஆம் வகைச் சேர்ந்த 10 பாடசாலைகளும் தரம் 1 -11 வரை வகுப்புக்களைக் கொண்டன.வகை III ஐச் சேர்ந்த இருபது பாடசாலைகளுள் 05 பாடசாலைகள் தரம்

1-9 வரையும் 02 பாடசாலைகள் தரம் 1 – 8 வரையும் ஏனைய 13 பாடசாலைகள் தரம் 1-5 வரையும் வகுப்புக்களைக் கொண்டன. இத்தரவுகள் 01.04.2008இல் உள்ள புள்ளி விபரங்களுக் கமைவானவை. இதே வேளை, முன்னர் இயங்கி வந்த வகை III பாடசாலைகள் ஆறு(06) இன்று தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இன்று யாழ் மாவட்டத்தில் இங்கிவரும் 410 பாடசாலைகளுள் கோப்பாய்க் கல்விக்கோட்டத்தில் இயங்கும் 37 பாடசாலைகள் 09.02 சதவீதமாகும். யாழ் மாவட்டத்தில் முன்பு 482 பாடசாலைகள் இயங்கி வந்தன. இன்று 72 பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் 410 பாடசாலைகள் மட்டுமே இயங்கிவருகின்றன.

கோப்பாய்ப் பிரதேசத்தின் கல்வி நிலையைப் பகுப்பாய்வு செய்யும் போது பல்வேறு அம்சங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். ஆனாலும், பொதுவாக இன்று கல்வி நிலையானது தேசிய மட்டத்தினாலான பொதுப் பரீட்சைகளில் மாணவர்களின் பெறுபேறுகளைக்கொண்டே தீர்மானிக்கப்படும் நிலை இருந்து வருகின்றது. இன்று இலங்கைப் பாடசாலை மாணவர்கள்

**ஐந்தாந்தரப் புலமைப்பரிசில் பரீட்சை**
**க. பொ. த. (சாதாரண) பொதுத்தராதரப் பரீட்சை**
**க. பொ. த. (உயர்தர) பொதுத்தராதரப் பரீட்சை**

என மூன்று தேசிய பரீட்சைகளுக்குத் தோற்றுகின்றனர். பொதுவாக இப்பரீட்சையில் சித்தியடைந்தோரின் எண்ணிக்கையைக் கொண்டும் அவர்கள் பெறும் உயர் பெறுபேறுகளைக் கொண்டுமே பாடசாலையொன்றின் தரம் கணிப்புள்ளாகும் நிலை பாடசாலைச் சமூகத்தினரிடையே காணப்படுகின்றது. இவ்வகை அளவீட்டுத்திட்டம் எத்தனை பொருத்தமானது என்பது ஆராய்வுக்குரியது. ஒரு பாடசாலையின் பெறுபேறுகளை ஏனைய பாடசாலையின் பெறுபேறுகளுடன் ஒப்பிட்டும் அல்லது ஒரு கல்விக் கோட்டப் பாடசாலைகளின் பெறுபேறுகளை ஏனைய கல்விக்கோட்டங்களின் பாடசாலைகளுடன் ஒப்பிட்டும் கல்வி நிலை பற்றிய முடிவுகளைத் தெரிவிக்கும்போது மிகுந்த கவனம் தேவை. ஆயினும் கல்வி நிலையைத் தீர்மானிப்பதற்கான சுட்டிகளுள் பரீட்சைப் பெறுபெறு முக்கியமானது என்பது மறுக்கற்பாலதன்று.

தேசிய ரீதியிலான ஐந்தாம்தரப் புலமைப்பரிசுப் பரீட்சையின் சித்திப்புள்ளி மட்டம் ஆண்டுக்கு ஆண்டு மாறுபடுவதாகும். நாட்டின் பல்வேறு மாவட்டங்களையும் கருத்திற்கொண்டு, பரீட்சைக்குத் தோற்றியோரில் ஒரு குறித்த மாவட்டத்திலிருந்து ஒரு குறித்த வீதத்தினரே சித்தி எய்தக்கூடியதாக சித்திப்புள்ளி மட்டமானது மத்திய நிலையில் அரசினால் தீர்மானிக்கப்படுவதாகும். உதாரணமாக 140 சித்திப்புள்ளி மட்டமாயின் இரு பாடங்களிலும் 140க்கும் குறைவான புள்ளிகளைப் பெற்றவர்கள் இப்பரீட்சையில் சித்தியடையாதவர்களாகவே கருதப்படுவர். இதனால் 139 புள்ளிகளைப் பெற்ற பிள்ளை இப்பரீட்சையில் சித்தி அடையவில்லையே என்ற ஏக்கத்திற்குட்படுவர். பெற்றோரினதும் அயலவரினதும் ஏளனமும் கண்டனமும் கூட பிள்ளையில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால் 139 புள்ளி தாழ் .அடைமட்டத்துக்குரியதன்று. ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடையவில்லையே என்ற ஏக்கமும் பெற்றோரதும் மற்றோரதும் ஏளனங்களும் கண்டனங்களும் கூட பிள்ளையின் தொடர்கல்விக்கு இடையூறாய் அமைந்து விடக்கூடும். இப்பரீட்சையில் தமது பிள்ளை சித்தியடையாதபோது அது தமது பெருமைக்கு இழுக்கு எனக் கருதும் மனோபாவமே யாழ்ப்பாண மாவட்டப் பெற்றோரிடையே காணப்படுவதாகக் கருதப்படுகிறது. ஆனால் பரீட்சைக்குத் தோற்றியோரில் சராசரியாக ஏறத்தாழ 11 சதவீதத்தினரே யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆண்டுதோறும் சித்திபெறுகின்றனர் என்பதைக் கீழ்க்காணும் அட்டவணை தெரிவிக்கின்றது.

பொது நூல் நிலையம்
கோப்பாய்

அட்டவணை 2:

**ஐந்தாந்தரப் புலமைப்பரிசுப் பரீட்சை முடிவுகள் 2001 - 2006.**

| கல்வி வலயம் | தோற்றியோர் சித்தி | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|
| தீவகம் | தோற்றியோர்<br>சித்தி | 418<br>24 | 367<br>14 | 574<br>21 | 614<br>11 | 694<br>23 | 556<br>19 |
| யாழ்ப்பாணம் | தோற்றியோர்<br>சித்தி | 2388<br>453 | 2592<br>398 | 2868<br>449 | 3029<br>422 | 3286<br>436 | 2716<br>406 |
| வலிகாமம் | தோற்றியோர்<br>சித்தி | 2154<br>239 | 2360<br>217 | 2516<br>216 | 2632<br>191 | 2931<br>205 | 2254<br>208 |
| தென்மாட்சி | தோற்றியோர்<br>சித்தி | 654<br>59 | 708<br>60 | 1042<br>88 | 1040<br>90 | 1085<br>81 | 950<br>101 |
| வடமராட்சி | தோற்றியோர்<br>சித்தி | 1363<br>158 | 1404<br>152 | 1623<br>177 | 1618<br>176 | 1841<br>112 | 1584<br>151 |
| மொத்தம் | தோற்றியோர்<br>சித்தி | 6997<br>933 | 7431<br>841 | 8623<br>951 | 8933<br>890 | 9837<br>857 | 8060<br>885 |
| சித்தி பெற்றோர் நூற்றுவீதம் | (%) | 13.37 | 11.32 | 11.03 | 9.96 | 8.71 | 10.98 |

இந்த அட்டவணையின் பிரகாரம், தீவக வலயத்தில் சித்திவீதம் யாழ் மாவட்டத்தின் சராசரிச் சித்திவீதத்தைவிட மிகவும் தாழ்வாக இருப்பதையும் வலிகாமம், தென்மராட்சி, வடமராச்சி ஆகிய கல்விவலயங்களின் சித்திவீதம் யாழ்ப்பாண மாவட்டத்தின் சித்திவீதத்தை விட மிக உயர்வாக இருப்பதையும் அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. ஆயினும், யாழ்ப்பாண வலயத்தின் கல்விக்கோட்டங்களுள் ஒன்றான கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளின் புலமைப்பரிசுப் பரீட்சைப் பெறுபேறுகள் கீழ்காணும் அட்டவணையில் காட்டியவாறு அமைந்துள்ளன.

## கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் 5ஆம் தரப் புலமைப் பரிசுப்பரீட்சை முடிவுகள்.

இந்த அட்டவணை தெரிவிக்கும் பெறுபேறுகளுக்கு அமைய, கோப்பாய்க் கல்விக்கோட்டத்தின் சித்திவீதம் யாழ் மாவட்டத்தின் சித்திவீதத்தின் அரைப்பங்குப் பெறுமானத்தை அண்மித்தாக உள்ளது. ஆயினும், அச்சுவேலி ம. வி. , இடைக்காடு ம. வி, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம், புனித தெரேசா மகளிர் கல்லூரி, உரும்பிராய் சைவத்தமிழ்வித்தியாலயம், இருபாலை சி. சி. த. க. பாடசாலை, கோப்பாய் நாவலர் வித்தியாலயம், நீர்வேலி தெற்கு இ. த. க. பாடசாலை, சிறுப்பிட்டி இ. த. க. பாடசாலை, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் 2007 ஆம் ஆண்டுக்கான சித்தி வீதங்கள் யாழ் மாவட்டத்தின் சராசரிச் சித்திவீதத்தை விட உயர்வாகக் காணப்படுவதோடு ஏனைய ஆண்டுகளை விட இப்பாடசாலையின் சித்திவீதத்தில் ஒரு பாய்ச்சல் ஏற்பட்டிருப்பதும் தெளிவாகின்றது. கோப்பாய் கோட்டத்தின் சித்திவீதம் 2006இல் 6.76% ஆக இருந்து 2007இல் 10.39% ஆக அதிகரித்திருப்பது உண்மையில் ஒரு பாய்ச்சலே.

## அட்டவணை 3 : கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் ஐந்தாம் தரப் புலமைப் பரிசுப் பரீட்சை முடிவுகள்.

| இல | பாடசாலையின் பெயர் | 2003 தோற்றியோர் | 2003 சித்தி | 2003 சித்தி வீதம் | 2004 தோற்றியோர் | 2004 சித்தி | 2004 சித்தி வீதம் | 2005 தோற்றியோர் | 2005 சித்தி | 2005 சித்தி வீதம் | 2006 தோற்றியோர் | 2006 சித்தி | 2006 சித்தி வீதம் | 2007 தோற்றியோர் | 2007 சித்தி | 2007 சித்தி வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | யா/ அச்சுவேலி மகா வித்தியாலயம் | 60 | 2 | 3.33 | 66 | 3 | 4.55 | 62 | 2 | 3.23 | 51 | 6 | 11.76 | 39 | 8 | 20.51 |
| 02 | யா/ அத்தியார் இந்துக் கல்லூரி | 24 | 1 | 4.17 | 25 | 0 | 0.00 | 35 | 5 | 14.29 | 18 | 0 | 0.00 | 25 | 1 | 4.00 |
| 03 | யா/ இடைக்காடு மகா வித்தியாலயம் | 28 | 2 | 7.14 | 25 | 2 | 8.00 | 26 | 2 | 7.69 | 22 | 2 | 9.09 | 17 | 3 | 17.65 |
| 04 | யா/ கோப்பாய் மகா வித்தியாலயம் | 16 | 1 | 6.25 | 18 | 2 | 11.11 | 19 | 0 | 0.00 | 11 | 0 | 0.00 | 14 | 0 | 0.00 |
| 05 | யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி | 75 | 3 | 4.00 | 87 | 0 | 0.00 | 98 | 6 | 6.12 | 74 | 5 | 6.76 | 75 | 6 | 8.00 |
| 06 | யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் | 31 | 0 | 0.00 | 22 | 0 | 0.00 | 33 | 0 | 0.00 | 24 | 0 | 0.00 | 25 | 0 | 0.00 |
| 07 | யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் | 10 | 1 | 10.00 | 7 | 0 | 0.00 | 17 | 1 | 5.88 | 10 | 0 | 0.00 | 8 | 1 | 12.50 |
| 08 | யா/ சென்திரேசா மகளிர் கல்லூரி | 32 | 4 | 12.50 | 47 | 1 | 2.13 | 52 | 3 | 5.77 | 52 | 6 | 11.54 | 55 | 7 | 12.73 |
| 09 | யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் | 13 | 0 | 0.00 | 9 | 0 | 0.00 | 16 | 0 | 0.00 | 10 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 |
| 10 | யா/ ஆவரங்கால் நடராஜராமலிங்க வித்தியாலயம் | 38 | 5 | 13.16 | 47 | 3 | 6.38 | 44 | 4 | 9.09 | 42 | 3 | 7.14 | 42 | 3 | 7.14 |
| 11 | யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் | 28 | 2 | 7.14 | 21 | 1 | 4.76 | 18 | 0 | 0.00 | 12 | 0 | 0.00 | 16 | 1 | 6.25 |
| 12 | யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் | 19 | 0 | 0.00 | 14 | 0 | 0.00 | 33 | 0 | 0.00 | 11 | 0 | 0.00 | 11 | 0 | 0.00 |
| 13 | யா/ ஊரெழு கணேச வித்தியாலயம் | 30 | 0 | 0.00 | 33 | 0 | 0.00 | 46 | 0 | 0.00 | 22 | 0 | 0.00 | 27 | 0 | 0.00 |
| 14 | யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் | 68 | 6 | 8.82 | 71 | 10 | 14.08 | 70 | 7 | 10.00 | 48 | 7 | 14.58 | 86 | 14 | 16.28 |
| 15 | யா/ வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம் | 09 | 0 | 0.00 | 18 | 0 | 0.00 | 20 | 0 | 0.00 | 10 | 0 | 0.00 | 9 | 0 | 0.00 |
| 16 | யா/ அச்செழு மெ. மி. த. க. பாடசாலை | 01 | 0 | 0.00 | 2 | 0 | 0.00 | 3 | 0 | 0.00 | 2 | 0 | 0.00 | 3 | 0 | 0.00 |
| 17 | யு/ இருபாலை சி. சி. த. க. பாடசாலை | 15 | 2 | 13.33 | 18 | 0 | 0.00 | 12 | 1 | 8.33 | 9 | 2 | 22.22 | 8 | 1 | 12.50 |
| 18 | யா/ கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம் | 05 | 0 | 0.00 | 3 | 0 | 0.00 | 11 | 1 | 9.09 | 12 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 |
| 19 | யா/ கோப்பாய் நாவலர் வித்தியாலயம் | 74 | 8 | 10.81 | 78 | 11 | 14.10 | 80 | 10 | 12.50 | 70 | 10 | 14.29 | 65 | 17 | 26.15 |
| 20 | யா/ கோப்பாய் வடக்கு றோ. க. த. க. பாடசாலை | 10 | 0 | 0.00 | 13 | 0 | 0.00 | 13 | 0 | 0.00 | 20 | 0 | 0.00 | 12 | 0 | 0.00 |
| 21 | யா/ கோப்பாய் தெற்கு றோ. க. த. க. பாடசாலை | 10 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 | 11 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 |
| 22 | யா/ கோப்பாய் தெற்கு கந்தவேள் வித்தியாலயம் | 20 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 | 15 | 0 | 0.00 | 16 | 0 | 0.00 | 15 | 0 | 0.00 |
| 23 | யா/ நவக்கிரி அ. மி. த. க. பாடசாலை | 23 | 0 | 0.00 | 17 | 0 | 0.00 | 19 | 0 | 0.00 | 19 | 0 | 0.00 | 15 | 0 | 0.00 |
| 24 | யா/ நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை | 16 | 1 | 6.25 | 15 | 0 | 0.00 | 9 | 2 | 22.22 | 11 | 1 | 9.09 | 10 | 0 | 0.00 |
| 25 | யா/ நீர்வேலி றோ. க. த. க. பாடசாலை | 18 | 0 | 0.00 | 26 | 1 | 3.85 | 19 | 1 | 5.26 | 16 | 1 | 6.25 | 12 | 1 | 8.33 |
| 26 | யா/ நீர்வேலி தெற்கு இ. த. க. பாடசாலை | 12 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 | 8 | 0 | 0.00 | 6 | 0 | 0.00 | 8 | 1 | 12.50 |
| 27 | யா/ பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம் | 10 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 | 18 | 0 | 0.00 | 10 | 0 | 0.00 | 11 | 0 | 0.00 |
| 28 | யா/ புத்தூர் -.மெ. மி. த. க. பாடசாலை | 20 | 0 | 0.00 | 33 | 0 | 0.00 | 5 | 0 | 0.00 | 16 | 0 | 0.00 | 11 | 0 | 0.00 |
| 29 | யா/ சிறுப்பிட்டி அ. த. க. பாடசாலை | 09 | 0 | 0.00 | 9 | 0 | 0.00 | 8 | 0 | 0.00 | 10 | 1 | 10.00 | 14 | 0 | 0.00 |
| 30 | யா/ சிறுப்பிட்டி இ. த. க. பாடசாலை | 17 | 0 | 0.00 | 19 | 0 | 0.00 | 34 | 3 | 8.82 | 16 | 0 | 0.00 | 26 | 5 | 19.23 |
| 31 | யா/ தோப்பு அருணந்தி வித்தியாலயம் | 10 | 0 | 0.00 | 14 | 0 | 0.00 | 10 | 0 | 0.00 | 9 | 0 | 0.00 | 13 | 0 | 0.00 |
| | யா/ ஊரெழு சி. சி. த. க. பாடசாலை | 02 | 0 | 0.00 | | | | | | | | | | | | |
| 32 | யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம் | 27 | 1 | 3.70 | 24 | 0 | 0.00 | 41 | 2 | 4.88 | 23 | 0 | 0.00 | 19 | 1 | 5.26 |
| 33 | யா/ உரும்பிராய் றோ. க. த. க. பாடசாலை | 25 | 2 | 8.00 | 32 | 0 | 0.00 | 32 | 0 | 0.00 | 31 | 0 | 0.00 | 28 | 2 | 7.14 |
| 34 | யா/ புத்தூர் ஸ்ரீ பஞ்சசீல வித்தியாலயம் | 09 | 0 | 0.00 | 5 | 0 | 0.00 | 3 | 0 | 0.00 | 5 | 0 | 0.00 | 8 | 0 | 0.00 |
| 35 | யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் | 40 | 5 | 12.50 | 34 | 6 | 17.65 | 29 | 3 | 10.34 | 29 | 7 | 24.14 | 41 | 10 | 24.39 |
| | கோப்பாய் கோட்ட மொத்தம் | 854 | 46 | 5.39 | 880 | 40 | 4.55 | 969 | 53 | 5.47 | 754 | 51 | 6.76 | 789 | 82 | 10.39 |
| | யாழ் மாவட்ட மொத்தம் | 8623 | 951 | 11.03 | 8933 | 890 | 9.96 | 9837 | 857 | 8.71 | 8060 | 885 | 10.98 | 7813 | 1182 | 15.1 |

கோப்பாய்

யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய கல்விக்கோட்டத்தின் பெறுபெறுகளுடன் கோப்பாய் கல்விக் கோட்டப் பெறுபேறுகளை ஒப்பிட்டுப்பார்ப்பது எவ்வளவு பொருத்தமானது என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது. ஏனெனில், முன்னைய இரு கோட்டங்களும் நகரச் சார்புடையவையாகவும் கல்வி வழிகள், வளங்கள் என்பவற்றை உடையனவாகவும் காணப்படுகின்றன. அதேவேளை, கோப்பாய் கல்விக்கோட்டத்தின் சமூக, பொருளாதார, கல்விப்பின்புலங்களும் கிராம, விவசாயப் பாரம்பரியங்களும் ஐந்தாம்தரப்புலமைப் பரிசுப் பரீட்சையில் பெற்றோர் தமது பிள்ளைகளை அதிக அக்கறை கொள்ளத் தூண்டுவதாக இல்லை.சிறந்த பொருளாதார, சமூக, கல்விப்பின்னணி கொண்ட பெற்றோர்களும் இப்பிரதேசத்திலிருந்து நகரப்பாடசாலைகளை நோக்கி தமது பிள்ளைகளை நகர்த்தியுள்ளனர் என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

மாணவர்கள் தமது கல்வியில் அக்கறைகொள்வதற்கு பெற்றோரின் பின்புலமும் பெற்றோர் காட்டும் அக்கறையும் ஊக்கமாக அமையும் என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். அதேவேளை பாடசாலையில் காணப்படும் பல்வேறு வளங்களும் வசதிகளும் கூட கல்விமீது மாணவர்களை அக்கறை கொள்ளச் செய்து விருப்புடன் தமது பாடங்களைக் கற்கத் தூண்டும். இந்நேரத்தில் குறிப்பாக ஆசிரிய வளம் முக்கியமானது.

**கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் ஆசிரிய வளம்** (Teacher Cadre)

**அட்டவணை 04**

| | ஆரம்பபிரிவில் (தரம் 1-5) | | | |
|---|---|---|---|---|
| | மொத்தம் | பொது | ஆங்கிலம் | இரண்டாம் மொழி |
| அங்கீகாரமளிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை | 695 | 195 | 37 | 5 |
| தற்போது உள்ள எண்ணிக்கை | 587 | 124 | 02 | 0 |
| பற்றாக்குறை | 108 | 071 | 35 | 5 |

இந்த அட்டவணையின் பிரகாரம் கோப்பாய் கோட்டப் பாடசாலைகளில் 108 ஆசிரிய இடங்கள் பற்றாக்குறையாகவே உள்ளன. அதேவேளை, ஆரம்பப்பிரிவில் 111 ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. இவ்வாறாக 111 ஆசிரிய வெற்றிடங்கள் ஆரம்பப்பிரிவில் காணப்படுகின்ற நிலைமையானது ஐந்தாம்தரப் புலமைப்பரிசுப் பரீட்சைப் பெறுபேறுகளில் மிகுந்த தாக்கத்தை விளைவிக்கும் என்பதே உண்மை. ஆரம்பபிரிவில் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை 237 ஆக இருக்கையில் 111 ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுவது 46.84% வெற்றிடம் இருப்பதைச் சுட்டுகின்றது. இந்நிலைமை விசனத்துக்குரியது. கல்வித்திணைக்களத்தின் புள்ளிவிபரங் களிலிருந்து கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுள் ஒரு சிலவற்றைத் தவிர்த்து ஏனைய ஒவ்வொன்றிலும் பொதுவாக ஆசிரிய வளப்பற்றாக்குறை காணப்படுவதும் தெளிவாகின்றது. கோப்பாய் கோட்டத்தில் உள்ள பிரபல்யமான பாடசாலைகளும் தமது ஆசிரிய தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சித்திருப்பதும், ஐந்தாம்தரப் புலமைப்பரிசுப் பரீட்சையில் அக்கறை காட்டி சித்திவீதத்தை அதிகரித்திருப்பதும் கூட புள்ளிவிபரங்களிலிருந்து தெரிய வருகின்றது. இதேவேளை ஏனைய பாடசாலைகளில் சித்தி வீதத்தை அதிகரிப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்துச் சிந்திக்கவேண்டியது கல்வியில் அக்கறை உள்ள அனைவரினதும் பொறுப்பாகும். இவ்விடத்தில் பெற்றோருக்கான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும், பெற்றோர் பாடசாலை பங்காண்மை ( Partnership) ஏற்பும் மாணவர்களின் வீட்டுப்பயிற்சிகளில் பெற்றோரை அக்கறை கொள்ளச் செய்தலும் என பல்வேறு உபாயங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்திப் பார்க்க வேண்டியது பாடசாலையின் பொறுப்பாகும்.

அட்டவணை 5, க. பொ. த. (சாதாரண தர) பரீட்சைப் பெறுபேறுகள் 2003 - 2007

| இல | பாடசாலையின் பெயர் | 2003 | | | 2004 | | | 2005 | | | 2006 | | | 2007 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தோ. எ. | த.பெ எ. | த.பெ நூவீ | தோ. எ. | த.பெ எ. | த.பெ நூவீ | தோ. எ. | த.பெ எ. | த.பெ நூவீ | தோ. எ. | த.பெ எ. | த.பெ நூவீ | தோ. எ. | த.பெ எ. | த.பெ நூவீ |
| 01 | யா/ அச்சுவேலி மகா வித்தியாலயம் | 72 | 25 | 34.72 | 84 | 29 | 34.52 | 81 | 28 | 34.57 | 60 | 21 | 35.00 | 72 | 22 | 30.56 |
| 02 | யா/ அத்தியார் இந்துக் கல்லூரி | 64 | 11 | 17.19 | 63 | 20 | 31.75 | 58 | 17 | 29.31 | 65 | 15 | 23.08 | 80 | 32 | 40.00 |
| 03 | யா/ இடைக்காடு மகா வித்தியாலயம் | 43 | 21 | 48.84 | 55 | 28 | 50.91 | 44 | 15 | 34.09 | 37 | 17 | 45.95 | 31 | 12 | 38.71 |
| 04 | யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | 119 | 29 | 24.37 | 114 | 35 | 30.70 | 153 | 59 | 38.56 | 112 | 63 | 56.25 | 98 | 35 | 35.71 |
| 05 | யா/ கோப்பாய் மகா வித்தியாலயம் | 22 | 2 | 9.09 | 30 | 5 | 16.67 | 21 | 4 | 19.05 | 17 | 0 | 0.00 | 17 | 01 | 5.88 |
| 06 | யா/ ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி | 125 | 28 | 22.40 | 127 | 34 | 26.77 | 92 | 35 | 38.04 | 87 | 26 | 29.89 | 112 | 37 | 33.04 |
| 07 | யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி | 53 | 8 | 15.09 | 39 | 4 | 10.26 | 58 | 7 | 12.07 | 40 | 4 | 10.00 | 69 | 05 | 7.25 |
| 08 | யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் | 34 | 6 | 17.65 | 33 | 6 | 18.18 | 42 | 5 | 11.90 | 32 | 1 | 3.13 | 44 | 14 | 31.82 |
| 09 | யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் | 11 | 0 | 0.00 | 22 | 9 | 40.91 | 16 | 6 | 37.501 | 14 | 3 | 21.43 | 16 | 07 | 43.75 |
| 10 | யா/ புனித திரேசா மகளிர் கல்லூரி | 27 | 7 | 25.93 | 36 | 17 | 47.22 | 30 | 7 | 23.33 | 36 | 15 | 41.67 | 36 | 19 | 52.75 |
| 11 | யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் | 9 | 1 | 11.11 | 14 | 0 | 0.00 | 8 | 0 | 0.00 | 14 | 1 | 7.14 | 18 | 06 | 33.33 |
| 12 | யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் | 45 | 19 | 4222 | 63 | 22 | 34.92 | 68 | 28 | 41.18 | 66 | 25 | 37.88 | 61 | 29 | 47.54 |
| 13 | யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் | 20 | 11 | 55.00 | 20 | 4 | 20.00 | 22 | 6 | 27.27 | 20 | 6 | 30.00 | 19 | 11 | 57.89 |
| 14 | யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் | 16 | 0 | 0.00 | 19 | 1 | 5.26 | 20 | 2 | 10.00 | 13 | 3 | 23.08 | 20 | 04 | 20.00 |
| 15 | யா/ ஊரெழு கணேசா வித்தியாலயம் | 27 | 7 | 25.93 | 25 | 3 | 12.00 | 29 | 5 | 17.24 | 23 | 3 | 13.04 | 36 | 02 | 5.56 |
| 16 | யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் | 60 | 5 | 8.33 | 40 | 10 | 25.00 | 50 | 5 | 10.00 | 44 | 2 | 4.55 | 60 | 08 | 13.33 |
| 17 | யா/ வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம் | 20 | 5 | 25.00 | 15 | 1 | 6.67 | 17 | 9 | 52.94 | 14 | 4 | 28.57 | 16 | 12 | 75.00 |
| 18 | கோப்பாய் மொத்தம் | 767 | 185 | 24.12 | 799 | 228 | 28.54 | 809 | 238 | 29.42 | 694 | 209 | 30.12 | 805 | 356 | 31.85 |

### க. பொ. த. ப. (சாதாரணதர) பரீட்சை

இலங்கையின் கல்வி அமைப்பில், க. பொ. த. ப (சாதாரண தர) பரீட்சை மிகவும் முக்கியமத்துவம் வாய்ந்ததாகும் பாடசாலைத தொடர்கல்வியைத் தீர்மானிப்பதாகவும் பாடசாலையிலிருந்தான இடைவிலகலைத் தீர்மானிப்பதாகவும் இப்பரீட்சை உள்ளது. கோப்பாய் கல்விகோட்டத்தின் 17 பாடசாலைகளிலிருந்து இப்பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுகின்றனர். கடந்த 5 வருடங்களில், இப்பாடசாலைகளிலிருந்து க. பொ. த. ப. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகளை அட்டவணை 5 தருகின்றது. பரீட்சைக்குத் தோற்றியோர் எண்ணிக்கை க. பொ. த. உயர்தரத்திற்குத் தகுதி பெற்றோர் எண்ணிக்கை தகுதி பெற்றோர் சதவீதம் என்பவற்றை உள்ளடக்கியதாக அட்டவணை 5 உள்ளது.

இத்தரவுகளிலிருந்து, 11 பாடசாலைளின் சித்திவீதம் (க. பொ. த. உயர்தரத்துக்குத் தகுதி பெற்றோர் வீதம்) 2006 ஆம் ஆண்டை விட 2007 இல் அதிகரித்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் இவற்றுள் கோப்பாய் மகாவித்தியாலயத்தின் பெறுபேறு (5.88%) மிகவும் தாழ் நிலையிலேயே உள்ளது. அதேவேளை, வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் பெறுபேற்றில் ஒரு பாய்ச்சல் ஏற்பட்டிருப்பது கவனத்திற்குரியது (75%). உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பெறுபேறும் தாழ்வாகவே உள்ளது (13.33%).

2006 ஆம். ஆண்டைவிட 2007இல் சித்திவீதம் குறைந்திருக்கும் பாடசாலைகள் ஆறினுள் இடைக்காடு மகாவித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆகிய மூன்றும் IAB வகைப் பாடசாலைகளாகும். ஏனையவற்றுள் ஒன்றான அச்சுவேலி மகாவித்தியாலயம் 1C வகைப் பாடசாலையாகும். எஞ்சியுள்ள புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம், ஊரெழு கணேச வித்தியாலயம் ஆகியன வகை II பாடசாலைகளாகும். கோப்பாய் கல்விக்கோட்டத்தில் நான்கு 1AB வகைப்பாடசாலைகளும். மூன்று 1C வகைப் பாடசாலைகளும் மாத்திரமே உள்ளன. ஆயினும் இப்பாடசாலைகளில் 2007இல் க. பொ.த. ப. சாதாரணதரப் பரீட்சைக்குத்தோற்றியோரில் 40% இற்குக் குறைந்தோரே உயர்தர வகுப்பில் கற்பதற்கான தகுதி பெற்றிருப்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும். இப்பாடசாலைகள் க. பொ. த. உயர்தர வகுப்புக்களைக் கொண்டிருப்பதனால் உயர்தர வகுப்புகளுக்கு அனுமதித்தகுதி பெறும் குறைந்தளவு எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்டே அவ்வகுப்புகளை நடத்த வேண்டியிருக்கும். பொதுவாக இப்பாடசாலைகளின் பெறுபேறுகள் 2007 இல் மாத்திரமன்றி கடந்த ஐந்து வருடங்களிலும் கூட தாழ்வாகவே உள்ளன. குறிப்பாக 1AB வகைப் பாடசாலையான உரும்பிராய் இந்துக்கல்லூரியின் பெறுபேறுகள் ஏனைவற்றோடு ஒப்பிடும்போது கடந்த ஐந்து வருடங்களிலும் தாழ்வாகவே இருப்பது இங்கு கவனத்தைப்பெறுகிறது.

கோப்பாய் கல்விக்கோட்டத்தின் 2007 ஆம் ஆண்டுக்கான க. பொ. த. ப. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளை யாழ்ப்பாண வலயத்தினதும் யாழ்ப்பாணக் கோட்டத்தினதும், நல்லூர் கோட்டத்தினதும் பெறுபேறுகளுடனும் ஒப்புநோக்குவதற்கு அட்டவணை 6 இடமளிக்கின்றது.

அட்டவணை 6

**யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளின் க. பொ. த. ப. (சா. த) 2007 முடிவுகள்**

| | தோ. எ. | உ.த த.பெ.எ. | உ.த த.பெ. நூறு வீதம் | கணிதம், தமிழ் உட்6 பாடங்களுக்கு குறையாமல் சித்தி பெற்ற எண் | எல்லாப் பாடங்களிலும் சித்தியின்மை பெற்றோர் எண் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் வலயம் | 3302 | 1861 | 56.36 | 1912 | 102 |
| யாழ்ப்பாணக் கோட்டம் | 1366 | 861 | 63.03 | 877 | 12 |
| நல்லூர் கோட்டம் | 1131 | 744 | 65.78 | 765 | 35 |
| கோப்பாய் கோட்டம் | 805 | 258 | 31.80 | 270 | 55 |

தோ. எ. = தோற்றியோர் எண்ணிக்கை

உ. த. த.பெ. எ. = க. பொ.த. ப. (உயர்தர) வகுப்புக்கு தகுதி பெற்றோர் எண்ணிக்கை.

உ. த. த. பெ. நூ.வீ. = க. பொ.த. ப. (உயர்தர) வகுப்புக்கு தகுதி பெற்றோர் நூற்றுவீதம்.

இந்த அட்டவணைப் பிரகாரம் கோப்பாய் கோட்டத்தின் சித்திவீதம் (அதாவது க. பொ. த. உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்றோர் நூற்றுவீதம் யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய கோட்டங்களின் சித்தி வீதத்தைவிட தாழ்வாக இருப்பது புலனாகின்றது. அதுமாத்திரமன்றி, கோப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த 55 மாணவர்கள் (6.83%) எந்த ஒரு பாடத்திலும் சித்தி பெறாமலிருப்பதும் எமது கவனத்தை ஈர்க்கின்றது. நல்லூர் கோட்டத்திலும் கூட 35 மாணவர்கள் (3.09மூ) எந்த ஒரு பாடத்திலும் சித்திபெறாதிருப்பதும் கவன ஈர்ப்புக்கு அப்பாற்பட்டதன்று.

க. பொ. த. ப. உயர்தர வகுப்புக்கான அனுமதித்தகுதி பெற்றோரின் எண்ணிக்கை குறித்த இப்பகுப்பாய்வை விட தனித்தனியாக ஒவ்வொரு பாடத்திலும் சித்தி பெற்றோர் வீதம் குறித்த பகுப்பாய்வு மேலும் பல தகவல்களையும் தரிசனத்தையும் எமக்குத் தரக்கூடும். ஆனால் இவ்வகையான பகுப்பாய்வுக்கு பல்வேறு காரணிகள் குறித்த மேலதிக தரவுகள் அவசியமானவை. இக்கட்டுரையின் விரிவு குறித்த தயக்கத்தினாலும் பாட ரீதியான பகுப்பாய்வு இங்கு தவிர்க்கப்படுகின்றது. ஆயினும் பாடரீதியான பகுப்பாய்வுக்கு மிகவும் பிரதானமாக அமையக்கூடிய ஆசிரிய வளத்தின் ஓர் அம்சம் குறித்த தரவுகள் இப்பகுப்பாய்வின் சிக்கற் தன்மையையும் விரிவையும் எடுத்துக காட்டக்கூடும் என்ற வகையில் அட்டவணை 7 இல் தரப்படுகின்றன.

**அட்டவணை 7**

**கோட்டரீதியாக யாழ்ப்பாண வலயத்தின் ஆசிரிய வளம்**

| கோட்டம் | பட்டதாரி ஆசிரியர் | பயிற்றப்பட்ட ஆசிரியர் | பயிற்றப்படாத ஆசிரியர் | பயிலுநர் | வேறுவகையினர் | ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 306 | 378 | 17 | 2 | 1 | 704 |
| நல்லூர் கோட்டம் | 307 | 449 | 15 | 0 | 2 | 773 |
| கோப்பாய் கோட்டம் | 199 | 398 | 31 | 1 | 5 | 634 |

பொது நூல் - கோப்பாய்

கோப்பாய் கோட்டத்தில் ஏனைய கோட்டங்களை விட பயிற்றப்படாத ஆசிரியர்களின் எண்ணிக்கை உயர்வாக இருப்பதும் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை தாழ்வாக இருப்பதும் நோக்கத்தக்கன. அதே வேளை, கோப்பாய் கோட்டப் பாடசாலைகளில் 109 வெற்றிடங்கள் நிரப்பப்படாதிருப்பதும் யாழ்ப்பாணக்கல்வி வலய அலுவலகப் புள்ளி விபரங்களிலிருந்து அறியக் கிடக்கின்றது.

தனித்தனியாக ஒவ்வொரு பாடத்துக்கும் பொருத்தமான ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்களா எனவும் இவர்கள் தகுந்த முன்பயிற்சிகளையும் பணியிடைப் பயிற்சிகளையும் பெற்றுக் கொண்டனரா எனவும் பரிசீலிக்கும் போதே ஆசிரிய வளம் குறித்த மேலதிக தகவல்களைக் குறிப்பிடமுடியும். ஆயினும் கோப்பாய் கோட்டத்தில் ஆசிரிய தேவைகள் (Teacher requirements) பூர்த்தியாகவில்லை என்பது இத்தரவுகளிலிருந்து புலனாகினறது.

### க. பொ. த. ப. உயர்தரப் பரீட்சை

கோப்பாய் கல்விக்கோட்டத்தின் க. பொ. த. ப. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வானது விரிவாக நோக்கப்படுவது இங்கு அத்தனை அவசியமானதன்று. ஏனெனில் யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய கல்விக் கோட்டங்களுடன் ஒப்பிடும் போது கோப்பாய் கோட்டத்தில் குறைந்தளவு எண்ணிக்கையான மாணவர்களே க. பொ. த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி ஆகியன வளம் பெறுகின்றபோதே க. பொ. த. ப. உயர்தர வகுப்புப் பரீட்சைப் பெறுபேறுகள் சிறக்க முடியும். ஆயினும் வகை மாதிரிக்காக கோப்பாய் கல்விக்கோட்டத்தின் 2007 ஆம் ஆண்டுக்குரிய க. பொ. த. ப. உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் மட்டும் பிரிவு ரீதியாக (Stream wise) அட்டவணை 8, 9, 10, 11 ஆகியவற்றில் தரப்பட்டுள்ளன.

### அட்டவணை 8 : கணிதம் க. பொ. த. (உ/த) பெறுபேறுகள்

| பாடசாலையின் பெயர் | 2007 | | |
|---|---|---|---|
| | தோற்றி எண் | சித்தி எண் | சித்தி வீதம் |
| யா/ இடைக்காடு மகா வித்தியாலயம் | 09 | 01 | 11.11 |
| யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | 04 | 01 | 25.00 |
| யா/ புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி | 10 | 04 | 40.00 |

### அட்டவணை 9: உயிரியல் விஞ்ஞானம் க. பொ. த. (உ/த) சித்தியடைந்தோர்

| பாடசாலையின் பெயர் | 2007 | | |
|---|---|---|---|
| | தோற்றி எண் | சித்தி எண் | சித்தி வீதம் |
| யா/ இடைக்காடு மகா வித்தியாலயம் | 05 | 3 | 60.00 |
| யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | 04 | 0 | 0.00 |
| யா/ புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி | 04 | 2 | 50.00 |
| யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி | 02 | 1 | 50.00 |

### அட்டவணை 10 : வர்த்தகத் துறை க. பொ. த. (உ/த) பெறுபேறுகள்

| பாடசாலையின் பெயர் | 2007 | | |
|---|---|---|---|
| | தோற்றி எண் | சித்தி எண் | சித்தி வீதம் |
| யா/ அத்தியார் இந்துக் கல்லூரி | 05 | 03 | 60.00 |
| யா/ இடைக்காடு மகா வித்தியாலயம் | 02 | 01 | 50.00 |
| யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | 13 | 10 | 76.92 |
| யா/ புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி | 14 | 10 | 71.43 |
| யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி | 04 | 03 | 75.00 |
| யா/ புனித திரேசா பெண்கள் பாடசாலை | 06 | 04 | 66.67 |

### அட்டவணை 11 : கலைத் துறை க. பொ. த. (உ/த) பெறுபேறுகள்

| பாடசாலையின் பெயர் | 2007 | | |
|---|---|---|---|
| | தோற்றி எண் | சித்தி எண் | சித்தி வீதம் |
| யா/ அச்சுவேலி மகா வித்தியாலயம் | 28 | 25 | 89.29 |
| யா/ அத்தியார் இந்துக் கல்லூரி | 28 | 20 | 71.43 |
| யா/ இடைக்காடு மகா வித்தியாலயம் | 18 | 14 | 77.78 |
| யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | 83 | 66 | 79.52 |
| யா/ புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி | 70 | 55 | 78.57 |
| யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி | 38 | 23 | 60.53 |
| யா/ புனித திரேசா பெண்கள் பாடசாலை | 17 | 14 | 82.35 |

இந்த அட்டவணைகளின் தரவுகளிலிருந்து, கோப்பாய் கல்விக்கோட்டத்தில் கணிதம், உயிரியல் பாடநெறிகளில் (பிரிவுகளில்) சித்திவீதம் குறைவாக இருப்பதையும் கலை, வர்த்தகப் பிரிவுகளில் சித்திவீதம் உயர்வாக இருப்பதையும் கண்டுகொள்ளக்கூடியதாக இருக்கிறது. அத்தோடு கலைப்பிரிவிலேயே அதிக எண்ணிக்கையான மாணவர்கள் க. பொ. த. ப. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியிருப்பதும் கூட இக்கல்விக் கோட்டப் பாடசாலைகளின் ஏனைய கல்விநெறிகளை மாணவர்கள் மேற்கொள்வதில் உள்ள சவால்களை உட்கிடையாகத் தெரிவிக்கின்றன. ஆசிரியவளம் மாத்திரமன்றி, நூலக வசதி, ஆய்வுகூட வசதி, சுயகற்றல் முயற்சிகளுகளுக்கான வசதி என பல்வேறு வசதிகளும் வாய்ப்புகளும் மாணவர்களுக்குக் கிடைக்கின்ற போதே கலை உட்பட வர்த்தகம், உயிரியல், கணிதம் ஆகிய பாடநெறிகளில் மாணவர்கள் ஊக்கத்துடன் கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியும். இவ்வகையில் க. பொ. த. ப. சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகளை அதிகரிக்கச் செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளும் கூட முக்கியத்துவம் உடையனவாகும்.

பொது நூல் நிலையம்
கோப்பாய்

ஒரு பிரதேசத்தின் அல்லது பாடசாலையின் கல்வி நிலையைத் தீர்மானிக்கும் சுட்டிகளுள் பரீட்சைப் பெறுபேறுகளின் முக்கியத்துவம் எல்லோராலும் உணரப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறான பரீட்சைப் பெறுபேறுகள் மட்டும் கல்வி நிலையைப் பிரதிபலிக்கப் போதுமானவை அல்ல. தேசிய மட்டத்திலான ஐந்தாம்தரப் புலமைப்பரிசுப் பரீட்சை, க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை, க. பொ. த. உயர்தரப் பரீட்சை ஆகியன ஒரு தடவையில் மாத்திரம் மாணவர்களின் அடைவு நிலையைப் பரிசீலிப்பவை. பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் மாணவனின் உடல்நிலை, உளநிலை, சூழலின் தாக்கம் என்பனவும் அவனின் பெறுபேற்றில் செல்வாக்குச் செலுத்தும். எனவே தான் இன்று கணிப்பீட்டுக் கலாசாரத்தின் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது. இது மாணவனின் அருகிலிருந்து அவனின் பலங்களையும் பலவீனங்களையும் கண்டறிந்து அவனின் முன்னேற்றத்தை முன்னெடுக்கும் வகையிலான மதிப்பீடுகளை மேற்கொள்வதை விதப்புரை செய்வதாகும். எனவே இக்கட்டுரையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வு கோப்பாய்க்கல்விக்கோட்டத்தில் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளின் நிலைமையை அறிந்துகொள்வதற்கான ஓர் அளவையாக மாத்திரமே கொள்ளப்பட வேண்டும். இப்பகுப்பாய்வின் அடிப்படையில் மாணவர்களினதும் , ஆசிரியர்களினதும் , பாடசாலைகளினதும் தேவைகளைக் கண்டறிந்து முன்னேற்றத்துக்கான வழிவகைகளைத் தீர்மானித்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

பாடசாலை மட்ட முகாமை என்ற எண்ணக்கருவானது பாடசாலைகள் ஒவ்வொன்றினதும் உண்மை நிலைமைகளுக்கு அமைய தத்தமது வளநிலைமைகளுக்கேற்ப தம்மைத்தாமே முகாமை செய்வதை வலியுறுத்துகின்றது. கோப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகள் இதனைக் கருத்திற்கொள்ள வேண்டும். மாணவர், ஆசிரியர், பெற்றோர், அதிபர், பாடசாலை நலன்விரும்பிகள் என பாடசாலைச் சமூகத்தினர் அனைவரதும் அர்ப்பணிப்பும் ஈடுபாடுமே பாடசாலையின் நிலைமைகளில் முன்னேற்றத்தைக் கொண்டுவரும். கிராமியச் சூழலில், பாடசாலை விவகாரங்களில் அக்கறை காட்டாதவர்களாகவும், அவற்றை விளங்கிக்கொள்ள முடியாதவர்களாகவும், நேரமில்லாதவர்களாகவும் பெற்றோர் விளங்கக்கூடும். ஆயினும் அவர்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தும் அவர்களின் பங்களிப்பின் அவசியத்தை வலியுறுத்தியும் பெற்றோரின் பங்களிப்பை அதிகரிக்கச்செயவதற்குப் பாடசாலை ஒவ்வொன்றும் முயற்சிக்க வேண்டும்.

அண்மையில் கோப்பாய் கோட்டப் பாடசாலை ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் பாடசாலைத் தேவைகளின் நீண்ட பட்டியலொன்று பெறப்படக் கூடியதாக இருந்தது. மின்சாரவசதியின்மை, OHP பாவனைக்கான வசதியின்மை, Photo Copier வசதியின்மை, தளபாடப்பற்றாக்குறை, ஒலி, ஒளி வளநிலையம் இல்லாமை, மூடிய வகுப்பறை வசதியின்மை, விளையாட்டு முற்றமின்மை போன்ற பல்வேறு வசதியீனங்கள் தமது பாடசாலையில் இருப்பதை ஆசிரியர்கள் சுட்டிக்காட்டினர். அதேவேளை, பாடத்துறைசார்ந்த அவதானிப்புகளையும் கற்றல் - கற்பித்தல் நிலைமைகள் சார்ந்த அவதானிப்புகளையும் மேற்கொள்ளக்கூடியதாகவும் இருந்தது.

பாடசாலை நிலைமைகளையும் கற்றல் - கற்பித்தல் நிலைமைகளையும் தெரிந்து கொள்ள இத்தகைய ஆய்வுகளும் அவதானிப்புகளும் அவசியமானவை. இவற்றினூடாக, பாடசாலையை வளரத்தேடுப்பதற்கான வழிவகைகள் முன்வைக்கப்படவேண்டும். பாடசாலையின் சுயாதீனத்தைப் பாதிக்காத வகையில், பாடசாலை முகாமைத்துவத்தை வளப்படுத்துவதில் பாடசாலைச்சமூகமும் கல்வித்திணைக்களமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து தமது பங்களிப்பை நல்கும்போது பாடசாலை சிறக்கும். ஆயினும் வெளியக நிலையிலிருந்து மேற்கொள்ளப்படும் அவதானிப்புக்கள் மேற்பார்வை, மதிப்பீடு என்பவற்றை விட உள்ளக நிலையில் அதிக அளவில் இவை இடம் பெறுதலே பொருத்தமானது. பொருத்தமான திட்டங்களை வகுத்து உள்ள நிலையில் இவை மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்து கொள்வது பாடசாலை அதிபரின் கடமையாகும்.

ஆசிரியம் என்பது மதிப்பார்ந்த உன்னதமான தொழிலாகக் கருதப்படுவது. இத்தொழிலின் மேன்மையைப் போற்றுவதோடு மட்டும் நின்று விடாமல் முன்னாலுள்ள சவால்களையும் அச்சுறுத்தல்களையும் விளங்கிக்கொண்டு, ஆசிரியர்களுக்கு வேண்டிய பயிற்சி வசதிகளையும் வழங்கி அவர்களிடமிருந்தான சேவையைப் பெற்று மாணவர்களின் கல்விநிலையை மேம்படுத்த முயற்சிப்பதே கோப்பாய் கல்விக்கோட்டப் பிரதேசத்திலுள்ளோர் முன்னாலுள்ள கடமைப் பொறுப்பாகும்

**இக்கட்டுரைக்கான தரவுகள் பின்வரும் மூலகங்களிலிருந்து பெறப்பட்டவை.**

1. Jaffna District Statistical Information 2007, District Secretariat, Jaffna.
2. Data Sheets of Jaffna Educational Zone.



பொது நூல் நிலையம்
கோப்பாய்

பின்னிணைப்பு

வலி கிழக்குப் பிரதேசப் பண்பாட்டுப் பேரவை நடாத்தும்

# பண்பாட்டுப் பெருவிழா – 2008

## முதலாம் நாள் நிகழ்வுகள்

### இருபாலை சேனாதிராச முதலியார் அரங்கு

காலம் : 19.07.2008 சனிக்கிழமை
இடம் : பிரதேசச் செயலக வளாகம், கோப்பாய்
தலைமை: திரு. சீ. ஏ. மோகன்றாஸ்
(தலைவர், பண்பாட்டுப்பேரவை, பிரதேச செயலர் வலி. கிழக்கு)

முதன்மை விருந்தினர் : பேராசிரியர் என். சண்முகலிங்கன்
(துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள் : திரு. ஆ. சிவசுவாமி
(மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)
திரு. வே. தி. செல்வரத்தினம்
(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்)
திரு. எஸ். கே. யோகநாதன்
(பீடாதிபதி, யாழ்ப்பாண தேசியக் கல்வியியல் கல்லூரி)

கௌரவ விருந்தினர்கள்: திரு. சீ. அருமைநாயகம்
(இலங்கை வங்கி, வடபிராந்திய முகாமையாளர்)
Dr. லயன் வை. தியாகராசா M.J.F., J.P.
(தலைவர், பாரம்பரியக்கலைகள் மேம்பாட்டுக் கழகம்)
திரு. சி. சித்திரவடிவேல்
(கோட்டக்கல்வி அலுவலர், கோப்பாய்)
திரு. வ. சிவலிங்கம்
(பொது முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி)

### நிகழ்வின் நிரல்

* மங்கல விளக்கேற்றல்
* அகவணக்கம்
* தமிழ்த்தாய்க்கு மாலை அணிவித்தல்
* தமிழ்த்தாய் வாழ்த்து
* பிரதேசக் கீதம்
* மங்கள இசை
* வரவேற்பு நடனம்
* வரவேற்புரை:– செல்வி எஸ். பிறேமினி (உதவிப் பிரதேச செயலர்)
* ஆசியுரை :– வணபிதா F. L. N. குரூஸ் (அ. ம. தி.) (பங்குத்தந்தை, கோப்பாய்)
* ஆசியுரை :– பிரம்மஸ்ரீ ப. சண்முகராஜக் குருக்கள் (கோப்பாய்)
* தலைமையுரை
* கிராமிய நடனம்

* மெல்லிசை : நீர்வேலி மகளிர் மன்றம்
* முதன்மை விருந்தினர் உரை
* நடனம் :கீர்த்தனம், உரும்பிராய்
* வாத்திய பிருந்தா
* சிறப்பு விருந்தினர் உரை
* கிராமியக் கலைகளின் சங்கமம் : யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி
* பதம் : இணுவில் மத்திய கல்லூரி
* பரிசளிப்பு
* காத்தவராயன் சிந்துநடைக்கூத்து : கலாபூஷணம் சிதம்பரநாதன் குழுவினர்
* தமிழ்மொழி வாழ்த்து
* நன்றியுரை : திருமதி மாலினி கிருஸ்ணானந்தன் (கலாசார உத்தியோகத்தர்)

## இரண்டாம் நிகழ்ச்சிகள்

### அச்சுவேலி சுவாமி ஞானப்பிரகாசர் அரங்கு

இடம் : ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபம்
காலம் : 20.07. 2008 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 09.00 மணி முதல் 11.30மணி வரை
தலைவர்: திரு சி.ஏ.மோகன்றாஸ் (பிரதேசச் செயலர்)

**காலை நிகழ்வு:**

### ஆய்வரங்கு

**ஆய்வுப் பொருள்:**

**மொழி – இலக்கியம் – பண்பாடு**

### நிகழ்வின் நிரல்

வரவேற்புரை:– கலாநிதி தி. வேல்நம்பி
(விரிவுரையாளர், வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

தொடக்கவுரை:– பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்)

ஆய்வாளர்:– திரு. க. அருந்தாகரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை யாழ் பல்கலைக்கழகம்)

விடயம் : *"பண்பாட்டு உருவாக்கமும் இலக்கியமும்"*

ஆய்வாளர்: பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

விடயம் : *"19ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்"*

ஆய்வாளர்: கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

விடயம் : *"20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்"*

ஆய்வாளர் : திரு. ஸ்ரீ. கிருஷ்ணானந்தசர்மா (விரிவுரையாளர், சமஸ்கிருத துறை)

விடயம் : *"ஈழத்து இலக்கியப் பரப்பில் சமஸ்கிருத ஆக்கங்கள்"*

ஆய்வாளர் : திரு. விமல் சுவாமிநாதன் (விரிவுரையாளர், மொழியில்துறை)

பொது நூல் நிலையம்
கோப்பாய்

விடயம் : "காலந்தோறும் சிங்களமும் தமிழும்"
கருத்தாடலும் தொகுப்புரையும்
நன்றியுரை:- திரு. எஸ். மகேந்திரன்
(நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்)

**மாலை நிகழ்வு:**

தலைமை:- திரு. சீ. ஏ. மோகன்றாஸ்
(தலைவர், பண்பாட்டுப் பேரவை. பிரதேச செயலர், வலி. கிழக்கு)

முதன்மை விருந்தினர்:- உயர்திரு கே. கணேஷ்
(அரசாங்க அதிபர், யாழ் மாவட்டம்)

சிறப்பு விருந்தினர் :- வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(பணிப்பாளர், ஊடக வளங்கள் பயிற்சி மையம், யாழ் பல்கலைக்கழகம்)
திருமதி அ. வேதநாயகம்
(வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
திரு. ஆ. சிறீஸ்கந்தமூர்த்தி
(அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

கௌரவ விருந்தினர்கள்:- திரு. கே. ஏ. ஆனந்தராஜா
(மக்கள் வங்கி வட பிராந்திய முகாமையாளர்)
திரு. த. கவீந்திரதாஸ்
(பொதுமுகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், அச்வேலி)
திரு. சி. நாகேந்திரம்
(பொதுமுகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், தெல்லிப்பளை)
திரு. த. நடராசா
(செயலாளர், வலி கிழக்கு, பிரதேச சபை)

## நிகழ்வின் நிரல்

* மங்கள விளக்கேற்றல்
* அகவணக்கம்
* தமிழ்த்தாய்க்கு மாலை அணிவித்தல்
* தமிழ்த்தாய் வாழ்த்து
* பிரதேசக் கீதம்
* மங்கள இசை
* வரவேற்பு நடனம்:- ஸ்ரீ சாயி கலைக்கழகம் உருப்பிராய்.
* வரவேற்புரை:- கலாபூஷணம் நா. கணபதிப்பிள்ளை
* ஆசியுரை :- பிரம்மஸ்ரீ வே. நடராசக் குருக்கள்
* ஆசியுரை :- வணபிதா J.B. அன்ரனி
(நிதிமுகாமையாளர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்)
* தலைமையுரை
* நடனம் கீர்த்தனம்:-கலைக்கோயில், உரும்பிராய்
* சிறுவர் நடனம் :- செல்வி மோ. அன்ரனீற்றா சுபேக்கா

வரவுப் பதிவெண் ........
பகுப்பெண் ..................
பொது நூல் நிலையம்
கோப்பாய்

* சிறப்பு விருந்தினர் உரை
* வாள் நடனம் :- யாழ் இந்துக்கல்லூரி மாணவர்கள்
* இன்னிசை அரங்கு :-திரு. சி. சூரியகுமார்
  (இசைத்துறை விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
* கரகம் :-வசாவிளான் மகாவித்தியாலயம்
* நாட்டிய நாடகம்:-கலைக்கோவில், உரும்பிராய்.
* பிரதம விருந்தினர் உரை
* **'செம்புலம்' மலர் வெளியீடு**
* மலர் வெளியிடுதல்:- பண்பாட்டுப் பேரவை தலைவர் வெளியிட்டு வைக்க அரச அதிபர் பெற்றுக்கொள்ளல்.
* வெளியீட்டுரை:- திரு. இ. குணநாதன் (அதிபர், அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி)
* ஆய்வுரை :- பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா (தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)
* ஏற்புரை :- திரு. ச. லலீசன் (பதிப்பாசிரியர்)
* கலைஞர் கௌரவிப்பு
* தமிழ்மொழி வாழ்த்து
* நன்றியுரை :- திரு. ந. சத்தியரூபன் (கலாசார அபிவிருத்தி உதவியாளர்)

## முக்கிய நிகழ்வுகள் சில...

### *முதல் நாள் விழாவின்போது பண்பாட்டு ஊர்வலம் :*

நீர்வேலி கந்தசாமி கோவில் முன்றிலில் இருந்து பிரதான வீதி வழியாகப் பிரதேசச் செயலகம் வரை இடம்பெறும்.

### *ஊர்வலத்தின் போதான சிறப்பு நிகழ்வுகள் :*

* ஊர்திப் பவனி, * வேடப் புனைவு, * பாரம்பரியக் கலைகளின் சங்கம நிகழ்வு (கும்மி, கோலாட்டம், சீனடி, சிலம்படி, மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் )

#### *ஊர்திப் பவனியில் பங்கேற்போர் :*

* வலி.கிழக்கு (தென்பகுதி) ப.நோ.கூ. சங்கம் * வலி. கிழக்கு (வடபகுதி ) ப.நோ.கூ, சங்கம்
* தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் * யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி
* கமநல சேவைகள் திணைக்களம்
* பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் – அச்சுவேலி
* பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் – கோப்பாய்

#### **முழுப்பக்கச் சிறப்பிதழ் பிரசுரித்தல் :**

* உதயன் * யாழ். தினக்குரல் * வலம்புரி

குடாநாட்டில் வெளிவருகின்ற மூன்று நாளிதழ்களும்.

11 9 2011

131

19/02/2015 (131)

04/03/215 (131)

19/03/2015 (131)

## நமது பிரதேசச் செயலகத்தை மையப்படுத்தி வெளிவந்த மலர்கள்




வலிகாமம் கிழக்கு
பிரதேசச் செயலக
கலாசாரப் பேரவை நடாத்தும்
மூன்று நாள்
**முத்தமிழ் விழா மலர்**

வெளியீடு:
வலிகிழக்குப்
பிரதேசக் கலாசாரப் பேரவை
1999

வலி. கிழக்கு
பிரதேசச் செயலக
புதிய கட்டடத் திறப்பு விழா
**சிறப்பு மலர்**

வெளியீடு:
பிரதேசச் செயலகம், கோப்பாய்
19.01.2000




Shampavi Printers, Neervely. & 276, Kasthuriar Road, Jaffna. 077 6184425.